யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

1929

# அமுதவிழா மலர்




**1929 - 2009**

## J / Sandilipay Hindu College

**Eighty^th Jubilee Celebration**

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

# அமுதவிழா மலர்

# [1929 – 2009]

## J/ Sandilipay Hindu College

## Eighty$^{th}$ Jubilee Celebration

**2010**

# கல்லூரிக் கீதம்

போற்றுகின்றோம் போற்றுகின்றோம்
போற்றுகின்றோம் அன்னையே
ஏற்றமான வாழ்வில் எம்மை
வாழ வைக்கும் உன்னையே
போற்றுகின்றோம்

தங்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரித் தாயே
சகலகலை உதவி எம்மை வளர்த்தெடுப்பாய் நீயே
எங்கெங்கும் புகழறிவு தந்தருளுவாயே
எங்கள் மனக்கோவிலிலே என்றுமிருப்பாயே
போற்றுகின்றோம்

செகராஜசிங்கமென்பார் சீராட்டி வளர்க்க
தேடிவரும் மாணவர்க்கு பயனளித்தாய் செழிக்க
அகிலமெல்லாம் நின்னிடத்தே கற்றவர்கள் சிறக்க
அரியதுணை செய்தாயே அன்புநலம் சுரக்க
போற்றுகின்றோம்

சுகஞானம் தமிழ் கணிதம் உயிரியல் விஞ்ஞானம்
தொழுசமயம் ஆங்கிலம் சங்கீதம் புவிஞானம்
பகரும் வரலாறுடன் கைவேலை கமவேலை
பயிலோவியம் நடனம் கலைகள் கற்பித்தாயே
போற்றுகின்றோம்

கற்பகம் போல் மாணவர்க்கு கதியருள் பாற்கடலே
காலமெல்லாம் நிலைத்து நிற்கும் ஒளிவிளக்கு மலையே
சொற்புகழார் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
அன்னையே நீ பல்லாண்டு பல்லாண்டு வாழி
அன்னையே நீ பல்லாண்டு வாழி

ஆக்கம் : அருட்கவி சீ. விநாசித்தம்பி

# மலர்க்குழுவின் இதயங்களிலிருந்து....

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அமுதவிழா மலர் உங்கள் கரங்களில் தவழும் இவ்வேளையில் உங்களுடன் சில வார்த்தைகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம். கடந்த எண்பது ஆண்டுகளில் கல்லூரி கடந்துவந்த புகழ்மிக்க பாதையை நினைவுகூருவதே இம்மலரின் நோக்கமாகும். அமுதவிழா நாளில் மலர்ந்து மணம் பரப்பும் இம்மலரானது நல்லோரின் நல்லாசிகளையும், மேதைகளின் கருத்துக்களையும் தாங்கிநிற்கும் அதேவேளை, ஆசிரிய, மாணவர்களின் வாண்மைக்கு வழிசமைக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

மனிதனின் உலக வாழ்வு வரையறுக்கப்பட்டது. ஆகக் கூடியது அவனால் ஒரு நூற்றாண்டு காலம்தான் வாழமுடியும். ஆனால் மனித குலம் வாழ்ந்து கொண்டேயிருக்கும். முன்னேற்றம் என்னும் சக்கரத்தை யாராலும் நிறுத்தமுடியாது. தனிமனிதர்களாகிய நாம் வெவ்வேறு பாதைகளில் செல்ல நேரிடும். ஆனால் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எங்களுக்குப் பின்னும் பல நூற்றாண்டுகள் உலகம் புகழ வாழும். இந்த நோக்கங்களின் அடிப்படையில் உருவானதே இம்மலராகும். இம்மலர் உருவாக பல வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கு எமது உளம் களிகூர் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மலர்க்குழு

*திரு. கு. விமலன் (அதிபர்)*
*திரு. இ. ஆனந்தநடராஜா (பிரதி அதிபர்)*
*திரு. க. ஸ்ரீநந்தகோபன் (பகுதித் தலைவர்)*
*திரு. ந. குகபரன் (ஆசிரியர்)*
*திருமதி. ச. பாலசுந்தரம் (ஆசிரியை)*
*செல்வி. த. ரேவதி (ஆசிரியை)*

# சமர்ப்பணம்

*சண்டிலிப்பாய் மற்றும் அயற்கிராம மக்களின்*

*கல்வி மேம்பாட்டுக்கு வித்திட்ட பெரியார்*

*ஸ்தாபகர்*

**அமரர் திரு. ப. மு. செகராஜசிங்கம்**

*அவர்களுக்கு இவ் அமுதவிழா மலர்*

*சமர்ப்பணம்*

# எங்கள் கல்லூரி ஸ்தாபகர்



அமரர்

## திரு. ப. மு. செகராஜசிங்கம்

அவர்கள்

# நோக்கக்கூற்று

*"கல்லூரி ஏற்றுள்ள பிரதேச மாணவர்களை நிகழ்கால
எதிர்கால வாழ்வுக்குத் தயாராக்குதல்"*

# Vision of our School

***"Preparing the students of this school
For the present and future life"***

# செயற்கூற்று

*"கல்லூரி ஏற்றுள்ள பிரதேச மாணவர்களை நவீன உலகினை நோக்கி முன்னெடுத்துச் செல்வதுடன் அதற்கான சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவர்களாக்கி வெற்றிகரமான வாழ்க்கைத் தோரணையினை பெறுவதற்கான கள, வள வசதிகளை வழங்குதல் கல்லூரியின் நோக்கமாகும்"*

# Mission of our school

***"Providing the Environment and resources, in order to make the students of our school, who are the fruits of this area, to lead them to the modern world and enable them to face the challenges, thereby live victorious life"***

# கல்லூரி பற்றிய அடிப்படைத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| • பாடசாலையின் பெயர் | : | யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி |
| • முகவரி | : | சண்டிலிப்பாய் |
| • பாடசாலை அதிபரின் பெயர் | : | திரு. கு. விமலன் |
| • பாடசாலை அடையாள இல. | : | 1012024 |
| • பரீட்சை இலக்கம் | : | 11301 |
| • தொகை மதிப்பு இலக்கம் | : | 09176 |
| • தொலைபேசி இலக்கம் | : | 0602216462, 0212240080 |
| • மின்னஞ்சல் முகவரி | : | sanhindu@gmail.com |
| • பாடசாலை வகை | : | 1C |
| • கிராமசேவகர் பிரிவு | : | J/142, சண்டிலிப்பாய் |
| • பிரதேச செயலகம் | : | வலி தென்மேற்கு |
| • கோட்டம் | : | சண்டிலிப்பாய் |
| • வலயம் | : | வலிகாமம் |

# எங்கள் அதிபர்



திரு.குருசாமி விமலன் MEd, SLPS 2- II

# முன்னாள் அதிபர்



திரு.வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன் SLPS I

# அருளாசிச் செய்தி



கல்வி சார் பெருந்தகையீர்–

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி இன்று தனது 80வது ஆண்டை முன்னிட்டு அமுத விழா மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சண்டிலிப்பாய் மக்களின் கல்விக்கு 80 ஆண்டுகள் பணியாற்றி தலை நிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. மனித வாழ்வை உயர்வடையச் செய்வது கல்வியே. அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக பல பாடசாலைகள் நற்பணியாற்றுகின்றன. இந்தக் கல்லூரி சமயப்பண்பாடோடு சேர்ந்த கல்வியை வளர்த்துக் கொள்வது வள்ளுவர் வாக்கிற்கு அமைய–

*தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்*

என்னும் வாசகத்தை கொண்டு யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியம் அன்று முதல் இன்று வரைவளர்ச்சியடைந்து வருகின்றது. இவ்வளர்ச்சியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் பெருமையான பெயருண்டு. இதனை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் இன்று வெளிவரும் அமுதவிழா மலர் பயனுள்ளதாக அமைகின்றது. இப்பணியில் இணைந்திருக்கும் அதிபர், ஆசிரியர்களை பாராட்டுகின்றோம். இக்கல்லூரி இன்று போல் என்றும் கல்வியிலும், ஒழுக்கத்திலும் வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

# கல்வித் தொண்டாற்றும் கலாலயம்



யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 80 வருட காலம் கல்வித் தொண்டாற்றி இந்து சமய விழுமியங்களையும் கல்வியின் நோக்கங்களையும் மாணவர்களிற்கு வழங்கியுள்ளது, கலலூரி தொண்டாற்றியது எனக் குறிப்பிடப்படும் போது அப்பாடசாலையிற் கடமையாற்றும் மனித வளங்களான அதிபரையும், ஆசிரியர்களது அர்ப்பணிப்பானசேவையினையும் சுட்டிக் காட்டுகிறது. இங்கு அதிபரின் வழிகாட்டலில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பான சேவையாற்றி கல்வி அடைவுகளும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் சாதனை படைக்க உதவியுள்ளது.

இப்பாடசாலைச் சூழலிலுள்ள மாணவர்களையும், இடம்பெயர்ந்த மாணவர்களையும் உள்வாங்கி அவர்களிற்கான அறிவுக் கண்களை இவ் இந்துக் கல்லூரி வழங்கியுள்ளது. இணைப்பாடவிதான செயற்பாடு என்னும் போது வலைப்பந்தாட்டத்தில் தேசிய நிலை வரை பங்கு பற்றியது. பாடசாலை முடிந்த பின்பும் மாலை நேரம் வரை இங்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவது அறியக்கூடியதாகவுள்ளது. இச் செயற்பாடு காலம் முழுவதும் நடைபெறவேண்டும். அர்ப்பணிப்பான சேவையாற்றும் ஆசிரியர்களையும் அவர்களை வழி நடத்தும் அதிபரையும் சாதனை படைக்கும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துத் தெரிவிப்பதிலும் அமுதவிழா சிறக்க எனது பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இளங்கோவன்**
செயவாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

# ஆசிச் செய்தி



வலிகாமம் கல்வி வலயத்தில் இருபத்தோராம் நூற்றாண்டில் விழிப்புணர்வுடன் எழுச்சி பெற்று வீறுநடை கொண்டு இயங்கும் பாடசாலைகளுள் யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் ஒன்றாகும் என்றால் மிகையாகாது. தனது எண்பதாவது அகவையில் நிமிர்ந்து நிற்கும் அன்னைக்கு "அமுத விழா" எடுக்கும் வாரிசுகளுடன் இணைந்து கொள்வதில் நானும் பெருமையடைகின்றேன். கிராமப்புற பாடசாலை ஒன்று நகரப்புற பாடசாலைகளுடன் பாடவிதான, இணைபாடவிதான செயற்பாடுகளில் கைகோர்த்து சம அந்தஸ்துடன் இயங்குகின்ற பெருமை படைத்த இப்பாடசாலை மேலும் களம் பல கண்டு உயர்வு பெற எனது நல்லாசிகள். அன்னையின் அமுதவிழா மலர் வெளியீட்டுக்கு முன்னின்று உழைக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனின் அருள் பாலிக்கப் பிரார்த்திக்கிறேன்.

**ப. விக்னேஸ்வரன்,**
*மாகாண கல்விப் பணிப்பாளர்,*
*வட மாகாணம்.*

# இணைப்பாட விதானத்தில் உச்ச நிலையைக் கண்ட கல்லூரி



எட்டுத் தசாப்தங்களில் கல்வித் தொண்டாற்றிய யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சைவ சமயம் வளர்க்கவென ஆரம்பத்தில் தாபிக்கப்பட்டது. அதற்கமைவாக சமயத் தொண்டுடன் கல்வித் தொண்டையும் ஆற்றியுள்ளது. "ராஜா பாடசாலை" என அழைக்கப்படும் இப்பாடசாலை பெயருக்கேற்றாற் போல கம்பீரமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்புற விளங்குகிறது. அதுவும் வலைப்பந்தாட்டத்தில் தேசிய மட்டம் வரை சென்று பாடசாலையின் பெயரை மேம்படுத்தியுள்ளது. அதே போற் கல்வியிலும் சிறப்புற்று சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்னும் நிலையில் ஏழை மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்த சமூகவியல்பினனாக்கியுள்ளது என்றால் மிகையாகாது.

பாடசாலை தொண்டாற்றியது என்னும் போது அங்கு கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையையே குறிப்பிடும். அதிபர், ஆசிரியர்கள் தமது மாணவர்களை பாடவிதானத்தைச் செவ்வனே போதித்து சிறந்த பண்பு, ஒழுக்கங்களை உடைய மாணவர்களை உருவாக்கியுள்ளனர். இப்பாடசாலையிற் கடமையாற்றிய அதிபர்கள் செய்த தொண்டைப் பின்பற்றி அதிபர் திரு.கு. விமலன் தனது அர்ப்பணிப்பான சேவையை நல்கிவருகிறார். அவருடன் இணைந்து ஆசிரியர்களும் மாணவர்களை உருவாக்க உதவி வருகின்றனர். அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் அவர்களின் சேவை சிறப்புற எனது வாழ்த்துக்கள். அமுத விழாவில் இக்கல்லூரி சகல வளங்களையும் பெற்று நல்ல சமூகத்தை உருவாக்க எனது வாழ்த்துக்கள்.

**வே. தி. செல்வரத்தினம்**
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வளமிகு வயல்களும், பசுந்தோட்டங்களும் அணி செய்ய, கிராமிய மணமும், நகரத்தின் மெருகும் ஒருங்கிணைய யாழ் மண்ணின் பாரம்பரியச் சீர்மைக்குச் சிறப்புறு சான்றாய் இலங்கும் சண்டிலிப்பாயின் கண் அமைந்து, செல்வத்துள் மேலான சண்டிலிப்பாயின் செல்வமாம் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அமுத விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1929ம் ஆண்டு சண்டிலிப்பாய் இந்து ஆரம்பப் பாடசாலை எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை, காலத்தின் மாற்றங்களுடனும், வளர்ச்சிகளுடனும் வியத்தகு பரிணாம வளர்ச்சியைக் கண்டுள்ளமையைக் காண்கின்றோம். இப்பாடசாலை ஆரம்பநாள் முதல், இன்றுவரை திறமை வாய்ந்த அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான சேவையினால் மெல்லென வளர்ந்து, இன்று யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எனும் பெயரில் "**IC**" பாடசாலையாய் தரமுயர்ந்து, நிமிர்ந்து நிற்கின்றது.

ஒரு சிறந்த கல்லூரிக்குத் தேவையான அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை என்பவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதோடமையாது, பல்கலைக்கழக அனுமதி, கல்வியியற் கல்லூரி அனுமதி என்பவற்றைப் பெறுவதிலும் பெரும்பங்கினை வகிக்கின்றது. இவற்றிற்கு மேலாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்தி, கல்லூரியின் பெயரைச் சொல்ல வைத்துள்ளமை போற்றற்குரியதாகும். விளையாட்டுத் துறையில் இக் கல்லூரி மாணவர்கள் செய்துள்ள சாதனைகள் வியக்க வைக்கின்றன. "முகிழ்" எனும் காலாண்டு இதழின் மூலம் மாணவர்களின் ஆக்கத் திறன்களை வெளிக்கொணரும் இக்கல்லூரி, கடந்த எண்பது ஆண்டுகால வளர்ச்சிப் பாதையில் தான்பதித்துள்ள வரலாற்றுத் தடங்களை ஆவணப்படுத்துமுகமாக வெளியிடும் அமுதவிழா மலரின் நோக்கம் நலமே நிறைவுறவும், விழா நிகழ்வுகள் சிறக்கவும், இக்கல்லூரி மென்மேலும் வளர்ந்து, படிப்பொடு பண்புமிகு சமுதாயமொன்றைத் தோற்றுவிக்கவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி. இமெல்டா சுகுமார்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.

# வளர்ச்சிப் பாதையில் சண்டிலிப்பாய் இந்து



கிராமப்புறச் சிறார்களின் கல்வியின் சமவாய்ப்புக்கென உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி குறிப்பிடத்தக்கதாகும். தனது சுற்றாடலில் பல பிரபலமான பாடசாலைகள் இருந்தும் அவற்றிடையே முகிழ்ந்தெழுந்து பெருவிருட்சமாக இக் கல்லூரி வளர்ச்சி கண்டுள்ளது. நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு இணையாகத் தனது கல்வி வாய்ப்புக்களை விரிவாக்கம் செய்துள்ளது. அவ்வகையில் தனது வளர்ச்சிப் பாதையின் விழா வரிசையில் அமுதவிழாவினைக் காண விழைகிறது.

இக்கல்லூரியின் இட அமைவு, நுழைவாயில், முகப்புத்தோற்றம், எல்லாமே மனங்கொள்ளத் தக்கன. பாடசாலையில் உகப்பானதொரு கற்றற்சூழல் நிலவி வருகிறது. பாடசாலையில் காலடி பதிக்கும் எவருமே இக்கல்லூரியை என்றும் நினைவில் வைத்திருப்பர்.


இக்கல்லூரியின் வரலாற்றில் பல அதிபர்கள் இதனை அலங்கரித்துள்ளனர். அவர்களின் பணியை மறந்துவிடலாகாது. ஆனால் கடந்த இரு தசாப்த காலத்திலேயே இக் கல்லூரி பெரு வளர்ச்சி கண்டுள்ளது. பலரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. தனது மாகாண மற்றும் தேசிய நிலைச் சாதனைகளால் தனது முகவரியைத் தேட வைத்துள்ளது.

தமது சுற்றாடலில் பல தரமான பாடசாலைகள் இருந்தும் இக் கல்லூரி தம்மைக் கைவிடாது; நிச்சயம் தமது வாழ்வில் ஒளியேற்றும் என்ற நம்பிக்கையுடன் இக் கல்லூரிக்கு வருகை தரும் மாணவச் செல்வங்களின் குறிக்கோளுடன் இணைந்து செயற்படும் ஆசிரியர் குழாம் ஒன்று இங்கு கடமையில் உள்ளது; இவர்களுக்குப் பலம் சேர்க்கும் அதிபர் உள்ளார்; கல்லூரியின் செயற்பாடுகளை முழுமையாக உள்வாங்கும் கல்வியில் கரிசனை மிக்க மாணவர் குழாம் உள்ளது; இவர்களுக்கு உறுதுணையாகப் பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் உள்ளனர். இக் கல்லூரியின் வளர்ச்சி என்றுமே ஏறுமுகமாகவே இருக்கும் என்பதை நம்பலாம்.

இக் கல்லூரி இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஈட்டிய சாதனைகள் போல், இதன் கல்விச் சாதனைகளும் உயரவேண்டும்; தான் ஈட்டிய சாதனைகளை நிலைநிறுத்துவதுடன், அதனை முன்னோக்கிப் படிமுறையாக நகர்த்தவேண்டும் என விரும்பும் பலருடன் நானும் இணைந்து கொள்கின்றேன். அமுத விழாவுடன் தொடர்ந்து வரும் விழாக்களையும் கண்டு இக் கல்லூரி பல்லாண்டு பெருமையுடன் திகழவேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

**ஆ. ராஜேந்திரன்**
*வலயக் கல்விப்பணிப்பாளர்,*
*வலிகாமம் கல்வி வலயம்.*

# ஆசிச் செய்தி



கல்வி வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு கல்வியை வழங்குவதிலும்,பெறுவதிலும், அதன் வளர்ச்சியிலும், புதிய போக்குகளும்,விரைந்த மாற்றங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் கல்விக் கூடச் சாதனைகளின் நினைவுப் பதிவேடாக மலர இருக்கின்ற "அமுத மலருக்கு" எனது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கல்விப் பெறு பேறுகளிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக பல வருட காலங்களாக சாதனை படைத்து சார்புடைச் சமூகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக ஒளி வீசி வருகின்ற இப்பாடசாலை வலிகாமம் வலயத்தின் ஏனைய பாடசாலைகளிற்கு முன்மாதிரியான தனித்துவம் மிக்க கவி நிலைத் தோற்றத்துடன் மிளிர்ந்து வருகின்றது. ஆற்றலும், ஆர்வமும், தனித்துவம் மிக்க ஆசிரியர் குழாமின் அர்ப்பணிப்பான சேவையால் உயர்வு பெற்று திகழ்கின்ற கல்விக் கூடம் தனது சாதனை அனுபவங்கள் அனைத்தையும் பொறித்துக் கொள்கின்ற வரலாற்றுப் பதிவாகவே இந்நூல் விளங்குகின்றது.

மாணவர்களது பல்வகை ஆக்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கி ஊக்குவிப்பதற்கு இந்நூல் வெளியீடு களமாக அமைவதனால் அவர்கள் தமது ஆற்றல்களுக்கு உரிய சமூக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்குரிய ஊடகமாகவும் இந்நூல் வெளியீட்டின் பரிமாணம் விரிவடைகின்றது. மேலும் கடந்த 80 வருட வளர்ச்சிப் பாதையின் ஏற்ற இறக்கங்களை சீர் தூக்கிப் பார்த்து பலவீனமான அம்சங்களை பலப்படுத்துவதற்கான மதிப்பீட்டு ஆவணமாகவும் இந்நூல் வெளியீடு அமைகிறது.

நவீன தொழினுட்ப முன்னேற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள அனுகூல, பிரதிகூல விளைவுகளுக்குள் சிக்குண்டுள்ள மனுக்குலத்திற்கு அறிவுச் சிந்தனையின் ஊடாக ஏற்றம் பெறுவதற்கு அவர்களது சுயசிந்தனை ஆற்றல் மற்றும் சுயமதிப்பீட்டார்வம் மேம்பாடு அடைவதற்கு இந்நூலாக்கம் வழிகாட்ட வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**சு. சுந்தரசிவம்**
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*வலிகாமம் கல்வி வலயம்.*

# வாழ்த்துச் செய்தி



சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சண்டிலிப்பாய் பதியில் தனது கல்விச் சேவையில் 80 ஆண்டுகளை நிறைவு செய்யும் யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எமது பிரிவில் சிறப்பான கல்விச் சேவையினையும் சிறந்த இணைப்பாடவிதான செயற்பாடு களையும் ஆற்றி வருகின்றது.

"செய்கையே சிறந்த கல்வி" என்ற மகுட வாசகத்தினைக் கொண்ட இக்கல்லூரி தனது செயற்பாடுகளினால் தமக்கென ஒரு தனியிடத்தில் தடம்பதித்து வளர்ந்து வருகின்றது. கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறைகளிலும் தன்னிகரில்லா வகையில் தேசிய ரீதியில் பல பரிசில்களைப் பெற்றுள்ளது.

மாணவர்களுக்கு நல்ல ஆசானாகவும், தந்தையாகவும் விளங்கும் கல்லூரியின் அதிபர் திரு.கு.விமலன் அவர்கள் ஒவ்வொரு மாணவர்களின் வளர்ச்சியிலும் தனிப்பட்ட கவனத்தையும் அக்கறையினையும் கொண்டிருப்பதனையும் அவதானித்திருக்கின்றேன். இவருடைய சிறந்த தலைமைத்துவத்தில் வழிநடாத்தப்படுகின்ற சிறந்த ஆசிரியர் குழாமின் கல்விச் சேவையில் அமுத விழாக்காணும் இக்கல்லூரி மென் மேலும் வளர்ச்சி பெற எனது நல்வாழ்த்துக்களைப் தெரிவிப்பதுடன் சீரணி நாக பூசணி அம்பாளின் பாதமலர்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

**திருமதி. எ. அன்ரன் யோகநாயகம்,**
*பிரதேச செயலர்,*
*சண்டிலிப்பாய்.*

# வாழ்த்துச் செய்தி



சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தில் வளர்ந்து வரும் சண்டிலிப்பாய் கிராமத்தின் கல்வியை வளர்த்தெடுக்கும் நிறுவனமாக யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி விளங்குகின்றது. சைவத்தமிழ்ச்சிறார்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் 1929ம் ஆண்டு அமரர் திரு.ப.மு.செகராசசிங்கம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று தனது 80வது நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளையில் இக்கல்லூரியை வாழ்த்துக் கிடைப்பதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

மிகக் குறுகிய காலத்தில் துரித வளர்ச்சி கண்ட கல்லூரிகளுக்கு இக்கல்லூரியையே உதாரணமாகக் கொள்ளலாம். குறிப்பாக 1990ம்ஆண்டின் பின்னர் இப்பிரதேசத்தில் ஒரு அசாதாரண சூழல் காணப்பட்ட போதும் அக்காலத்தில் மிகவும் துரித வளர்ச்சி கண்டது. திரு.ச.சிவநேஸ்வரன் அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் பல துறைகளிலும் மாற்றம் ஏற்பட்டு மிக வேகமாக வளர்ந்தது. பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் முதலில் சாதனை படைத்த இக்கல்லூரியானது தொடர்ந்தும் அச்சாதனையை தக்கவைத்து வருவதோடு பல துறைகளிலும் சாதனை படைத்த கல்லூரியாக திகழ்கிறது. திரு.ச.சிவநேஸ்வரன் அவர்களின் இடமாற்றத்தினைத் தொடர்ந்த அதிபர் பதவியைப் பொறுப்பேற்ற திரு.வ.ஶ்ரீகாந்தன் அவர்கள் முன்னைய அதிபர் விட்டுச் சென்ற பணிகளை மிகத்திறம்பட முன்வைத்து வருவதினை அவதானிக்க முடிகின்றது. தனிய விளையாட்டுத்துறை மட்டுமன்றி அப்பிரதேசத்தின் கலை, கலாச்சாரம், பண்பாட்டினையும் போற்றி அதனை வளர்ப்பதிலும் இக்கல்லூரி திறம்பட செயலாற்றி வருகின்றது. குறிப்பாக சிந்து நடைக் கூத்தில் மாகாண மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்ற கல்லூரியாகவும் விளங்குகின்றது. இக்கல்லூரி நிலைநாட்டும் சாதனைகளினால் சண்டிலிப்பாய் கோட்டமும் பெருமை அடைகிறது. கல்விச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கும் இக்கல்லூரி இப்பிரதேசத்திற்கு என்றும் பெருமையைத் தேடித்தர வேண்டும். என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**சி. கந்தசாமி**
*கோட்டக்கல்விப்பணிப்பாளர்.*
*சண்டிலிப்பாய்.*

# வாழ்த்துச் செய்தி



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தனது எண்பதாவது நிறைவு விழாவை இன்று கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். எனது பாட்டனாரான காலம் சென்ற திரு. செகராஜசிங்கம் அவர்கள் 1929ம் ஆண்டில் ஸ்தாபித்து வைத்த "ராஜா ஸ்கூல்" தற்பொழுது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக ஏற்றமிகு வளர்ச்சியடைந்து கல்வித்துறையிலும் பல விளையாட்டுத்துறையிலும் பல வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்து வெற்றி நடைபோட்டுக் கொண்டிருப்பது எனது பாட்டனாரின் கனவு நினைவாகும் நாளாக இருக்கின்றது.

1929ம் ஆண்டில் நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் ஆரம்பித்து வைத்த ராஜா ஸ்கூல் இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அறிவு புகட்டும் உயர்தரக் கல்வி நிலையமாக விளங்கி வருவது மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். இவ் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்த அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

கடந்த சில வருடங்களாக பல மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெறுவதும், புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் போட்டியிட்டு வெற்றி பெறுவதும், விளையாட்டுத்துறையில் மாவட்டங்களுங்கிடையிலுள்ள போட்டிகளில் வெற்றிக் கிண்ணங்களை தட்டிக் கொள்வதும், முக்கியமாக வலைப்பந்தாட்டப் போட்டியில் தேசிய ரீதியில் சாதனைகளை நிலைநாட்டி பாடசாலையின் புகழ் நாட்டுவதும் மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். இம்மாணவர்கள் அனைவர்க்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

எமது பாடசாலை மென்மேலும் அளப்பரிய பல சாதனைபளைப் புரிந்து பாடசாலையின் வளர்ச்சியையும் புகழையும் நிலைநாட்ட எனது நல்லாசிகள்.

"வாழ்க வளர்க"

*ஸ்தாபகரின் மூத்த பேரன்*
**விஸ்வநாதன் ராஜன்**

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



இன்று யாழ்ப்பாண கல்விப் புலத்தில் தனிச்சிறப்புடையதாக விளங்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் உயிர்ப்பு தனித்துவமானது. இற்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன் கல்விப் புலத்தில் பெரிதும் அறியப்படாத "ராஜா ஸ்கூல்" என கிராமத்தவர்களால் அழைக்கப்பட்ட சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் இன்று சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக பிரபல பாடசாலைகளுக்கீடாக விளங்குவதை பார்க்கும் பொழுது உள்ளமெல்லாம் பரவசமாகிறது.

கடந்த இரு தசாப்தங்களாக இக்கல்லூரி ஈட்டிய வெற்றிகள் கல்விப் புலத்தில் கிராமிய பாடசாலைகளெல்லாம் அதனை முன்னுதாரணமாகக் கொண்டு புதிய நம்பிக்கையுடன் எழுச்சி பெற்று வந்துள்ளன. கல்வி, விளையாட்டு, சுற்றாடல், கட்டிட அமைப்பு பௌதீக வள அபிவிருத்தி என அனைத்து துறைகளுக்கும் முன்னுதாரணமாக இக்கல்லூரி விளங்குகிறதெனலாம்.

இக்கல்லூரியின் மேற்படி எழுச்சிக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள் என பங்களித்தவர் அநேகர். இன்றைய அதிபர் திரு.கு.விமலன் தொடக்கம் மறைந்த பிரதி அதிபர் திரு.ச.கந்தசாமி, இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர் திருமதி.றெ. இருதயநாதன், இளைப்பாறிய மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் திரு.க.கந்தசாமி, திரு.வீ.இராசையா ஆகியோரை விசேடமாக குறிப்பிடலாம். அத்துடன் எனது கால ஆசிரியர்களும் மாணவர்களும் தந்த உழைப்பால் உயர்ந்து நிற்பதே இக்கல்லூரி. கல்லூரி வரலாற்றில்,

1993 ல் நான் அதிபராக பதவியேற்ற காலத்தில் 8 பரப்பில் இருந்த இக்கல்லூரி இன்று 34 பரப்புடன் கூடிய 42 பரப்பில் விசாலித்து நிற்பதும்,

1995ல் க.பொ.த உ/த வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதும்,

1999ல் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றதும்,

2002ல் 19,17 வயது பிரிவு வலைப்பந்து அணியினர் வட கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமையும்,

2004ல் க.பொ.த சா/த பெறுபேற்றில் 100க்குட்பட்ட மாணவர் தொகை பாடசாலைகளில் யாழ்மாவட்டத்தில் 2ம் இடம் பெற்று சாதனை படைத்தமையும்,

2005ல் க.பொ.த உ/தல் **1C** பாடசாலைகளில் யாழ்மாவட்டத்தில் 1ம் இடம் பெற்றமையும்,

கல்லூரி வரலாற்றில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அர்ப்பணிப்பான செயற்பாட்டால் ஏற்படுத்தப்பட்ட பெறுபேறுகளாகும்.


2005ல் நான் இடமாற்றம் பெற்று சென்ற பின் அதிபராக பதவியேற்ற திரு.வ.ஸ்ரீகாந்தன் இப்பாடசாலையைக் கட்டிக் காப்பதில் பெரு வெற்றிபெற்றார். கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர் காட்டிய செயற்பாடுகள் இன்று அவரை ஒரு புகழ்பூத்த அதிபராக்கியுள்ளது. அப் பெருமையும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்குரியதே.

மேலும் இன்று அதிபராக வீற்றிருக்கும் திரு.கு.விமலன் இக்கல்லூரியின் உயர்வில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஒருவர். இவர் காலம் இக்கல்லூரி மேன்மேலும் உயர்வடையும் என்ற பெரு நம்பிக்கை எனக்குண்டு. மேலும் இக்கல்லூரி உயர்வில் பங்களித்த அனைவரையும் நினைவு நிறுத்தி அனைவருக்கும் நன்றி கூறி இச்செய்தியை நிறைவு செய்கிறேன்.

வளர்க சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**ச. சிவநேஸ்வரன்** (முன்னாள் அதிபர் S.H.C)
*அதிபர்,*
*யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி*

# நின்று நிலைத்து ஓங்கி உயர்ந்து .....



சண்டிலிப்பாய் இந்துத் தாயின் மண்ணில் என் உயிரினுமினிய மாணவச்செல்வங்களுடனும் அன்பினுக்கினிய ஆசிரிய மணிகளுடனும் ஐந்தாண்டுகள் பணி செய்த உயர் பொழுதுகளை எண்ணி உவக்கின்றேன். கல்லூரி அன்னை எண்பது அகவை தாண்டி உன்னத நிலையை நோக்கி வளர்ந்து வருவதைச் சிந்தித்து மகிழ்கின்றேன். அதிபராய் இங்கு இருந்த நாட்களில் மாணவர்கள் காட்டிய அன்பையும், விசுவாசத்தையும், ஆசிரியர்கள் தந்த ஆதரவையும் அபிமானத்தையும் பூசிக்கின்றேன். கல்லூரிச் சமூகம் வழங்கிய ஒத்துழைப்பினை உயர்வாகப் பார்க்கின்றேன்.

நின்று நிலைத்து ஓங்கி உயர்ந்து இன்னும் உன்னத சேவை வழங்கக் கல்லூரியினை வாழ்த்துகின்றேன். சீரணியாளின் சிறந்த அருளால் அனைத்தும் பெற என் அன்புக்குரியவர்களான அதிபர், ஆசிரியர், மாணவரை ஆசிக்கின்றேன்.

**வ. ஸ்ரீகாந்தன்**
*முன்னாள் அதிபர்,*
*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.*

*யா/விக்ரோறியாக் கல்லூரி,*
*சுழிபுரம்.*

# அதிபரின் உள்ளத்திலிருந்து....



எண்தாண்டுகளிற்கு மேலாக கல்விப் பணியைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கும் எமது கல்லூரியின் அமுத விழா சிறப்பிதழிற்கு வாழ்த்துச் சொல்ல வாய்ப்புத் தந்த இறைவனுக்கு நன்றிகள் பல. எனது மனப்பதிவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி.

ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமாயின் அச்சமூக அங்கத்தவர்கள் கல்வி கற்றுச் சிறந்தவர்களாக விளங்கவேண்டும். அந்த உயரிய சிந்தனையைக் கருத்திற் கொண்டு 1929ம் ஆண்டு பெரியார் திரு. ப.மு. செகராசசிங்கம் அவர்களால் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இன்று இக்கல்லூரியானது 80 அகவையைக் கடந்து வீறு நடை போட்டு வருகின்றது. இலங்கை தீவு முழுவதும் தன் பெயரைப் பொறித்து பெருவளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறு இக்கல்லூரி வளர்வதற்கு பல அதிபர்கள் ஆசிரியர்கள் தன்னலம் கருதாது சேவை மனப்பான்மையுடன் பணிபுரிந்துள்ளார்கள். இவர்களை நாம் என்றும் போற்றுவோம்.

ஓர் பாடசாலை பெற்றோர்கள் மாணவர்கள் விரும்பி வரவேண்டுமாயின் அங்கே நடைபெறுகின்ற சகல செயற்பாடுகளும் தரமானவையாக விளங்கவேண்டும். அதன் மூலம் தான் சமூகத்திற்கு தரமான கல்வியை வழங்கமுடியும். அந்த வகையில் தரமான கல்வியை வழங்கி தரமான சமூகம் ஒன்றை உருவாக்குவதில் எமது கல்லூரி சிறப்பாகச் செயலாற்றி வருகின்றது. ஓர் பாடசாலைகயில் கற்றல் சிறப்பாக நடைபெற வேண்டுமாயின் அப்பாடசாலை சிறந்த கவின்நிலையுடன் காணப்படவேண்டும். அப்போது தான் மாணவர்கள் ஆசிரியர்கள் வினைத்திறன் மிக்க செயற்பாட்டில் ஈடுபட்டு சிறந்த விளைதிறனைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இன்று கிராமத்திற்குச் சிறந்த அறுவடைகளை வழங்கி வருகின்றது. இது எம் அனைவரையும் மகிழ்விக்கின்றது.


இக் கல்லூரியானது பொதுப் பரீட்சை அடைவுகளில் இன்று குறிப்பிடத்தக்க ஓர் வளர்ச்சியை வெளிக்காட்டி நிற்கின்றது. பல்கலைக்கழகம் சென்று கற்கும் ஓர் கற்றல் சமுதாயத்தை உருவாக்குவதில் இக் கல்லூரி பெரு வெற்றி கண்டுள்து. அது மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தனக்கென ஓர் சிறப்பான இடத்தைக் கல்வி உலகில் பெற்றுள்ளது. வலைப்பந்தாட்டம் கரப்பந்தாட்டம் போன்றவற்றில் மாவட்டம், மாகாணங்களில் வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிகளில் தொடர்ச்சியாகக் கலந்து கொண்டு வருகின்றது. தமிழ்த்தினப் போட்டிகள், கணித விஞ்ஞான சமூகவியல் போட்டிகள் போன்றவற்றிலும் மாணவர்கள் மாகாணம், தேசியம் வரை பங்குபற்றுவது சிறப்பான அம்சமாகும்.

இன்று இக் கல்லூரியில் ஏறத்தாழ 1200 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் கற்றல் தேவைகளை நிறைவு செய்வதில் கல்லூரி பெரும் இடர்ப்பாடுகளைக் கண்டு வருகின்றது. வகுப்பறைப் பற்றாக்குறைகள், கற்றல் உபகரணப் பற்றாக்குறைகள் போன்ற ஏனைய தேவைகள் நிறைவு செய்யப்படுமிடத்து இம் மாணவர்கள் கல்வியில் இன்றும் மேலோங்குவார்கள் என்பது திண்ணம்.

நூற்றாண்டை நோக்கி கால்பதிக்கும் இக் கல்லூரியை மேலும் உன்னத நிலைக்குக் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவோம்.

**திரு. கு. விமலன்**
*அதிபர்,*
*யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.*

# வாழ்த்துச் செய்தி



யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் என்ற வகையில் நான் அகமகிழ்கின்றேன். எங்கள் கல்லூரி கல்வி வளர்ச்சியிலும் இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் சிறப்புற்றுத் திகழ்கின்றமை பெருமைக்குரிய விடயமாகும். கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயற்படுகின்றமை போற்றுதற்குரியதாகும். அமுத விழாக் காணும் எமது கல்லூரி எதிர்வரும் காலங்களிலும் அனைத்துத் துறைகளிலும் உயர்வுபெற்று எமது கிராமத்திற்கு உயர்வைப் பெற்றுத்தரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு கல்லூரியின் வளர்ச்சியில் உழைத்துவரும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

**மா. குணரத்தினம்**
*செயலாளர்*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*

# பொருளடக்கம்


பாடசாலைக் கீதம்

கல்லூரி பற்றிய அடிப்படைத் தகவல்கள்

ஆசிச் செய்தி

வாழ்த்துச் செய்திகள்

1) பவளவிழா தொடக்கம் அமுதவிழா வரை 1

2) இந்துசமய மரபில் குரு மகிமை 8

3) பொதுவியல் இசை 13

4) மென்திறனுலகினுள் உங்கள் வெற்றியின் இரகசியம் 18

5) ஈழுத்தில் இந்து சமய வளர்ச்சிக்கு நாகர் வம்சத்தினர் ஆற்றியுள்ள பங்களிப்பு –ஒரு வரலாற்று நோக்கு 29

6) ஊழியர்களை ஊக்கமளித்தல் 35

7) தொழில் நிறுவனங்கள் மீது சூழலின் செல்வாக்குகள் 46

8) நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் 65

9) கல்விக்கும் பொருளாதாரத்திற்கும் இடையிலான இடைவினை உறவு 69

10) அமுது அடி அடைந்த அப்பர் சுவாமி அவர் வழி பணிசெய்து வாழ்வோம் 75

11) சேனோபில் அணுக்கருவலு நிலையத்தில் ஏற்பட்ட விபத்தும், தடுக்கும் வழிகளும் 77

12) கலையும் ஜீவனோபாயமும் 80

13) யாதும் ஊரே யாவரும் கேளிர் 85

14) வியத்தகு உயிர்த்தொழில்நுட்பம் 89

15) இன்றைய நவீன கல்வித் தொழில்நுட்பமும் கற்றல் – கற்பித்தல் அபிவிருத்திச் செயற்பாடுகளும் – ஓர் பார்வை 92

16) இலங்கையின் அரசியல் யாப்புகளும் (தமிழர்களும்) சிறுபான்மையும் 96

17) நகரமயமாதலும் சமூக மாற்றமும் 99

18) சிறுவர் உரிமைகளைப் பேணுவோம் 102

19) வெற்றியை நோக்கி 104

20) ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் 105

21) சாரணர்களும் பாசறை வாழ்வும் 106

22) சமநிலையான பிராந்திய அபிவிருத்தியும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணும் 111

23) யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக அரங்கச் செயற்பாடுகள் 115

24) பரத ஆடலில் பழமை பேணலும் புதுமை பேணலும் 119

25) எமது சுற்றுலாவில் புவியியல், வரலாற்றின் பங்கு 124

26) மெல்லத் தமிழ் இனிச்சாகும் 127

27) தமிழர் திருமணமும் தாலியும் 129

28) விடிவை நோக்கி அடிவை 132

29) கணனிக் கல்வியைத் தெரிந்தெடுப்பது எப்படி? 134
30) சிகரத்தில் வைத்த பெரியன் 141
31) மாணவர்கள் கவிதைகள் 144
32) காலை உணவின் முக்கியத்துவம் 145
33) Some Valuable Thoughts 145
34) Dicipline 146
35) Keep the World clean 146
36) Cricket 147
37) அன்பினால் 148
38) தேவைதானா முதியோர் இல்லங்கள்? 149
39) பெயர் சொல்ல வாழவேண்டும் 150
40) கேரளாவின் நாட்டிக்கலை கதகளி 151
41) முதியோர் இல்லங்கள் 152
42) அன்பின் விலை பூச்சியம் 153
43) எங்கள் சொத்தே 155
44) உலக நாடகத்தின் ஆரம்பம் கிரேக்கம் 156
45) இசையின் பங்கு 158
46) இதம் தரும் பள்ளி வாழ்க்கை 160
47) மகளிர் சிறப்பு 162
48) என் கல்லூரி என் இறுதி மூச்சுவரை 164
49) முகாமையில் சூழலும் சமூகப் பொறுப்பும் 167
50) இசை வித்துவான்களின் வாழ்க்கை வரலாறு 168
51) பாட்டு – இதமான வேளை 170
52) கவிதை – ஓவியம், வாழ வழி செய்திடுவீர் 171
53) கவிதை, தாய் 172
54) சிந்தனைக்கு 173
55) கொழும்பு 173
56) குடியைக் கெடுக்கும் குடி 174
57) மலரே 174
58) பச்சைக்கிளி 175
59) கல்லூரி 175
60) அன்புத்தாய் 176
61) பண்பு 176
62) கல்லூரி அன்னைக்கு 177
63) தோழியின் பிரிவு 178
64) பூகோளம் வெப்பமடைவதால் நாம் சந்திக்கவேண்டிய சவால்கள் 179
65) அகத்திலிருந்து..... 186

## பிரதி அதிபர்



திரு.இ.ஆனந்தநடராஜா BA, Dip. in. Ed.MA (Tamil)

## பகுதித்தலைவர்கள்



திருமதி.ச.சிவானந்தன்



திருமதி.ந.நாகேஸ்வரன்



திரு.க.சிவசங்கர்



திரு.க.ஸ்ரீ.நந்தகோபன்

# ஆசிரியர் குழாம்



# பவளவிழா தொடக்கம் அமுதவிழா வரை

**திரு. இ. ஆனந்தநடராசா** B.A, Dip.in Edu, MA (Tamil)
*பிரதி அதிபர்*

1929ம் ஆண்டு வள்ளல் திரு.ப.செகராஜசிங்கம் என்பவர் கிராமச் சிறார்கள் முன்னேற்றம் கருதி நாட்டிய விதையானது வளர்ந்து கிளைபரப்பி 80 அகவையிலே பெருவிருட்சமாக நிமிர்ந்து நிற்கின்றது. அன்று முதல் தனது பணியினைச் செவ்வனே ஆற்றி இன்று தேசிய ரீதியிலும் தனது புகழ் பரப்பி நிற்கின்றது. 2004ம் ஆண்டில் கல்லூரி அன்னையின் 75 ஆண்டு நிறைவினை பவளவிழாவாகக் கொண்டாடிய அதன் புதல்வர்கள் இன்று அன்னையின் அமுதவிழாவினைக் கொண்டாடுகின்றனர். இவ்வேளையில் 2005 முதல் 2010 வரையான பதிவுகளை நோக்குதல் பொருத்தமானதாகும்.

இக் கல்லூரியின் சகலதுறை வளர்ச்சியிலும் தன்னை ஈடுபடுத்தி உயர்நிலைக்குக் கொண்டு வந்த திரு.ச.சிவநேஸ்வரன் அதிபர் 22.04.2005 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்த திரு.வ.ஶ்ரீகாந்தன் அவர்கள் இக்கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்று மேலும் வளர்ச்சிப்படிகளில் ஏற்றிச் சென்றார். தற்போது இக்கல்லூரியின் உப அதிபராகப் பணிபுரிந்து பின் யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலையில் அதிபராகப் பணியாற்றிய திரு.கு.விமலன் அவர்கள் கல்லூரியை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்கிறார்.

## கல்விப் பயணத்தில் ....

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2005 இல் இருந்து இன்று வரை படிமுறையான வளர்ச்சிப் போக்கினைக் காட்டி நிற்கின்றது.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | அதிகூடிய புள்ளி | 100ற்கு மேல் புள்ளி பெற்றோர் |
|---|---|---|---|---|
| 2005 | 60 | 02 | 131 | 10 |
| 2006 | 52 | 04 | 173 | 20 |
| 2007 | 56 | 06 | 160 | 20 |
| 2008 | 57 | 06 | 130 | 15 |
| 2009 | 76 | 07 | 160 | 37 |
| 2010 | 71 | 10 | 157 | 31 |

க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகளைப் பொறுத்தவரை 2006ம் ஆண்டில் செல்வி.சு.தேவகி 10A சித்திகளைப் பெற்றமை வரலாற்றுப் பதிவாகும்.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | அதிகூடிய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| 2005 | 66 | 66.7 | 6A, 2B. C |
| 2006 | 77 | 58.4 | 10A |
| 2007 | 67 | 70.1 | 8A, B, C |
| 2008 | 71 | 60.6 | 7A, B, C |
| 2009 | 69 | 39.1 | 6A, B, 2C |

**க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகளைப் பொறுத்தவரை**

1995 இல் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்புக்கள் இப்பிரதேச மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எமது மாணவர்கள் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பித்தது முதல் இன்று வரை பல்கலைக்கழகம், தேசிய கல்வியற் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் கற்கும் வாய்ப்பினை பெற்றுள்ளனர். இவர்களில் 2005இல் செல்வன் இ.விஜயகுமார் 3A சித்திகளைப் பெற்றமை உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலான வரலாற்றுப் பதிவாகும். 2008இல் மூவர் 3A சித்திகளைப் பெற்றனர். செல்வி.ஞா.மேரியூப்ரேசியா, செல்வன்.தே.சுதர்சன், செல்வன்.இ.ரஜீபரன் என்போர் அப்பெருமையினைச் சாதித்தவர்களாவர். மேலும் 2AB சித்தி பெற்ற செல்வன்.சி.சஞருபன் மாவட்டத்தில் 47 ஆவது நிலையை பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2009இல் செல்வி.சு.தேவகி வணிகத்துறையில் 3A சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 5ம் நிலையையும் பெற்றமை பாடசாலை வரலாற்றின் ஓர் சாதனைக் கல்லாகும்.

| ஆண்டு | தோற்றியோர் | சித்தி வீதம் | அதிகூடிய பெறுபேறு | மாவட்டநிலை |
|---|---|---|---|---|
| 2005 | 33 | 51.5 | 3A | 07 |
| 2006 | 41 | 68.3 | 2A, B | 25 |
| 2007 | 41 | 95.1 | 2A, B | 29 |
| 2008 | 42 | 90.5 | 3A (மூவர்) | |
| 2009 | 62 | 75.8 | 3A | 05 |

2004 தொடக்கம் இன்று வரை 57 மாணவர்கள் பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரிக்குச் சென்றமை குறிப்பிடத்தக்க அம்சம்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தொடர்ந்து நாம் மாகாணமட்ட வெற்றிகள் பெற்று தேசிய போட்டிகளில் பங்கேற்றும் வருகின்றோம். அந்த வகையில்

## வலைப்பந்தாட்டம்

| ஆண்டு | வயது | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|
| 2006 | 17 | 1 | |
| 2007 | 17 | 2 | |
| | 19 | 3 | |
| 2008 | 15 | 1 | 1 |
| | 19 | 2 | 1 |
| 2010 | 15 | 2 | 3 |
| | 17 | 2 | 2 |

## கரப்பந்தாட்டம்

| ஆண்டு | வயது | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|
| 2005 | 15 | 2 | 2 |
| 2006 | 15 | 3 | |
| | 19 | 3 | |
| 2007 | 17 | 3 | |
| | 19 | 3 | |
| 2008 | 19 | | |
| | 19G | 3 | |
| 2009 | 19B | 3 | |
| 2010 | | | |

## கூடைப்பந்தாட்டம்

2009 ஆம் ஆண்டு பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டு 2009, 2010 ஆம் ஆண்டுகளில் வலயமட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## மெய்வல்லுனர் போட்டி

2010ஆம் ஆண்டில் செல்வி.த.சங்கீதா 15 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்கேற்றுக் கொண்டார். செல்வன்.கு.கிரிஷாந் 100M ஓட்டப்போட்டியில் மாகாண மட்டத்தில் 4ம் இடத்தினைப் பெற்று தேசியப் போட்டியிலும் கலந்து கொண்டார். செல்வன் ர. திலக்ஷன் 5000 மீற்றர் ஓட்டத்தில் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கலந்து கொண்டார். மேலும் செ.ஜெயதர்சினி 5000 மீற்றர் ஓட்டத்தில் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசியமட்டப் போட்டியில் கலந்து கொண்டார்.

**சாரணர் துறை**

2006இல் நுவரெலியாவில் நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போறியில் 7 சாரணர்களும் சாரணர் தலைவர் திரு.த.அருளரசன் ஆசிரியரும் கலந்து கொண்டனர். 2009இல் கொழும்பு மாவட்ட 46ஆவது தேசிய சாரணர் ஜம்போறியில் உதவிச் சாரணர் தலைவர் திரு.பொ.தயாளன் ஆசிரியர் அவர்களுடன் 4 சாரணர்களும் கலந்து கொண்டனர். 2009இல் பெண்கள் குருளைச் சாரணர் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு திறம்பட இயங்கி வருகின்றது.

**சாரணர் குழுவின் செயற்பாடுகள்**

| விபரம் | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| சாரணர் எண்ணிக்கை | 32 | 31 | 30 | 36 | 36 | 25 |
| பெண் குருளைச் சாரணர் | | | | | 21 | 16 |
| சாரணர் பாசறையின் நிலை | 04 | 02 | 03 | 02 | 03 | B |
| மாவட்ட நிலைச் சான்றிதழ்கள் | 05 | 07 | 05 | 12 | 09 | 10 |
| மாகாண மட்டச் சான்றிதழ்கள் | - | - | - | 01 | - | 09 |

## ஏனைய துறை விருத்தியில்

2007இல் தமிழ்மொழித் தினப் போட்டியில் செல்வி.அ.டில்லிபபீனா தனி இசை நிகழ்ச்சியில் மாவட்ட மட்டத்தில் 3ம் இடம் பெற்றார்.

சிந்து நடைக் கூத்து 2005 இல் மாவட்டத்திலும் மாகாணத்திலும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. 2007இல் மாவட்டத்தில் முதலிடத்தையும் மாகாணத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. மேலும் 2008 இல் மாவட்டத்திலும் மாகாணத்திலும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆரோக்கிய சூழல் கொண்ட பாடசாலைத் தெரிவில் மாவட்ட மட்டத்தில் 2007இல் இரண்டாம் இடத்தினையும் 2009 இல் முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

தமிழ்துறை தொடர்பான போட்டிகளில் 2006 இல் தமிழ்த்தினப்போட்டிகளில் செல்வி.மு.சிந்துஜா பேச்சுப்போட்டியில் முதலாம் இடத்தையும் செல்வி.இ.மீரா கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொண்டனர். ஆனாலும் போக்குவரத்து தொடர்பான தாமதத்தினால் மாகாணமட்டப் போட்டிகளில் இவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. ஆறுமுகநாவலர் விழாத்தொடர்பான பேச்சுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப்பெற்று செல்வி.மு.சிந்துஜா தங்கப்பதக்கம் வென்றார். HNB வங்கி நடத்திய போட்டியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாப்போட்டியிலும் செல்வன்.லோ.கமில்டன் பேச்சில் முதலாமிடம் வென்றார். செல்வி.ந.துஷாந்தி கொக்குவில் இந்துக் கல்லூரி,

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, தினக்குரல் அனுசரணையுடன் புற்றளை மகா வித்தியாலயம் நடத்திய நூற்றாண்டு விழா தொடர்பான கட்டுரைப் போட்டிகள் யாவற்றிலும் முதலாமிடம் வென்றமை குறிப்பிடத்தக்கது. யாழ் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பேச்சுப்போட்டிகளில் செல்வி.கி.யுலக்சினி முதலாமிடத்தையும் செல்வன்.யோ.எழிலன் இரண்டாமிடத்தையும் செல்வன்.லோ.கமில்டன் மூன்றாமிடத்தையும் பெற்றனர். ஒரே கல்லூரிப் போட்டியாளர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டமை சிறப்பம்சமாகும். பிரதேச செயலகம் மட்டத்தில் நடாத்தப்பட்ட பல துறைகள் சார்ந்த போட்டிகளில் செல்வி.இ.மீரா கட்டுரையில் முதலாமிடத்தையும் செல்வி.ட.சுகன்ஜா கவிதையில் முதலாமிடத்தையும் பெற்றுக்கெண்டனர்.

பெரும்பாலும் பல்வேறு நிறுவனங்களாலும் கல்வித்திணைக்களத்தாலும் நடாத்தப்படும் சகல போட்டிகளிலும் எமது கல்லூரி மாணவர்கள் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

சித்திரத் துறை சார்ந்த போட்டிகளில் 2006இல் Atlas நிறுவனம் நடாத்திய சித்திரப் போட்டியில் செல்வன்.அ.ஜோன்ஜிப்ரிக்கோ மாகாணமட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றார். 2007இல் எயிட்ஸ் தினத்தையொட்டி நிக்கொட் நிறுவன அனுசரணையுடன் சுகாதார சேவைத் திணைக்களம் நடாத்திய சித்திரப் போட்டியில் செல்வன்.ம.ரகுநாதன் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றார். 2008இல் அரச சிறுவர் கலைவிழா தொடர்பாக யாழ்மாவட்ட கலை இலக்கிய மன்றம் நடத்திய ஓவியப் போட்டியில் செல்வன்.ச.சாருஜன் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்றார். இதே ஆண்டில் The National Council of YMCAS of Srilanka நடத்திய " உலக சமாதானம் ஓவியப் போட்டியில் மாகாணமட்டத்தில் செல்வன்.ச.லவன் 3ம் இடத்தையும் செல்வன்.ச.மேவின்ராஜ் 6ம் இடத்தையும் செல்வன்.சி.துஷாரதன் 12ம் இடத்'தையும் பெற்றுக் கொண்டனர். 2009இல் அரச சிறுவர் ஓவிய விழாப் போட்டியில் செல்விகள் வி.தர்ஷிகா, இ.வதுசனா, செல்வன். அ.ஜோன் ஜிப்ரிக்கோ ஆகியோர் தேசிய மட்டத்தில் வெற்றிகளை ஈட்டினர். யாழ் தினக்குரல் நிறுவனம் நடாத்திய ஓவியப் போட்டியில் செல்வி.வி.தர்ஷிகா மாவட்டத்தில் முதலாமிடத்தையும் செல்வி.அ.நவோமியா 4ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். 2010இல் யாழ் மாவட்ட சிவில் நிர்வாகம் நடாத்திய டெங்கு விழிப்புணர்வு சித்திரப் போட்டியில் செல்வன்.நா.சபேஷ் முதலாமிடத்தைப் பெற்றார்.

ஆரம்பப்பிரிவில் 2009ம்ஆண்டு செல்வி.த.டிசானி துரித கணித செய்முறையில் வலயமட்டத்தில் 1ம் இடத்தினையும் 2010ம் ஆண்டு செல்வி.த.டிசானி துரித கணித செய்முறையில் மாகாணமட்டத்தில் 1ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார். மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்திய சதுரங்கப் போட்டியில் செல்வன் ர.லினுஜன் மூன்றாம் இடத்தினைப் பெற்றார்.

**பாடசாலையின் வெளியீடுகள் தொடர்பாக**

பாடசாலையின் 75 வருட பதிவுகளைக் கொண்ட "பவளவிழா மலர்" 2004இல் வெளியிடப்பட்டது.

2007இல் "வைகறை" என்னும் கையெழுத்துச் சஞ்சிகை ஆரம்பப் பிரிவு மாணவர்களினால் முதன்முதலாக வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் வெளியிடப்பட்டு வருகின்றது. இறுதியாக 2010 இல் நான்காவது சஞ்சிகை வெளியிடப்பட்டது.

2008இல் தமிழ் மன்றத்தினால் மாணவர்களினால் ஆக்கப்பட்ட கவிதைகள் "தூறல்" என்ற கவிதைத் தொகுப்பாக வெளியிடப்பட்டது.

2009இல் முகிழ் பத்திரிகை முற்பகுதியில் வெளியிடப்பட்டது. இது மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கியும் பாடசாலையின் சாதனைகளை உள்ளடக்கியும் வெளிவருகிறது.

இவை தவிர வகுப்பு மட்டங்களில் உருவாக்கப்படும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன.

**பௌதீக வளத் தேடலில் 2004ம் ஆண்டின் பின்னர்.............**

அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தனின் முயற்சியால் பல்வேறு பௌதிக வளத் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பாடசாலைக்கென நூல்நிலையம் ஒன்று இல்லாத போதும் அதற்கென இடமொன்று ஒதுக்கப்பட்டு நூல்நிலையம் செயற்பட்டு வருகின்றது. இதற்கான மின்சார வசதிகளும் மின்விசிறிகளும் பொருத்தப்பட்டுள்ளன. நீண்ட காலமாக ஆசிரியர்களிற்கான ஓய்வறை இல்லாது இருந்த நிலையில் அவர்களிற்கு ஓய்வறை ஒன்று உருவாக்கப்பட்டது. மேலும் அவர்களது கற்பித்தல் உபகரணங்களை வைப்பதற்கு பல அறைகளைக்கொண்ட அலுமாரி ஒன்றும் செய்துகொள்ளப்பட்டது.

நீண்ட காலக்கனவாக இருந்த நிறுவுனர் சிலை அமைத்தலானது அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் முயற்சியால் உருவாக்கப்பட்டது. இதனை அப்போது எமது கல்லூரியில் ஆசிரியராக இருந்த திரு. க. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களால் அழகுற அமைக்கப்பட்டது. இது எமது கல்லூரிக்கு புதுப்பொலிவு தரும் அம்சமாக விளங்குகிறது.

பவளவிழா மண்டபமானது மேலும் 40 அடிகள் விஸ்தரிக்கப்பட்டு ஒரு மேடையும் அமைக்கப்பட்டது. பல ஆண்டுகாலத் தேவையாக இருந்த மாணவர், ஆசிரியர் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டது. மைதானத்தில் வெள்ளம் தங்கும் காரணத்தினால் மைதானப்புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே இருந்த உள்ளக வீதிகளும் புனரமைப்பு

செய்யப்பட்டன. அலுவலகத்திற்கு மாபிள் பதிக்கப்பட்டது. பாடசாலையின் பாதுகாப்பு அறைத் தேவைகளிற்காக மாடிப்படிகளுடன் இணைந்திருந்த அறைகள் கதவுகளிட்டு பாதுகாப்பு செய்யப்பட்டன. வகுப்பறைகள் பாதுகாப்பிற்காக கம்பி வலை யன்னல்களும் நூலகத்திற்கு கண்ணாடி யன்னல்கள் பொருத்தப்பட்டன.

மாணவர்களின் விளையாட்டுத்தேவைகளிற்காக உயரம் பாய்தல் மெத்தை பாடசாலை மீது அதிக அக்கறை கொண்ட திரு.திருமதி. சோமநாதன் தம்பதியினரின் உதவியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாணவர்களிற்கான கட்புல செவிப்புலக்கூடம் அமைக்கப்பட்டது.

நூலகத்திற்குத் தேவையான அலுமாரிகளும் வாசிப்பு மேசைகளும் பெறப்பட்டுள்ளன.

பல்லூடக எறியி

பிரதி பண்ணும் இயந்திரம்

Sports Room

வழிபாட்டிற்கான சுவாமிப்பீடம்

Special Education Room

Haridas building

இவ்வாறாக பவளவிழா ஆண்டிலிருந்து அமுதவிழா ஆண்டு வரை நிறைவான பல்வேறு செயற்பாடுகளையும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வலுவான சமுதாய அமைப்புக்கு வழிகாட்டியாக இக்கல்லூரி திகழ்ந்து வருகின்றது என்பதனை இவ் வரலாற்றுப் பாதையினூடாக நாம் கண்டு கொள்ளலாம்.

♣ ♣ ♣

# இந்து சமய மரபில் குரு மகிமை

**பேராசிரியர். கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர்,**
*தகைசார் பேராசிரியர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

இந்துப் பண்பாட்டில் குரு பாரம்பரியம் தெய்விகப் பாரம்பரியமாகச் சிறப்புற்று வந்துள்ளது. இக்குருப் பாரம்பரியத்திற்கு நீண்ட கால வரலாற்றுச் சிறப்புண்டு. இந்து சமய மரபில் ஞானத்தையும் ஆன்மீக நெறியையும் மக்களுக்கு வழங்குவதில் முதன்மையாகத் திகழ்ந்து பெரிதுந்துணை நிற்பவராக விளங்குபவரே குரு. குருப் பாரம்பரியத்தின் சிரீய பண்பினாலும் உபதேசங்களினாலும் அறிவு நிலைசார்ந்த கற்பித்தலினாலும் மக்கள் கூட்டத்தினர் சமய உண்மைகளை உணர்ந்து அறிவு பெற வாய்ப்பு ஏற்பட்டது. இந்துகளின் கல்வி யறிவு சமயத்தோடு கூடிய தொடர்புடைய தாக அமைந்தது. சமயத்தையும் கல்வியை யும் இந்துக்கள் இரு கண்களெனக் கருதினர். அவர்கள் தமது ஞான அறிவைக் குருவாயி லாகவே பெற்று வந்தனர். குரு என்ற சொல்லுக்கு அஞ்ஞானமாகிய இருளை நீக்குபவர் என்று பொருள். கல்வி முதலிய வற்றால் அஞ்ஞான இருளை நீக்குபவர் என்ற காரணத்தால் அவர் வித்தியா குரு எனப் பெயர் பெறுகின்றார். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் திருவருள்தான் என்ற கருத்தினைத் திருவருட்பயன் எடுத்துக் கூறும்.

**அறியாமை உள்நின்(று) அளித்ததே காணும்**
**குறி ஆகி நீங்காத கோ.**

ஆத்ம ஞானம் தானாகவே விளங்க மாட்டாது. அதை விளங்கச் செய்வதற்கு ஞானாசிரியன் வேண்டும். 'எழுத்தறி வித்தவன் இறைவனாவான்' என்ற நிலையில் குரு இந்துப்பாரம்பரியத்தில் தெய்விக நிலைக்கு உயர்த்தப்படு கின்றான். அறியாமையில் சிக்குண்டு அல்லற்படும் ஆன்மாக்களுக்கு உரிய வழி காட்டுவதற்கு இறைவனின் திரு வருளே குருவாகத் தோன்றுகின்ற தென்ற கருத்து இங்கு நோக்கத்தக்கது.

மாணவர்கள் அவர் தம் தன்மைக்கேற்ப சில குறைகளையும் சில நிறைவான தன்மைகளையும் பெற்றிருப்பர். எனவே ஒவ்வொரு மாணவருக்கும் அவருக் கேற்ற வகையில் உரிய அறிவுரையும் கற்பித்தலும் தேவைப்படும். அவ்வாறு அவரவர் தன்மைக்கேற்ப தேவையான வற்றைச் சிறந்த முறையில் உருவாக்கி அவர் தம் குறைகளைக் களைந்து நிறைவு பெறச் செய்யும் வகையில் அறிவு, ஆற்றல் வளரத் துணைபுரிவதே குருவின் சிறப்பான பணியாக அமைகின்றது. மாணவரை ஒரு நோயாளியாகவும் குருவை நோய் தீர்க்கும் மருத்துவ ராகவும் உவமித்து, மாணவரின் தேவைகளை ஆசிரியனே தெரிந்து கொள்ளவும் அதற்கு வேண்டியவற்றைச் செய்யவும் வல்லவர் என்னுங் கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**அகத்துறுநோய்க் குள்ளினர் அன்றி அதனைச்**
**சகத்தவரும் காண்பரோ காண்**

அறியாமையிற் சிக்குண்டு அவதி யுறும் ஆன்மாக்களுக்கு ஆதரவளித்துக் கடைத்தேறத் துணை செய்யக்கூடிய ஆற்றல் குரு ஒருவருக்கேயுண்டு என்ற கருத்து திருவருட்பயனில் கூறப்படுகின்றது.

திருமூலர் குருவைப் பற்றியும் குருவின் உபதேசச் சிறப்புப் பற்றியும் குரு நிந்தனையால் ஒருவருக்குக் கிடைக்கும் துன்பம் பற்றியும் கூறியுள்ளார்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே**

என்ற பாடல் வழி குருவின் மகத்துவத்தைப் போற்றுகின்றார். குருவை இறைவனோடு இணைத்துப் பெருமைப் படுத்தும் பண்பு சமய இலக்கியங்களில் காணப்படுகின்றது. குருவை உயர்ந்தவராகக் கருதவும் அவர் மீது நிறைவான நம்பிக்கை கொள்ளவும் அவரை ஈஸ்வரன் என்ற உயர்நிலையில் வைத்து பக்தி செலுத்தவும் வேண்டியது ஒவ்வொருவரது ஆத்மீகக் கடமையென இந்து சமய மரபில் வற்புறுத்தப்படுகின்றது.

இறைவனே முதல் குரு என்பதும் உயிரினங்களின் நல்வாழ்விற்காக இறையருளால் தோன்றியவரே குரு எனவும் திருமூலர் கூறியுள்ள அரிய கருத்துக்கள் சிந்தனைக்குரியன.

**குருவே சிவமெனக் கூறினன் நந்தி**
**குருவே சிவமென் பதுகுறித் தோரார்**
**குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்**
**குருவே உரையுணர் வற்றதோர் கோவே**

எனப் போற்றுகின்றார் திருமூலர். இக்காரணத்தினாலேயே குருவாகிய இறைவனைச் சிவமென்று சைவசித் தாந்திகள் குறிப்பிட்டுள்ளனர்.

சிவாலயத்தில் கருவறையின் தென் புறத்தில் வீற்றிருந்து அருள் சுரக்கும் சிவனது தட்சிணாமூர்த்தி வடிவம் குருவின் மேன்மையை எடுத்துக்காட்டுவதாகும். இறைவன் கல்லால விருட்சத்தின் கீழமர்ந்து சனகாதி முனிவர்க்கு உபதேசஞ் செய்தருளியமை இங்கு குறிப்பிடற்பாலது. பக்குவப்பட்ட ஆன்மாக்களைக் குருமூர்த்தமாகவே தான் இறைவன் ஆட்கொள்ளும் சிறப்பால் குருத்துவம் இறை தத்துவத்துடன் இணைந்து விடுகின்றது. இத்தத்துவத்தை உணர்த்தி நிற்பது தஷ்ணாமூர்த்தியின் அமைதியான யோகநிலை. தனது வலது கையினால் சின் முத்திரையைக் காட்டி மோன நிலையில் உபதேசஞ் செய்யும் நிலை ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக விளங்கும் ஞான நிலையை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இறைவன் குருவாகத் தோன்றி குருந்த மரத்தடியில் அமர்ந்து யோக நிலையில் தமக்கு உபதேசஞ் செய்தருளியமை பற்றி மணிவாசகரின் அனுபவமும் குறிப்பிடற்பாலது.

ஆன்மாக்கள் ஆணவம் என்ற ஒரே மலத்தையுடைய விஞ்ஞானகலரும் ஆணவம், கன்மம் என்ற இரு மலங்களையுடைய பிரளயாகலரும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் உடைய சகலருமாக மூன்று வகையினர் பற்றிச் சைவசித்தாந்தம் கூறும். இவர்களுள் விஞ்ஞானகலருக்குச் சிவபிரான் அவர்களறிவினும் பேரறிவாக விளங்கி மல நீக்கம் செய்வரென்றும், பிரளயாகலருக்கு இடபாரூடராகக் காட்சி கொடுத்து மலநீக்கம் செய்வரென்றும் சகலராகிய தேவர், இருடியர், மனிதர் ஆகியோருக்கு அவர்களைப் போன்று வந்து மலநீக்கம் செய்வரென்றும் கூறப்படும். இதனை,

**உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்றாமுயரும்**
**விஞ்ஞானகலர் பிரளாயகலர் சகலர்**
**நிரையின் மலம் மலங்கன்ம மாயை நிற்கு**
**முதலிருவர்க்கு நிராதாரமாக்கிக்**
**கரையிலருட் பரன்துவி தாசத்தினிபாதத்தாற் கழிப்பன்**
**மலஞ் சகலருக்குக் கன்மஒப்பிற்**

**றரையிலாசான் மூர்த்தியாதாரமாகித் தரித்**
**தொழிப்பன் மலஞ்**
**சதுர்த்தா சத்திநிபாதத்தால்**

என்ற சிவஞான சித்தியார் கூறுவதினால் அறியலாம். இதையே

**ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த விட்**
**டன்னிய மின்மை யினரன் கழல் செலுமே**

எனச் சிவஞானபோத எட்டாஞ் சூத்திரமும் கூறும்.

முருகப் பெருமானும் குருவாக இருந்து அகஸ்திய முனிவருக்குப் பிரணவப் பொருள் முதலியவற்றைப் போதித்தார். இதனை,

**அளவில் பலகலை யங்கமாரணங்களுணர்ந்த**
**அகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்**

என்ற பாடல் கூறும். இதனையே கச்சியப்ப சிவாச்சாரியாரும் –

**ஆங்குறு குமரப்புத்தேளருமறைக் காதியாகி**
**யோங்குமென் பொருட்டு மேலாமோரெழுத்துரை**
**– யினுண்மை**
**தீங்கற வணங்கிக் கேட்பச் சிறுமுனிக்குதவி மற்றும்**
**பாங்குற மிறைவனூலும் பரிவினாலுணரித்தி**
**– னானால்**

எனக் கந்த புராணத்தில் போற்றியுள்ளார். இவ்வாறு பரம்பொருளே குருவடிவாக வருதலால் குரு என்பவர் எத்துணை பெருமை நிறைந்தவர் என்பதை உணரலாம்.

ஸ்ரீகுருகீதை எனும் நூல் குரு பக்தி மகிமையையும் தத்துவத்தையும் கூறுகின்றது. இது ஸ்கந்த புராணத்தில் பிரம்ம ஸம்ஹிதையில் உத்தர காண்டத்தில் உமா மகேசுவர ஸம்வாத முடிவில் மூன்று அத்தியாயங்களாக உள்ளது. ஜபம், தவம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் ஆகிய அனைத்தும் குருதத்துவத்தை அறியாத விடத்து பயனளிக்க மாட்டா என்றும் குருபக்தியில்லாது ஆன்மாவிற்கு வேறெதுவும் சாத்தியமாகாதென்றும் புத்திமான்கள் சிறப்பாக அதை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்றும் பரமேசுவரன் பார்வதியிடம் கூறும் வகையில் அமையும் பகுதி இங்கு குறிப்பிடற்பாலது.

குருவின் பாதசேவையால் ஒருவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டுப் பரிசுத்தனாகின்றான். குருபாத தீர்த்தம், குருமூர்த்தியைத் தியானஞ் செய்தல், குருவின் நாமத்தை ஜபஞ் செய்தல், குரு நாம சிந்தனை போன்றவை ஒருவனுடைய அஞ்ஞான இருளை நீக்கும் சாதனங்களாகும். இவை பற்றி இந்நூலில் சிறப்பாகக் கூறப்படுகின்றது. குருவின் நாம கீர்த்தனம் சிவனுடைய கீர்த்தனமாகும். குருவின் வாசஸ்தானமே காசிஷேத்திரம். அவரது பாத தீர்த்தம் கங்கை. குருவே உண்மையில் தாரகப்பிரம்மம் எனப் போற்றப்படுகின்றார். குருவிற்கு மேலான தத்துவம் இல்லை என்பதை 'நாஸ்தி தத்துவம் குரோ: பரம்' என ஸ்ரீகுருகீதை போற்றுகின்றது.

**குருர்பிரம்மா குருர்விஷ்னு குருர்தேவோ மகேச்வர:**
**குருரேவ பரம்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:**

என்பது ஸ்ரீகீதை கூறும் தெய்விக மகிமை. குருவே பிரம்மர் குருவே விஷ்ணு குருவே தேவதேவராகிய மகேசுவரர் குருவே பரப்பிரம்மம் அந்த குருவிற்கு நமஸ்காரம் என குரு வணக்கத்தை ஸ்ரீ குருகீதை போற்றுகின்றது. சமய வழிபாட்டிற்கும் அறிவைத் தேடும் விடயத்திலும் குரு உபாசனையே முன்னோடியாக விளங்குகின்றது. தியானத்திற்கு மூலம் குருவின் வடிவம் பூஜைக்கு மூலம் குருவின் பாதம் மந்திரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம் முத்திக்கு மூலம் குருவின் கிருபை எனவும் ஸ்ரீகுருகீதை குரு மகிமையை எடுத்துக்கூறுகின்றது. சிவனுடைய கோபத்திற்குப் பாத்திரமா

னால் குரு காப்பாற்றுவார் ஆனால் குருவின் கோபத்திற்குப் பாத்திரமானால் எவரும் காப்பாற்ற இயலாது எனக் கூறப்படும் கருத்தும் குருமகிமைக்குச் சான்றாக உள்ளது. திருவிளையாடற் புராணத்திலும் இதே கருத்து மற்றொரு வகையில் விளக்கப்படுகின்றமை ஒப்பு நோக்கற்பாலது.

**"ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிக னெண்ணித் தீர்க்கும்**
**தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்பதன்றிப்**
**பேசுவ தெவனோ"**

என்றவாறு சிவபிரானுக்கு செய்த பாவத்துக்குரிய பிராயச்சித்தத்தைக் குருவே செய்து பாவந் தீர்ப்பார். ஆனால் அக்குருவிற்குச் செய்த குற்றத்திற்குரிய பிராயச்சித்தத்தை அக்குருவே மனமுவந்து செய்வதன்றி வேறெவராலும் அப்பாவந்தீராது. இக்கூற்றை நன்குணர்ந்தவராக அனைவரும் குருவினிடம் பக்தி சிரத்தையுடன் நடந்து கொள்ளவேண்டுமென்பதை இந்து சமய நூல்கள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. எமக்கு குருவின் வழிகாட்டல் வேண்டியதில்லை நூல்களில் எல்லா கல்விகளையும் மந்திரப்பிரயோக முறைகளையும் நாம் கற்றறிந்து கொள்ளலாம் என்ற கொள்கையுடையோரும் உளர். ஆனால் 'குரு இல்லா வித்தை பாழ்' என்ற முதுமொழிக்கேற்ப குருவின் வழிகாட்டலின்றி வித்தை பிரகாசித்துச் சித்தியாக மாட்டாது என்ற உண்மையும் உணரற்பாலது.

**அறிவைம் புலனுடனே நான்றதாகி**
**நெறியறி யாதுற்ற நீராழம் போல**
**அறிவறி வுள்ளே அழிந்தது போல**
**குறியறி விப்பான் குரு பரனாமே**

என திருமந்திரமும் குருவின் வழிகாட்டலின் இன்றியமையாமையைக் கூறும்.

**குரவரைவர் அரசனுபாத் தியாயன் தந்தை தேசிகன்**
**மூத்தோர்** எனவும்

**ஐவர் தந்தையர் பிறப்பித்தோன் கற்பித்தோன்**
**உபதேசஞ் செய்தோன் அன்னந் தந்தோன்**
**ஆபத்துக்குதவினோனா மென மொழிய**

எனவும் பொருட்டொகை நிகண்டிற் கூறிய பிராமணப்படி ஐந்து குரவருள் உபாத்தியாயன் தேசிகன் என குரு இரு ஸ்தானங்களையும் தந்தையரைவருள் கற்பித்தோன் உபதேஞ் செய்தோன் என குரு இரு ஸ்தானங்களையும் பெற்றுச் சிறப்பிக்கப்படுகின்றார். எனவே குருவை சிந்தித்தல், சேவித்தல், பேசுதல், வணங்குதல் ஆகியவை குருவின் மகிமையைப் போற்றும் செயல்களாகும்.

"குருவை நன்றாக வழிபட்டுச் சேவிப்பதால் அறிவு, வீரியம், கீர்த்தி, வலிமை முதலியன நாடோறும் விருத்தியாகும்" என ஆலாஸ்ய மகாத்மியம் கூறுவது கவனித்தற்பாலது. இத்தகைய மகிமை பொருந்திய குருவை அவமதிப்பதால் வருந்துன்பத்தையும் "குருவை அவமதித்துத் துரோகஞ் செய்வது எல்லாப் பாவங்களிலும் மிகக் கொடிய பாவமாம்". இதனால் ஒளி, வலிமை, கல்வி முதலியன நாடோறும் தேய்ந்து குறைந்து மிக்க துன்பம் உண்டாகும் என ஆலாஸ்ய மகாத்மியமும்,

**அண்ணலும் பரமன்றன்னை ஆசாரியன்றன்னை**
**யவமதித்தோர்கள் எண்ணருங்காலம்**
**பவ்விரிடைத்துளை கிருமியாவர்**

என்று சிவதமோத்திரம் என்ற நூலும் கூறுகின்றன.

திருமூலர் குருநிந்தை பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார்.

**ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய**
**சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்**
**ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்**
**வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே**

எனவும்

**சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்**
**நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது**
**தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்**
**பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமுமாமே**

எனவும் கூறியுள்ளமை சிந்தனைக்குரியன.

உபநிடதம் குருவின் சிறப்பினை நன்கு எடுத்துக் கூறும். குருபக்தியால் வாழ்க்கைப் பயனை குறைவின்றி அடையலாம். குருபக்தி உள்ளவனுக்கு சாஸ்திரங்களைப் படிக்காமலே ஞானம் சித்திக்கும் என்பதற்கு சாந்தோக்கிய உபநிடதம் கூறும் சத்திய காமனுடைய கதையே சான்றாகும்.

ஆசாரியார் என்ற சொல் ஒழுக்கத்திற் சிறந்து விளங்குபவர் என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்க முறையில் நடந்து காட்டுவதும் ஆச்சாரியனுக்குரிய பண்பாக அமைந்தது. பிறருக்கு உரிய படி கற்பித்து, பிறரை அந்த நெறிப்படி நடக்கச் செய்விக்கின்றவரும் தானே அந்த நெறிப்படி நடந்து காட்டுகின்றவரும் ஆசாரியன் என்ற சிறப்புக்கும் பெயருக்கும் உரியவனாகின்றான் எனச் சமய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. உபநிடதங்கூறும் குருத்தத்துவம் சிறப்பானது. ஆசானும் மாணவனும் சேர்ந்து கூறுவதாக அமையும் சுலோகம் மகாநாரயண உபநிடதத்தில் சாந்தி சுலோகத்தில் காணப்படுகின்றது.

**"நாமிருவரும் (குருவும் சீடனும்) மிகுந்த வலிமையுடன் (கல்வி)ப்பணி செய்வோமாக. எமது கல்வி பயனுள்ள தாகவும் உத்வேகமுடையதாகவும் இருப்பதாகுக."**

என்ற கருத்து இற்றைக் காலத்துக்கும் பொருந்துவதாகும். உயர்ந்த இலட்சியத்தை அடையவும் வாழ்க்கை வளமுள்ளதாக அமையவும் நல்லொழுக்கமுள்ள மாணவர்களாக உருவாகவும் மனிதனை அடிமைப்படுத்தும் தீய எண்ணங்களைப் போக்கவும் குருவினால் வழங்கப்படும் கல்வி மாணவனுக்கு உதவியது.

இவ்வாறாக இந்துசமய மரபில் குரு மகிமை சிறப்பிடம் பெறுவதை இந்து சமய நூல்கள் தெளிவாகவும் உறுதியாகவும் கூறுகின்றன. இதன்வழி இற்றைக் கால இளந்தலைமுறையினரும் குரு மகிமையுணர்ந்து குருவைப் போற்றி நல்லொழுக்கத்துடன் வாழ தம்மை அர்ப்பணிப்பது காலத்தின் கட்டாய தேவையாகும். இம்மரபின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாகவே உலகளாவிய நிலையிலும் எமது நாட்டிலும் கல்விக்கூடங்களில் ஆசிரியர் தினம் கொண்டாடி மாணவர்களுக்கு குருவின் மகிமை உணர்த்தப்படுவது பொருத்தமான செயலாக அமைகின்றது.

"வித்யா ததாதி விநயம்" கல்வியினால் வினயமாகிய ஒழுக்கம் சித்திக்கும் என்பதனை ஒவ்வொரு மாணவரும் மனதில் இருத்திக் கொள்வது பயன்தருவதாகும்.

♣ ♣ ♣

# பொதுவியல் இசை

பேராசிரியர் சபா. ஜெயராசா

இருபதாம் நூற்றாண்டில் எழுச்சி பெறத் தொடங்கிய இசை வடிவங்களுள் பொதுவியல் இசை (POPPULAR MUSIC) இரசனை நோக்கில் மிக முக்கியத்துவம் பெறுகிறது. பரந்து பட்ட நுகர்வோரையும் பங்குபற்றுணர் களையும் எளிமைப் பாங்கையும் கொண் டிருத்தல் அதன் எளிச்சிப் பரிமாணங் களாகும். இராகங்கள் எளிமையான வையாகவும் சிரமமின்றி பல முறை பாடப் படக் கூடியவாயும் அமைந்துள்ளன. தொழிநுட்பப் பண்பு பொதுவியல் இசையின் மேலெழுச்சிக்கு மேலும் துணை செய்கிறது. நாட்டார் பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள், திரைப்படப் பாடல்கள், அரசியல் பாடல்கள் என்ற வகைப் பாடுடைய பாடல்கள் அனைத்தும் பொதுவியல் இசை என்ற வீச்சினுள் அடங்குகின்றன.

இசையின் வர்க்கச் சார்புடைமையை விளங்கிக் கொள்வதற்குப் பொதுவியல் இசை பற்றிய ஆய்வு மிக்க பயனுடைய தாக அமைகிறது. பல நிலைகளிலும் பறிப்புக்கு உள்ளாகும் ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்வதற்கும், கூட்டுணர்வுடன் இணைந்து சங்கமித்துக் கொள்வதற்கும் பொதுவியல் இசை ஏற்புடையதாக அமைகிறது.

இசை என்பது ஒரு சமூகப் படிமம். அது சமூக இருப்பிலிருந்து மேலெழு கின்றது. நில மானிய சமூகத்து மனக் கோலங்களும், உட் பொருளும், அச் சமூகத்தின் மீள வலியுறுத்தல்களும் கர்நாடக இசை வடிவங்களை ஆராய்கை யிலே துல்லியமாகப் புலப்பாடு கொள் கின்றன. இறையும், இசையும் அச் சமூகத்தின் பிரிக்க முடியாப் பொரு ளாயின.

தமிழகத்தின் உலகின் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்ட வணிக வளர்ச்சிக் கோலங்கள் இசையில் நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்தின. இசை வடிவம் வெகுசனப் படுவதற்குரிய விசைகளை வர்த்தகப் பொருண்மிய வளர்ச்சி வழங்கியது. சிக்கலான இசை வடிவங்கள் எளிமையாக்கப்படும் "எளிமை இயக்கம்" வளரத் தொடங்கியது. அந்த வளர்ச்சி இறுகிய அமைப்பைக் கொண்ட பாரம்பரியமான செவ்வியல் இசை மற்றும் நெகிழ்ச்சியான இயல்பைக் கொண்ட பொதுவியல் இசை என்ற துருவப்பாடுகளுக்கு மேலும் வலு வூட்டியது. ஏற்கனவே செவ்விய இசை மற்றும் நாட்டார் இசை என்ற இருமைப் பாடு நிலைப் பேறு கொண்டிருந்தது. அவற்றுக்கிடையே நேரடியான வர்க்க இணைப்பும் காணப்பட்டது. செவ்விய இசை மேலெழுகை கொண்ட வகுப்பின ருக்கும் நாட்டார் இசை சமூக அடித்தள மக்களுக்குமுரியதாக வளர்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்திய மரபில் அவை சாதிய நிரலமைப்புடன் தொடர்புபட்டி ருந்தன.

ஐரோப்பிய இசை வளர்ச்சியில் நிகழ்ந்த முக்கிய பரிமானங்களாக மீள்

ஒத்திசை தொடர்பான புதிய எண்ணக் கருக்கள் (NEW CONCEPTS OF RHYTHM) தோற்றம் பெற்றன. பேச்சு மொழி தழுவியும் மாற்றமுறும் வாழ்க்கையின் புதிய அனுபவங்கள் தழுவியும் "மீள் ஒத்திசைகள்" உருவாக்கப் பெறலாயின. மிக்க நெகிழ்ச்சிப் பாங்கான மீள் ஒத்திசை உருப்படிகள் வளர்ச்சி பெறலாயின. அவை பொதுவியல் இசைக்கு மேலும் வலுவூட்டின.

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத் தொழிற் புரட்சியின் எதிர் விளைவுகள் மனித உழைப்பின் பறிப்பைத் தீவிரப் படுத்தின. அதன் தாக்கங்கள் இசையிலும் விரைவில் பரவத் தொடங்கின. மேலைத் தேய இசையிலே தோற்றம் பெற்ற ஊக்க வளர்ச்சி யுகம் (ROMANTIC ERA, 1780 – 1900) அதன் தாக்கங்களை நன்கு வெளிப்படுத்தியது. பௌதிக மனிதரை யும் அவர்களின் சூழலையும் உளக்கவர்ச்சி இசையுணர்வுக்கு உட்படுத்தியது. மனிதர் ஓடும் ஒலி, நடக்கும் ஒலி, மூச்சுவிடும் ஒலி, தொழிற்படும் ஒலி முதலிய இசைப் பண்புகளிலே உள்ளடக்கப்பட்டன. மனித மனவெழுச்சிகளுக்கு அதீத முக்கியத் துவம் வழங்கப்படலாயிற்று. புதிய சமூகத் தோற்றப்பாடுகளால் உருவாக்கம் பெற்ற மகிழ்ச்சியும் துன்பமும் காதலும் பொறாமையும் பதகளிப்பும் புதிய உளக்கவர்ச்சி இசைப் புனைவுகளில் இடம் பெறலாயின.

ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவொளிக் (ENLI GHTMENT) காலச் சிந்தனைகள் இசையிலும் செல்வாக்குகளை ஏற்படுத்த லாயின. மனித விளக்கம் பற்றி ஜோன் லொக் எழுதிய நூலில் எண்ணங்களும் கருத்துகளும், கருத்துகளும் கருத்துகளும் இரண்டு ஊற்றுக்கள் வழியாக மேலெழு தலைக் குறிப்பிட்டுள்ளார். அவை அனுப வமும் தெறித்தலுமாகும். அனுபவங்களும் தெறித்தலும் இசையால் வளமும் வனப்பும் பெறுதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அறிவொளிக் காலத்தில் பிறிதொரு சிந்தனையாளராகிய இத்தாலி நாட்டைச் சேர்ந்த விக்கோ என்பவர் கற்பனையின் மீள் கட்டுமானங்கள் வாயிலாகவே மனித விளக்கம் முன்னேற்ற மடைந்து செல்வதாகக் குறிப்பிட்டுள் ளார். அதுவும் இசை உள்ளிட்ட அழகியற் கலைகளின் முக்கியத்துவத்தையே மீள வலியுறுத்தின.

அறிவுவளர்ச்சி, கைத் தொழில் வளர்ச்சி, வர்த்தக வளர்ச்சி முதலிய வற்றின் ஒன்றிணைந்த சமூகச் செயற் பாடுகள் ஐரோப்பியப் பொதுவியல் இசையில் புதிய பரிமானங்களை ஏற் படுத்தலாயின. பணம் செலுத்தி அனுமதிச் சீட்டுக்களைப் பெற்று இசை நிகழ்ச்சிகளைப் பார்க்கும் முறைமை வளரலாயிற்று. இது "பொது மக்கள் இசைக்களிப் பெருகை" (PUBLIC CONCERT) என அழைக்கப் பட்டது. இந் நிகழ்ச்சி இசையை பரந்து பட்ட விற்பனைப் பொருளாக்கியதுடன் பொதுவியல் இசையின் எழுச்சிக்கு மேலும் உற்சாகத்தை வழங்கியது. இந்த மாதிரிகையை ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் சென்னை நகரத்து சபாக்கள் பிற் காலத்திலே பின் பற்றலாயினர். சபாக்கள் ஒருபுறம் செவ்வியல் இசைக்கு முக்கியத்துவம் வழங்க மறு புறத்தில் பணம் திரட்டும் பொப் இசை நிகழ்ச்சி களும் வளரலாயின. செவ்வியல் இசைக்கச்சேரிகளிலும் தவிர்க்க முடியாத வாறு "துக்கடா" பாடும் மரபுத் தோற்றமும் பெற்றது.

பத்தொன்பதாம் நூற்றண்டில் பெருமளவிலான இசைநாடக இல்லங்கள் (OPERA HOUSES) ஐரோப்பாவில் தோற்றம் பெற்றன. பொதுவியல் இசை எழுச்சி பெறுவதற்கு இசை நாடகங்கள் பெரும் பங்களிப்பை செய்யலாகின. ஒருவகையில் இதற்குரிய ஒப்புமையை தமிழர் கலை வரலாற்றிலும் கண்டு கொள்ளலாம். இசை நாடகங்கள், இசைச் சொற்பொழிவுகள் முதலியவை தமிழகத்திலும் வளர்ச்சியடையத் தொடங்கின.

பொதுவியல் இசையின் வளர்ச்சி இசைக்கல்வியை துறைபோகிய ஒரு சிலரிடமிருந்து விடுவித்தது பாடசாலைக் கலைத்திட்டம் வாயிலாகப் பரவலாக்கல் முன்னெடுக்கப்பட்டது. பொதுமக்களை நோக்கிய இசை நூலாக்கங்கள் மேலும் விரிவடையத் தொடங்கின. இசைக் கல்வியின் வளர்ச்சி வகுப்பறைகளிலே "காது வழியான கணிப்பீடு"களின் முக்கியத்துவத்தை புலப்படுத்தியது. அதாவது எழுத்து வடிவிலான கணிப்பீடுகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஒலி வடிவிலான கணிப்பீடுகளுக்கு கொடுக்கப்படலாயிற்று. இசை தேர்ந்தவர்களுக்கு மட்டும் உரிய அனுபவமாக விளங்கிய இசைக்கல்வி சாமனியர்களை நோக்கிப் பெயர்ச்சி கொள்ளலாயிற்று. பொது மக்களை நோக்கி இசைக்கல்வி விரிவடைவதற்கு எதிர்ப்பும் காணப்பட்டது. புதிதாகப் பாட முனைவோர் "கேள்வி ஞானத்தாற் பாடுவோர்" சுட்டப்பட்டனர்.

சேவியத்திலே தோற்றம் பெற்ற புரட்சி இருபதாம் நூற்றாண்டின் பொதுவியல் இசை வளர்ச்சிக்கு மேலும் விசையூட்டியது. அரசியல் மயப்பட்ட இசை முதலியவற்றுக்குரிய இசை முதலியவை பல நாடுகளில் வளர்ச்சி பெறத் தொடங்கின. விடுதலைப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இசை வலுவான மன வெழுச்சித் தூண்டற் கருவியாயிற்று. மரபு தழுவியும் விலகியும் புதிய இசை வடிவங்கள் தோற்றம் பெறலாயின. இதற்கு வகை மாதிரியான ஓர் எடுத்துக்காட்டாக வாங்காணத்திலே தோற்றம் பெற்ற இரவீந்திர சங்கீதத்தை குறிப்பிடலாம்.

இருபதாம் நூற்றாண்டின் இசை வளர்ச்சியில் ஏற்பட்ட பிறிதொரு சிறப்பார்ந்த நிகழ்ச்சி "வரலாற்றில் பன்மை எழுகை வாதம்" (HISTORICALECLETICISM) ஆகும். அதாவது ஒற்றை நிலை. அணுகுமுறை கைவிடப்பட்டு எங்கெங்கு சிறப்புப் பண்புகள் காணப்படுகின்றனவோ அவை அனைத்தையும் ஒன்று திரட்டி ஆக்கம் செய்தல் சிறப்புப் பெறலாயில்று. அதன் வளர்ச்சி யாகக் கிரமாகிய இசை மற்றும் சாஸ்திரிய இசை அல்லது செவ்விய இசையுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

பன்மை எழுகை வாதம் கர்நாடக இசையிலும் செல்வாக்கை எற்படுத்தலாயிற்று. மேலைத்தேய வயலின் இசைக்கருவி கர்நாடக சங்கீதத்துக்கு பயன்படுத்தலாயிற்று. ஆங்கில இசையில் இடம் பெற்ற "நோட்ஸ் வரம்" என்பதை மதுரை மணி ஐயர் கர்நாடக இசைக் கச்சேரிகளிலே பயன்படுத்தலானார்.

அமெரிக்க இசை மரபில் ஜாஸ் இசை, றொக் இசை முதலிய பொதுவியல் இசைவடிவங்களை மரபு வழியான செவ்வியல் இசையுடன் இணைக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றுக்குப் பொதுமக்களிடமிருந்து வலுவான வரவேற்பும் கிடைக்கப் பெறலாயிற்று.

பொதுவியல் இசை மேலைப்புலத்தில் எழுச்சி பெறுவதற்கு அங்கு வளர்ச்சி பெற்ற இரவு விடுதிகளும் பங்களிப்புச் செய்தன. நகரவளர்ச்சியோடிணைந்த இரவு விடுதிகளில் இசையும் நடனமும் கவர்ச்சியூட்டும் செயற்பாடுகளாக அமைந்தன. "இசையும் நடனமும் இன்றி இரவுக் களியாட்ட விடுதிகள் இல்லை" என்ற நிலை தோற்றம் பெற்றது. இரவுக் களியாட்ட விடுதிகள் பொதுவியல் இசைக்கே முதன்மை வழங்கின. "ஒலித் தூண்டல்கள்" (SOUND PIECES) என்ற அறிக்கையின் வளர்ச்சியும் பொதுவியல் இசை மேலெழுவதற்குத் துணையாக அமைந்தது. அந்த எண்ணக்கரு மரபு வழியான "இசை ஒலி" என்ற சிந்தனை யில் மாற்றங்களை வருவிக்கலாயிற்று. சமகாலத்தைய எலத்திரன் கருவிகளின் வளர்ச்சி புதிய புதிய ஒலிகளை எழுப்பக் கூடிய சாத்தியப்பாடுகளை ஏற்படுத்த லாயிற்று. எத்தகைய ஓர் ஒலியையும் இசைக்குள் அடக்கும் முயற்சிகள் மேலோங்கின. அந்த முயற்சிகளை முன்னெடுத்த வல்லுனர் வரிசையில் எட்கர் வறிசே (EDGAR VARESE) குறிப் பிடத்தக்கவர். மேலைத்தேயத்தில் இடம் பெற்றமை போன்ற பெரும் பரிசோதனை கள் தமிழகத்தில் நிகழாவிடிலும், சினிமா இசையில் அவ்வாறான பரிசோதனைகள் அவ்வப்போது நிகழலாயின. தொடக்க காலத்தில் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் தாம் பாடிய இசைப்பாடல் ஒன்றுக்கு தகர டப்பாவின் ஒலியையும், காற்றடிக்கும் பம்பியின் ஒலியையும் பயன்படுத்திச் சிறப் புற இணைத்ததாகக் கூறப்படுகின்றது.

உலகளாவிய பொதுவியல் இசை வளர்ச்சிக்கு 'மாற்றிய இசை' (CHANGE MUSIC) நடவடிக்கைகளும் தூண்டு தலளித்தன. 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏர்ல் பிரவுண் மற்றும் கிறிஸ் டியன் வூல் போன்ற இசையமைப்பாளர் மாற்றியல் இசையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யலாயினர். இசைக் கூறுகளில் மாற்றங்களைச் செய்யும் நடவடிக்கைகளோடு மாற்றியல் இசைப் பரிசோதனைகள் வளரலாயின.

இசையில் இடம்பெறத் தொடங்கிய இணக்கல் (IMPROVISATION) முயற்சிகள் பொதுவியல் இசையின் வளர்ச்சிக்கு மேலும்விசையூட்டின. 1960ஆம்ஆண்டைத் தொடர்ந்து போலந்தில் இடம்பெறத் தொடங்கிய இணக்கல் பரிசோதனைகள் உலகெங்கும் பரவலாகின. அதன் தொடர்ச் சியும் வளர்ச்சியுமாகப் பொதுவியல் இசை ஆற்றுகையை மெருகுபெறச் செய்வதற்கு ஆடல், நடிப்பு வண்ண ஒளிவீச்சுக்கள், மற்றும் அரங்கியல் நுட்பங்களைப் பயன்படுத்துதல் முதலாம் முயற்சிகள் முன்னேற்றம் பெறலாயின. இன்றுவரை அந்த முயற்சிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகெங்கும் விரவிப் பரந்து வளர்ச்சி கொண்ட விசையாக றொக் இசை (ROCK MUSIC) அமைந்தது. பொதுவியல் இசையின் மேலெழுச்சியை அது துல்லி யப்படுத்தியது. எளிமையான மெட்டுக் களைச் சிறுகுழுவினர் முழவுகளுடனும் (DRAMS) மினிகிட்டார் போன்ற எலத்திரன் கருவிகளுடனும் வலிமையான பதறும் (STRONG BEAT) ஒலிப்புடனும் பாடுதல் றொக் இசையின் பண்பாடாகும். ஆக்க

மலர்ச்சி, உறுநம்பிக்கை, வெகுசன ஈடுபாடு, வர்த்தகப் பண்பு, முதலிய வற்றை றொக் இசை உள்ளடக்கி நிற் கின்றது. இளைஞர்களிடத்தும், நடுத்தர வயதினரிடத்தும் அது தீவிர ஈடுபாட்டை ஏற்படுத்தலாயிற்று. வானொலி, தொலைக் காட்சி, திரைப்படங்கள் முதலியவை றொக் இசையைப் பெருமளவிற் பயன் படுத்துதல் உலகம் முழுவதும் வளர்ச்சி யடையத் தொடங்கியது. ஆபிரிக்க இசை, ஐரோப்பிய இசை மற்றும் பொதுவியல் இசை மரபுகள் முதலியவற்றை ஒன்றி ணைந்த உருவாக்கப்பட்ட 'ஒட்டுமை வடிவமாக' (HYBRID RORM) றொக் இசை அமைந்தது. பின்னைய முதலாளிய விசைகளால் உருவாக்கம் பெற்று வரும் இளைஞர் மனக் கோலங்களுக்கு றொக் இசை தளம் அமைத்துக்கொடுத்தது. பொதுவியல் இசையின் வளர்ச்சி றொக் இசையால் மேலும் எழுச்சி பெற்றது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் பல தட (MULTITRACK) ஒலிப்பதிவு முறை களும் ஒலியின் பல்வேறு நிலை மாற்றங் களுக்கு இடமளித்து றொக் இசைக்கு மேலும் வளமூட்டத் தொடங்கியுள்ளது.

தொடக்க காலத்து றொக் இசை வல்லுனர்களாகிய பிறிஸ்லி மற்றும் படிகோலி ஆகியோர் தமது மிடற்றாஸ் மேற் கொண்ட பல்வகை ஒலிக் கோலங் களை நவீன, ஒலித் தொழில்நுட்ப முயற்சிகளால் எளிதாக ஏற்படுத்தக்கூடிய நிலை தோற்றம் பெற்றுள்ளது. அந்த முயற்சிகள் இசைக்கும் குழப்பொலிக்கும் (NOISE) இடையேயுள்ள எல்லையைத் தகர்த்து வருகின்றன.

உடனடியான பாலியல் தூண்டலும் மிக இளம் வயது (கட்டிளமைக்) காதலும் றொக் இசையின் கருப்பொருட்களாக அமைந்து வருகின்றன. பாலியல் விடுதலை முன்னெடுப்பு றொக் இசையில் வலியுறுத்தப்படலாயிற்று. மேலைப் புலத்து இளைஞர்களுக்குரிய நுகர்ச்சி உரையாடலாகவும் றொக் இசை வளர்ச்சி யடையத் தொடங்கியது. அதன் மன வெழுச்சித் தூண்டல் வளர்ந்தோரிடத்தும் செல்வாக்கினை ஏற்படுத்தலாயிற்று.

இசையில் மட்டுமன்றி ஏனைய கலை வடிவங்களிலும் வெகுசனப்பாடு அல்லது பொதுவியற் பண்புகள் தொடர்ச்சி யாக வளரத் தொடங்கியுள்ளன. கருத்தி யலைப் பொறுத்தவரை பொதுவியல் இசையின் எழுச்சியானது மக்கள் மயப் பாட்டை மீள வலியுறுத்தி நின்றாலும் அதன் வர்த்தக அனுகூலங்களையும் நலன்களையும் பல்தேசியக் கம்பனிகளே பயன்படுத்தி வருகின்றன.

♣ ♣ ♣

# மென்திறனுலகினுள் உங்கள் வெற்றியின் இரகசியம்

**கலாநிதி. கு. மிகுந்தன்**
*பணிப்பாளர், தொழில் வழிகாட்டல் அலகு,*
*தலைவர், விவசாய உயிரியல்துறை,*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்.*

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஒவ்வொருவரின் வெற்றியின் பின்னால் ஏதோ ஒன்று இருக்கும் என்பார்கள். அதிலும் ஒருவரின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று அடித்துக்கூறுவார்கள். பெண்மை என்பது மென்மையின் அடையாளம். இதனால் பெண்மையை மென்திறனுக்கு உவமையாக்கினேன். அங்ஙனமாயின் ஆண்மையை என்னவென்பது? வாருங்கள், தொடர்ந்து வாசியுங்கள். ஆண்மையை எதுவெனக் கண்டுபிடியுங்கள். மென்திறனை கையகப்படுத்திவிட்டால் அதுவே வெற்றியின் இரகசியம், வழிகாட்டி எல்லாம். வயது, பால் வேறுபாடுகளுக்கப்பால் மென்திறனில் மேன்மையுடையவரானால் அதுவே ஒவ்வொருவரின் வெற்றியின் படிக்கல்கள். மென்திறனை அளவிட முடியாது. ஆனால் அதனது ஆதிக்கத்தை இலகுவாக இனங்காணலாம். மென்திறனை இனங்காண்பதும் அதனை சிறுவயதிலிருந்தே விருத்தி செய்வதும் உங்களது வாழ்க்கையை வளமாக்க வழி செய்யும். எம்முன்னோர் கூறி வைத்தது போல

**"சித்திரமும் கைப்பழக்கம்**
**செந்தமிழும் நாப்பழக்கம்" என்றும்**
**"அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்"**

என்றும் இன்னும் பலவற்றை இதற்கு முத்தாய்ப்பாய் எடுத்துரைக்கிறார்கள்.

மென்திறன் என்பது எடுத்தமாத்திரத்தில் வந்துவிடாது. தொடர்ச்சியான பயிற்சி இதற்கு அவசியமாகும். வயதுக் கட்டுப்பாடும் இதற்கு இல்லை. ஒருவரினுடைய விருப்பத்தைப் பொறுத்தே அவரவர் மென்திறன்களை உள்வாங்கியிருத்தல் தங்கியிருக்கும். இனிவரும் உலகம் மென்திறன்களின் ஆளுமை உடையதாகவே இருக்கப் போகிறது. இதற்காக ஒவ்வொருவரும் தங்களுக்குள் பொதிந்திருக்கின்ற மென்திறன்களை சரிவர இனங்கண்டு அவற்றை முடிந்தவரையில் விருத்திசெய்வதோடு இல்லாதவற்றை தெரிந்தெடுத்து உள்வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## சிறுவயதிலிருந்து வளர்த்துக் கொள்ளுதல் சிறந்தது.

மென்திறன்களின ஆளுமையை ஒவ்வொருவரிடமும் இனங்கண்டு அவற்றை சிறுவயதிலிருந்தே விருத்திசெய்து கொள்ளுதல் சிறந்தது. சிறுபராயத்திலிருந்து நல்ல எண்ணங்கள், நல்ல செய்கைகள் என இனங்கண்டு அவற்றை முறைப்படி ஒழுகக் கற்றுக்கொள்ள வேண்டும். வளர்ந்து செல்கையில் ஏனைய மென் திறன்களை இனங்கண்டு உள்வாங்கிக் கொள்ளலாம். அனைவருக்கும் அனைத்து மென்திறன்களையும் வலிந்து திணிக்க முடியாது. ஒவ்வொருவரும் விருப்பப்பட்டு முழுமனதுடன் தாமாகவே தம்மைத் தயார் செய்து தொடர்ந்து பயிற்சி செய்து கொள்ளல் வேண்டும்.

## வன்திறனும் மென்திறனும்

எம்மில் பலருக்கு வன்திறன்கள் பற்றியும் மென்திறன்கள் பற்றியும் தெளிவான விளக்கமில்லை. திறன் என்று இருக்கும் போதுதானே ஒருவருடைய சிறப்பு வெளித்தெரிகின்றது. இந்தத் திறன்களை கையகப்படுத்திக் கொள்ளாத எவரையுமே சமூகம் இனங்கண்டு கொள்வதில்லை. இருக்கின்ற திறன்களைக் கொண்டு கிடைக்கின்ற வாய்ப்பினைப் பயன்படுத்தி விருத்தி செய்து கொள்ளவும் அதே நேரத்தில் வெளிக் கொணரவும் வேண்டும். திறன்கள் அனைத்தும் ஒருவருக்கு ஒருங்கமைவது அபூர்வமானதெனினும் எங்களது சமூகத்திலேயே குறிப்பிட்ட எண்ணிக்கையில் பல்கலை வித்தகர் என பலர் இருக்கிறார்கள். இவையெல்லாம் ஒருவருடைய விருப்பத்திலும் அவரவர் வெளிக்காட்டும் ஆர்வத்திலும் இன்னும் விடாமுயற்சியிலுமே தங்கியுள்ளது. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" எனும் வாக்குக்கிணங்க திறன் களனைத்தையும் உடையார் எப்போதும் இகழ்ச்சியடையார் என்பதாகும்.

திறன்கள் அடிப்படையிலே இருவகை. ஒன்று வன்திறன், இன்னொன்று மென்திறன். வன்திறனை இலகுவாக அளக்க முடியும். ஆனால் மென்திறன் அப்படியல்ல. அளவீடுகளில் நிறுத்திக்கூறமுடியாது. ஒருவருடைய ஆளுமை, மனப்பாங்கு மற்றும் நடத்தை என்பவற்றில் மென்திறன் தங்கியுள்ளது. ஆதலினால் இவற்றை நேரடியாக அளவுகோல் கொண்டு அளந்தெடுக்கமுடியாது. ஆனால் எதிர்மறையாக கண்களினால் அளந்து கொள்ளலாம் என்பார்கள்.

**கவனித்தீர்களா! மென்திறன் என்பது வெளித் தெரிவது.ஒருவரை இலகுவில் எடைபோடக்கூடியது.**

## வன் திறனும் மென் திறனும் நாணயத்தின் இருபக்கங்கள்

வன்திறனென்பது நாம் ஆரம்பத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் கல்வி. படித்தவர் மூளையெல்லாம் வன்திறனால் நிரப்பிவிட்டால் பயனேதும் இல்லை. நாம் கற்கும் விதிகள், கோட்பாடுகள் என பாட விதானங்கள் அனைத்தும் கிரகித்து முழுவதையும் உள்வாங்கிக் கொள்வதால் மென்திறன்களுக்கென மூளையில் இடமேயில்லாது போய்விடுகிறது. வெறு மனமே வன்திறன்களை கற்றுத்தேர்ந்து புலமையாளர்களாக இருப்பதில் பலனேதுமில்லை. வன்திறனுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போல நாணயமொன்றில் இன்னொரு பக்கத்தைப் போல மென்திறனுக்கும் முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும். வன்திறன் கல்வியைக் கற்றுக் கொடுக்கும். அதே நேரத்தில் மென்திறன் கற்ற கல்வியை பயனுள்ளதாக பிரயோகிக்கும். ஆக மொத்தத்தில் ஏட்டுக்கல்வியை வன்திறனுக்கு ஒப்பிட்டால் செயன்முறைக் கல்வியை மென்திறனுக்கு ஒப்பிடலாம். மீண்டும் மீண்டும் பயிற்சி செய்யும்போது மென்திறனுடைய கூர் தீட்டப்படுகிறது. எனவே தான் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சரிக்கு சரி வன்திறனும் மென்திறனும் இருக்க வேண்டும். இவ்விரண்டுக்கும் சமபங்கு முன்னுரிமை கொடுக்கும் எவரது வாழ்க்கையும் வெற்றி கரமாக அமையும். ஒரு நாணயத்தின் இரு பக்கங்களும் முக்கியமானது போல ஒரு பக்கத்தைத் தெரிந்து கொண்டால் மற்றைய பக்கத்தை இலகுவில் அறிய முடிவது போல இரண்டு பக்கங்களுமான வாய்ப்பு 1:1 என்பது போல வன்திறனுக்கும் மென் திறனுக்கும் சரிசமமாக வாய்ப்பைக் கொடுத்தல் வேண்டும். எங்கிருக்கிறீர்கள்! இன்னுமா தேடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆண்மை எதுவென

இனங்கண்டு கொண்டீர்களா? பெண்மையை (மனைவியை) மென்திறனாகவும் ஆண்மையை (கணவன்) வன்திறனாகவும் உருவகப்படுத்தினால் நம்முடைய அறிவு, கல்வி, ஆற்றல் அனைத்தையும் ஒருநிலைப்படுத்ததும் பொக்கிஷமாக குடும்பம் அமையும். குடும்பம் ஒன்றினது வெற்றி மென்மையான பெண்ணின்றிக் கிடைக்காது. ஆனாலும் அதனது கட்டுமாணத்திற்கு வன்மையான ஆணின் உதவி அவசியம். இரண்டும் இணைந்தாலேயே கொண்டாட்டம், குதூகலம். ஆனாலும் எதற்கும் விதிவிலக்குகள் இருப்பது போல மென்மையான கணவனும் வன்மையான மனைவியும் தலைகீழாக சில குடும்பங்களில் அமைந்துவிடுவதுண்டு. இருப்பினும் விகிதாசாரம் என்னவோ இங்கும் 1:1 தான். இந்தக் கணக்குப் பிழைத்தால் எந்தத்திறனிருந்தும் பலனில்லை. குடும்பமும் சுவைக்காது.

பாடசாலைக் கல்வியை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளும் போது அதனோடு சேர்த்து மென்திறன்களையும் வளர்த்துக் கொள்வது சிறந்தது. மென்திறன்களனைத்தும் அன்றாட வாழ்க்கையோடு இணைந்தவை. ஒரு மணிதனை இனிதாக, எளிதாக இணங்காண, எடைபோட மென்திறன்கள் பெரிதும் உதவும். இவ்வளவையும் வாசிக்கும் போது இன்னும் மென்திறன் பற்றி அறிய விருப்பமாயிருக்கிறதல்லவா? வாருங்கள் எமதருமை உறவுகளே! சற்று விரிவாகப் பார்ப்போம்.

மென்திறன்களை இருவேறு தொகுதிகளாக பிரிவுபடுத்தலாம்.

1) **தங்களுக்கிடையிலான திறன்**
இது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடையவர்களுக்கிடையிலானது. இதன் மூலம் பல எண்ணிக்கையுடையவர்களுக்கிடையிலான தொடர்பாடல் சாத்தியமாகிறது.

2) **தனக்குள்ளேயான திறன்**
இது ஒருவர் தனக்குள்ளேயான விடயங்களை தொட்டுக் குறிப்பது. இது பொதுவாக ஒருவரை ஊக்குவிக்கும் திறன்களை உள்ளடக்கப்படும்.

### 1. தங்களுக்கிடையிலான திறன்

இவ்வகையான மென்திறன்கள் ஒருவர் இன்னொருவருடன் தொடர்புபடுவதை மையமாக வைத்திருப்பதாகும். இவ்வாறான மென்திறன்கள் ஒருவருடைய வாழ்க்கையில் இன்னொருவர் வந்திணைவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கும். ஒருவர் இன்னொருவருடன் ஏற்படுத்தும் தொடர்பினை எந்தளவிற்கு இனிமையாக, சிறப்பாக ஏற்படுத்த முடியுமோ அதிலேயே அவர்களுக்கிடையிலான தொடர்பின் நன்மை வெளிக்கொணரப்படும். இவ்வாறான மென்திறன்களை உதாரணத்துடன் பார்ப்போம்.

**அ. தொடர்பாடல் திறன்** (Communication skill)

தொடர்பாடல் என்பது மிகவும் சிறப்புக்குரியது. தொடர்பாடலிலேயே முழு உலகத்தின் இயக்கமும் தங்கியிருக்கிறது. வாய்மூலமான தொடர்பாடலை எங்கும் எதிலும் காணக்கூடியதாக இருக்கிறது. வேலைவாய்ப்பு கூட வாய்மூலமான தொடர்பாடலுக்கே அதிக முன்னுரிமை அளிப்பதுடன் அதுவே இறுதித் தெரிவையும் தீர்மானிக்கிறது எனலாம். எந்த மொழி என்றாலும் சரளமாக உரையாட முடிகிறதா? முதலில் எமது தாய்மொழிக்கும் பின் ஏனைய மொழிக்கும் தொடர்பாடலில் முன்னுரிமை கொடுப்போமோ? எமது நாட்டிலே வழக்கிலுள்ள தமிழ்,

சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் பேச, எழுத வாசிக்க தெரிவதை உறுதி செய்து கொள்வோமா. மும்மொழி களிலும் சரளமாகப் பேசும் ஆற்றலை ஒவ்வொருவரும் பெற்றேயாக வேண்டும். வாய் பேசத்தெரிந்தவர் உலகாள்வார் என்பார்கள் ஆனாலும் எமது பேச்சில் உறுதி, கருத்து, நளினம், ஆற்றல், ஆளுமை, இரத்தினச் சுருக்கம் என அனைத்தும் இருக்க வேண்டும். தவறி னால் தப்பிதமாகிவிடும். இதைத்தான் "யாகாவராயினும் நாகாக்க சாகாக்கால் சொல்லிழுக்கப்பட்டு" என்றனரோ?

வாய்மூலமான தொடர்பாடலில் பேச்சு, வழக்காடு மன்றம் மற்றும் விவாத அரங்கு எனப்பலவகையான போட்டி நிகழ்வுகள் நடத்தப்படுவதுண்டு. ஒரு சிறந்த அறிவிப்பாளனாக, பாடகராக, சிறந்த ஆசிரியராக, மக்கள் தொடர்பா ளராக விரிவாக்க அலுவலராக , இப்படி பல வகைகளில் வாய்மூல தொடர்பாட லுக்கான களம் அமைக்கப்படுவதுண்டு. எழுத்து மூலமான தொடர் பாடலில் எழுதும் திறன் உள்ளடக்குகின்றது. செய்தி தயாரித்தல், கடிதம் வடிவமைத்தல், திட்டங் களை தயாரித்தல், ஆய்வுக் கட்டுரை எழு துதல் எனப்பல வகைகள் உள்ளடங்கி னாலும் கதை, கவிதை, நாடகம் என சிந்தனைத்துளிகளை உள்ளார்ந்தும் படைப்புக்கள் உருவாக்கம் பெறும். இதிலும் மும்மொழிக்கான பயன்பாடு முக்கியத்துவம் பெறுகின்றதல்லவா. இந்த மென்திறனும் சிறுவயதிலிருந்தே வளர்த்தெடுக்கப்படவேண்டிய ஒன்று.

**ஆ. குழுச்செயற்பாடு**

ஒரு காரியத்தை தனித்துச் செயற் படுத்துபவர் உண்டு. ஆனால் அதனையே குழுச்செயற்பாடாக அனைவரையும் இணைத்து செயற்படுதல் சிறப்பு. குழு வாக செயற்படுதலை எதிர் கொள்வது சிறந்தது. அதற்காக ஒருவர் தம்மை தயார்படுத்திக்கொள்வதுடன், இருக்கின்ற வேலைகளைத்திட்டமிடுதலும் அதனைப் பிரித்து அனைவருக்கும் வழங்குதல் (Decentralization) அல்லது (Division of labour) பிரித்தெடுத்தல் எனப் பொருள்படும். குழுவாக செயற்படும் திறனை மாணவர் களிடையே ஊக்குவித்தல் சிறந்தது. சிறந்த சமூகக் கட்டமைப்புக்கு இதுவே உதாரணம். இதற்கு நல்ல உதாரணமாக தேனீக்களை யும் தேன் கூட்டினையும் குறிப்பிடலாம். தேன் கூட்டிலுள்ள தேனீக்களின் வயதுக் கேற்ப வேலையாள் தேனீ, தாதிதேனீ, வதை கட்டும் தேனீ, தேன் சேகரிக்கும் தேனீ, பணிப்பெண்தேனீ, காவலாளி தேனீ, உணவூட்டும் தேனீ, பாதுகாப்பு தேனீ எனப் பல வகைகள் அக்கூட்டி லுள்ள ஒவ்வொரு வேலைக்கும் ஒரு வராக வேலைகளனைத்தும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் வயது ஆகஆக தேனீக்கள் மற்றைய வேலைக்கு தம்மை இயைபாக்கிக் கொள்ளும். ஐந்தறிவு உயிரினத்திற்குரிய இந்த சிறப்பியல்பை மென்திறனாக நாம் வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறோம். குழச்செயற்பாட்டின் மூலம் ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, விரைந்து செயலாற்றல், ஒழுங் கமைத்தல் என பல விடயங்கள் ஒழுங்க மையப் பெறும் வாய்ப்பு உண்டாகு மல்லவா?.

**இ. உறவைக் கட்டியெழுப்புதல்** (Relationship building )

எமது சமூகத்திலுள்ள அங்கத்தவர் களனைவருடன் சிறந்த உறவைக் கட்டி யெழுப்புதல் சமூக விருத்திக்கு உதவி

செய்யும். இதையே வேலைத்தள மொன்றில் அனைவரும் எதிர்பார்க்கும் விடயமாகும். பாடசாலையில் கல்வி கற்கும் சக மாணவர்களுடன், ஆசிரியர்கள், அதிபர் மற்றும் ஊழியர்கள் அனைவருடனும் சிறந்த உறவைப் பேணுதல் அக்கல்வி நிறுவனத்தின் பலமாகும். சகமாணவர்களுடன் சமூகத்திலுள்ள சக உறுப்பினர்களுடன் சகஜமாகப் பழகுதல் எனக்குறிப்பிடுவார்களே! அந்த அன்னியோன்னியமான உறவை மென்திறனாக இங்கே பார்க்கிறோம். சக உறுப்பினருடன் சிறந்த உறவை கட்டியெழுப்புதல் அந்நிறுவனத்தினதும் ஒவ்வொருவரினதும் பலம்

**ஈ. இயைவாக்குமியல்பு** (Adaptability )

பாடசாலையின் கற்றல் செயற்பாட்டில், கலைநிகழ்வுகளுள், பொறுப்புக்களை கையேற்கும் போது அதற்காக தம்மை இயைவாக்கிக் கொள்ளுதல் என பொருள்படுகின்றது. நாம் எப்படிப் பட்டவராக இருப்பினும் நாம் வாழும் சூழலிற்கேற்ப எம்மை இயைவாக்கிக் கொள்ளும் போதே அந்த சூழலிற்கேற்ப சிறப்பாக எம்மால் செயற்பட முடியும். சிறப்பாகக் கற்க முடியும். கற்பிக்கவும் முடியும் இவையனைத்திற்கும் மனம் தானே காரணம். எமது மனத்தை ஒரு நிலைப்படுத்தி இயைவாக்கும் தன்மையை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். நல்ல வசதிகளுடன் வாழ்ந்த நாமெல்லோரும் திடீரென இடம் பெயர்ந்து மரங்களுக்குக் கீழேயும் தற்காலிக கூடாரங்களுக்குள்ளும் சிறைப்பட்டோமே, அங்கே இயைவாக்குமியல்புடையோர் எதனையும் அலட்டிக் கொள்ளாது அந்நாட்களை மகிழ்ச்சியாகவே கழித்தனர். ஆனால் ஏனையோர் அதை மீண்டும் மீண்டும் நினைந்து மனதளவில் நோயாளராகவே ஆகிவிட்டனர்.

**உ. நட்புத்தன்மை** [ Friendliness]

மாணவர்களிடையே அதிகம் காணப்பட வேண்டிய, கட்டியெழுப்பப்பட வேண்டிய மென்திறனாக நட்புத்தன்மை விளங்குகின்றது. எதிரியையும் நண்பனாகப் பார் என அனுபவித்து வாழ்ந்த முதியவர்கள் அறிவுரை கூறுவார்கள். நட்புக்கு ஈடு ஏது? பாடசாலையில் வளர்த்தெடுக்கப்படும் கலைகளுள் நட்புத்தன்மை முதன்மையானது. நட்புத்தன்மையுடன் வாழப்பழகுவது சிறந்ததும் சமூகத்தால் விரும்பி அங்கீகரிக்கப்படும் செயலுமாகும். இதிலும் மனத்தினது செயற்பாடாகவே அமைகின்றது. ஆசிரியரொவ்வொருவரும் மாணவர்களை சிறந்த நண்பர்களாகவே கருத வேண்டும். அங்கேயே கற்பித்தல் சிறப்புப் பெறும். இந்த மென்திறன் வேலைசெய்வதில் பெரிதும் கைகொடுக்கும். சிறந்ததொரு நட்புச்சூழலில் மகிழ்வாக நிறைவாக செயல்களை சிறப்பாக செய்யமுடியும். மாணவர் ஒன்றியங்களும்,கழகங்களும் நட்புத்தன்மையை வளர்ப்பதில் கணிசமான பங்கு வகிக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு நட்புத்தன்மையுடையதாகும்போது குடும்பம் ஒரு கோயிலாகிவிடும். அன்புக்கு எவருமே அடிமைதானே. நட்புத்தன்மையெனும் மென்திறனை சிறுவயதிலிருந்தே வளர்த்தெடுக்கவேண்டும். நல்ல மாணவ நண்பர்கள் உருவாகுவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் பங்களித்தல் வேண்டும். கல்விச்சூழல் நல்ல நண்பர்கள் நிறைந்ததாக இருத்தலே சிறப்பு.

**ஊ. ஆடையணிதல்** [Attire]

பாடசாலைகளில் ஆடையணிதல் என்னும் மென்திறன் சிறப்பாகவே வளர்க்கப்படுகின்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் அதற்கேயுரித்தான சீருடையுடன் கழுத்துப்பட்டியும் வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்த ஒரேமாதிரியான சீருடையணிதல் ஏற்றத்தாழ்வு களற்ற சூழலில் கற்றல், கற்பித்தல் செயற்பாடு சிறப்பாக நிகழ வழிசமைக்கும். அனைவரையும் ஒரேமாதிரியாகக் கணித்திடும் செயற்பாடு எங்கும் எதிலும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. குறிப்பாகப் பாடசாலைகளில் இதனை முழுமையாக சிறப்பாக செய்தல் அவசியம். ஆனால் ஒருசில பாடசாலைகளுக்கு வருகைதரும் உயர்வகுப்பு மாணவர்கள் கழுத்துப்பட்டி அணியாமலும் மேற்சட்டையின் பொத்தான்களை சரிவரப்பூட்டாமலும் வருவதைப்பலரும் அவதானித்துள்ளனர். இதேநேரத்தில் ஆசிரியர்களும் சீருடையணிதல் பற்றி சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆசிரியர்களே மாணவர்களுக்கு முன்மாதிரி என்பதனால் இந்த ஒழுங்கு பாடசாலைகளில் மட்டுமல்ல ரியூசன் வகுப்புக்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆசிரியர் எங்கிருந்தாலும் ஆசிரியர் அல்லவா! குறிப்பாக ரியூசன் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மைனர் சங்கிலியுடன் அதுவெளித்தெரிய மேல் பொத்தான்களை பூட்டிக் கொள்ளாது கற்பிப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. மாணவர்களை வழிநடத்தும் பொறுப்பிலிருந்து ஆசிரியர்களே வழி தவறக்கூடாது. வழிதவறினால் அவர்கள் ஆசிரியர்களல்ல என்பதாகும். உண்மை என்றுமே கசக்கத்தான் செய்யும்.

**எ. நேர்த்தி** [ Grooming ]

அனைவருக்கும் பொருத்தமான மென்திறனாக நேர்த்தி அமைகின்றது. கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பதன் அர்த்தம் இதுதானே. கடைகளில் ஒரே மாதிரியான பொருட்கள் பல இருந்தாலும் நேர்த்தியானதைத்தானே எங்களது தெரிவாக்கிக் கொள்கிறோம். அளவு, வடிவு, ஆக்கம் அனைத்திலும் நேர்த்தியாக அமையும் எப்பொருளுக்கும் சிறப்பு அதிகம். தலைவாரி சீராட்டி உன்னை பாடசாலைக்குப்போ என்று சொன்னாளே அன்னை என்பது இங்கே முழுமையாகப் பொருந்தும்.வீட்டில் அன்னையிலிருந்து ஆரம்பிக்கும் நேர்த்தி எங்கும் எதிலும் மாணவர்களைப் புடம்போடுவதிலும் இருக்கவேண்டும். நேர்த்தியான ஆசிரியர்களைப்பார்த்து மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். எந்த செயற்பாட்டிலும் நேர்த்தி முன்னிலைப்படுத்தவேண்டும். முதலில் பெற்றோர்களில் பின்பு அதிபர், ஆசிரியர்கள் நேர்த்தியாக இருக்க வேண்டும். அவர்களின் பிரதிபலிப்புக்கள் மாணவர்களில் தெரியும். மாணவர்களின் நேர்த்தி அவர்கள் கல்விகற்கும் பாடசாலைகளின் பெயர் சொல்லும். தனி மனித சுகாதாரம், எளிமை, சுத்தம், நடை, உடை, பாவனை, கண்டிப்பு, கருணை இவையனைத்தும் இதனுள் உள்ளடக்கப் படுவதை கவனித்தீர்களா! நேர்த்தியாயிருப்பது உயர் பண்புக்குரிய இலக்கணமாகும். ஒருவரை உருவகப்படுத்திப் பார்ப்பது அவருடைய நேர்த்தியான விடயங்களில் மட்டுமே. இந்த மென் திறனும் அதிகம் உள்வாங்கப்பட வேண் டிய தளமாகப் பாடசாலை அமைகின்றது.

மேலே விபரித்தவை தங்களுக்கிடையிலான மென்திறன்களுக்கு உதா

ரணங்களாகும். இதைத்தொடர்ந்து தனி மனிதரொருவர் தனக்கிடையே உள் வாங்கிக் கொள்ளவேண்டிய, வளர்த்துக் கொள்ள வேண்டிய மென்திறன்களை ஆராய்வோமா? வாருங்கள் உங்களது தனிமையான உலகத்தினுள் சென்று பார்ப்போம்.

## உ. தனக்குள்ளான திறன் [Intrapersonal skills]

ஒருவர் தனக்குள்ளான மென்திறன் களாகப் பலவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். இத்திறன்கள் தனிமனிதனை ஊக்குவிக்கும் திறன்களாகவே கருதப் படுகின்றன. ஒருவருடைய வளர்ச்சியும் சிறப்பும் இதன்மூலம் மேன்மையுறு கின்றது எனலாம். இந்தத் திறன்களுள் கீழ்வருவனவற்றை உதாரணமாக உள்ள டக்கலாம்.

அ. திட்டமிடல் [Planning]
ஆ. முற்கூட்டியே முயற்சித்தல் [Taking initiative]
இ. பிரச்சனைகளைத்தீர்த்தல் [Problem solving]
ஈ. ஆர்வத்தை வெளிப்படுத்துதல் [Showing enthusiasm]
உ. அழுத்தத்தைத் தாங்குதல். [Stress tolerance]
ஊ. தங்கியிருக்கும் திறன் [Dependability]
ஏ. புதுமைகளை எண்ணலும் புத்தாக் கமும் [Creative thinking]
ஏ. நேரமுகாமைத்துவம். [Time management]
ஐ. கற்கவிரும்புதல் [Willingness to learn]
ஒ. பயிற்றுவிக்குந்திறன் [Coach ability]

மேலே பட்டியலிட்ட தனிமனி தனுக்குண்டான திறன்களைத் தொடர்ந்து பார்ப்போமா?

### அ. திட்டமிடல்

பாடசாலை வாழ்க்கையில் ஆரம்பிக்க வேண்டிய திட்டமிடுதல் செயற்பாடு அவர்கற்று வெளியேறி குடும்பத்தலை வராகவோ தலைவியாகவோ ஆகும் போது தமது குடும்பத்தைத் திட்டமிடு வதிலும் வேலை செய்யும் இடத்தில் தமது வேலையையும், நிறுவனத்தின் செயற் றிட்டங்களைத் திட்டமிடுவதும் இன்னும் ஒருபடி மேலேபோய் ஒருநாட்டின் செயற்றிட்டங்களைத் திட்டமிடுவது வரை இது அகலக் கிளை பரப்பி விரிந்து நிற்கின்றது. ஆனாலும் தனிமனிதனொ ருவருக்குள்ளான திட்டமிடலாக தனது வாழ்க்கையை அன்றைய தினத்துக்கான திட்டமிடலாக கூடஇது அமைகிறது. அடுத்தநாள் செய்யப்போகின்ற விடயங் களை திட்டமிடலும் நாளின்முடிவில் செய்தவை எவை? செய்யமுடியாமல் போனவை எவை? ஏன் செய்யமுடிய வில்லை? மாற்றுவழிகள் எவை? எனப் பலதும் பத்தும் இதற்குள் வந்து போகும். தன்னுடைய வாழ்க்கையைத் திட்டமிடக் கூடியவன் தீர்க்கதரிசி. இவையடங்கிய மென்திறன் அனைவருக்கும் உரியது. அவசியம் செயற்படுத்தப்படவும் வேண்டும். பாடசாலைகள் இம் மென்திறனை மாணவருக்குள் வளர்த்தெடுக்க வழி செய்தல் நன்று.

### ஆ. முற்கூட்டியே முயற்சித்தல்

ஒரு காரியத்தைப் பற்றி சிந்திக்கும் போது ஒருசிலர் அதனை செய்வதற்கு முயற்சிப்பதைக் காணலாம். எமது வாழ்வியலுக்குள் 'முந்திரிக்கொட்டை போல' என விளிப்பார்களே! அதுதான் இது. இம்மென்திறன் மாணவரொரு வருடைய செயற்றிறனை மெருகூட்டவும் செயற்பாட்டை சிறப்புறவும் வைக்கும்.

முற்கூட்டியே ஒழுங்குசெய்தல் போன்ற வற்றை கற்றல் – கற்பித்தல் செயற்பாடு களினூடாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

**இ. பிரச்சினைகளைத் தீர்த்தல்**

ஒருவருக்கு உண்டான பிரச்சினை களை தீர்க்கும் வழிவகைகளை அவரே இனங்கண்டு தீர்ப்பதற்கான செயற்பாடு இது. தங்களது பிரச்சினைகளை இன் னொருவரிடம் திணிப்பதை தவிர்க்க வேண்டும். ஒருவருடைய பிரச்சினையை அவரே இனங்காணுதலும் அதற்கான காரணத்தை கண்டறியவும் முயற்சிக்க வேண்டும். மாணவர்களிடையே தமக் குண்டான பிரச்சனை இனங்காணும் செயற்பாடுகளை வடிவமைத்தலும் அதன் மூலம் அவர்களாகவே தமது பிரச்சினை களுக்கு தீர்வுகாண அவர்களை ஆசிரி யர்கள் வழி நடத்தலாம். பெற்றோர்கள், ஆசிரியர்கள் தமது தீர்வுகளை மாணவர் களுக்குள் திணிப்பதை விடுத்து மாண வர்களாகவே தங்களது நிலையுணர்ந்து தமது பிரச்சினைகளுக்கு உண்டான தீர்வுகளை அவர்களே கண்டுபிடிக்க உதவவேண்டும்.

**ஈ. ஆர்வத்தை வெளிப்படுத்துதல்**

பாடசாலை மட்டத்தில் மாணவர்கள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்த ஊக்கு விக்கப்படுதல் வேண்டும். பல திறமை களை உள்ளுக்குள் வைத்திருந்தாலும் அவற்றை செய்வதற்கான ஆர்வத்தை அவர்கள் வெளிப்படுத்துதலுக்கு பாட சாலைச் சூழல் ஏற்புடையதாக அமைய வேண்டும். மாணவர்களை தட்டிக் கொடுத்து அவர்களின் ஆர்வத்தை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிப் பாருங்கள் உள்ளிருக்கும் திறமைகள் அனைத்தும் புதையல்களாக வெளிவரும். அனைத்து மாணவர்களி டையேயும் திறமைகள் உண்டு என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

**உ. அழுத்தத்தை தாங்குதல்**

இவ்வகையான மென்திறன்கள் பொது வாகவே எங்களூர் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிறையவே உண்டு என்றாலும் அவரவர் வாழ்க்கையில் சந்திக்கும் சூழல் சார்ந்த அழுத்தங்களைத் தாங்கும் திறனை வளர்த்துக்கொள்ள வழி செய்தல் வேண்டும். இடரினும் தளரினும் தம்மை இழந்து விடாது எதிர்நீச்சல் போட அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

நாமிருக்கும் புறச்சூழல் மன வருத் தங்களை ஒவ்வொருவரிடையே பிரயோ கிப்பதாகவே இருக்கின்றது. இயந்திய மயமாகி விட்ட இல்வாழ்க்கையும் பொதி சுமப்பதான மாணவப்பருவமும் போட்டி கள் நிறைந்த இவ்வுலகமும் பல வழி களில் மாணவர்ஆசிரியர்களில் மன அழுத்தங்களை ஏற்படுத்த காரணங்களா கின்றன. நடந்து ஓய்ந்து போன போர்ச் சூழல் ஒவ்வொருவரிடத்திலும் மன அழுத் தங்களை பிரயோகிக்க தவறவேயில்லை. ஏதோ ஒரு வகையில் அனைவருமே பாதிக்கப்பட்டுவிட்டோம். அந்த வகையில் முதலில் ஆசிரியர்களும் பின்னர் மாண வர்களும் எவ்வாறான அழுத்தமாயினும் சரி அதனை தாங்கும் திறனைப் பெறு வதற்கு வழிகாட்டப்படவேண்டும். மன அழுத்தத்திற்கு யோகா மற்றும் தியானம் என்பன சிறந்த தீர்வாகும் என பெரி யோர் கூறியுள்ளார்கள்.கற்றல் செயற் பாட்டினால் ஏற்படும் மன அழுத்தத்தை தாங்கும் திறனுடையவர்களை பரீட்சை யில் சிறப்புச்சித்தியை பெறக்கூடியதாக இருக்கும்.

**ஊ. தங்கியிருக்கும் திறன்**

ஒருவர் தமது ஆளுமையிலேயே தங்கியிருக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் "தன்கையே தனக் குதவி" என்பது போல தன்னுடைய திறன் களிலேயே முழுமையாக தங்கியிருக்கும் திறனானது மாணவர்களுக்கு என்றுமே உதவியாக இருக்கும். "உன்னால் முடியும் தம்பி" என்பது இங்கே அர்த்தமுள்ள தாகின்றது. இன்னொருவரில் தங்கி, நம்பியிருப்பதை மாற்றி தன்னில் தங்கி யிருக்கும் திறனை வளர்த்துக் கொள்வது நல்லது. இதற்கான அடித்தளம் மாணவர் களுக்கு பாடசாலைகளில் இடப்படுவது சாலப்பொருந்தும்.

**எ. புதுமைகளை எண்ணுதலும் புத்தாக்கமும்**

தற்போதைய உலகம் புதுமைகளிலும் புத்தாக்கங்களிலும் சுற்றுச்சுழன்று கொண் டிருக்கின்றது. விஞ்ஞானத்தின் சில்லுகளை புதுமைகள் நிறைந்த பாதைகளுடாகவே இழுத்துச் செல்லவேண்டிய புதுயுகத்தில் புத்தாக்கங்களுக்கு நிறையவே இடமுண்டு. இது விடயத்தில் கல்வித்துறை சார்ந்து நிறையவே போட்டிகள் நடைபெற்றாலும் தொடர்ந்தும் **இந்நிகழ்வுகள்** மூலம் புத்தாக்கத்திற்கு ஊக்குவிப்பு கொடுக் கப்பட வேண்டும். இக்கால மாணவர் களும் இளம் சந்ததியும் புதுமைகளுக்குள் வாழத்தலைப்பட்டுக் கொண்டிருக்கி றார்கள். அவர்களது அறிவுப்புலமை புதுமையுடனும் புத்தாக்க சிந்தனை யுடனுமே வளம் பெறுகின்றது. இந்நிலை யில் அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் புதுமைகளை படைத்திடும் செயற்பாட் டிற்கும் புத்தாக்க திறனுக்கும் எமது பாட சாலை நிறைந்த ஒரு களமாக அமைய வேண்டும். ஆசிரியர்களும் தங்களது கற்பித்தலில் புதுமைகளை புகுத்தி புத்தாக்க சிந்தனைகளை குழைத் தெடுத்து கற்பிக்க வேண்டும். புதியன புகுதலும் பழையன கழிதலும் என்று சுவையாக சும்மாவாகவா சொல்லி வைத்தார்கள்.

**ஏ. நேர முகாமைத்துவம்**

பிறந்தது முதல் நேரத்துடன் ஒவ் வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருடைய வாழ்க்கையிலும் நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தேயாக வேண்டும். குறிப்பாக பாடசலைகளில் கல்விச்சாலை களில் இன்னும் பல்கலைக்கழகத்தில் நேரத்தினை முகாமைத்துவப்படுத்த மாணவர்களுக்கு வழிமுறைகள் எடுத்துக் கூறப்பட வேண்டும். இழந்த நேரத்தை மீட்டெடுக்க முடியாது. கிடைக்கின்ற நேரத்தில் பயனுள்ளதாக திட்டமிட்டு முகாமைத்துவப்படுத்தினால் அதுவே வெற்றியின் முதற்படி. பாடசாலைகள் இதுவிடயத்தில் நிறைவாகவே செய் கின்றன. ஆனாலும் நிகழ்வுகளை மாண வர்களே திட்டமிட்டு நேர ஒழுங்குப்படி செய்து முடிக்க கற்றுக் கொடுத்தல் வேண்டும். நிகழ்வுகளில் "வரவேற்புரை" நிகழ்த்துபவர் "வெளியீட்டுரை" செய்த லாகாது. அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை கனகச்சிதமாக ஒதுக்கப் பட்ட நேரத்தினுள் முடித்துவிட பழக வேண்டும். அதிபர், ஆசிரியர்கள் விரி வுரையாளர்கள் நேரத்தை கண்டிப்பாக கடைப்பிடித்தால் மாணவர்களும் அதனைக் கடைப்பிடிக்க முயலுவர். கண்டிப்பாக நேரமுகாமைத்துவம் ஆனது சொல் லிலும் செயலிலும் இருக்க வேண்டும். முடிந்தால் நேரத்தை திட்டமிட்டு செயலில் செய்து பாருங்கள். திட்டமிட்டபடி கரு மத்தை ஆற்றிவிட்டால் அதுவே முதல்

வெற்றி. உங்களால் நிச்சயமாக முடியும் முயற்சியுடையார் நீங்கள் இகழ்ச்சி அடைய மாட்டீர்கள் அல்லவா?

### ஐ. கற்க விரும்புதல்

பாடசாலைக்கு மாணவர்களின் வருகையானது அவர்கள் விரும்பி வருவதாக இருக்க வேண்டும். இவ்வாறு மாணவர்கள் விருப்பப்படுவதற்கு அங்கிருக்கும் கற்றல் சூழல் இனிப்பாக இருக்க வேண்டும். கற்பிப்பவர் சுவராசியமாக இனிப்பாக கற்பிக்க வேண்டும். கற்றல்–கற்பித்தல் செயற்பாடுகள் முழுமைபெற வேண்டும். மாணவனாக விரும்பிக் கற்கும் நிலைமைக்கு அவரை வழி நடத்தினாலே பெரியதொரு வெற்றிதான். சுயமான கற்றலுக்கான அனைத்து வசதிகளும் இருக்க வேண்டும். பெற்றோரினதும் ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவரினதும் ஊக்கமும் தினமும் கிடைக்க வேண்டும். இயற்கையுடன் இணைந்து இயல்பாகக் கற்கும் ஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டும். ஆசிரியப்பணி புனிதமானது. மாணவர்களைக் கற்கத் தூண்டும் கருவியாக ஆசிரியர்கள் மாறவேண்டும். மாணவர்களைப்போல ஆசிரியர்களும் கற்றல் அவசியம். மாறி வரும் உலகில் புதுப்புது விடயங்களை கிரகித்துக் கொண்டு மாணவாகளையும் அவ்வழியே நடாத்த வேண்டும். கற்பிக்கும் பாட விதானம் வன்திறனாயின் கற்பித்தல் வழிமுறைப்பாங்கு மென்திறன் ஆகும். ஆசிரியர்களது கற்பித்தல் சார்ந்த மென்திறன்கள் அனைத்து வகையிலும் மேம்படவேண்டும். செல்வத்தில் சிறந்த செல்வம் கல்விச்செல்வம் இதையே கலைவாணி எம் நாவிலிருந்து அள்ளி வழங்குகிறாள். எனவே இதுவொரு இறைதொண்டு என உளங்குளிர செய்தல் வேண்டும். பெற்ற பட்டத்திற்காக பாட சாலையிலும் காசுக்காக ரியூசனிலும் கற்பிப்பதாக கூறும் ஆசிரியரைப் பார்த்துச் சமூகமே சிரிக்கின்றது.

### ஒ. பயிற்றுவிக்கும் திறன்

மாணவப்பருவத்திலேயே ஒரு சிலருக்கு பயிற்றுவிக்கும் திறன் இயற்கையாகவே ஏற்படும். இதே போல ஏனைய மாணவர்களையும் குழுச்செயற்பாட்டில் இருத்தி ஒருவர் இன்னொருவருக்கு பயிற்றுவிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு முறை பயிற்றுவித்தால் 5முறை படித்ததற்கு சமன் என்பார்கள். பயிற்றுவிக்கும் திறன் வளர வளர குருத்துவத் தன்மைக்குள் இவர்கள் உள்வாங்கப்படுகிறார்கள். இப்படியான பயற்சி பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு பின் பல்கலைக்கழகத்தினுள் புகும்போது அக்கல்வியைத்தொடர இலகுவாகவும் பின்னர் வேலை செய்யும் இடத்தில் சிறந்த ஒரு வளவாளராக மாறவும் வாய்ப்புண்டு. “இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்பதைப்போல மென்திறன்களும் இளமையிலேயே உள்வாங்கப்படுதல் சிறந்தது.

மாணவர்களது வாழ்க்கைக் காலத்தில் கற்கும் பாடங்களுடன் ஏதோ ஒரு கலையினுள்ளும் கால்பதித்திருக்க வேண்டும். மென்திறன்களை உள்வாங்குவதற்கு கலைவடிவு நிறைந்த வாய்ப்பைத்தரும்.

எமது வாழ்க்கைக்குள் இணைந்து மென்திறன்களை இணங்கண்டு அதனை மேலும் விருத்தி செய்ய ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். நாளை எமது கைகளிலே என ஒவ்வொரு கணமும் சிந்தித்து, திட்டமிட்டுச் செயலாற்ற இது

உங்களுக்கான அவசரமான அழைப் பிதழ். வாருங்கள் இனியதோர் உலகம் படைப்போம். அதில் உங்களுக்கான வாழ்க்கை என்றும் இனிமையாக இருக் கும். நல்ல மனம், நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல கனவு என நல்லனவெல்லாம் உங்களுக்கே கிடைத்து அனைவரும் இப்பூவுலகில் இனிதாய் இன்புற்று இருக்க எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களும் நல்லாசிகளும். இன்று என்னை உங்களுடன் இணைத்துப் பார்த்தது. செம்மொழியாம், தாய் மொழி யாம் முத்தமிழும் எனக்குள் இருந்த ஆர்வமும் என்னுள் இன்னுமிருக்கும் கற்பிக்கும் ஆசையும் தான். எனக்கு இந்த எழுதுமாற்றலை வாய்ப்பாகத் தந்து என்னை வழிகாட்டியவை எங்களூர் பத்திரிகைகளான உதயன்,தினக்குரல் மற்றும் வலம்புரி ஆகிய முத்துக்களே உள்ளத்தில் எண்ணியதை என் கைகளும் எழுதுகோலும் எழுத்துருவாக்கின. இன்று இவ்வினிய மலருக்கு கட்டுரையாக நான நிந்த செய்தியை நீங்களறிய இதமாகப் பதமாக எழுதியுள்ளேன். இவை நிச்சயமாக உங்களின் உள்ளுணர்வுகளை ஒரு தர மாவது தட்டிப் பார்க்கும். இம்மலர் கொண்ட நோக்கம் நிறைவேறி சிறப்புற எனது வாழ்த்துக்களும் நல்லாசிகளும் என்றும் இருக்கும் எனக் கூறி "கற்கக் கசடற கற்றவை கற்றபின் – (வன் திறன்) நிற்க அதற்குத் தக–(மென் திறன்) என இத்தால் பதிவு செய்து நிறைவு செய்கிறேன்.

*வாழ்க நின் பணி*
*வளர்க நின் தொண்டு....*

♣ ♣ ♣

# ஈழத்தில் இந்துசமய வளர்ச்சிக்கு நாகர் வம்சத்தினர் ஆற்றியுள்ள பங்களிப்பு - ஒரு வரலாற்று நோக்கு -

**பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*வரலாற்றுத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

**அறிமுகம் :-**

ஈழத்து இந்து சமய வரலாறு எழுதப் பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தொல்லியல் ஆய்வாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் காலத்திற்குக்காலம் வழங்கி வந்த ஆய்வுப்பணிகள் மேலும் மேலும் இந்து சமய வரலாறு புதுப்பொலிவு பெறுவதற்கும் புதிய பல தகவல்களை உள்ளடக்குவதற்கும் வழிவகுத்துள்ளன எனலாம். அவ்வாறான ஒரு சூழ்நிலையை நாகர் வம்சம் தொடர்பாக மிகத் தெளிவாகவும், தொல்லியல் மூலாதாரங்களின் அடிப்படையிலும் இப்பொழுது எடுத்துக் காட்டமுடிகின்றது. 1960களுக்கு முற்பட்ட ஆய்வுகளில் நாகர் இனத்தினரை அமானுஸ்யச் சக்தி படைத்தவர்களாகவே ஆய்வாளர் பலரும் கொண்டிருந்தனர். ஆனால் அக்கருத்துருவம் முழுவதுமாக மாற்றியமைக்கப்பட்டு, நாகர் வம்சத்தினர் இலங்கையின் வரலாற்று உதயத்தைத் தொடக்கி வைத்த வரலாற்றுக் குலங்களுள் ஒன்றாக வைத்து எழுதும் போக்கு இப்பொழுது உருவாகியுள்ளது. இப் பின்னணியில் ஈழத்து இந்து சமய வளர்ச்சிக்கும் நாகர் இனத்தினரது பங்களிப்புப் பற்றி இங்கு ஆராய முடிகின்றது.

**யார் இந்த நாக இனத்தினர்?**

ஈழத்து இந்து சமய வளர்ச்சிக்கு நாகர்களது பங்களிப்பினைப் பற்றி ஆராய முன், இவ்வினத்தினரைப் பற்றிய தோற்றம், அவர்கள் பேசிய மொழி போன்ற விடயங்களைப் பற்றி அடிப்படையான சில விடயங்களையாவது இங்கு அறிமுகப்படுத்தவேண்டியது அவசியமாகின்றது. முதுமக்கட்தாழிப்பண்பாட்டிற்குரிய ஓர் இனத்தினராகவே நாகர் வம்சம் தென்னிந்திய - இலங்கைப் பிராந்தியப் பரப்பில் முகிழ்ந்திருந்தனர் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய மூதாதையரின் கிளைக் குலத்தினராகவே நாகர் இனம் இப்பிரதேசத்தில் தோற்றம் பெற்றிருந்தனர். கி.மு1000ஆம் ஆண்டில் உதயமான பெருங்கற்காலப்பண்பாடு கி.மு 8ம் நூற்றாண்டில் நாகர் இனத்தினரை ஒரு கிளைக்குழுவினராக உள்வாங்கி உருவாக்கிக் கொண்டது. இவர்களே இரும்பின் உபயோகத்தினையும் செயற்கையான முறையில் சிறு நீர்த்தேக்கங்களையும் அமைத்து இலங்கையில் பயிர்ச்செய்கை - நெற்செய்கை முறையினையும் உருவாக்கி, குளக்கட்டிற்கு காவல்தெய்வத்தினையும் இருத்தி வரிவடிவத்தினால் (எழுத்தினால்) தமது குலமுறைகளை முதன்முதலில் வெளிப்படுத்திய சமூகத்தினராக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். குளத்தின் செழுமைக்காக நாகபால உருவத்தினையும், குளக்கட்டின் வலிமைக்காக கணநாதனையும் (கணபதி)

உருவாக்கி தமது நாகர் சமூகத்தின் விருத்திக்கும், பாதுகாப்பு மற்றும் நிலை பேறிற்காக Annimism கலந்த ஒரு வகையான தெய்வக் கோட்பாட்டியலை உருவாக்கிக் கொண்டிருந்தனர். அத் தெய்வக் கோட்பாட்டியலை பராமரிப் பதற்கேற்ற வகையிலான மொழி வரி வடிவப்பிரயோகத்தினையும் நாகர் இனத் தினர் உருவாக்கியிருந்தனர். பின்னர் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட வணிக முறைக்கும் அம்மொழி மற்றும் வரி வடிவப் பிரயோகங்கள் தொடர்பாடலை வளப்படுத்தி பொருளியல் சார்ந்த நிறு வனங்களின் தோற்றத்திற்கும் வழி வகுத்திருந்தது.

கி.மு.6ம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ப் பிராமி வரி – வடிவங்களின் பரவலான உபயோகத்தினையும், அச்சுக் குத்தப்பட்ட வெள்ளி நாணயங்களின் சிதறல்களை யும் காண முடிவதிலிருந்து நாகர் இனம் நிலையான பயிர்ச்செய்கை வாழ்க்கை முறைக்குள் ஈடுபாடு கொண்டிருந்ததோடு, உள்நாட்டு – வெளிநாட்டு வாணிபச் சந்தை வலையமைப்பு முறைக்குள்ளும் ஈடுபட்டு, வாணிபப் பொருளியலில் தம்மை வளர்த் தெடுத்துக் கொண்டிருந்தமையை இலங் கையில் காணமுடிந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சி கிழக்குப் பிராந் தியத்தில் கி.மு.6ம் நூற்றாண்டுக்குரிய வெள்ளிக் கட்டியிலான அச்சுக் குத்தப் பட்ட நாணயங்கள் எடுக்கப்பட்ட வகை யிலிருந்து நாகர் – கோயிற் பிராந்தியம் நாக வம்சத்தவரது நிலையான – பல மான குடியிருப்புத் தொகுதியாக கி.மு.6ம் நூற்றாண்டிலிருந்து உருவாகியிருந்த வரலாற்று வளர்ச்சியை எம்மால் உறுதிப் படுத்திக் கொள்ளமுடிகிறது. மேலும் இங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நாணயங்களில் நாகபூமி, பொலம், நாகன் போன்ற வாசகங்களைக் கொண்ட தமிழ்ப் பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட் டிருப்பதையும் காண்கின்றோம். யாழ்ப் பாணத்தில் இப்பிராந்தியமே குறுணிக் கற்கால வாழ்க்கை முறையிலிருந்து நாகர்களால் விடுவிக்கப்பட்ட புதிய வாழ்க்கை முறைக்குரிய வரலாற்றுக் கால பிராந்தியமாக குடாநாட்டில் அமைந்து கொண்டமையை இன்று நாம் தொல்லியல் சான்றுகள் வாயிலாக உறுதிப்படுத்துகின் றோம். எனவே வட இலங்கையில் நாகர் குலம் பிரதான தமிழ்மொழியை அண் மித்த ஒரு மொழியையும் (Proto Tamil) அதற்குரிய வரிவடிவத்தினையும் கொண்டு பெருங்கற்கால சமுதாய வாழ்வின் இரண்டாவது கட்ட வளர்ச்சிக்குரியவர் களாக தம்மை வளர்த்தெடுத்துக் கொண் டனர் எனலாம்.

## நாகவம்சத்தவர்களது குறியீடு: எருது

நாக வம்சத்தைச் சேர்ந்த குழுமத் தினர் 'படுத்திருக்கும் எருது' வடிவத் தினையே தமது குலக் குறியீடாகக் கொண்டிருந்தனர் என்பதற்கு எமக்குத் தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணக்குடா நாட்டின் கண் உள்ள கந்தரோடைப்பிராந்தியத்தில் 'அரசமாளி கைத்திடல்' என்ற குறிச்சியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெருங்கற் காலத்துக்குரிய பல்வேறு மணிவகை களுள் சந்திரகாந்தக்கல் ஒன்றில் படுத்திருக்கும் சேது உருவத்துடன் குத்து விளக்கு ஒன்றுமாக முத்திரை/இலச்சினை பொறிக்கப்பட்ட நிலையில் மோதிரத்தில் (அரச மோதிரம்?) வைத்து உபயோகப் படுத்தப்பட்ட கல்லொன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கிடைத்

துள்ளது. திட்டவட்டமாக நாகர் வம்சத் துடன் இணைத்துப் பார்ப்பதற்குரிய தொல்பொருட்களுடன் இம்முத்திரை மோதிரக்கல் கிடைத்திருப்பது நாகர் அரச மரபொன்றின் தோற்றத்தினை கந்தரோடையுடன் இணைத்துப் பார்ப் பதற்கும் வழி வகை செய்துள்ளது. கி.மு.ㅁெ நூற்றாண்டிலிருந்து நாகர் மரபில் 'படுத்திருக்கும் எருது' முக்கிய ஒரு குறியீடாக வளர்ச்சி பெற்றிருந்த வகை யினை இன்றைய நிலையில் கந்தரோடைப் பிராந்தியத்திலுள்ள மாடுகளுக்கும் குறிப் பாகப் பசுக்களுக்கு குறி சுடும் மரபில் இச் சேது வடிவம் இடம்பெற்றுக் கொண்டி ருப்பதனையும் இக்கட்டுரையாசிரியர் உறுதிப்படுத்தியுள்ளார். 'இச் சான்று மறைந்து போன அரச மரபு ஒன்றின் தொடர்ச் சியை குறியீடாக எம்மவர் மத்தியில் இன்று வரை பேணிவைத்திருக்கும் முறைக் குரிய புறச்சான்றாக அமையும்'.

## நாகதீபத்து நாக வம்சமும் சிவன் வழிபாட்டுமரபும்

ஈழத்துப்புராதன பஞ்ச ஈஸ்வரங்கள் எனப் பெயர் பெற்ற தலங்களுள் இரண்டு தலங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் என்ப வையே அவ்விரண்டு ஈஸ்வரத் தலங்களு மாகும். திருத்தம்பலேஸ்வரம் என்றொரு சிவத்தலமும் மாவிட்டபுரத்திற்கண்மையில் அமைந்திருந்த பழைமைவாய்ந்த சிவா லயம் எனக் கூறப்படுகின்றது. கந்தரோடைப் பிராந்தியத்தில் மாகியப்பிட்டி சந்தை அமைந்த நிலையத்திற்கு அண்மையில் சிவனெழுவை என்ற குறிச்சியில் சிவ ஈஸ்வரன் கோயில் ஒன்று நிலத்துக்குள் புதைந்திருப்பதாக அவ்வூரில் ஐதீக மொன்று நிலவிக் கொண்டிருக்கின்றது. இப்பிராந்தியத்தில் நிலைத்துக்குள்ளிருந்து காலத்திற்குக் காலம் வெளிப்படுத்தப் படும் இந்து – பௌத்த கட்டடப் பாகங்கள் அக்கருத்தினை மேலும் ஊர்ஜிதம் செய் கின்றன. மாசியப்பிட்டி அல்லது மகியப் பிட்டி எனக் குறிப்பிடப்படும் பதம் ரோமா னியச் சொல்வழக்குடன் தொடர்புபட்ட தாக இருப்பதனைக் காண்கின்றோம். 'மெகஸ்தனஸ்' என்ற பெயரில் காணப்படும் 'மெக'வுக்கும் 'மகிய'விற்கும் (மாகிய?) இடையே நெருங்கிய ஒற்றுமை காணப்படு கின்றது. ரோமானியத் தங்க நாணயங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்ட வகையிலிருந்து ரோமானிய வாணிபக் கிடங்கு ஒன்று மாகியப்பிட்டியில் புதைந்திருக்கக்கூடும் என எண்ணத்தோன்றுகின்றது. அப்பின் னணியில் நாகர் வம்சத்தினரது சிவன் கோவி லும் அமைந்திருந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. (இப்பிரதேசம் தொடர் பான பண்பாட்டிருப்பினை தொல்லியல் அகழ்வாய்வுச் சான்றுகள் வாயிலாக எதிர்காலத்தில் உறுதிப்படுத்தவேண்டி யவர்களாக உள்ளோம்.)

## மணிநாகேஸ்வரமும் நாகர்களும்

தேவார முதலிகளால் பாடல் பெற்ற ஈழத்து ஈஸ்வரங்கள் எனப் புகழ்பெற்ற கேதீஸ்வரம், கோணேஸ்வரம் என்னும் திருத்தலங்களுடனும் புராண ஐதீகங் களுடனும் நாகர் வம்சம் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர் என்பதனை தேவா ரங்களால் அறிகின்றோம். ஆனால் அப் பருடைய பாடல் ஒன்றிலிருந்து ஈழத்தி லிருந்த மணிநாகேஸ்வரம் பாடப்பட்டி ருந்த வகையை இப்பொழுது ஆய்வாளர் ஒருவர் அடையாளம் கண்டு, அத்துறை ஆய்வில் ஈடுபட்டிருப்பதனையையும் காண்கின்றோம். அவ்வகையில் அப்பரால் பாடப் பெற்ற ஒரு பதிகத்தில் 'நாகேச்சுவரர்'

பற்றி பின்வருமாறு இடம் பெறுவது ஆய்விற்குரியதாகின்றது. ஏனென்றால் அப்பர் சுவாமிகளினால் பாடப் பெற்ற நாகேச்வரப் பாடல்கள் யாவும் காவிரி யின் தென்கரையிலுள்ள நாகேச்வரத் தினை குறிப்பிட்டு நிற்கவில்லை என்பதும் நாவலந் தீவுக் கூட்டங்களுள் காணப் படும் மணிநாகேஸ்வரத்துக்குரியன என்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**"நாவலம் பெருந்தீவினில் வாழ்பவர்**
**மேவிவந்து வணங்கி வினையொடு**
**பாவமாயின் பற்றறுவித்திடும்**
**தேவர் போற்றிரு நாகேச்சுரவரே."**

**"சந்திரனொடு சூரியர் தாமுடன்**
**வந்து சீர்வழிபாடுகள் செய்தபின்**
**ஐந்தலை அரவின் பணி கொண்டருள்**
**மைந்தர் போல் மணிநாகேச்சுரரே."**

நாவலந்தீவு பற்றிய குறிப்புகள் காலத்திற்குக் காலம் ஒரே பொருளில் வழங்கப்பட்டிருக்கவில்லை. குமரிக்கண் டத்தின் தென்பகுதியிலேயே நாவலந் தீவு அமையப்பெற்றிருந்தமைக்கான குறிப்புகள் மணிமேகலை – சிலப்பதிகாரம் ஆகிய இரட்டைக்காப்பியங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு காலகட்டத்தில் இந்திய உபகண்டம் முழுவதையும் 'நாவ லந்தீவு' குறிப்பிட்டுநின்றதற்கான இலக் கியக் குறிப்புக்களும் காணப்படுகின்றன. குமரிக் கண்டத்தின் தென் பகுதியில் நாவலந்தீவும் சப்ததீவுகளும் அமைந்தி ருந்தன எனவும் கடல்கோளினால் குமரிக் கண்டம் நீரில் ஆழ்ந்து போக, நாவலந் தீவும் சப்ததீவுகளும் மட்டுமே எஞ்சியுள்ளன எனவும் அவையே இலங்கைத் தீவும், வட பகுதியிலுள்ள தீவுக்கூட்டங்களுமாகும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அப்பர் சுவாமிகளால் பாடப்பட்ட மணி நாகேச்சரம் இலங்கையின் வடபகுதிகளில் உள்ள சப்ததீவுகளுள் ஒன்றான நயினா தீவிலேயே அமைந்துள்ளது என்று கருதும் ஆய்வாளருமுளர். மணிமேகலையில் இடம்பெற்றுள்ள குறிப்பொன்றின்படி நாவலந்தீவிலுள்ள சிந்தாதேவியின் பீடம், சிந்தாமணிப்பீடம் எனவும் மணி மேகலா தெய்வம் வந்துறைந்த பீடம் (சக்திபீடம்) இதுவே எனவும் இதுவே இன்று நாகேஸ்வரியின் சக்திபீடமாகக் காட்சியளிக்கின்றது எனக் கருதும் ஆய் வாளர்களுமுளர். சிந்தாதேவியிடமிருந்து கிடைத்த **'அட்சய பாத்திரம்'** ஆபுத்திரன் கையிற்குக் கிடைத்தமையும், பின்னர் கோமுகிப் பொய்கையில் அப்பாத்திரம் ஜலசமாதியுற்ற வரலாறும் மணிமேகலை யில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ள மையை நாம் அறிவோம். இப் பின்னணி யிலே நாகர் வம்சத்தினர் நாவலந்தீவிலும் சப்ததீவுகளிலும் ஓர் அரச பாரம்பரியத் தினை உருவாக்கியிருந்தனர் என்பதும் அதன் தலைநகராக கதிரமலை (கந்த ரோடை) விளங்கியிருந்தமையும் தெளி வாகின்றது. இவ்வடிப்படையில் நோக்கும் போது மணிநாகேச்சுரம் அமைந்த நிலை யம் நயினார்தீவு என்பதில் சந்தேகம் எழ முடியாது. மணிபல்லவம், மணித்துவீபம், மணிப்பீசம், மணிநாகதுவீபம், மணியக்க என்றெல்லாம் பல்வேறு பெயர்களில் 'மணி' இணைத்து பேசப்படுகின்ற ஒரு வரலாறு தற்போது நயினார் தீவிற்குரிய தாகவே பெரும்பாலாரினால் கருதப்படு கின்ற நிலையில், மணிநாகேச்சுரம் என்ற பாடல் பெற்ற நாகவம்சத்தினுடைய சிவத்தலமும் சப்ததீவுகளில் ஒன்றாகிய நயினார் தீவில் அமைந்திருந்தது என்ற முடிவிற்கு வரலாம். எனினும் இன்று 'மணிநாகேஸ்வரி'யாக சிவவழிபாடு, நாகவழிபாடு, அம்மன்வழிபாடு இவை மூன்றும் ஒருமித்த வகையில் எவ்வாறு ஒரு சக்திபீடம் இங்கு உருவானது என்பது

மேலும் ஆராயத்தக்கது. நாகரும், பாணரும், திரையரும் வம்ச ஆட்சியாளர்களாக எழுச்சிபெற்றமையின் பின்னணியில் அம்மூன்று வழிபாட்டு மரபுகளும் ஒரே சந்நிதியில் சங்கமமாயிருத்தல் வேண்டும் எனக் கொள்வதே பொருத்தமானது.

## நாகரும் வைஷ்ணவ மரபும்:

இலங்கைத்தீவினைப் பொறுத்த வரையில் நாக வம்ச பண்பாட்டுச் செல்வாக்குகள் பௌத்த மரபில் வைஷ்ணவப் பராம்பரியத்துடன் இணைக்கப்பட்டே சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். மகியங்கணை ஓவியங்களிலும், களனி விகாரை ஓவியங்களிலும் நாகவம்ச மரபுகள் யாவும் வைணவப் பண்பாட்டுக்குரிதாக (உபுல்வணன் மரபிற் குரியதாக) சித்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சிகிரியாவில் மாத்திரம் நாகபடக் குகையினுள் வரையப்பட்ட ஓவியச்சிறையில் நாக மரபு தனித்துவமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது) இலங்கையின் காவல் தெய்வமாக விஷ்ணு கருதப்பட்ட நிலையில் பௌத்த மரபுகளில் நாகரை அமானுஸ்ய சக்தி படைத்த தேவர் குலம் போன்ற ஒரு பிரிவினராக சித்தரித்த மரபினை பௌத்த இலக்கியங்களிலும் பௌத்த ஓவியங்களிலும் காண்கின்றோம். ஆனால் ஈழத்து சாசனச் சான்றுகளினூடாக ஆராயும் போது நாகவம்சத்தினர் பௌத்தத்திற்கு முந்திய இலங்கையின் வம்ச ஆட்சியாளர்களாக விளங்கியிருந்தமையும், சிவ வழிபாட்டிற்குரியவர்களாக அவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனையும் தெளிவாக அறியமுடிகிறது. தீசனது ஆட்சியின் போது அனுராதபுரம் இந்து மதத்திற்குரிய ஒரு தலைநகரமாகவே இலங்கையில் விளங்கியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பௌத்தத்தின் வருகையின் பின்னரேயே **தேவனம்பியதீசன்** இந்து சமயத்திற்குரிய ஆதரவினைக் கைவிட்ட போதிலும் நாக வம்சத்தினரான அவனது முன்னோர் வளர்த்தெடுத்த இந்து சமய நிறுவனங்கள் அனுராதபுர கால இலங்கையில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த வகையை கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. பௌத்த கட்டட சிற்பக் கலைமரபுகளுடன் நாகர் வம்சத்தினரின் கலைக்கோலங்கள் இணைக்கப்பட்டு ஸ்தூபி கட்டிடக் கலைப் பாரம்பரியமாக அவை மாற்றப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். நாகதுவார பாலகர் வடிவங்கள் அவ்வாறு இணைந்து கொண்டமைக்கான சிறப்புதாரணமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நாகரும் வேல்வழிபாட்டு மரபும் :

ஈழத்து இந்து வழிபாட்டு மரபுகளில் **வேல்** வழிபாட்டு முறை இற்றைவரைக்கும் மிக ஆழமான முறையில் வேரூன்றியிருப்பதனைக் காணலாம். வே.அம்பிகை பாகன் தனது நூல் ஒன்றில் குறிப்பிடுவது போன்று நாக நாடான இலங்கையில் மகாபாரதம் குறிப்பிடும் **'காண்டவதகனம்'** நிகழ்ந்த மரபு ஒன்றினை அடையாளப்படுத்துவதன் மூலம் நாகருக்கும் முருக வழிபாட்டிற்குமிடையில் இருந்திருக்கக் கூடிய மிக நெருங்கிய தொடர்பு வெளிப்படையாகின்றது. **கதிர்காமம்** அன்றைய காலகட்டத்தில் வகித்திருந்த பண்பாட்டு நிலையில் **கந்தபுராணக்கலாசாரம்** இலங்கையில் வேர்விட்டுக் கிளைத்திருந்தது என்பதும், நாகர் வம்சமரபினர் அதன் பின்னணியில் இருந்து அப்பண்பாட்டை வளர்த்தெடுத்தனர் என்பதும் தற்போது தெளிவாகின்றது. பெருங்கற்கால முது

மக்கட்தாழிகளுக்குள் வைக்கப்பட்ட இரும்பினாலான **வேல்** கருவியிலிருந்து கதிர்காமம், செல்வச்சந்நிதி வரைக்கும் அம்முருக வழிபாடு இன்று வரை உயிரோட்டமாக இருந்து கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். அன்றைய அமுதசுரபிக்குள் அமிழ்ந்து போன அட்ஷய பாத்திரம் இன்று **'அன்னக்கந்தராக'** கதிர்காமத்திலும், செல்வச்சந்நிதியிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் அம்மரபு நாகவம்ச மரபு என்று கூறினால் அது மிகையாகாது. இப்பின்னணியில் இலங்கையில் நாக வம்சத்தினரின் சமயப் பங்களிப்பினை மேலும் ஆராய்ந்து செல்வதற்கு இடமுண்டு.

**முடிவுரை :**

மிகவும் ஆழமான நிலையில் வைத்து ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாக நாக மரபு இன்று காணப்படுகின்றது. ஈழத் தமிழர் வரலாற்றிற்கு புதிய ஒளியை ஏற்படுத்தக் கூடியதாக நாகமரபுகள் பற்றிய ஆய்வுகள் இங்கு அமைகின்றன. அப்பின்னணியில் நாகர் ஈழத்து இந்துசமய வரலாற்றிற்கு ஆற்றியிருந்த பங்களிப்புகள் பற்றி மிகமிகச் சுருக்கமாகவே இங்கு பார்க்கப்பட்டது. இவ்வாய்வுக்கட்டுரையை மீண்டும் விரித்து மிக ஆழமாக ஆராய்ந்து நாகருக்கும் இந்து சமயிகளான ஈழத்தமிழருக்கும் இடையே காணப்படக்கூடிய தொடர்புகளை ஆராய வேண்டிய கடப்பாடு எமக்குளது.

**இவ்வாய்வுக்கட்டுரைக்கு உதவிய நூல்கள்**


1. இலங்கையில் இந்து சமயம்: சி.பத்மநாதன், குமரன் புத்தக இல்லம், 2005.
2. The Land of Letters : வண.சேவையர், திருகோணமலை, 1977.
3. இசைத்தமிழ்வேந்தர் : சங்கீத கலாநிதி.முனைவர். நா.வி.மு.நவரத்தினம் அவர்களுடனான கலந்துரையாடல்கள். மணி நாகேச்சுரம் பற்றிய செய்தி அவரிடமிருந்தே பெறப்பட்டது.
4. ஈழத்தில் நாகஉ மரபுகள் : ஆய்விற்கான சில அடிப்படைத்தகவல்கள். செ.கிருஷ்ணராஜா, வெளிச்சம் (ஆய்விதழ்), April - May, 1994, யாழ்ப்பாணம்.



♣ ♣ ♣

# ஊழியர்களை ஊக்கமளித்தல்
# Motivation of Employees

**பேராசிரியர் . க. தேவராஜா**
*பீடாதிபதி*
*முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## 1.O அறிமுகம்

மனித வள முகாமைத்துவத்தின் மிகப் பிரதான கருமமாகக் காணப்படுவது ஊழியர்களை ஊக்கப்படுத்தல் என்பதாகும். எந்தவொரு நிறுவனத்திலும் பணியாற்றுகின்ற ஊழியர்களிடமிருந்து எதிர்பார்த்த விளைவையோ அன்றி அதனை விடக் கூடுதலான விளைவையோ பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்தும் செயற்பாடு அவசியமாகின்றது. மனிதவள முகாமைத்துவத்தில் ஊழியர்களது உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதற்கும் அதன் ஊடாக நிறுவனங்களின் வெளியீடு அதிகரிப்படுவதற்கும் ஊழியர்களது ஊக்கப்படுத்தல் வேண்டப்படுகின்றது. ஊக்கப்படுத்தலின் விளைவைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




மேற்காட்டிய வரைபடத்தின்படி ஊழியர்களுக்கான வெகுமதிகளும் அங்கீகாரமும் உயர்வான ஊழியர் ஊக்கப்படுத்தலுக்கும் தொழிற்திருப்திக்கும் வகை செய்யும். இதன் ஊடாக வேலையின் தரத்திலும் அளவிலும் அதிகரிப்பு ஏற்படும். இது இறுதியில் உயர் உற்பத்தித்திறனுக்கு வகை செய்யும். இந்த உற்பத்தித்திறன் அதிகரிப்பு மீண்டும் ஊழியர்களுக்கான வெகுமதிகளையும் அங்கீகாரத்தையும் அதிகரிக்கச் செய்யும். எனவே, சுற்றுவட்டத்தில் ஊழியர் ஊக்கப்படுத்தலானது உற்பத்தித்திறன் அதிகரிப்பிற்கு வகை செய்யும். எனவேதான், எல்லா நிறுவனங்களும் ஊக்கப்படுத்தலின் மீது அக்கறை செலுத்தி உற்பத்தித்திறன் அதிகரிப்பையும் உச்ச

இலாபத்தையும் பெற்றுக்கொள்ள முற்படுகின்றன. எந்தவொரு நிறுவனத்திலும் ஊழியர்களை நெறிப்படுத்துவதன் மூலமே இதன் இலக்கை அடைவது சாத்தியமாகின்றது. ஊழியர்களை நெறிப்படுத்துவதில் தலைமைத்துவம், தொடர்பாடல் என்பன எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றனவோ அவ்வளவு முக்கியத்துவத்தை ஊக்கப்படுத்தல் கொண்டிருக்கின்றது. ஊழியர்களின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாட்டை நிர்மாணிப்பதில் முக்கிய காரணியாக ஊக்கப்படுத்தலே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே,

$$P = A \times M$$

என்ற சமன்பாடு நிரூபிக்கப்படுகின்றது. இதில் P செயற்றிறனையும், A ஆற்றலையும், M ஊக்கப்படுத்தலையும் குறிக்கும். இதன்படி ஆற்றல் உள்ள ஊழியர் மீது ஊக்கப்படுத்தலை பிரயோகித்தால் மட்டுமே செயற்றிறன் அதிகரிப்பு ஏற்படுவதனை உறுதிப்படுத்தலாம். மாறாக ஆற்றலில்லாத ஊழியர் மீது ஊக்கப்படுத்தலைப் பிரயோகிப்பதும், ஆற்றல் உள்ள ஊழியர் மீது ஊக்கப்படுத்தலைப் பிரயோகிக்காதிருப்பதும் செயற்றிறன் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

## 2.0 ஊக்கப்படுத்தலின் தேவை

எந்தவொரு நிறுவனத்தின் முகாமையாளரும் தனது ஊழியர்களை ஊக்கப்படுத்துபவராக இருத்தல் வேண்டும். ஊழியர்களுக்கு ஊக்கப்படுத்தல் தேவைப்படுகின்றது என்பதை முகாமையாளர் பின்வரும் சந்தர்ப்பங்களில் புரிந்து கொள்ளமுடியும். அதாவது,

- ஊழியர் வேலையில் அக்கறையின்றிக் காணப்படுதல்
- வேலையில் சலிப்புத்தன்மையைக் கொண்டிருத்தல்
- வேலையில் அடிக்கடி தவறுகள் ஏற்படுதல்
- நேரத்தினை பெருமளவு விரயம் செய்தல்
- நிறுவனத்தின் வளங்களைச் சிக்கனமின்றிப் பாவித்தல்
- ஊழியர்களது வரவீனம் பெருமளவில் காணப்படுதல்
- ஊழியர்களது புரள்வு அதிகளவில் காணப்படுதல்
- நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதில் அக்கறையின்றிக் காணப்படுதல்
- நிறுவனத்தின் வெளியீட்டில் வீழ்ச்சி காணப்படுதல்
- நிறுவனத்தில் அர்ப்பணிப்பு குறைவாகக் காணப்படுதல்

என்கின்ற சந்தர்ப்பங்களில் ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

## 3.0 ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள்

நிறுவனங்கள் ஊழியர்களைத் தூண்டுவதற்கு நிதி சார்ந்த ஊக்குவிப்புகளையும் நிதி சாராத ஊக்குவிப்புகளையும் வழங்குவது இயல்பாகும். பணமாக வழங்கப்படுவதெல்லாம் நிதி ரீதியான ஊக்குவிப்புகள் எனக் கொள்ளப்படும். இது தொடர்ச்சியாக ஊழியர்களை ஊக்குவிக்கமாட்டாது என்பதனாலேயே பணமாக அல்லாது ஊக்குவிப்புக்கள் வழங்க நிறுவனங்கள் முன்வருகின்றன. இவற்றின் அடிப்படையில் சாதாரண நிறுவனங்களால் பின்வருவன ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளாகப் பின்பற்றப்படுகின்றன.

1. ஊழியர்களது விருப்பத்தை அதிகரிக்கக்கூடியவாறு பொருத்தமான வேலையை வழங்குதல்.
2. வேலையைச் சரிவர ஆற்றுவதற்கு வசதியாக தேவைப்படும் பயிற்சியை வழங்குதல்.
3. ஊழியர்களது அக்கறையை அதிகரிக்கும் வகையில் ஜனநாயகத் தீர்மானம் எடுத்தலை அறிமுகப்படுத்தல்.
4. அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்காது கீழ்மட்டத்தவருக்கு உதவும் வகையில் அதிகாரக் கையளிப்பை ஏற்படுத்தல்.
5. வேலையில் தோன்றக்கூடிய சலிப்புத்தன்மையை நிவர்த்திக்கும் வகையில் சுழற்சி முறை வேலையை அறிமுகப்படுத்தல்.
6. நிதி சார்ந்த ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
7. நிதி சாராத ஊக்குவிப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
8. வேலைசம்பந்தமான அபிப்பிராயங்களை எடுத்துக்கூறும் வேலைப் பின்னூட்டி (Workfeedback) என்பதனை நடைமுறைப்படுத்தல்.
9. நிறுவனத்தின் வேலையில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
10. ஊழியர்களிடையே பக்கச்சார்பினைத் தவிர்த்து நடுநிலைமைக் கொள்கையைக் கொண்டுவருதல்.
11. ஊழியர்களது வேலையை அங்கீகரிப்பதுடன் அவர்களுக்கு புகழ்ச்சியையும் வெகுமதிகளையும் வழங்குதல்.
12. முரண்பாடுகளை உத்தம அளவில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
13. ஊழியர்களுக்கு சிறந்த மேற்பார்வை வழங்குதல்.
14. குழு அடிப்படையில் வேலை செய்வதற்கு வழி செய்தல்.

இவற்றைப் பயன்படுத்துவதன் ஊடாக ஊழியர்களை சாதாரணமாக ஊக்கப்படுத்த முடிகின்றது. இவற்றைப் பயன்படுத்துவதனால் தொழிற்திருப்தி ஏற்படுவதுடன் ஊழியஉகள் செயற்றிறன் (Performance) விரைவாக அதிகரித்துச் செல்வதனைக் காணமுடியும்.


## 4.0 ஊக்கப்படுத்தலுக்கான கோட்பாடுகள் (Theories of motivation)

நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களை எவ்வாறு ஊக்கப்படுத்தலாம் என்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டவையே ஊக்கப்படுத்தல் கோட்பாடுகளாகும். இக்கோட்பாடுகள் ஊழியர்களுக்கு இருக்கும் தேவைகளையும் அவற்றுக்கான திருப்தி களையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகும். ஊழியர்களுக்கான தேவைகள் எந்தளவுக்கு திருப்திப்படுத்தப்படுகின்றனவோ அதற்கேற்ற வகையில் தூண்டுதல் அமைய முடியுமென்பது கருத்தாகும். இவற்றுள் பின்வருவன முக்கியம் பெறும்.

### 4.1 மாஸ்லோவின் தேவை பற்றிய படிமுறைக் கோட்பாடு (Maslow's Needs hierarchy theory)

அமெரிக்க சமூகவியலாளரான ஏப்ரகாம் மாஸ்லோ என்பவரால் ஐம்பதுகளின் நடுப்பகுதியில் முன்வைக்கப்பட்ட ஊக்கப்படுத்தல் கோட்பாடே இதுவாகும். இவர்

மனித வர்க்கம் என்றுமே தேவைகளைக் கொண்டுள்ள ஒரு பிராணி என்றும் அவர்கள் கொண்டிருக்கும் தேவையே ஊக்கப்படுத்தலுக்கு அடிப்படைகளில் அமைந்துள்ளது என்பதுமான கருத்தை வெளியிட்டார். இதன்படி ஒரு தேவை தோன்றி திருப்தியை நாடி நிற்கும் பொழுது அதனை நிறைவு செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையே ஊக்கப்படுத்தலாக அமைய முடியும் எனக் கூறப்பட்டது. இதன்படி மனித வர்க்கம் என்றுமே தேவைகளைக் கொண்டிருக்கும் என்றும் ஒரு தேவை பூர்த்தியானதுடன் இன்னொரு தேவை தோன்றி திருப்தியை நாடி நிற்கும் என்பதனால் தேவை பற்றிய பின்வரும் வரிசை அவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.




பிரமிட்ஸ் வடிவத்திலான மேற்காட்டிய படத்தில் மனித வர்க்கத்துக்கு இருக்கும் தேவைகளும் அவை தேவைப்படுவோரது எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளது. இவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

**உடலியற் தேவை**

மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படையிலான உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் பெறுவதற்கான தேவை இதுவாகும். ஒருவருக்குக் கிடைக்கும் சம்பளக் கொடுப்பனவை அடிப்படையாகக் கொண்டு இத்தேவை பூர்த்தியாக்கப்பட முடியும்.

**பாதுகாப்புத் தேவை**

உடலியற் தேவை பூர்த்தியானவுடன் தோன்றக்கூடிய இத்தேவையில் தொழிலுக்குப் பாதுகாப்பு; உயிருக்குப் பாதுகாப்பு, உடைமைகளுக்குப் பாதுகாப்பு என்பன தோன்றும். இது பல்வேறுபட்ட பாதுகாப்புக்களை ஊழியர் வேண்டி நிற்பதனால் தோன்றுகின்றது.

**சமூகத் தேவை**

பாதுகாப்புத் தேவை பூர்த்தியானவுடன் தோன்றுகின்ற இத்தேவை சமூகத்துடன் இணைந்து வாழுதல், ஏனையோர் மீது அன்பு செலுத்துதல், உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றை அடக்கும்.

**கௌரவத் தேவை**

சமூகத் தேவை பூர்த்தியானவுடன் தோன்றக்கூடிய சொந்த அந்தஸ்தினையும் ஏனையோர் அங்கீகாரத்தையும் உள்ளடக்கும் தேவையாகும். தன்னம்பிக்கை, பலம், சுதந்திரத் தன்மை, புகழ், அந்தஸ்து, அங்கீகாரம், சமூக மதிப்பு ஆகியவற்றை அடக்கும் தேவையாகும்.

**தன்னலத் தேவை**

மனித வர்க்கத்துக்கு தோன்றக்கூடிய கடைசித் தேவை இதுவாகும். ஒருவரது சுயநலத்துடன் சம்பந்தப்பட்ட தேவையெனக் கொள்ளப்படும். அரசியலில் ஒருவர் பெற முற்படும் பதவிகள், நிறுவனத்தில் பெற விரும்பும் உயர்மட்ட பதவிகள் என்பவற்றை இது அடக்குவதுடன் இதன் பின்னர் மனித வர்க்கத்திற்கு ஒரு தேவையும் தோன்ற மாட்டாது எனவும், மிகக் குறைந்த எண்ணிக்கையினரே இத்தேவைகளைக் கொண்டிருப்பர் எனவும் கூறப்பட்டது.

இக்கோட்பாட்டின் தேவைக்கும் திருப்திக்கும் இடையிலான உறவைக் குறிப்பிட்டு ஊக்கப்படுத்தலில் அதன் அவசியத்தை வலியுறுத்தினாலும் இக்கோட்பாட்டில் பின்வரும் குறைபாடுகள் உண்டு.

1. தேவை மேற்கூறிய வரிசையில் தான் தோன்றும் என்ற கட்டுப்பாடு இல்லை.
2. மக்களது வயதிற்கும் தேவைக்கும் தொடர்பு இருப்பது கவனத்தில் கொள்ளப்படவில்லை.
3. கௌரவத் தேவை, தன்னலத் தேவை ஆகியவற்றை வேறுபடுத்துவது கடினமாகும்.
4. நிறுவனத்திற்குள் மட்டும் இத்தேவைகள் பூர்த்தியாக்கப்பட முடியும் எனக் கூறமுடியாது.

இவற்றின் அடிப்படையில் பின்னர் வேறு கோட்பாடுகள் அறிமுகமாகின.

**4.2 கேஸ்பேக்கின் இருகாரணிக் கோட்பாடு (Herzberg's Two factor theory)**

மாஸ்லோவின் கோட்பாட்டில் தேவைகள் வரிசையாகத் தோன்ற முடியாது என்ற காரணத்தின் அடிப்படையில் இருகாரணிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. நிறுவனங்களில் வேலை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஊழியர்கள் அதிருப்தியினை (dissatisfaction) அனுபவித்து வருவர். அதனை நிவர்த்திக்க சுகாதாரக் காரணித் (Hygiene factor) தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். இத்தேவை பூர்த்தியானவுடன் அதிருப்தி நீக்கப்படும். பின்னர் திருப்தியை (satisfaction) வரவழைப்பதற்கு ஊக்கப்படுத்தும் காரணி (Motivation factor) அடிப்படையிலான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென கேஸ்பேக் குறிப்பிட்டார். இதன்படி, ஊழியர்களைத் தூண்ட அவர்களுடைய அதிருப்தி களையப்பட வேண்டும். இதனூடாக நடுநிலைக்கு (Neutral) வரும் ஊழியர்களைத் திருப்தி நிலைக்கு கூட்டிச்செல்வது என்பது இக்கோட்பாட்டின் சாராம்சமாகும்.

**சுகாதாரக் காரணி ஊக்குவிப்புக் காரணி**

| | |
|---|---|
| கம்பனிக் கொள்கை | அந்தஸ்து |
| கம்பனி நிர்வாகம் | சாதனை |
| ஊழியர் மேற்பார்வை | அங்கீகாரம் |
| வேலை நிபந்தனைகள் | முன்னேற்றத்திற்கான வழி |
| சம்பளக் கொடுப்பனவு | புகழ்ச்சி |
| தொழிற்பாதுகாப்பு | வெகுமதி |
| மேலதிக நலன்கள் | |

சுகாதாரக் காரணிகளைப் பூர்த்தி செய்து அதிருப்தியை இல்லாமல் செய்து நடுநிலைக்கு கொண்டு வந்த ஊழியர்களை மீண்டும் திருப்தி நிலைக்கு கொண்டு செல்ல ஊக்குவிப்புக் காரணித் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்றும் இதுவே ஊழியர்களைத் தூண்ட பொருத்தமான நடவடிக்கையென்றும் கூறப்பட்டது.

### 4.3 டக்ளஸ் மக்கிறகரின் கோட்பாடு (Douglas McGregor's Theory)

டக்ளஸ் மக்கிறகர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊழியர் நடத்தையை மையமாகக் கொண்ட கோட்பாடு இதுவாகும். நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நடத்தையை மையமாகக் கொண்டு கோட்பாடு X (Theory X) கோட்பாடு Y (Theory Y) என இருவகையான ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. கோட்பாடு X ஊழியர்களின் மேல் நம்பிக்கையை ஏற்படுத்தாத ஒன்றாகும். இதன்படி,

- ஊழியர்களின் வேலை செய்வதற்கு விருப்பமில்லாதவர்கள்
- வழங்கப்படும் பொறுப்புக்களை தட்டிக் கழிப்பர்
- இலக்குகளை அடைவதில் அக்கறையற்றவர்கள்
- கடுமையான மேற்பார்வை தேவைப்படும்
- பயத்தினால் மட்டுமே வேலை செய்ய முன்வருவர்

என்பதன் அடிப்படையில் கடும் போக்கான தூண்டுதலே ஊழியர்களிடம் வேலை பெற உதவும் என்றும் தண்டனைகளும் அபராதங்களுமே வேலையை பெற்றுக் கொள்ளச் சரியான வழியென்றும் X கோட்பாட்டில் கூறப்பட்டது. இது தடி அணுகல் (stick approach) எனக் கொள்ளப்படும்.

கோட்பாடு Y ஊழியர்கள் மேல் நம்பிக்கை கொண்ட நவீன காலத்துக்குரிய கோட்பாடாகும். இதன்படி

- ஊழியர்கள் வேலை செய்வதற்கு விருப்பமுடையவர்கள்.
- தொழிலினூடாகவே திருப்தியைக் காண்பர்.
- பொறுப்புக்களை ஏற்பதற்கு ஆயத்தமாக இருப்பர்.
- இலக்கை நிறைவேற்றும் விருப்பமுடையவர்கள்.
- இயல்பாகவே நிறுவனத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவர்.

என்பதன் அடிப்படையில் தட்டிக்கொடுத்து வேலைவாங்கும் இயல்பு வளர்க்கப்படுவதற்கு ஊழியர்கள் நல்ல முறையில் அணுகப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இதனை நல்ல முறை அணுகல் (Carrect approach) எனக் கொள்வர்.

### 4.4 சமநிலைக் கோட்பாடு (Equity theory)

1993 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த ஸ்ரேசி அடெம் என்பவரால் இக் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருவர் ஏனையவர்களுடன் ஒப்பிடும் பொழுது எத்தகைய உள்ளீடுகளை கொண்டிருக்கிறார் என்றும் அவருக்கு எத்தகைய வெளியீடுகள் உள்ளன என்றும் இருப்பதே சமநிலைக் கோட்பாடு ஆகும். இங்கு ஊழியர் நிறுவனத்திற்காக அளிப்பதெல்லாம் அவர் சம்பந்தமான உள்ளீடு செய்யப் படும். அதற்காக நிறுவனம் அவருக்கு வழங்குவது வெளியீடு எனக்கொள்ளப்படும். இங்கு உள்ளீட்டையும் வெளியீட்டையும் சமப்படுத்துவது என்பதே சமநிலைக் கோட்பாட்டின் பண்பாகும்.

ஊழியர்கள் சம்பந்தமாக பலவற்றை உள்ளீடுகளாக கொள்ள முடியும். அதாவது,

கல்வித்தரம்
அனுபவம்
திறமை
முயற்சி
புத்திக்கூர்மை

என்பன உள்ளீடுகளாகக் கருதப்படும்.இவை ஊழியரால் அளிக்கப்படுபவை ஆகும். மாறாக ஊழியர்களது வெளியீடுகளோ ஊழியருக்கு வழங்கப்படும் நலன்களின் அடிப்படையில் கொள்ளும்.

குறிப்பாக,

அடிப்படைச் சம்பளம்
படிகள்
உபகரணங்கள்
பிற நலன்கள்
மேல் அந்தஸ்து
திருப்திகரமான மேற்பார்வை
நல்ல வேலைச்சூழல்
வெகுமதிகளும் அங்கீகாரமும்

போன்றவை எல்லாம் வெளியீடுகளாக அமையும் இத்தகைய உள்ளீடு களையும் வெளியீடுகளையும் சமப்படுத்துவதன் ஊடாகவே ஊழியர்களைத் தூண்டலாம் என சமநிலைக் கோட்பாடு கூறுகின்றது. எனவே, ஊழியர்களைத் தூண்டுவதற்கு உள்ளீடுகளுக்குச் சமனாக வெளியீடுகள் வழங்கப்பட வேண்டு மெனக் கொள்ளலாம்.

### 4.5 டேவிட் மைக்கலண்டின் சாதனை படைக்கும் கோட்பாடு

(David Mcclelland's Achievement theory)

தூண்டுதல் சம்பந்தமான ஒரு செய்முறைக் கோட்பாடே இதுவாகும். David Mcclelland டேவிட் மைக்கல் என்போரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும் இருப்பும்

மூன்று உயர்மட்டத் தேவைகளை நிறைவு செய்வதன் ஊடாக ஊழியர்கள் உருவாக்கப்படுவதனால் என்றே கருத்தில் கொண்டிருந்தார். அவை முறையே,

- ✯ சாதனை புரிவதற்கான தேவை - need for achievement
- ✯ வலுவுக்கான தேவை - need for power
- ✯ அணைவதற்கான தேவை - need for affiliaon

என அமைந்திருக்கும் இந்த மூன்று தேவைகளையும் நிறைவு செய்து விடுவதனால் ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள் என்பது டேவிட் மைக்கலெண்டின் கருத்தாகும்.


சாதனை புரிவதற்கான தேவை மாஸ்லோ என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னலத்தேவை, கௌரவத்தேவை ஆகிய இரண்டையும் உள்ளடக்குவதாகும். உயர்ந்த சாதனைகள் புரியவேண்டும் என்பது இத்தேவையில் கொண்டிருக்கும் விருப்பமாகும். குறிப்பாக,

- ✯ உயர்ந்தளவிலான ஆபத்துக்களை எதிர் கொள்ளல்.
- ✯ பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறுப்புக்களை ஏற்றல்.
- ✯ செயற்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- ✯ சாதகமான இலக்குகள் கொண்டிருத்தல்.

போன்றவை சாதனை புரிவதற்கான தேவையாகக் கொள்ளப்படும். நிறுவனங்களில் இருக்கும் ஆர்வம் மிக்க கொள்கையாளர்கள் சாதனை புரிவதற்கான தேவைகளைக் கொண்டிருப்பர். இதனூடே புகழ்ச்சியும் பரிகாரங்களும் ஒருவருக்கு கிடைப்பதனைக் காணலாம்.

வலுவுக்கான தேவை என்பது ஒருவர் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இருக்கும் தேவையாகும். இதன்படி மாஸ்லோவின் தன்னலத் தேவையும் கௌரவத்தேவையும் இதனை அடக்கும் நிறுவனங்களிலே பணியாற்றும் ஒருவர் ஏனையோரைக் கட்டுப்படுத்த விரும்புதல், ஏனையோரை செல்வாக்குச் செலுத்த விரும்புதல் ஆகிய இரண்டையும் கொண்டிருப்பது வலுவுக்கான தேவை எனக் கொள்ளப்படும். இந்த வலுவினைக் கொண்டி ருப்பதனூடாக ஏனையோரின் நடவடிக்கைகளிலேயே அவர்கள் விரும்பிய மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

இணைந்து கொள்வதற்கான தேவை என்பது மாஸ்லோவினால் கூறப்பட்ட சமூகத் தேவையைக் குறிப்பாக வரும். இதில் சமூகத்தவர்களுடன் இணைந்துள்ளது. சமூகத்தின் மீது அன்பு செலுத்துவது, சமூகத்தவருடன் உறவாடுவது ஆகிய தேவைகள் மக்களுக்கு இருப்பது குறிப்பிடப்படும். இணைத் தேவையாயின் நிறைவு செய்வதும் ஊழியர்களைத் தூண்டும் காரணத்தால் சாதனை புரியும் தேவை. இதுவும் ஒரு அங்கமாகக் கொள்ளப்படுகின்றது. மக்களால் அறிமுகப்படுத்திய தூண்டுதல் கோட்பாடு கொண்டுள்ள உறவுகளைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




மேற்கூறிய வரைபடத்தின்படி மாஸ்லோவின் ஐந்து தேவைகளில் கோல்பேக்கின் இரண்டுவகையான தேவைகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன. அதே வேளை மாஸ்லோவின் ஐந்து வகையான தேவைகளில் மூன்று தேவைகள் மட்டுமே சாதனை புரிவதற்குப் போதும் என்ற வகையில் கொள்ளப்படுவதைக் காட்டப்பட்டுள்ளன. தன்னலத் தேவை, கௌவரத் தேவை, சமூகத் தேவை ஆகிய மூன்றுமே சாதனை புரிவதற்கு தேவை என மைக்கலால் கூறப்பட்டுள்ளது.

### 4.5 விக்ரர் வறூமின் எதிர்பார்க்கைக் கோட்பாடு
### (Victor Vroom's Expectancy theory)

Victor Vroom என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு செய்முறைக் கோட்பாடு இதுவாகும். மக்கள் எல்லோரும் நிலையானதொரு ஊக்குவித்தல் மட்டத்தில் உள்ளனர் என்றும் ஆதலால் அவர் தூண்டுவிக்க அவர்களது எதிர்பார்க்கைகள் பயன்படுத்த வேண்டும் என்றும் வறூம் நம்பினார். நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதனூடாக எவ்வாறு தமது நோக்கம் நிறைவேறும் என ஊழியர்கள் நம்புகின்றார்களோ அதுவே அவர்களைத் தூண்டுவதற்குப் போதுமான எதிர்பார்க்கை என வறூம் கருதினார். எனவே தான் ஊழியர்களுக்கான எதிர்பார்க்கை எந்தளவும் ஒரு நிறுவனம் அதிகரிக்குமோ அந்தளவிற்கு ஊழியர்கள் தூண்டுவிக்கப்படுவார்கள் என்பதே எதிர்பார்க்கைக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டிலே மூன்று தத்துவங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

**1. முயற்சி – செயற்றிறன் – எதிர்பார்க்கை**

**(Report - Performance - Expectation)**

எந்த முகாமையாளன் விரும்புகின்ற செயற்றிறன் அளவையும் தரத்தையும் எனது முயற்சி எந்தளவுக்கு பூர்த்தி செய்யும் என ஒரு ஊழியன் கருதத் தொடங்குகின்றாரோ அப்பொழுது எதிர்பார்க்கைக் கோட்பாடு தொடங்கும். ஒருவரது முயற்சி விரும்புகின்ற செயற்றிறனின் எதிர்பார்க்கையில் அடையும் என்பது இக்கோட்பாடாகும். இதுவே, ஊழியரைத் தூண்டுவிக்கும் முக்கிய காரணியாகக் கொள்ளப்படும். உதாரணமாக ஒரே விதமான தரங்கொண்ட இரண்டு பதவி உயர்வுகளில் எதனை ஒரு ஊழியர் தேர்ந்தெடுப்பார் என்பது அப்புதிய பதவிகளில் இதற்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என்ற எதிர்பார்க்கையைப் பொறுத்ததாகும். இதன்படி, முன்னேறக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்ற எதிர்பார்க்கை ஒரு ஊழியரைத் தூண்டும் என விக்ரர் வறூம் கூறுகின்றார்.

**2. செயற்றிறன் – வெகுமதி — எதிர்பார்க்கை**


**(Performance - Outcome - Expectation)**

ஊழியர் ஒருவர் முகாமையாளர் விரும்பியவாறு உயர்ந்த செயற்றிறன் கொண்டிருக்கும் போது அவருக்குக் கிடைக்கக்கூடிய வெகுமதி என்ன என்ற எதிர்பார்க்கை ஊழியரைத் தூண்டும் என்பது இரண்டாவது கோட்பாடாகும். கூடிய செயற்றிறனைக் கொண்டிருக்கும் பொழுது கூடிய வெகுமதி கிடைக்கும் என்ற எதிர்பார்க்கை இருந்தால் மட்டுமே ஊழியர் தூண்டுவிக்கப்படுவார்கள் என்பது வறூமின் கருத்தாகும். இதன்படி, ஊழியர்களுக்கான பலாபலன்கள் செயற்றிறன் அதிகரிப்பின் பொழுது உட்பட்டு வரும் என்ற நம்பிக்கையே ஊழியர்களுக்கான தூண்டுதல் கருவியாக அமைந்து விடும்.

**வெகுமதி – திருப்தி — எதிர்பார்க்கை**

**(Outcome - Satisfaction - Expectation)**

ஊழியர் ஒருவர் தனக்கு கிடைத்த வெகுமதியின் அதிகரிப்பானது தனக்கு இருக்கும் தேவைகள் எந்தளவிற்குத் திருப்திப்படுத்த உதவும் என்ற எதிர்பார்க்கையைக் கொண்டிருக்க அவர் தூண்டுவிக்கப்படுவதற்கு அடிப்படையில் அமைகின்றது. ஊழியர்கள் எதிர்பார்த்தவாறு வெகுமதிகள் கிடைக்குமாயின் அது அவர்களுக்கு இருக்கும் பல்வேறு தேவைகளைத் திருப்திப்படுத்த எந்தளவுக்கு உதவும் என்ற ஊழியர்களின் எதிர்பார்க்கை அவர்களைத் தூண்டும் காரணியாக அமைகின்றது. எப்பொழுதுமே தேவைகள் திருப்திப்படுத்தப்படுவது என்பதே ஊழியர்களைத் தூண்டுகின்ற பிரதான எதிர்பார்க்கை என வறூம் கருதுகின்றார். எனவேதான் மொத்தத்தில் முயற்சி அதிகரிக்கும் போது செயற்றிறனைக் கூட்டும் என்றும் செயற்றிறன் உயர்வடையாத வெகுமதியை உயர்த்தும் என்பதும், வெகுமதிகள் உயர்வடைவது ஊழியர் திருப்திகளைப் பெற்றுத்தரும் என்றும் ஊழியர்கள் கொண்டிருக்கும் எதிர்பார்க்கை இறுதியில் அவர்களைத் தூண்டுவிக்க முக்கிய காரணியாக அமைந்து விடும் என்பதே வறூமின் கருத்தாகும். இதனைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




### 5.0 முடிவுரை

ஊழியர்களை ஊக்கப்படுத்துவது என்பது இக்காலத்தில் பிரதான நெறிப்படுத்தும் காரணியாக மாறிவிட்டது. தலைமைத்துவம், தொடர்பாடல் என்கின்ற ஏனைய நெறிப்படுத்தல் கருமத்தைப் போல் ஊக்கப்படுத்தலும் பின்பற்றப்பட்டாலே ஊழியர்களிடமிருந்து ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் கூடிய சேவையும் கிடைக்கும். இதுவே இறுதியில் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு வகை செய்வதுடன் நிறுவனங்களின் இலாப உழைப்பையும் உச்சப்படுத்தும். ஊழியர்கள் தொழிற்திருப்தியைப் பெற்றுக் கொள்ளவும் தன்னிச்சையான ஒத்துழைப்பை வழங்கவும் ஊக்கப்படுத்தலே வகைசெய்யும் என்பதனாலே ஊழியர்களை ஊக்கப்படுத்தல் என்பது நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் நிலைத்திருப்பதற்கும் வகை செய்யும் எனக் கூறமுடியும்.

### உசாத்துணை நூல்கள்

1. Decenzo David A, 1998 "Human Resource Management", New York: World publishing.
2. Maslow A, 1954 "Motivation and Personality" New York: Harper & Row
3. Herzberg F, 1956 "Work and the Nature of Man" New York: World publishing.
4. McGregor D, 1960 "The Human Side of Enterprise" New York: McGraw Hill.
5. Mcclelland D.C, 1961 "The Achieving Society" New York: Van Nostrand Reinhold.

♣ ♣ ♣

# தொழில் நிறுவனங்கள் மீது சூழலின் செல்வாக்குகள்

# THE INFLUENCES OF THE ENVIRONMENT ON BUSINESS ORGANISATIONS

**திரு. இரத்தினம் விஜயகுமாரன்**
*BBA(Hons), MBA, MA(Econ), MAAT.*
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*யாழ் பல்கலைக்கழகம்)*

**திருமதி. சுனித்தா விஜயகுமாரன்**
*BCOM(Hons), MA(Econ), ESBM*
*விரிவுரையாளர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

## அறிமுகம் (Introduction)

இந்த உலகில் உள்ள ஒவ்வொரு நிறுவனமும் ஏதோ ஒரு குறிக்கோளினை (mission) அடைவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. இக்குறிக்கோளிற்கு ஏற்ப நிறுவனங்கள் இலக்குகள் (Goals) நோக்கங்கள் (Objectives) என்பவற்றை நிர்ணயித்து அவற்றினை அடையத்தக்க வகையில் தந்திரோ பாயங்களை உரு வாக்குகின்றன. தந்திரோபாயம் என்பது நிறுவனம் இலக்குகளை அடைவதற்காக சூழலுடன் இடைத் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டமாகும். இதன்படி இலக்குகள் என்பவை நிறுவனம் எங்கு போக விரும்புகின்றது என்பதனையும் தந்திரோபாயம் என்பது எவ்வாறு நிறுவனம் அங்கு அடையும் என்பதனையும் வரை யறுப்பதாக அமைகின்றன. ('A Strategy is a plan for interacting with the environment to achieve organisation goals ....... 'Goals define where the organisation wants to go, and strategy define how the organisation will get there) நிறுவனம் ஒன்று தந்திரோபாயம் ஒன்றினைக் கொண்டிருப்பதன் அவசியம் யாதெனில் நிறுவனத்தினை சூழலுடன் தொடர்புபடுத்துவதே ஆகும்.

நிறுவனங்கள் இலக்குகள், நோக்கங்களை நிர்ணயித்த பின்னர் தந்திரோபாயங்களை வகுக்கும் பொருட்டு உள்ளக ஆய்வினை அல்லது நிறுவன ஆய்வினை மேற்கொண்டு பலங்கள் பலவீனங்களை அடையாளம் காண்பதுடன் சூழல் ஆய்வினை மேற்கொண்டு சந்தர்ப்பங்களையும், அச்சு றுத்தல்களையும் அடையாளம் கண்டு ஒப்பீடு செய்து மதிப்பீடு செய்தல் வேண்டும். இதனையே SWOT ஆய்வு அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஆய்வு (Corporate Appraisal) எனப்படும்.

SWOT ஆய்வின் பகுதியான சந்தர்ப்பங்களையும் அச்சுறுத்தல்களையும் வழங்கும் சூழல் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்று திட்டமிடலாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் சூழலின் தொடர்ச்சியற்ற தன்மையாகும். இதனடிப்படையில் மாற்றங்கள் எடுத்துக்காட்டும் முக்கியமான அம்சம் எதுவெனில் கடந்த காலம் என்பது எதிர்காலத்திற்கான வழிகாட்டியல்ல என்பதாகும். இச் சூழலின் நிச்சயமற்ற தன்மையின் அதிகரிப்பானது கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஏற்படத் தொடங்கியதாகும்.

இந்த வகையில் இக்கட்டுரையானது தந்திரோபாய முகாமைத்துவத்தில் முக்கியம்பெறுகின்ற சூழல் ஆய்வு என்றால் என்ன, அதன் முக்கியத்துவம் யாது, சூழல் ஆய்வில் எத்தகைய விடயங்கள் ஆய்வு செய்யப்படல் வேண்டும், நிறுவனங்களின் தந்திரோபாயம் மீது சூழல் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்பன பற்றி விபரிப்பதாக அமைகின்றது.

## சூழல் ஆய்வு (Environmental Analysis)

நிறுவனங்கள் சூழலில் இயங்குகின்றன. இச்சூழல் நிறுவனத்தின் செயற்பாடுகள் அதன் தொடர்ந்திருக்கும் தன்மை, வளர்ச்சி, அபிவிருத்தி போன்றவற்றின் மீது பலமான செல்வாக்கினைச் செலுத்துகின்றது. வெளிச்சூழல் தொழிலினதும் (Industry), தனிப்பட்ட நிறுவனத்தினதும் முடிவுப்பாதையை (Destiny) வடிவமைப்பதில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. தந்திரோபாய முகாமைத்துவத்தின் அடிப்படையான கருத்து யாதெனில் முகாமையாளர்கள் நிறுவனம் இயங்குகின்ற சூழலினை பிரதிபலிக்கும் வகையில் தமது தந்திரோபாயத்தை எப்பொழுதும் சீராக்குதல் அல்லது பொருத்தமுடையதாக வைத்திருத்தல் வேண்டும் என்பதாகும். அதாவது ஒரு நிறுவனத்தின் வியாபார செயற்றிறனானது அது எந்தளவுக்கு அதனது சூழலுக்கும் தந்திரோபாயத்துக்கும் இடையில் பொருத் தமான இணைவைக் கொண்டுள்ளது என்பதில் தங்கியுள்ளது.

உருவாக்கப்படுகின்ற திட்டங்கள் உண்மைத் தன்மை உடையதாகவும், அடையக்கூடியதாகவும் இருப்பதனை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு தந்திரோபாயத் திட்டமிடலாளர்கள் சூழலின் செல்வாக்குகளையும் அவை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கும் என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஆனால் சூழல் தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் ஒவ்வொரு நிறுவனமும் எதிர்நோக்கும் சூழலானது மற்றைய நிறுவனங்கள் எதிர்நோக்கும் சூழலிலிருந்து வேறுபட்டதாகவும் தனித்துவத் தன்மை உடையதாகவும் காணப்படுகின்றது. தவிர சூழலின் அனேகமான காரணிகள் நிறுவனத்தின் அல்லது முகாமையாளரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகவும் உள்ளன. சூழல் தொடர்பான தகவல்களும் அநேகமாக நிச்சயமற்றவையாகவும், முழுமைத் தன்மையற்றவையாகவும், தெளிவற்றவையாகவும் காணப்படுகின்றன. இதன் விளைவாக சூழலின் மாற்றங்களை எதிர்வு கூறுவது என்பது இலகுவானதாக அமைவதில்லை. இதுவே இன்றைய முகாமையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய சவாலாகவுள்ளது.

நிறுவனங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் சூழல் சக்திகள் பொதுவான சூழல், போட்டிச் சூழல் எனும் இரு பெரும் பிரிவுக்குள் பிரித்து நோக்கப்படலாம்.

## பொதுவான சூழல் (The General Environment)

பொதுவான சூழல் நிறுவனத்தின் போட்டிச் சூழலிற்கு வெளியே காணப்படுகின்ற நிறுவனத்தின் தந்திரோபாயம் மீது முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. பொதுச் சூழலினை பின்வரும்

ஆறு பரிமாணங்களின் அடிப்படையில் நோக்கப்படலாம்.

i) பேரினப் பொருளியல் சூழல்
ii) குடித்தொகைச் சூழல்
iii) அரசியல் சட்டச் சூழல்
iv) சமூகக் கலாச்சாரச் சூழல்
v) தொழில்நுட்பச் சூழல்
vi) சர்வதேச சூழல்

இக்காரணிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாக அமைகின்றன. ஒருபகுதியில் ஏற்படும் விருத்திகள் மற்றைய பகுதியினைப் பாதிப்பதாக அமையலாம். பொதுவான சூழலின் பிர தான காரணிகள் தொடர்பான ஒழுங்கு முறையான ஆய்வு பல்வேறுபட்ட தொழில் துண்டங்களில் காணப்படக்கூடிய பிரதான போக்குகளை அடையாளம் காண உதவு கிறது. சூழலின் போக்குகள் பல்தரப்பட்ட தொழில்களின் மீது வேறுபட்ட வழியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே முகாமையாளர்கள் சூழலின் போக்கு களை ஆராய்வதன் மூலம் அடையாளம் காணப்பட்ட சாத்தியமான சந்தர்ப்பங் களை போட்டியாளர்களுக்கு நழுவ விடாது அவற்றிலிருந்து நன்மை களைப் பெறவும், அச்சுறுத்தல்களை முறியடிப்ப தற்குமான தந்திரோபாயங்களை விருத்தி செய்து கொள்ள முடியும்.

உதாரணமாக அமெரிக்காவில் (USA) வயது கூடிய சனத்தொகை உயர்வாகவும், இள வயதினர் குறைவடைந்து செல்லும் போக்கு பல்கலைக்கழக அனுமதி அளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்தப் போக் கினை அவதானித்த பல்கலைக் கழகங்கள் மரபுரீதியற்ற மாணவர்களும் (non traditional students)அதாவது வயது கூடிய வர்களும் கற்கக் கூடியவாறான புதிய கற்கைநெறிகளை அறிமுகம் செய்தன. இதன் விளைவாக அனுமதிக்கப்படும் அளவு (Entrollments) அதிகரித்தது. இங்கு பல்கலைக்கழக நிர்வாகிகள் பொதுச் சூழலில் சனத் தொகையின் போக்கினை அவதானித்து பொருத்த மான தந்திரோ பாயத்தைப் பின்பற்றி யுள்ளார்கள்.

### I) பேரினப்பொருளியல் சூழல் ( The Macro Economic Environment )

பொருளாதார நிலை எல்லா நிறு வனங்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்து கின்றது. பேரினப் பொருளாதார சூழல் காரணிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பொருளாதார நிலையினை மாற்றி யமைப்பதனூடாக நிறுவனங்களின் வருமானம் உழைக்கும் ஆற்றல் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. பொது வாக பொருளாதாரத்தின் நிலை அல்லது பொருளாதாரத்தின் எதிர்வுகூறப்பட்ட நிலை நிறுவனங்களின் திட்டமிடல் செய் முறை மீது செல்வாக்குச் செலுத்துவதாக அமை கின்றது. பொருளாதார எழுச்சி (In times of boom) காலத்தில் அதிகரித்த கேள்வி, நுகர்வினை அடிப் படையாகக் கொண்டு நிறுவனத்தின் உற்பத்திப் பொருளுக்கான கேள்வி யினை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்வது, திட்டமிடல் பிரச்சினையாக அமையலாம். மாறாக பொருளாதார மந்த காலத்தில் (In times of recession) செலவுக்குறைப்பு நடவடிக்கைகள், இலா பத்தன்மையை பேணல், தொடர்ந்தும் நிலைத்திருத்தல், போட்டியை எதிர் கொள்ளல் போன்றவற்றின் மீது திட்ட மிடலின் கவனம் செலுத்தப் படுகின்றது. தந்திரோபாய திட்டமிடலாளர்கள் பின் வரும் தேசிய பொருளாதார போக்குகள் மீது கூடிய கவனம் செலுத்துகின்றனர்.

i) பொருளாதார வளர்ச்சி வீதம்
ii) பணவீக்க வீதம்
iii) வட்டி வீதங்களும், கடன்களின் கிடைப்பனவும்
iv) நாணயமாற்றுவீதங்கள்
v) வேலையின்மை, பொருத்தமான திறன்களுடன் கூடிய மனிதவளத்தின் கிடைப்பனவுத் தன்மை.
vi) வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை / மிகை சென்மதி நிலுவை குறை / மிகை

பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது நுகர்வோரின் செலவு ஆற்றலை அதிகரிப்பதனால் இது ஒரு தொழிலில் உள்ள போட்டியாளர்களுக்கிடையேயான போட்டியில் உள்ள அழுத்தத்தை குறைவடையச் செய்யலாம். மேலும் வீட்டுப்பாவனைக்குரிய கணனிகள், வீட்டு வேலைகளை இலகுபடுத்தும் இயந்திரங்கள் போன்ற நுகர்வுப்பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பதுடன், பொழுது போக்கு வசதிகளை வழங்கும் சேவைகளுக்கான கேள்வியும் அதிகரிக்கலாம். இவை கம்பனிகள் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

மாறாக பொருளாதார வீழ்ச்சி நுகர்வோரின் செலவு ஆற்றலை குறைப்பதனால் இது போட்டித்தன்மை மீதான அழுத்தத்தை அதிகரிப்பதுடன், முதிர்ச்சி நிலையில் உள்ள தொழில்களில் விலைப் போரிற்கும் வழிவகுக்கின்றது. இதனால் நிறுவனங்கள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

பணவீக்கம் மெதுவான பொருளாதார வளர்ச்சி, உயர்ந்த வட்டி வீதங்கள், நிலையற்ற நாணயமாற்றுவீத அசைவுகள் போன்றவற்றினை ஏற்படுத்துவதனூடாக பொருளாதாரத்திதனை உறுதியற்றதாக மாற்றியமைக்கலாம். மேலும் வியாபார நம்பிக்கையை குறைவடையச் செய் வதுடன், ஊழியர்களின் அதிகரித்த சம்பளம்/கூலி கோரிக்கைக்கும் வழி வகுத்து விடலாம். பணவீக்கம் முதலீட்டுத் திட்டங்களை ஆபத்துக்குள்ளாக்குவதாக அமையலாம். பணவீக்கத்தின் முக்கியமான இயல்பாக இது எதிர்காலத்தைக் குறைந்தளவு எதிர்வு கூறக்கூடிய நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. பணவீக்கச் சூழலில் நீண்டகால முதலீட்டுத் திட்டங்களில் இருந்தான வருமானத்தின் உண்மையான பெறுமதியை சரியாக எதிர்வுகூறுவது சாத்தியமற்றதாக அமையலாம். இத்தகைய நிச்சயமற்ற நிலை கம்பனிகளின் முதலிடும் விருப்பத்தைப் பாதிக்கின்றது. பண வீக்கத்தின் விளைவாகப் பொருளாதார செயற்பாடுகளில் ஏற்படும் மந்தநிலை இறுதியாகப் பொருளாதாரத்தினை மிகவும் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. ஆகவே உயர்ந்த பணவீக்கம் கம்பனிக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது.

நாணயமாற்றுவீதத்தில் ஏற்படும் அசைவுகள் உலக சந்தையில் ஒரு கம்பனியினுடைய உற்பத்திப் பொருளின் போட்டித்தன்மை மீது நேரடியாக தாக்கத்தைக் கொண்டுள்ளன. உதாரணமாக இலங்கை ரூபாவினுடைய பெறுமதி ஏனைய நாட்டு நாணயங்களுடன் ஒப்பிடும் போது குறைவாக இருக்குமாயின் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைந்ததாக அமையும். அதே வேளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி

செய்யப்பட்ட பொருட்கள் ஒப்பீட்டு ரீதியில் செலவு கூடியதாக காணப்படும். ஆகவே ரூபாவில் ஏற்படும் குறைவு/ வீழ்ச்சி வெளிநாட்டு போட்டி யாளர்களிட மிருந்தான அச்சுறுத்தலை குறைவடையச் செய்கின்ற அதேவேளை இலங்கையின் உற்பத்திப் பொருள் ஒப்பீட்டு ரீதியில் உலக சந்தையில் மலிவானதாக அமைவத னால் விற்பனை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்குகின்றது.

மேலும் அரசாங்கம் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு அதிகளவு கடன்களைப் பெறும் போது அது நிறுவனங்கள் முதலீடு களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதிக் கிடைப்பனவினைப் பாதிக்கலாம்.

இவ்வாறு பேரினப் பொருளியல் மாறிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிறுவனங்களுக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைவதனூ டாக அவற்றின் தந்தி ரோபாயங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன.

**(2) குடித்தொகையியல் சூழல்**
**(Demographic Environment)**

குடித்தொகையின் கூறுகள் அல்லது அம்சங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களும் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பங்களை அல்லது அச்சுறுத்தல்களை உருவாக்கு கின்றன. குடித்தொகை என்பது பிறப்பு இறப்பு வீதங்கள், பால் மற்றும் வயது அடிப்படையிலான சனத்தொகையின் கட்டமைப்பு, புவியியல் ரீதியான பரம்பல், அடர்த்தி, சமூகங்களுக்கிடை யேயான இனக்குழுக்கள், வருமான மட்டங்கள் போன்ற புள்ளி விபரங்களின் பகுப் பாய்வினைக் குறிக்கின்றது. நிறு வனத்தின் உற்பத்திப் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையின் அளவு, வகை, அமைவிடம் போன்றவற்றைத் தீர்மானிப்பதில் குடித்தொகை தொடர் பான அறிவியலை (Science of demography) பயன்படுத்துவதில் தந்திரோபாயத் திட்ட மிடலாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாகவுள்ளனர். பின்வரும் காரணங்களினால் குடித்தொகை முக்கிய மானதாக அமைகின்றது.

i) ஊழியம் ஒரு உற்பத்திக் காரணி யாக உள்ளது.
ii) மக்களே பொருட்கள், சேவைகள் மற்றும் வளங்களுக்கான கேள்வியை ஏற்படுத்துபவர்களாகவுள்ளனர்.
iii) குடித்தொகை அரசாங்கத்தின் கொள் கைகளின் மீது நீண்டகாலத் தாக்கத் தைக் கொண்டுள்ளது. (உ.ம் :- அதிகரித்த வேலைப்படைக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்.)
iv) குடித்தொகையின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படு கின்றது.

குடித்தொகையில் ஏற்படுகின்ற மாற் றங்கள் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வியில் மாற்றத்தை ஏற்படுத்து வதுடன் ஊழியத்தின் நிரம்பலிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதனால் திட்டமிட லாளர்களின் கூடிய கவனத்திற்குட்படும் சூழற்கூறாக இது அமைகின்றது.

யாழ் குடாநாட்டின் சனத்தொகைப் போக்கினை நோக்குகின்ற பொழுது வெளிநாடுகளுக்கு அல்லது கொழும்பு நகரை நோக்கி குடிபெயர்வதனாலும், யுத்தத்தின் விளைவாக இளைஞர்கள் இறப்பதனாலும் இளைஞர்களிலும் பார்க்க

இளம் பெண்களின் அளவு உயர்வாக உள்ளது. மேலும் கல்வியறிவு வீதம் குறிப்பாக பெண்களின் கல்வியறிவு வீதம் அதிகரித்துள்ளது. பிறப்பு வீதம் குறைவு, குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவு, திருமண வயது பிற்போடல் போன்றவற்றினை அவதானிக்கக்கூடிய தாக உள்ளது. இக்குடித்தொகைப் போக்கின் விளைவுகளை நோக்குவோமாயின் –

i) தோட்டங்களில் வேலை செய்வதற்கு இளைஞர்களுக்குப் பதிலாக விதைப்பு அறுவடை வேலைகளில் இயந்திரங் களின் பாவனை அதிகரித்து உள்ளது. இத்தகைய இயந்திரங்களை வாட கைக்கு வழங்கும் தொழிலை மேற் கொள்பவர்களுக்கு இது வாய்ப்பாக அதாவது சந்தைப் படுத்தலை இலகு படுத்துவதாக அமைந்துள்ளது.

ii) இளம் பெண்கள் அதிகளவு வேலைப் படையில் காணப்படுவதனால் அவர் களை நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்த வேண்டியிருப்பதுடன், அவர் களுக்கு ஏற்ற வேலைநிலைமை களையும் உருவாக்க வேண்டி உள்ளது.

iii) குடும்ப பெண்கள் வேலை செய்வத னால் குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையங்களுக்கான (Creches) கேள்வி அதிகரிக்கலாம். அதாவது பாலர் கல்விக்கு மேலதிகமாக நவீன வசதிகளுடன் கூடிய பராமரிப்பு சேவையை வழங்குவதற்கான கேள்வி ஏற்படும் போது இது ஒரு புதிய தொழி லுக்கான சந்தர்ப்பமாக அமையும்.

iv) தயாரிக்கப்பட்ட உணவு வகைகளுக் கான கேள்வி அதிகரிக்கலாம். இத்தகைய உணவு வகைகளை வழங்குபவர்களுக்கு தொழிலை விரிவாக்குவதற்கான சந்தர்ப்பமாக அமையலாம்.

இதே போன்று உலகலாவிய ரீதியில் பார்க்கும் போது வளர்ச்சியடைந்த நாடு களில் பிறப்பு வீதம் குறைவு காரணமாக குழந்தைகளுக்கான விளையாட்டு பொம் மைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங் களுக்குப் பாதகமாக அமைந்துள்ளது. ஆனால் குறைந்த குடும்ப எண்ணிக்கை காரணமாக புதிய சிறிய ரக கார்களுக் கான கேள்வி அதிகரித்துள்ளது. இது அவர்களுக்கு வாய்ப்பாக உள்ளது.

திருமண வயது எல்லைகளில் ஏற்படும் மாற்றம் நிறுவனங்களின் சந்தைப் படுத்தலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. USAயில் திருமண வயது பிந்திக் காணப்படுவதால் மோதிரத்தை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டை கடின மாக்கியுள்ளது. விவாகரத்துக்களின் அளவும் சில நிறுவனங்களின் சந்தைப் படுத்தல் தொழிற்பாட்டிற்கு சாதகமாகவோ அல்லது தடையாகவோ அமையலாம். உதாரணமாக உலகத்தில் விவாகரத்து வீதம் கூடிய நாடு USA (50%) இதன் விளைவாக தளபாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும், வீடுகளை கட்டிக்கொடுக்கும் ஒப்பந்தக் காரருக்கும் சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டுக்கு சாதகமாக அமைந்துள்ளது. அத்துடன் குளிரூட்டப்பட்ட உணவு விற்பனை, Baby sister, வீட்டுப் பணிப்பெண்களுக்கான வேலைவாய்ப்பு என்பன அதிகரித்துள்ளது. நவீன மருத்துவ வசதி, சுகாதார வசதி, இறப்பு வீதத்தைக் குறைவடையச் செய் துள்ளது. இதனால் மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. இம்மாற்றம் முதியவர்களுக்கான பொழுதுபோக்கு, வசதிகள் வழங்கும் நிறுவனங்கள், ஹோட்டல்கள், போக்குவரத்து வசதிகள்

வழங்கும் நிறுவனங்களுக்கு சந்தைப் படுத்தல் தொழிற்பாட்டிற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

### (3) அரசியல் சட்டச் சூழல் (Political and Legal Environment)

அரசியல் சட்டக்காரணிகளும் சூழலில் உள்ள சந்தர்ப்பங்கள் அச்சுறுத்தல்களின் அளவின் மீது பிரதான தாக்கத்தைக் கொண்டுள்ளன. எந்த ஒரு நிறுவனத் திற்கும் அரசியல் சட்டக்காரணியின் செல்வாக்கு தவிர்க்க முடியாததாகும். பின்வரும் முக்கிய காரணங்களினால் அரச தலையீடு அவசியமாகின்றது.

i) நிறுவனங்களை ஒன்றிலிருந்து ஒன்றைப் பாதுகாப்பதற்கு உ.ம் : நேர்மையற்ற போட்டியைத் தவிர்த்தல்.
ii) நுகர்வோரை வியாபார நிறுவனங் களிலிருந்து பாதுகாப்பதற்கு.
iii) சமூகத்தின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு.

அரசு பல்வேறு முறைகளில் காலத் துக்கு காலம் சட்டங்களை இயற்றுவதன் மூலம் அல்லது சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்வதன் மூலம் நிறுவனத்தின் உற்பத்தி சந்தைப்படுத்தல் நடவடிக்கை களைக் கட்டுப்படுத்துகின்றது. பொது வாக சட்டக் கட்டுப்பாடுகள் ஒரு நிறு வனத்தைப் பின்வரும் வழிகளில் பாதிக் கின்றன.

i) அடிப்படை ஒப்பந்தச் சட்டங்கள் (Basic Contract Laws) :
நிறுவனங்கள் உள்நாட்டிலோ அல்லது சர்வதேச ரீதியிலோ வியாபார உடன் படிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒப்பந்தச் சட்டத்திற்கு அமைவா கவே மேற்கொள்ள வேண்டும்.

ii) பொறுப்புத் தொடர்பான சட்டங்கள் (Law of Liability) :
USAயில் புகைப்பிடிப்பவர்கள் tobacco கம்பனிகளை நீதிமன்றத் திற்கு எடுத்துச்செல்ல முடியும்.

iii) அடிப்படைக் குற்றவியல் சட்டம் (Basic Criminal Law) : உம்:- 1890ம் ஆண்டு மோசடி தவிப்புக் கட்டளைச் சட்டம்

iv) நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் : விலைக்கட்டுப்பாடு, தரக்கட்டுப்பாட்டுச் சட்டம், தனியுரிமை நிலையை தடை செய்தல், கலப்படம், போலி முத்திரைக் கெதிரான சட்டங்கள், விளம்பரம் தொடர்பான சட்டங்கள். உ.ம்: இந்தியாவில் உணவுப் பொருட் களுக்கு நிறங்களைப்பாவித்தல், செயற்கை வாசனையூட்டல், வியா பார சின்னங்களைப் பாவித்தல் போன்றவற்றிற்கு அரசின் அனுமதி தேவை. நோர்வேயில் விற்பனை மேம் படுத்தலுக்கு தடை செய்யப்பட் டுள்ளது.

v) ஊழியர்கள், அவர்களுடைய உரி மைகள் தொடர்பான சட்டங்கள், விதிமுறைகள்: சம்பளம், கூலி கட்டுப்பாட்டு சட்டம், தொழிலில் சமவாய்ப்பு, வேலையிலான பாது காப்பும் சுகாதாரமும், EPF, ETF தொடர்பான சட்டங்கள்.

vi) தொழில் செய்முறை மற்றும் சூழல் மாசடைதல் தொடர்பான ஒழுங்கு முறைகள் சட்டங்கள்:
உ.ம் : பொறிகள் அமைக்கப்பட வேண்டிய இடம், உற்பத்திச் சாலை யிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் தொடர்பான சட்டங்கள், விதிமுறைகள்.

vii) தொழில் நிறுவனம் உரிமையாளர்களுடன் எவ்வாறு தொடர்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது தொடர்பான சட்டங்கள்:
உ.ம்: கம்பனிச் சட்டங்கள், பங்குடமை தொடர்பான சட்டங்கள்.

அரசினால் இயற்றப்படும் சட்டங்களைத் தவிர மனித உரிமை இயக்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் போன்றனகூட நிறுவனங்களின் செயற்பாடுக்ள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன.

பின்வரும் வழிகளில் அரசாங்கம் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்கு வதாக அமையலாம்.

i) நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளுக்கான பெரியளவு கொள்வனவாளராக அரசாங்கம் இருத்தல்.
ii) நிறுவனங்களுக்கும், தொழிலுக்கும் மானியங்கள், வரி விடுதொகைகளை வழங்கி ஊக்குவித்தல். உ.ம்: தேய்மான விடுதொகைகள், முதலீட்டு வரிவிலக்குகள், வருமான வரி விலக்கு.
iii) நியாயமற்ற வெளிநாட்டுப்பொருட்களின் போட்டியிலிருந்து உள்நாட்டு உற்பத்தி யாளர்களைப் பாதுகாத்தல்.
iv) சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் வகையிலும் புதிய தொழில் கிளை ஆரம்பிக்கும் வகையிலும் ஏற்படுத்தப்படும் அரசின் கொள்கை மாற்றங்கள். உ.ம்: ஏற்றுமதி மேம்படுத்தல், சிறு நடுத்தரத் தொழில் மேம்படுத்தல் கொள்கைகள்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் அரசு நிறுவனங்களுக்கு அச்சுறுத்தலாகவும் அமையலாம்.

i) நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கும் முழுத்தொழிலையும் பாதிக்கக்கூடிய வாறான, அவற்றின் தந்திரோபாயத் தெரிவுகளில் தாக்கத்தைக் கொண்டி ருக்கக்கூடிய அரசின் சட்டவாக்கங்கள். உ.ம்: ஒரு தொழிலினுள் புதிய நிறுவனங்கள் உள்நுழைவதற்கான சட்டக்கட்டுப்பாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல். இதனால் போட்டி தீவிரமடையும்.
ii) பொருளாதார நிலைமைகள், வரி தொடர்பான அம்சங்கள் என்பவற்றின் மூலம் தனிப்பட்ட தொழில்களில் அச்சுறுத்தல்களை உருவாக்கக்கூடிய அரசின் கொள்கை மாற்றம். உ.ம்: இறக்குமதி கட்டுப்பாடுகளை குறைத்தல் அல்லது நீக்குதல், வரிக் குறைப்புக்கள்.

### (4) சமூகக் கலாச்சாரச் சூழல் (Social and Cultural Environment)

சமூக கலாச்சாரச் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் நிறுவனத்தின் உற்பத்தி சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளைப் பாதிக்கலாம். அதாவது சமூகக் கலாச்சார மாற்றங்கள் ஒரு நிறுவனத்திற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம். மக்கள் பிறந்து வளர்கின்ற சமூகமானது அவர்களது அடிப்படையான நம்பிக்கைகள் விழுமியங்கள் மற்றும் வழக்கங்கள் (Customs) என்பவற்றை வடிவமைப்பதாகக் காணப்படுகிறது. பொதுவாக கலாச்சாரம் எனும் போது நிறுவனம் இயங்குகின்ற சூழலில் உள்ள மக்களின் (வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள்) நம்பிக்கைகள், விழுமியங்கள், மனப்பாங்குகள், அறிவு, வழமைகள் போன்றவற்றினைக் குறிக்கின்றது. இவற்றில் ஏற்படும் மாற்

றமே சமூகக் கலாச்சார மாற்றம் எனப்படு கின்றது. அறிவியல், தொழில்நுட்பம், தொடர்பாடல் முன்னேற்றங்கள் போன்ற வற்றால் கலாச்சாரம் தொடர்ச்சியாக மாற்றத்திற்குள்ளாகி வருகின்றது. சூழ லுடன் பொருத்தப்பாட்டினைப் பேணு வதில் நிறுவனங்கள் சமூக கலாச்சார மாற்றத்திற்கு ஏற்ப தம்மை சீராக்கிக் கொள்ளுதல் அல்லது இயைபினை ஏற்படுத்துதல் முக்கிய மானதாகும். சமூக கலாச்சாரம் பற்றிய அறிவு நிறுவனங் களுக்கு பல்வேறு வழிகளில் பெறுமதி யுடையதாகவுள்ளது. சந்தைப்படுத்துப வர்கள் பொருட்களின் வடிவமைப்பு, பொறியிடல், விளம்பர முறைகளைத் தெரிவு செய்யும் போது குறிப்பாக ஏற்றுமதிச் சந்தைகளில் கலாச்சாரம் முக்கியமானதாகவுள்ளது. மனித வள முகாமையாளர்கள் ஆட்சேர்ப்பின் போது வேறுபட்ட கலாச்சாரப் பண்புகளுடன் வருபவர்களிடமிருந்து பொருத்தமான வர்களை மதிப்பீடு செய்ய வேண்டியவர் களாகவுள்ளனர்.

ஒரு சமூகத்தில் உள்ள கலாச்சாரம் சமூக வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் உபகலாச்சாரமாகப் பிரித்து நோக்கப் படலாம். சமூக வகுப்புக்கள், இனப் பின்னனி, சமயம், புவியியல் பிரதசம், வயது, பால், வேலை போன்ற வற்றின் அடிப்படையில் உப கலாச்சார மாகப் பிரித்து நோக்க முடியும். இத்தகைய உப கலாச்சாரங்களில் ஏற்படும் மாற்றங் களை சரியாக அடையாளம் கண்டுகொள் வதன் மூலம் சரியான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்ள முடியும். உதாரணமாக 1970களிலும் 1980களிலும் சமூகத்தின் முக்கியமான போக்குகளில் ஒன்றாக உடல்நலம் பற்றிய அதிகரித்துவரும் அக்கறை அடையாளம் காணப்பட்டது. இதனைப் பயன்படுத்தி Pepsico கம்பனி சமிபாட் டிற்கு உதவக்கூடியதும் (Diet colas) மற்றும் பழங்களை அடிப்படையாகக் கொண்ட துமான மென்குடி பானங்களை (Soft drinks) அறிமுகம் செய்ததனூடாக அதன் பிரதான போட்டியாளரான Coca-cola கம்பனியிடமிருந்து சந்தைப் பங்கினைப் பெறக்கூடியதாகவிருந்தது. இது Pepsico கம்பனிக்கு சந்தைப் படுத்தலுக்கு வாய்ப்பாக அமைந்தது. மாறாக பல தொழில்களுக்கு அதிகரித்த உடல் நலம் பற்றிய போக்கு அச்சுறுத்த லாக அமைகின்றது. உதாரணமாக புகைத் தலினால் ஏற்படும் பாதகமான விளைவு பற்றிய அதிகரித்துவரும் அறிவு Tobacco தொழிலுக்கு வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

சைவசமய மக்கள் வாழும் பகுதிகளில் சமய பண்டிகைக் காலங்களில் இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை சந்தைப் படுத்துவது கடினமாகின்றது. இதற்கு ஏற்ப மாற்றுவழிகள் பின்பற்றப்படல் வேண்டும்.

**தொழில்நுட்பச்சூழல்** (Technological Environment)

மக்களுடைய வாழ்க்கையை சீர மைக்கும் அல்லது வடிவமைக்கும் ஒரு முக்கிய காரணியாக தொழில்நுட்பத் தைக் குறிப்பிடலாம். தொழில்நுட்பம் என்பது மூன்று விடயங்களில் நோக்கப் படுகின்றது.

(i) உபகரணங்கள் (Apparatus or Equipment) உ.ம் T.V கமரா
(ii) நுட்பம் (Technique) உ.ம்: lights போன்ற மற்றய உபகரணங்களுடன்

இணைத்து எவ்வாறு T.V கமராவில் இருந்து சிறந்த பயன்பாட்டைப் பெறலாம்.

(iii) ஒழுங்கமைப்பு (Organisation) உ.ம்: குறிப்பிட்ட ஒரு செயற்றிட்டத்தில் (திரைப்படம்) பல கமரா இயக்குபவர்களை எவ்வாறு ஒருங்கிணைத்து வேலை செய்வது.

இவ் ஒவ்வொரு அம்சங்களிலும் தொழில் நுட்பத்தின் தந்திரோபாய முக்கியத் துவம் தொடர்புபடுகின்றது.

பொதுவான நோக்கில் தொழில் நுட்பம் பொருளியல் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்றது. ஒரு பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தியை உற்பத்தி சாத்திய வளையி விபரிக்கின்றது. தொழில்நுட்பம் பின்வருவனவற்றிற்கு வகைசெய்வதனூடாக இவ்வளையியை நகர்வடையச் செய்கின்றது.

(i) உற்பத்தி திறன் அதிகரிப்பு (ஒரு உள்ளீட்டு அலகுக்கு கூடிய வெளியீடு பெறுதல்)

(ii) செலவினைக் குறைத்தல் (உ.ம்: போக்குவரத்து தொழில்நுட்பம்)

(iii) புதிய வகையான உற்பத்தி அறிமுகம் செய்தல்.

ஆகவே தொழில்நுட்பம் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது. தொழில்நுட்ப மாற்றத்தினால் கைத்தொழில் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நடவடிக்கையும் ஏதோ ஒரு வகையில் விருத்தியடைந்துள்ளது.

தொழில்நுட்ப மாற்றம் மிக விரைவாக இடம்பெறுகின்றது. நிறுவனங்கள் அதற்கேற்ப தம்மை சீராக்கிக்கொள்ளுதல் வேண்டும். தொழில்நுட்ப மாற்றம் பின்வரும் வழிகளில் நிறுவனங்களுடைய நடவடிக்கைகளைப் பாதிக்கலாம்.

1) உற்பத்தி செய்து விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் வகை

உ.ம்: நுகர்வோர், சந்தைகள் வீட்டுப் பாவனைக்குரிய கணனிகள், Compact disks, Sattelite diskes போன்றவற்றின் எழுச்சியைக் கண்டுள்ளன. கைத்தொழில் சந்தைகள் இயந்திர மனிதன், robots, அலுவலக தகவல் முறைமைக்கான உள்ளூர் வலைப்பின்னல் (Local area networks for office information system) போன்றவற்றின் எழுச்சியைக் கண்டுள்ளன. புதிய தொழில்நுட்பம் புதிய பொருட்களை உருவாக்குவது மட்டுமன்றி தொழிலின் போட்டியமைப்பினையே மாற்றுகின்றது.

2) உற்பத்தி மேற்கொள்ளப்படும் முறை (The way in which products are made)

(i) இயந்திர மனிதன் போன்ற (Robots) ஊழியத்தை மீதப்படுத்தும் நவீன உற்பத்தி உபகரணங்களின் பாவனையை நோக்கிய போக்கு காணப்படுகின்றது. உற்பத்திச் சூழல் முன்னேற்றமடைந்த உற்பத்தி தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினால் (Advanced manufacturing Technology) விரைவான மாற்றங்களுக்கு உட்படுகின்றது.

(ii) தொழில்நுட்பம் புதிய மூலப் பொருட்களையும் விருத்தி செய்ய முடியும்.

3) சேவை வழங்கப்படும் முறை, (The way in which services are provided): உ.ம் : வங்கிகளின் சேவையை தன்னிச்சையாகவே வழங்க தன்னி

யக்க ரெலர் இயந்திரம் (ATM) கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப் படுகின்றது.

4) சந்தைகள் அடையாளம் காணப்படும் முறை (The way in which markets are identified): Data base systems சந்தைகளை பகுப்பாய்வு செய் வதனை மிகவும் இலகுபடுத்தியுள்ளன.

5) நிறுவனம் முகாமை செய்யப்படும் முறை (The way in which firms are managed.)

கணனிமயப்படுத்தல் நிறுவனங் களில் சிரேஸ்ட முகாமையாளர் களுக்கும் வேலைப்படைக்கும் இடையே படிமுறையின் அளவினைக் குறைப்பதாக அமைகின்றது. ஆனால் வேலைப்படை அதிகளவு திறன்களை (Skills) கொண்டிருப்பதனை வேண்டி நிற்கிறது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் போது வேலைமுறை களில் மாற்றங்கள் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. குறிப்பாக தகவல் தொழில் நுட்பம் பிரித் தெடுக்கப்பட்ட தரவுகளை திறமை யாக கையாளவும் அவற்றை விளக்க வும் திறன்களை வேண்டிநிற்கின்றது.

6) வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளும் வழிகளும் அளவும் (The means and extent of communication with external Clients) :

தற்போது இணையம் (Internet) பிரபல்யம் அடைந்துள்ளது. வாடிக் கையாளர்கள் இணையம் ஊடாக வீட்டில் இருந்தவாறே போட்டிப் பொருட்களின் விலைகளுடன் ஒப்பீடு செய்து பொருட்களுக்கான கட்டளை யைப் பிறப்பிக்கின்றனர். இதனால் நிறுவனங்கள் தமது பொருட்களின் விலை வேறுபாடுகள் தரம் போன்ற வற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாகவுள்ளனர்.

ஆகவே தொழிலநுட்ப மாற்றம் உற்பத்திகள், செய்முறைகளில் மட்டு மன்றி விநியோக முறைகள், மூலப் பொருட்கள், ஊழியருக்குத் தேவைப் படும் திறன்கள், வாடிக்கையாளரு டனான தொடர்புகள் போன்றவற்றிலும் தாக்கத்தைக் கொண் டுள்ளது என்பத னையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தொழில்நுட்ப மாற்றமானது உற்பத்தி வாழ்க்கைச் சுற்றோட்டத்தை நேரடியாகப் பாதிக்கின்றது. தொழில்நுட்ப மாற்றம் நன்கு பிரபல்யம் அடைந்த பொருளைக் கூட ஒரு இரவிலேயே பழைமையடையச் செய்துவிடமுடியும். தொழில்நுட்ப மாற்றம் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பமாகவோ அல்லது அச்சுறுத்தலாகவோ அமைய முடியும். உ.ம்:பிரதி செய்யும் (Photo strat) இயந்திரத்தின் கண்டுபிடிப்பு காபன் உற்பத்தித் தொழிலைப் பாதித்துள்ளது. இதேபோன்று TV, வீடியோ டெக் அறி முகப்பட்டதனைத் தொடர்ந்து சினிமா தியேட்டர் உரிமையாளர்களின் தொழில் பாதிப்படைந்துள்ளது. இன்று கணனித் தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்பும் அது தொடர்பான பல அபிவிருத்திகளும் பல தொழில்களுக்கும் சந்தர்ப்பமாகவோ அல்லது அச்சுறுத்தல்களாகவோ அமைந் துள்ளது.

நிறுவனங்கள் நிகழ்காலத்தில் ஏற் பட்டதும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியது மான தொழில்நுட்ப மாற்றங்களை எதிர்வு கூறி அதனடிப்படையில் உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளில் மாற்றங்களைப் புகுத்துதல் வேண்டும்.

தொழில்நுட்ப மாற்றத்ததிற்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரம், வடிவங்கள், பாவனை முறைகள் என்ப வற்றை புகுத்துவதுடன் சந்தைப்படுத்தல் தந்தி ரோபாயங்களையும் மாற்றிய மைக்கலாம். அல்லது புதிய பொருள் ஒன்றை நவீன தொழில்நுட்ப மாற்றத் திற்கு ஏற்ப அறிமுகம் செய்யலாம். தொழில்நுட்ப மாற்றங்களை எதிர்வு கூறுவது என்பது இலகுவானதல்ல. தற்போது தகவல் தொழில்நுட்பத்தில் இடம்பெற்றுள்ள அபி விருத்திகள் ஒரு தசாப்தத்திற்கு முன்னர் எதிர்பார்த்த தனை விட மேலாகவே அமைந்துள்ளன. எனினும் Futurology, the Delphi model போன்ற நுட்பங்கள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தொழில் நுட்பம் மற்றும் சமூக அபிவிருத்திகள், புதிய கண்டு பிடிப்புக்கள் பற்றிய தகவல்களை எதிர்வு கூறி திட்டமிடலாளர்களுக்கு வழங்கி உதவுவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. விரைவான தொழில்நுட்ப மாற்றம் நிறுவனங்கள் தமது ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகள் மீதான செலவுகளை அதிகரித்துச் செல்ல வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளன.

### (6) சர்வதேச சூழல்
(Global or International Environment)

இன்று அநேகமான வெற்றிகரமாக இயங்கிவரும் பெரிய நிறுவனங்கள் உலகமயமாக்கலின் செல்வாக்கிற்கு உட்பட்டு தமது செயற்பாடுகளை சர்வ தேசப் பரப்பிற்கு விரிவுபடுத்தியுள்ளன. உற்பத்தி சந்தைப்படுத்தல் ஆகிய இரு நடவடிக்கைகளுமே சர்வதேசப் பரப்பை நோக்கி நகர்த்தப்படுவது அதிகரிக்கப் பட்டுள்ளது. இத்தகைய ஓர் போக்கானது மலிவானதும் விரைவானதுமான போக்கு வரத்து, அதிக சக்திவாய்ந்த தொடர்பாடல் (உ.ம். இணையம்) நுகர்வு வடிவங்கள், சுவை என்பவற்றிலான ஒத்த தன்மை போன்ற பல்வேறு காரணிகளினால் சாத்தியமாகியுள்ளது. உலகலாவிய சந்தைகள் புதிய தொழில்நுட்பங்களை இலகுவாக உள்வாங்கி பாரிய முதலீடு களை மேற்கொண்டு அவற்றைப் பயன் படுத்த நிறுவனங்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளன. இத்தகைய உலகளாவிய சந்தைகளில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உருவாகக்கூடிய போட்டி நிலைமைகளை நிறுவனங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இவை மட்டுமன்றி சூழல் ஆய்வினை மேற் கொள்ளும் போது சந்தை அமைந்துள்ள புவியியல் சார் பிரதேசம் கொண்டுள்ள கலாச்சார அம்சங்கள், மொழி, காலநிலை, வாழ்க்கை வடிவங்கள், மற்றும் நாணய மாற்றுவீத தளம்பல்கள் போன்ற நிறு வனத்தின் தொழிற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களையும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

உலகமயமாக்கலும் நிறுவனங் களுக்கு வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல் களையும் ஏற்படுத்தியுள்ளன. ஜப்பான், USA யில் உள்ள நிறுவனங்களுக்கு சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா போன்ற வற்றின் சுதந்திர பொருளா தாரக் கொள்கையை நோக்கிய நகர்வு புதிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி யுள்ளது. அதேவேளை குறைவிருத்தி நாடுகளில் உள்ள நிறுவனங்களுக்கு உலக சந்தையில் போட்டியிடும் வகையில் குறைந்த விலை உயர்ந்த தரம் பேணுதல் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கை களிலான அதிக முதலீடு என்பன கடின மான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளன.

**போட்டிச்சூழல்**

(The Competitive Environment or Task or Industry Environment)

பொதுச் சூழலிற்கு மேலதிகமாக நிறுவனத்தின் முகாமையாளர்கள் போட்டிச் சூழலையும் ஆராய வேண்டியது அவசிய மாகும். போட்டிச்சூழல் என்பது குறிப்பிட்ட போட்டிப் பிரதேசத்தில் நிறுவனம் எதிர் நோக்கும் நிலைமையை குறிக்கின்றது. நிறுவனத்தின் இலாபத்தன்மை, போட்டி யின் தன்மை என்பன போட்டிச் சூழலில் ஏற்படும் விருத்தியினால் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றன. போட்டிச் சூழல் நிறு வனத்தின் தந்திரோபாயத்துடன் நெருக்க மான தொடர்பைக் கொண்டுள்ள காரணி களை உள்ளடக்கி உள்ளது. இப்போட்டிச் சூழல் நிறுவனத்தின் தந்திரோபாயத்தை எவ்வாறு வடிவமைக்கின்றது என்பதனை யும் நிறுவனத்தின் செயற்திறனை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் ஆராய்வதற் காக **மைக்கல் போட்டர் (Michael porter)** என்பவரால் விருத்தி செய்யப்பட்ட ஆய்வுமாதிரியே **ஐந்து சக்திகள் மாதிரி** (Five forces model) ஆகும்.

போட்டி என நோக்குகின்ற போது பொதுவாக நிறுவனத்தின் உடனடியான போட்டியாளர்களையே கருதப்படுகின்றது. ஆனால் இதற்கப்பால் நிறுவனத்தின் போட்டி நிலையைத் தீர்மானிக்கும் முகாமையாளர்களினால் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான போட்டிச் சக்தி களையும் ஆராய இம்மாதிரி உதவுகின்றது. இம்மாதிரி ஐந்து அடிப்படையான போட்டிச் சக்திகளின் அடிப்படையில் போட்டிச் சூழலை விபரிக்கின்றது.

1. சந்தையில் புதிய உள்நுழைவுகளின் அச்சுறுத்தல்.
2. நிறுவனத்தின் வழங்குனர்களின் பேரம் பேசும் ஆற்றல்.
3. நிறுவனத்தின் வாடிக்கையாளரின் பேரம் பேசும் ஆற்றல்
4. பிரதியீட்டுப்பொருட்களின் அச்சுறுத் தல்.
5. நேரடியாகப் போட்டியிடுகின்ற நிறுவனங்களிற்கிடையேயான போட்டியின் தீவிரத்தன்மை.

**Michael Porter இன் போட்டிச்சூழல் ஆய்வு மாதிரி**

இப்போட்டிச் சக்திகள் ஒன்றிணைந்து போட்டியின் தன்மை, அளவு மற்றும் குறித்த போட்டிச் சூழலில் நிறுவனத்தின் தந்திரோபாயம் போன்ற வற்றைத் தீர் மானிக்கின்றன. குறித்த தொழி லுக்குள் மிகப் பொருத்தமானதும் பாதுகாப்பானது மான தந்திரோபாய நிலையை அடை யாளம் காணும் பொருட்டு இத்தகைய போட்டிச் சக்திகள் ஒவ்வொன்றும் தொழி லின் சூழலை எவ்வாறு பாதிக்கின்றன என்பதனை முகாமையாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1) **புதிய உள்நுழைவுகளின் அச்சுறுத்தல்**
(The Threat of New Entrants)

ஒரு தொழிலில் ஏற்படும் புதிய உள் நுழைவு ஏற்கனவே உள்ள நிறுவனங் களுக்கான போட்டி அச்சுறுத்தலை பிரதி நிதிப்படுத்துகின்றன. இத்த கைய புதிய உள்நுளைவு மேலதிக உற்பத்தி இயல ளவினை தொழிலிற்கு சேர்ப்பதுடன் ஏற்கனவே உள்ள போட்டிநிறுவனங் களின் சந்தைப் பங்கினைக் குறைவடையச் செய்வ தற்குமான சாத்தியத்தைக் கொண் டிருக்கும். மேலும் புதிய நிறுவனம் பெரு மளவான விளம்பரம் ஆராய்ச்சி அபி விருத்தி போன்ற கணிசமான வளங்களை

யும் கொண்டு வரலாம். இவை போட்டி குறைந்திருந்த காலத்தில் ஏற்கனவே உள்ள நிறுவனத்தின் வெற்றிக்குத் தேவை யானதாக இல்லாத நிலை காணப்பட்டி ருக்கும். ஆனால் தற்போது இத்தகைய வளங்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய உள்நுழைவு களின் அச்சுறுத்தலைக் குறைப்பதற்கு ஏற்கனவே உள்ள நிறுவனங்களின் முகாமையாளர்கள் பின்வரும் தடைகளை (Barriers) பயன்படுத்தலாம்.

**அளவுத்திட்ட சிக்கனங்கள்** (Economics of scale)

பேரளவு உற்பத்தியை மேற்கொள் கின்ற ஏற்கனவே உள்ள நிறுவனம் அலகுக்கான குறைந்த உற்பத்திச் செல வினைக் கொண்டிருக்கலாம். இது குறைந்த உற்பத்தியளவு உயர்ந்த உற்பத்திச் செலவு என்பவற்றைக் கொண்ட புதிய நிறுவனங்களுக்கு சந்தைக்குள் நுழை வதற்கான தடையாக உள்ளது.

**உற்பத்தி வேறுபடுத்தல்** (Product differentiotion)

ஏற்கனவே உள்ள நிறுவனத்தின் உற்பத்திகளின் பௌதீக அல்லது புலன் உணர்வு அடிப்படையிலான குணாம் சங்கள் அல்லது பண்புகளிலான வேறு பாடுகள் வாடிக்கையாளரது நோக்கில் தனித்துவத் தன்மையை ஏற்படுத்தியி ருக்குமாயின் இதிலிருந்து எழுகின்ற பண்டக்குறி விசுவாசத்தினை புதிய நிறு வனங்கள் வெற்றிகொள்ள வேண்டியி ருக்கும்.

**மூலதனத் தேவைகள்** (Capital Requirements)

இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் தொழிற்படு மூலதனம் போன்றவற்றின் அடிப்படையில் ஒரு தொழிலுக்குள் நுழைவதற்கான முதலீடுகள் அதி களவில் தேவைப்படும் போது புதிய உள்நுழைவுகளின் அளவு குறைவாக அமையும்.

**மாறும் கிரயங்கள்** (Switching costs)

ஒரு வழங்குனரது பொருளில் இருந்து இன்னொரு வழங்குனரது பொருளுக்கு மாறும் போது வாடிக்கையாளருக்கு ஏற்படும் உளரீதியான அல்லது நிதிரீதி யான மாறும் கிரயம் உயர்வாக காணப் படும் போது புதிய நிறுவனங் களுக்கு விற்பனை அதிகரிப்பது கடினமாக அமையலாம்.

**அளவுத்திட்டத்தில் தங்கியிராத செலவுப் பிரதிகூலங்கள்** (Cost disadvantages independent of scale)

சில சமயங்களில் புதிய நிறுவனம் அளவுத்திட்ட சிக்கனங்களை அனுபவிக்க கூடிய சூழ்நிலையைக் கொண்டிருந்தாலும் ஏற்கனவே உள்ள நிறுவனம் விசேட மான செலவு நன்மைகளை அனுபவிக்கு மானால் அது புதிய நிறுவனத்திற்கு தடையாக அமையலாம். இத்தகைய செலவு நன்மைகளாக ஆக்க உரிமை போன்ற உற்பத்தி பற்றிய தொழிலறிவு சாதகமான இடஅமைவு சாதகமான நிலையில் காணப்படும் மூலப்பொருட் களின் கிடைப் பனவு அரசமானியங்கள் அனுபவ வளையின் தாக்கம் போன்றன அமைகின்றன.

**விநியோக வழிகளை அடையக்கூடியதாக இருத்தல்** (Access to distribution chanels)

உள்நுழையும் புதிய நிறுவனத்திற்கு தனது பொருட்கள் அல்லது சேவைகளை விநியோகிப்பதற்கான வழிகளை விருத்தி செய்வதுடன் தொடர்புடைய செலவுகள் மற்றும் ஏனைய வரையறைகள் சந்தைக்

குள் பொருட்களை நகர்த்துவதில் கடினத்தன்மையை ஏற்படுத்தலாம்.

கைத்தொழில்களுக்கிடையே புதிய உள் நுழைவுக்கான தடையை தீர்மானிக்கும் காரணிகள் வேறுபட்டதாக அமையலாம். உதாரணமாக குடிபானத் தொழிலைப் பொறுத்தவரை உற்பத்தி வேறுபடுதல், புதிய நுழைவிற்கான பிரதான தடையாக அமைகின்றது. பாரிய உற்பத்தி தொழில் ஒன்றில் (Heavy manufacturing industry) கணிசமான மூலதனத்தேவை, உள்நுழைவிற்கான தடையாக அமைகின்றது. Commercial software industry யில் ஊழியர்களுக்கு பயிற்சியளித்தலுடன் தொடர்புடைய மாறும் கிரயம் (Switching cost) காரணமாக புதிய நிறுவனங்களால் அறிமுகம் செய்யும் பொருட்கள் சிறந்ததாக அமைந்த போதும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள packages ஐ (பொதிகளை) பயன்படுத்துவதனை அவதானிக்கலாம்.

## 2) வழங்குனரின் பேரம் பேசும் ஆற்றல்

(The bargaining power of suppliers)

அநேகமான தொழில்களில் கொள்வனவு செய்யப்பட்ட உள்ளீடுகள் மொத்த உற்பத்திச் செலவில் 60 – 80 வீதமான பங்கினை வகிக்கின்றன. ஆகவே வழங்குனர்கள் இத்தகைய கைத்தொழிலின் இலாபத்திற்கான சாத்தியத்தன்மை மீது தாக்கம் செலுத்த முடியும். வழங்குனர்கள் தமது பொருட்களின் விலையை உயர்த்துவதன் மூலமோ அல்லது தரத்தைக் குறைப்பதன் மூலமோ செல்வாக்குச் செலுத்த முடியும். எனினும் இத்தகைய செல்வாக்கினைச் செலுத்துவதற்கு வழங்குனர்கள் தமது தொழிலில் பேரம் பேசும் வலுவினைக் கொண்டிருத்தல் வேண்டும். மரபு ரீதியாகவே (soft drings). மென் குடிபானம் பெரியளவிலான நவீன ஆயுதங்கள், Main frame computers போன்ற தொழில்களில் வழங்குனர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதுடன் வாடிக்கையாளர்களுக்கு இவ் உற்பத்திகள் பிரதானமானதாக அமைவதனாலும், ஒரு விநியோகஸ்தரிடமிருந்து இன்னொரு விநியோகஸ்தரிற்கு மாறுவதனால் பிரச்சினைகளும் செலவும் ஏற்படுவதனாலும் வழங்குனர்கள் அதிகளவு பேரம் பேசும் வலுவினைக் கொண்டுள்ளார்கள். பின்வரும் காரணிகள் விநியோகஸ்தர்களுக்கான வலுவினை வழங்குகின்றன.

- மிகக்குறைந்த வழங்குநர்களின் ஆதிக் கமும் பதிலீட்டுப் பொருட்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தலும்: இவ்விரு காரணிகளும் வாடிக்கையாளர்களின் தெரிவுகளை மட்டுப் படுத்துவதுடன் வழங்குனர்களின் வலுவினையும் அதிகரிக்கச் செய்கின்றது.
- வாங்குனர்களைக் காட்டிலும் வழங்குனர்களின் கருத்தூன்றல் விகிதம் (Concentration ratio) உயர்வாக இருத்தல்: கருத்தூன்றல் விகிதம் என்பது குறித்த தொழிலின் மொத்த வெளியீட்டில் ஒரு நிறுவனத்தினது வெளியீடு கொண்டுள்ள பங்கினைக் குறிக்கின்றது. இது உயர்வாக இருக்கும் போது வழங்குனர் பேரம் பேசுவதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பர்.
- வழங்குநர்களைப் பொறுத்தவரை வாங்குநர்களின் முக்கியத்துவம் குறைவாக இருத்தல்.
- வழங்குனரது பொருள் வாங்குநரது உற்பத்தியில் கொண்டுள்ள முக்கியத்துவம் உயர்வாக இருத்தல்.

- வழங்குநரது உயர்ந்தளவு உற்பத்தி வேறுபடுத்தலும் வாங்குநர்களது மாறும் கிரயம் உயர்வாக இருத்தலும்: இவ்விரு காரணிகளும் வாடிக்கை யாளர்களை வேறு வழங்குநர் களை நோக்கி நகர்வதற்கான தூண்டுதலைக் குறைக்கின்றன.
- வழங்குநர்களின் முன்னோக்கிய இணைவு பற்றிய அச்சுறுத்தல் (Credible threat of forward integration by suppliers): முன்னோக்கிய இணைவு என்பது வழங்குநர் உற்பத்திச் செய் முறையின் அல்லது விநியோகத்தி னுடைய அடுத்த கட்டத்திற்கு செல் வதனைக் குறிக்கிறது. அதாவது வாடிக்கையாளருடைய தொழிலில் வாடிக்கையாளருடன் நேரடியாக போட்டியில் இறங்குவதனைக் குறிக் கின்றது. உதாரணமாக தானிய உற்பத்தியை மேற்கொள்ளும் விவ சாயிகள் அவற்றை பாவனையாளர் களுக்கு உகந்த பொருளாக மாற்றி யமைக்கும் உற்பத்தியின் அடுத்த கட்ட செய்முறையை மேற்கொள் ளும் தொழிலில் ஈடுபடுவதனைக் குறிக்கின்றது.

### 3) வாடிக்கையாளரின் பேரம் பேசும் ஆற்றல் (The bargaining power of customers)

ஓர் உற்பத்திப்பொருளின் வாங்கு நர்கள், பொருளின் விலையை குறைக்கு மாறு அல்லது அதே விலையில் தரத்தினை உயர்த்துமாறு கோருவதன் மூலமோ அல்லது கொள்வனவு செய்யும் அள வினைக் குறைப்பதன் மூலமோ தமது பேரம் பேசும் ஆற்றலை வழங்குநர்கள் மீது பிரயோகிக்கலாம். பின்வரும் காரணிகள் வாடிக்கையாளர்களுக்கு வலுவை வழங்குவதில் பிரதானமானவை யாகவுள்ளன.

உற்பத்தி வேறுபடுத்தலை மேற் கொள்ளாத அல்லது நியமத்தன்மை யுடைய வழங்குனர்களின் பொருட்கள் அல்லது சேவைகள்.

- வழங்குநர்களுடைய உற்பத்திப் பொருளின் செலவுக் கட்டமைப்பு தொடர்பான சரியான தகவல்களை வாங்குநர்கள் அறிந்திருத்தல்.
- வாடிக்கையாளரின் பின்னோக்கிய இணைவுக்கான அச்சுறுத்தல் (Credible threats of backward integration by buyers):- பின்னோக்கிய இணைவு என்பது வாடிக்கையாளர்கள் உற் பத்தியின் அல்லது விநியோகத்தின் முன்னைய கட்டத்திற்கு நகருதல், அதாவது வாடிக்கையாளர்கள் வழங்கு னர்களுடைய தொழிலுக்குள் நேரடி யாக நகர்வதைக் குறிக்கின்றது. உதாரணமாக குடிபான வகைகளின் உற்பத்தியாளர்கள் அவர்களுக்குத் தேவையான கொள்கலன்களின் உற்பத்தியில் ஈடுபடுவதற்கான அச் சுறுத்தல்களை தொடர்ச்சியாக வெளிப் படுத்துவதனூடாக விநியோகத்தர் களிடமிருந்து சாதகமான நிலைமை களை அடைந்துகொள்ளல்.
- வாடிக்கையாளரின் விலைக்கான உறுத்துணர்ச்சி (Price sensitivity of buyers):-வாங்குநர்களின் விலைக் கான உறுத்துணர்ச்சி விலைக் குறைப் புக்கு அல்லது சாதகமான நிலைமை களைப் பெற்றுக்கொள்வதற்கு வாங்கு னர்களை போராட தூண்டும்.
- வழங்குநர்களது தொழிலை விட வாங்குநர்களின் தொழிலின் கருத் தூன்றல் விகிதம் உயர்வாக இருப்ப

துடன், ஒப்பீட்டு ரீதியில் உயர்வான கொள்வனது அளவினையும் கொண்டிருத்தல்:- இவ்விரு காரணிகளும் கருதுவது யாதெனில் வழங்குநர்களை காட்டிலும் வாங்குனர்கள் அதிக அளவில் இருப்பதையும், அதிக வலுவைக் கொண்டிருப்பதையும் குறிக்கின்றது. அதாவது வழங்குநர் வாங்குநரிடம் கொண்டுள்ள முக்கியத்துவத்தை விட வாங்குநர் வழங்குனரைப் பொறுத்து கூடிய முக்கியத்துவம் உடையவராகக் காணப்படுவதனைக் குறிக்கின்றது.

4) **பிரதியீட்டுப் பொருட்களினுடைய அச்சுறுத்தல்** (Threat of substitute products)

பிரதியீட்டுப் பொருட்களின் கிடைப்பனவுத் தன்மையானது குறித்த தொழிலினுடைய உற்பத்திப் பொருட்களின் விலைக்கான உயர்மட்ட எல்லையை நிர்ணயிப்பதாக அமைகிறது. குறித்த பொருட்களின் விலை உயர்வடையும் போது வாடிக்கையாளர் பிரதியீட்டுப் பொருளை நோக்கி நகர்வதற்கான போக்கினைக் கொண்டிருப்பர். எனவே தான் முகாமையாளர்கள் எப்பொழுதும் செயற்றிறனிலான முன்னேற்றத்தையும் விலைவீழ்ச்சியையும் காட்டும் பிரதியீட்டுப் பொருட்களை நெருக்கமாக அவதானித்தல் வேண்டும். பொதுவான சூழலில் உள்ள இரண்டு போக்குகளான அரசாங்க சட்டவிதிகளின் தளர்வும், தொழில்நுட்ப முன்னேற்றமும் பதிலீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதால் ஏற்கனவே உள்ள நிறுவனங்களின் சந்தை பங்கினை வெற்றிகரமாக அவை கைப்பற்றுவதற்கு வழிவகுத்துள்ளன. உ.ம்: CD-Rom ஐ அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்ப முன்னேற்றமானது மரபு ரீதியாக அச்சிடப்பட்ட நூல்களுக்கான பிரதியீடாக அமைகின்றது. இவை செலவு குறைந்ததும் கையாள்வதில் அதிக வசதி கொண்டவையுமாகும். Encyclopedia, Oxford English Dictionary போன்றன மிகக் குறைந்த விலையிலும் நிறையிலும் தனியான discல் கிடைக்கக் கூடியதாகவுள்ளன.

பதிலீட்டுப் பொருட்களின் அச்சுறுத்தல் பின்வரும் சந்தர்ப்பங்களில் உயர்வாக காணப்படுகிறது.

- பதிலீடுகளை உற்பத்தி செய்யும் தொழிலின் இலாபத்தன்மை உயர்வாக இருத்தல்
- பதிலீட்டுப் பொருட்களின் விலைச் செயற்றிறன் முன்னேற்றவீதம் உயர்வாக இருத்தல்.

5) **ஏற்கனவே உள்ள போட்டியாளர்களுக்கிடையேயான போட்டியின் தீவிரத்தன்மை** (The intensity of Rivalry Among competitors)

சுதந்திரச் சந்தைப் பொருளாதாரங்களில் இயங்கிவரும் அநேகமான தொழில்களில் ஏற்கனவே உள்ள நிறுவனங்களுக்கிடையே போட்டி உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இத்தகைய போட்டியானது தீவிரமான விலைப்போட்டி, உற்பத்தி வேறுபடுத்தல் அல்லது உற்பத்தியில் புதிது புனைதல் போன்ற தன்மைகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

இப்போட்டியின் வடிவங்கள் தம்முள் புறநீங்குபவையாக அமைய முடியாது என்பதனையும் ஒரே நேரத்தில் ஏற்படக் கூடியவை என்பதனையும் முகாமையாளர்கள் உணர்தல் வேண்டும். அண்மைக்

காலங்களில் மென்குடிபான தொழில் (Soft drink industry) உள்ள நிறுவனங்களுக்கிடையேயான போட்டியானது விலைக்கழிவுகள், பேரளவு விளம்பரப் பாதீடுகள் புதிய பொருட்களை அறிமுகம் செய்தல் போன்ற பண்புகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகிறது.

ஏற்கனவே உள்ள நிறுவனங்களுக்கிடையேயான போட்டியினைத் தீர்மானிக்கின்ற காரணிகளாக பின்வருவன அமைகின்றன.

- சமபலமுள்ள போட்டியாளர்கள் (Equally balanced competitors): இந்நிலையில் ஒரு நிறுவனத்தை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காத வகையில் நிறுவனங்களுக் கிடையே போட்டியின் தீவிரத்தன்மை உயர்வாக இருக்கும்.
- மெதுவான தொழில் வளர்ச்சி (Slow industry growth):- குறைந்தளவான வளர்ச்சியை கொண்ட சந்தையில் விற்பனையின் அதிகரிப்பானது போட்டியாளர்களின் சந்தைப் பங்கினைக் கைப்பற்றுவதன் மூலமே சாத்தியமாகும். இந்நிலையில் போட்டியின் தீவிரம் உயர்வாக இருக்கும்.
- உயர்ந்தளவான நிலையான செலவு, களஞ்சியப்படுத்தல் செலவு :– விரைவான மேலதிக விற்பனையளவு இத்தகைய செலவுகளை ஈடுசெய்யும் அல்லது குறைக்குமாதலால் அதிகரித்த விற்பனைக்கான போட்டி உயர்வாக இருக்கும்.
- குறைந்தளவான உற்பத்தி வேறுபடுத்தலும் மாறும் கிரயமும் :– இவ்விரு காரணிகளும் வாடிக்கையாளர்களை போட்டியாளர்களிடையே இலகுவாக நகர வகை செய்யுமாதலால் போட்டி உயர்வாக இருக்கும்.
- உற்பத்தி இயலளவில் ஏற்படும் பெரியளவு அதிகரிப்பு (Large increases in manufacturing capacity):- அநேகமான தொழில்களில் ஆகக்குறைந்த வினைத்திறன் அளவுத் தேவைப்பாடு காரணமாக உற்பத்தியை பெரியளவில் மட்டும் அதிகரிப்பதே சாத்தியமாகும். இதனால் குறுங்காலத்தில் மிகை நிரம்பலை ஏற்படுத்துவதுடன் அதிகரித்த விலைப் போட்டிக்கும் வழிவகுத்து விடுகிறது.
- வெளியேறுவதற்கான உயர்ந்தளவு தடைகள் (High exit barriers) பொருளாதார தந்திரோபாய ரீதியான அல்லது உணர்வுரீதியான காரணங்களினால் குறித்த தொழிலிருந்து வெளியேறுவது கடினமாகக் காணப்படும் போது போட்டியின் தீவிரத் தன்மையும் உயர்வாகவிருக்கும்.
- உயர்ந்தளவு தந்திரோபாய பந்தங்கள் அல்லது வாய்ப்புக்கள் (High strategic stakes):- இலாபத்திற்கான சாத்தியத்தன்மை அல்லது வேறு சந்தர்ப்பங்கள் காரணமாக சந்தையில் போட்டியிடுவது அதிகளவு பெறுமதியுடையது எனக்கருதும்போது போட்டியின் தீவிரத்தன்மையும் உயர்வாக இருக்கும்.

**முடிவுரை (Conclution)**

தந்திரோபாய முகாமைத்துவச் செய்முறையில் எத்தகைய சூழல் சக்திகள் அதிகளவு நிறுவனத்தை தாக்குவது சாத்தியமாகவுள்ளது என்பதனை தெளிவாக விளங்கிக்கொண்டு அதனடிப்படையில் முகாமையாளர்கள் பொருத்தமான தந்திரோபாயங்களை வகுப்பதற்கு சூழல்

ஆய்வு மிகவும்பெறுமதியுடையதாக அமைகின்றது. இச்சூழல் ஆய்வு பொது வான சூழல், போட்டிச் சூழல் அல்லது தொழிற்சூழல் எனப்பிரித்து நோக்கப் பட்டாலும் இரண்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. பெரும்பாலும் பொதுவான சூழலில் ஏற்படும் விருத்திகள் போட்டிச் சூழலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சூழல் ஆய்விலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே எதிர்கால நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப் பதனால் பெரிய நிறுவனங்கள் மட்டு மன்றி சிறிய நிறுவனங்கள், அரசாங்கம், மற்றும் தனிநபர்களாலும் மேற்கொள் ளப்பட வேண்டிய ஓர் ஆய்வாக இது அமைவதனால் சூழல் ஆய்வு பற்றிய விபரமான அறிவு இன்று எல்லோர்க்கும் அவசியமானது என்பதில் எதுவித ஐயமு மில்லை.

## Reference:


1. Alex Miller, Gregory G.Dess, Strategic Management The McGraw - Hill Companies . Inc. 2008.

2. CIMA Text book, Strategic Management Accounting and Marketing. At Foulks Lynch Ltd. 2008.

3. CIMA Text book strategic Management Accounting and Marketing, BPP Publishing, 2009.


♣ ♣ ♣

# ஆசிரியர் குழாம்



# நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

திரு. இ. ஆனந்தநடராஜா
B.A., Dip.in Edu, MA (Tamil)
பிரதி அதிபர்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் யாங்கணுமே கண்டதில்லை என்பது நவயுகக் கவிஞன் பாரதி கூற்று. இந்தவகையில் இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரமும் பாரதியின் நெஞ்சை அள்ளியதில் வியப்பில்லை.

தமிழில் எழுந்த பெருங்காப்பியங்கள் வரிசையில் காலத்தால் முற்பட்ட முதன்மைக் காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரமாகும் இது தமிழ் இலக்கிய வரலாற்றில் இத்தகைய இடத்தினைப் பிடிப்பதற்கான காரணங்கள் பல. இளங்கோவடிகள் சங்ககால மக்களின் வாழ்வியல் அம்சங்களைக் கொண்டும் அகம் புறம் என்ற அம்சங்களின் அடிப்படையில் தாம் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ற வகையில் ஒரு புதிய வடிவில் இவ் இலக்கியத்தை படைத்துள்ளார். இக்காப்பியம் முத்தமிழ்க் காப்பியம் என தமிழ் கூறும் நல்லுலகில் இன்றும் போற்றப்படுகின்றது.

இக்காப்பியம் மூன்று காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவை முறையே புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்பனவாகும். இக்காண்டங்கள் மூன்றும் முப்பது பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இம்முப்பது பிரிவுகளுள் 22 காதைகளும் 8 வாழ்த்து வரி ஆடல்பாடல் என்பனவும் அடங்கும்.

சங்கமருவிய காலத்து எழுந்த இக் காப்பியம் அக்காலத் தேவையினை பூர்த்திசெய்யும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. சங்ககால போர், பரத்தமை ஒழுக்கம் போன்றவற்றால் சிதைவு பெற்ற சமுதாய அரசியல் நிலையினைத் தூக்கி நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசிளங்குமரனான இளங்கோ அடிகளுக்கு ஏற்பட்டது. அவர் காணவிழைந்த சமூகம் அவர் காணவிழைந்த அரசியல் போன்றவற்றை இக்காப்பியத்தின் மூலம் எமக்குப்படம் பிடித்துக் காட்டுகின்றார்.

அறத்தை அவாவி நின்ற அக்காலச் சமுதாயத்திற்கு அறத்தின் அவசியத்தையும் மாறுபட்டு நின்ற மூவேந்தர்களுக்கும் அரச நீதியையும் ஒற்றுமைப் பட வேண்டியதன் அவசியத்தையும் பரத்தமை ஒழுக்கத்தால் சிதைவுற்றிருந்த குடும்ப நிலையைச் சீர்தூக்கவும் இக்காப்பியத்தைப் படைத்தார். காப்பியம் படைத்த நோக்கத்தை –

**அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்**
**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**

எனக் கூறுகின்றார். எனவே அக்காலச் சமுதாயத்தைப் பயனார்ந்த சமுதாயமாக மாற்ற வேண்டி இக்காப்பியத்தை படைத்துள்ளாார்.

இக்காப்பியத்தின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் முதலில் திங்களை போற்றி அடுத்து ஞாயிறைப் போற்றி அடுத்து மழையைப் போற்றுகிறார். இதன் மூலம் சர்வதேசத்திற்கும் பொதுவான ஒரு காப்பியமாக படைக்கின்றார்.

புகார்க் காண்டமானது சோழநாட்டையும் சோழநாட்டு தலைநகரத்தையும் மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. கதையின் ஆரம்பத்தில் சோழநாட்டுச் சிறப்பும் அழகும் செல்வமும் கூறப்படுகின்றது. அத்துடன் கதை மாந்தர்களும் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். முதலில் கண்ணகியின் அழகு, தோற்றம் அவளது குடி பற்றிக் கூறி பின்னர் கோவலனின் அழகு, செல்வம் போன்றவற்றையும் விளக்குவதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு நடைபெறும் திருமணம் பற்றியும் விளக்குகின்றார்.

**"நீலவிதானத்து நித்திலப் பந்தர்க்கீழ்**
**வானூர் மதியம் சகடு அணைய, வானத்துச்**
**சாலி ஒரு மீன் தகையாளைக், கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்வது...."**

எனத் அக்காலத் திருமண நடைமுறைகளும் எடுத்தியம்புகின்றது. இப்பகுதியிலே கற்போர் உள்ளம் கவருமாறு தனது செய்யுளை நடத்திச் செல்கின்றார். இங்கு அவர்கள் தனிக் குடித்தனம் செல்வதும் அங்கு அவர்கள் இன்பமாக வாழ்வை நடாத்துவதும் எடுத்துக் காட்டப்படுகின்றது. கோவலன் கண்ணகியை –

**மாசு அறு பொன்னே! வலம்புரி முத்தே**
**காசு அறு விரையே! கரும்பே! தேனே!!**
**அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!**
**பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!**
**மலையிடைப் பிறவா மணியே என்கோ?**
**அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?**
**யாழிடைப் பிறவா இசையே என்கோ?**
**தாள்இருங் கூந்தல் தையால் நின்னை!...."**

என்றெல்லாம் நலம் புனைந்து உரைக்கின்றான். இந்த இடங்களில் எல்லாம் இளங்கோவடிகளின் செய்யுள்கள் நெஞ்சை நிறைப்பனவாக படைக்கப்பட்டுள்ளன. அடுத்து மாதவி அரசவையில் ஆடும் ஆடல்வகைகளைக் குறிப்பிடும்போது இளங்கோவடிகளின் பல துறை ஆளுமை வெளிப்படுகின்றது. ஆடல்வகைகளும் வாசிக்கப்பட்ட இசைக்கருவிகள் யாவும் எம்கண் முன்னே படமாக நிறுத்தப்படுகின்றன.

அக்கால சமுதாயத்தில் வணிகர் உச்ச நிலை பெற்றிருந்தமையாலும் அது பரத்தமை ஒழுக்கத்தை ஊக்குவிக்கும் தன்மை மிகுந்ததாகவும் எடுத்துக் காட்டுகிறார். கோவலன் ஒரு வணிகன். செல்வம் நிறைந்தவன். அவன் நம்பியர் உலவும் வீதியில் திரிபவன் என்பதை

**"நகர நம்பியர் திரிதரு மறுகில்**
**பகர்வளர் போல்வதோ பான்மையின் நிறுத்த..."**

என்று கூறுகின்றார். அக்காலத்தில் பரந்தமையை கலையை அரசர்கள் அங்கீகரிக்கின்றார்கள். என்ற நிலை மாதவிக்கு தலைக் கோல் பட்டம் வழங்கப்படுவதிலிருந்து புலனாகிறது.

மாதவிபால் கோவலன் சென்றதும் விடுதலறியா விரும்பினன் ஆனதன் பின்னர் கண்ணகியின் நிலையை இளங்கோ மிகச்சிறப்பாக எடுத்துக் கூறுகின்றார். காலில் சிலம்பின்றி கண்ணில் மையின்றி மங்கலநாண் தவிர ஏனைய அணி கலன்கள் இன்றி தவிக்கும் நிலையினை

**"அம் செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய**
**மென்துயில் அல்குல் மேகலை நீங்கக்**
**கொன்றை முன்றில் குங்குமம் எழுதாள்,**
**மங்கல அணியின் பிறிது அணி மகிழாள்,**
**கொடுங்குழை துறந்து வடிந்து வீழ்காதினள்**
**திங்கள் வாள்முகம் சிறு வியர்பு இரியச்**
**செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்,**
**பவள வாள்நுதல் திலகம் இழப்பத்**
**தவள வாள்நகை கோவலன் இழப்ப,**

**மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்**
**கையறு நெஞ்சத்து கண்ணகி அன்றியும்...."**

என எடுத்துக் காட்டுகின்றார்.

மேலும் இந்திரவிழாவில் மாதவிக்கும் கோவலனுக்கும் ஏற்படப் போகும் பிரிவு ஊழ்வினை காரணமாக ஏற்படுகின்றது என்கின்றார். யாழில் ஊழ்வினை ஏற அவர்களுக்குள் பிரிவு ஏற்படுகின்றது. இந்த இடத்தில் கானல்வரிப் பாடல்களின் சிறப்பு குறிப்பிடத்தக்கது. இப்பாடல் களின் மூலம் மாதவியின் மனோநிலை யும் கோவலனின் மனோநிலையும் தெளிவுபடுத்தப்படுகின்றது.

**"கானல்வரி யான்பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து,**
**மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள், என**
**யாழ்-இசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்து**
**– உருத்தது ஆகலின்,**
**உவவுஉற்ற திங்கள் முகத்தானைக் கவவுக்கை**
**நெகிழ்ந்தனனாய்"**

கோவலன் பிரிந்து செல்லும் இடம் காப்பியத்தின் திருப்பு முனையாக அமை கிறது. இது வரை சோழநாட்டில் நடந்து வந்த கதை பாண்டிநாட்டு மதுரைக்கு நகர்த்தப்படுகின்றது. இத்தகைய கதை நகர்த்தற் சிறப்புக் காரணமாக நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக இக்காவியம் போற்றப்படுகின்றது.

இரண்டாவதாக கோவலனது ஊழ் வினை கண்ணகி "சிலம்பு கொணம்" என்ற வார்த்தையில் ஆரம்பமாகிறது. இருவரும் வரும் வழியில் கவுந்தியடிகளைச் சந்திப் பதும் அவரது உபதேச மொழிகள் சமணக் கருத்துக்களை வெளிப்படுத்துவன வாகவும் அமைகின்றது.

மதுரையில் கோவலன் கொலை செய்யப்படுகின்றான். இங்கேயும் பாண்டி யனது ஊழ்வினை துரத்துகின்றது. அவன் தான் இருந்த மனோநிலையில் கொன்று வருக என்று கூறி தனது அரசநீதியினை பிழைத்துவிட்டான். கண்ணகி அடைக் கலம் இருந்த சேரிப் பெண்கள் வாழ்க்கை முறை அவர்கள் விருந் தோம்பற் பண்பு மற்றும் தீய உற்பாதங்கள் கண்ணுற்ற போது குரவைக் கூத்தாடும் முறை என அம் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

கோவலன் கொலையுண்ட செய்தி அறிந்த கண்ணகி புயலெனச் சீறி நீதி கேட்கின்றாள். சூரியனும் கண்ணகிக்கு பதில் கூறுகின்றான்.

வழக்குரை காதையிலே கண்ணகி சோழநாட்டுச் சிறப்பும் எடுத்துக் கூறு கின்றார். அதுமாத்திரமல்ல அங்கு கோவலன் கள்வன் அல்லன் என்பன நிரூபித்து மதுரையைத் தீக்கிரையாக் கின்றாள். அங்கும் அவள் அக்கினிக்கு

**"பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர்,**
**மூத்தோர், குழவி என்னும் இவரைக் கைவிட்டுத்**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க..."**

எனக் கட்டளையிடுகிறாள்.

இங்கு கண்ணகியின் புனிதத் தன்மையை எடுத்துக்காட்ட தெய்வம் அஞ்சும் தெய்வம் வரம் கொடுக்கும் கண்ணகியிடம் மதுரா தெய்வமே வரம் கேட்பது என்றால் கண்ணகி எவ்வளவு தூரம் உயர்தவள் என்பது வெளிப்படை. உரிய இடங்களில் சொல்லவந்த விடயத்தை உயர்த்திக் கூறும் பண்பில் சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமானது வஞ்சிக் காண்டத்தில் சேர அரசன் அவள் கனகவிசயன் தலையில் கல்லெடுத்து கண்ணகிக்கு

சிலை எடுத்தும் சிறப்புப் பெறுகின்றான்.

இங்கு இளங்கோவடிகள் தான் இயற்றிய காப்பியத்தின் பயனை கண்ணகி தோன்றி தனக்குக் கூறுவதாக மனித மேம்பாட்டுக்கு கடைப்பிடிக்க வேண்டிய விழுமியங்களை வரிசைப் படுத்திக் கூறுகின்றார். புறங்கூறவேண் டாம் பிறர்மனை நயக்க வேண்டாம் என இன்னோரன்ன மானுட விழுமியங்களை எடுத்துக் கூறுகின்றார்.

சிலப்பதிகாரம் அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாவதும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும் ஊழ்வினை வந்து உருத்துவதைக் கூற விளைந்தாலும் தமிழ் நாடு முழுவதை யும் ஒட்டு மொத்தமாகத் தன்னுள்ளே அடக்கி சண்டை சச்சரவின்றி சமா தானமாக வாழவேண்டும் என்று கூறுகிறது. மற்றும் இளங்கோவடி களின் சமய சமரச நோக்கு இவர் சிறப்பாக குறிப்பிட வேண்டியது ஒன்று. அவர் கோவலனை வர்ணிக்கும் இடத்தில் முருகன் என்றும் ஆச்சியர் குரவையில் திருமாலை வாழ்த்தியும் கவுந்தியடிகளின் உபதேசத்தில் சமண மதக் கருத்துக்களையும் இணைத்து ஒரு சமய சமரச நூலாக சிலப்பதி காரத்தைப் படைத்துள்ளார்.

பரத்தமை ஒழுக்கத்தை வெறுத்தாலும் அவர் மிக நாசூக்காக அதை வெளிப் படுத்தும் பண்பு வியக்கத்தக்கது. கண்ணகி யின் குடும்பச் சிதைவுக்கும் பாண்டியனின் அழிவுக்கும் பரத்தமை ஒழுக்கம் காரண மானது. ஆனால் பரத்தையாகிய மாதவி கோவலனுக்காகவே வாழும் தன்மை பரத்தையர்க்கு ஒரு பாடமாகவும் அவள் துறவியாவதும் எடுத்துக் கூறுகின்றார்.

ஒட்டுமொத்தமாக நோக்கின் சிலப் பதிகாரம் எல்லாவகையிலும் கவிச்சிறப்பு கதையமைப்பு செய்யுள் வடிவம் பாத்திர வார்ப்பு போன்ற சகலதிலும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகவே இன்று வரை திகழ்கிறது.

♣ ♣ ♣

# கல்விக்கும் பொருளாதாரத்திற்குமிடையிலான இடைவினையுறவு

**திரு. பொ. தயாளன்** B.FA
*(ஆசிரியர்)*

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி யானது பொருளுற்பத்திப் பெருக்கத்தி லேயே தங்கியுள்ளது. பொருளுற்பத்திப் பெருக்கம் மூலதனத்திலும், நாட்டின் இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்து வதிலும் மட்டுமல்லாது மனித சாத னத்தைப் பல்வேறு திறன்களிலும் ஆற்றல் களிலும் பயிற்றுவதிலும் தங்கியுள்ளது. தொழில்நுட்பத் திறன்களும், ஆற்றல் களும், அறிவும் படைத்த மனித சாதனம் இல்லையாயின் பொருளாதார வளர்ச்சி பின்தங்கவேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு பொருளாதாரப் பயனுடைய மனித சாதனத்தை பயிற்றுவதில் கல்வி முறைக்கு முக்கிய பங்கிருப்பதால் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி வளர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த தாகிறது. எனவே இன்று பல்வேறு உலக நாடுகளிலும் கல்வியின் மீதான செலவை மனித சாதனங்களின் முதலீடாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடுகளின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதில் கல்வி எப்போதுமே பங்கு கொண்டு வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பொது நல அரசுகள் கல்வித் துறையை நன்கு விரிவு செய்து கல்வி பெறுவதிலிருந்த பொரு ளாதாரத் தடைகளை நீக்கப்பல நட வடிக்கைகளை மேற்கொண்டன. எனினும் அவ்வாறான நடவடிக்கைகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டே இருந்தன. கல்வி வசதிகள் விரிவாக்கப்பட்ட நிலையில் இன்று பொருளாதார வளர்ச்சிக்குத் துணை புரியக் கூடிய திறனும் அறிவும் படைத்த மக்கட் கூட்டத்தை உருவாக்கும் வகையில் கல்வி முறை மாற்றியமைக்கப்படல் வேண்டும் என்ற கருத்து உலக நாடுகளில் பரவியுள்ளது. பாடசாலையின் வழமை யான கல்வியோடு சேமிப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், சனத்தொகைக் கல்வி ஆகியன தொடர்பான அறிவைப் புகட்டி நாட்டின் பொருளாதார வளர்ச் சிக்குச் சாதகமான மனப்பாங்கையும் வளர்த்தல் வேண்டும். எனவே பொரு ளாதார வளர்ச்சிக்காக கல்வியின் மூலம் மனித சாதனத்திற்கு திறன்களை வழங்கு தல், மனப்பாங்குகளை ஏற்படுத்தல் ஆகிய இரண்டு முக்கியமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

கல்வி வளர்ச்சி பொருளாதாரத் திலும், பொருளாதார வளர்ச்சி கல்வி யிலும் தங்கியுள்ளன. பொருளாதார வளர்ச்சிக்காக மனித சாதனத்தைப் பயிற்றுவதில் கல்வி முறைக்கு முக்கிய கடமையுள்ள அதே வேளையில் கல்வி வளர்ச்சிக்கான மேலதிக நிதியை பொருளாதாரமே வழங்க வேண்டி யுள்ளது. பொருளாதாரம் வளர்ச்சியுற வில்லையாயின் கல்வியை விரிவு செய் வதற்கு வேண்டிய நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாது. அபிவிருத்தியடை யும் நாடுகளை அவதானிப்பின் இந்

நிலைமை தெளிவாகத் தெரியும். அபி விருத்தியடைந்த நாடுகள் பொருளாதார வளர்ச்சி காரணமாக கல்வியிலும் அதிக அபிவிருத்தியை அடைந்துள்ளன. "எனவே கல்வியும் பொருளாதாரமும் ஒன்றி லொன்று தங்கியுள்ளமை தெளிவா கின்றது."

கல்வியின் மீதான செலவை முத லீடாகக் கொள்ளுமிடத்து அதிலிருந்து உடனடியாக நன்மைகளை எதிர் பார்க்க முடியாது. கல்வி முறை திட்டமிடப்படும் போது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைக் கப்பட்டதாய் அமைதல் வேண்டும். கல்விக் கொள்கைக்கும் பொருளாதாரக் கொள்கைக்கும் நெருங்கிய பிணைப்பு இல்லாவிட்டால் பொருளாதார திட்டங் களில் கல்வி முறை தனது முக்கிய பங்கினை ஆற்ற முடியாத நிலை ஏற்படும். ஆகவே பொருளாதார திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான துணைக் கருவியாகக் கல்வி முறை செயற்பட வேண்டியுள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடு களின் தேசிய வருமானத்தின் கணிசமான அளவு நிதி கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டி யிருப்பதால் அந்நிதி இந்நாடுகளின் முக்கிய பிரச்சினையான பொருளாதார அபிவிருத்தியுடனும் ஏதேனும் ஒரு வகை யில் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இந் நாடுகளில் பல்வேறு துறை களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யும் பிரச்சினை பொதுவாக நிதித்தட்டுப் பாட்டின் காரணமாகப் பெரு முக்கியத் துவம் பெற்றுள்ளது. கல்வித்துறை பெருகி வரும் குடித்தொகைக்கேற்றவாறு விரிவு செய்யப்படவேண்டியிருப்பதால் தவிர்க்க முடியாத வகையில் அதிகரிக்கும் கல்விச் செலவைப் பொறுத்தளவில் கல்வி முறை பொருளாதார அமைப்பை மைய மாகக் கொண்டு மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரத் திட்டங் களின் வெற்றிக்குரிய மனித சக்தித் தேவை கள் நிறைவேற்றப்பட வேண்டும். சோவியத் ரஷ்யா பொருளாதார முறைக்குத் தேவை யான திறன்களை வழங்கும் நோக்கு டனேயே இடைநிலைக் கல்வி நிலையங் களையும் அமைத்து பொருளாதாரத்தில் முன்னேறி யுள்ளமை குறிப்பிடக்கூடிய தாகும். கல்வியின் நீண்ட காலத் திட்டங்கள் மூலமே நாட்டு மக்களிடையே புதிய திறன்களையும், புதிய அறிவையும், புதிய மனப்பாங்குகளையும் பரவலாக விருத்தி செய்ய முடியும். கல்வித் திட்டங் களை வரைபவர்கள் பல்வேறு விடயங் களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஒரு பொருளாதார அமைப்பின் எதிர்கால மனிதத் தேவைகளை முன் கூட்டியே மதிப்பிடுவதில் பல பிரச்சினை கள் உண்டு. எதிர்கால மனிதத் தேவைகள் மாறுதல்களுக்கு உள்ளாகக் கூடும். எனவே கல்வித் திட்டம் இவ்வாறான மாற்றங் களுக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் இயல்புடையதாய் விளங்குதல் வேண்டும். நவீன பொருளாதார அமைப்புகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு வகைப்பட்ட அதிக அளவான திறன்கள் தேவைப்படுகின்றன. அவ்வாறான திறன் களின் விருத்தி கல்வித்திட்டத்திலேயே தங்கியுள்ளது. எனவே மாறி வரும் தொழில்

நுட்ப விஞ்ஞான அறிவுக்கேற்ற வகையில் வளர்முக நாடுகள் தொழிலாளர் வகுப் பொன்றை உருவாக்கக்கூடிய நெகிழ் வுள்ள கல்வித் திட்டத்தை எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளன.

ஆதாரங்களை வைத்து நோக்கும் போது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய காரணிகளில் தரமான கல்வி முறையே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததென்று கூறுவதற்கில்லை. உலகின் முதலாவது கைத்தொழில் நாடான பிரித்தானியாவின் சராசரிக் கல்வித் தரம் பிற ஐரோப்பிய நாடுகளைவிடக் குறை வாக இருந்தது. எனினும் ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, சோவியத்நாடு, டென்மார்க் ஆகிய நாடுகள் கூடிய வீதப் பொருளாதார வளர்ச்சியையும் கூடிய வீத கல்விச் செலவையும் கொண்டு விளங்குகின்றன. டென்மார்க்கின் கல்வி முறை அந் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டவட்டமான தொண்டினை ஆற்றியுள்ளது. சோவியத் நாட்டைப் பொறுத்தவரையிலும் கல்வி முறை பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தது. பிற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீதத்திற்கும் கல்விச் செலவு அதிகரிப்பு வீதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்த போதும் இரண்டிற்குமிடையே ஏதேனும் விளைவை உண்டாக்கும் காரணகாரியத் தொடர்பு இருந்ததாகக் கூற முடியாது. ஆயினும் ஒரு பொருத்தமான கல்வி முறையின்றிப் பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியாது என்பதை மறுப்பதற்கில்லை.

கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குவதற்குக் கல்வி முறையை முழுமையாகக் கருத்திற் கொண்டு ஆராயாது அதன் சில பிரிவுகளைத் தனித்து நோக்கலாம். குறிப்பாக சோவியத் நாடு தொழிநுட்பக் கல்வியைப் பொரு ளாதார விருத்திக்கு நேரடி உபாயமாகக் கொண்டு மிக வேகமாக விருத்தி யடைந்தது. பிரான்சில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை (1961 – 1966) நிறைவேற்றுவதற்கு மேலதிக பொறி யியலாளர்கள் தேவைப்பட்ட போது பொறியியற் கல்வியை அதிகரிக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு கல்வியின் ஒரு பிரிவை அபிவிருத்தி செய்யும் போது அதன் விளைவாக முழுக்கல்வி முறை மீதும் தாக்கம் ஏற்படுகின்றது.

ஒரு நாட்டின் சிறந்த பொருளாதார வளம் அந் நாட்டின் கல்வி வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்பை கொண்டதாகும். கல்விக்கான வசதிகளும், வாய்ப்புகளும் அதிகரிப்பதற்கு நாட்டின் பொருளாதார நிலை உயர்தல் என்பது முக்கியமான விடயமாகும். கல்விக்கான பல வாய்ப் புகள் இன்று பரவலாக்கப்பட்டுள்ள நிலை யிலும் இலங்கையைப் பொறுத்தவரை யில் பல்வேறுபட்ட புறக்காரணிகளின் தாக்கங்களினால் பல பிள்ளைகள் கல்வியை இடை நிறுத்திவிடுவதோடு, மன விரக்தியினால் தம் கல்வியை தொடர முடியாமல் புலம்பெயர்ந்து செல் வதையும் காண முடிகின்றது. இதனால் நாட்டின் பொருளாதார நிலையும் மிக மோசமாகப் பாதிப்படையும் எனினும் சாதாரண ஒரு சூழ்நிலையில் கல்விக் கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் போது நாட்டு மக்களது உழைப்பும், தொழில் செய்யும் மனப்பாங்கும் பெருகும் நிலை ஏற்படும் என்பது பொதுவான கருத்தாகும்.

18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத் தொழிற் புரட்சியானது பொருளாதாரத் துறையில் பல மாற்றங்களை ஏற்படுத் தியது. குடிசைக் கைத்தொழில்கள் விரி வடைந்தன. நகரங்கள் தோற்றம் பெற்றன. மக்களின் பல்வேறு திறன்கள் நாட் டங்களிற்கேற்ப தொழில்சார்திறன்கள், தொழில்நுட்பப்பயிற்சி, புதிய கண்டு பிடிப்புக்கள் என்பனவற்றிலும் வளர்ச்சி ஏற்பட்டன. இதற்கேற்ப பொருத்தமான கல்வியை வழங்குவது பாடசாலையின் பொறுப்பாக இருந்தது. அத்துடன் மனித வளத்தை இனங்கண்டு உரிய முறையில் பயன்படுத்தி உச்ச பயனை அடைவதற் குரிய வழிவகைகளை மேற்கொள்வதும் பாடசாலைகளாகும். இதனால் நாட்டின் எதிர்காலத்தைத் திட்டமிட்டு பொருளா தார நிலையில் அதனை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் நாட்டில் பாடசாலை களும், கல்வி நடவடிக்கைகளும் அமைய வேண்டும் எனப்படுகிறது. இதற்கமைய இன்றைய கலைத்திட்டமும் தொழில்கள், திறன்களை வளர்க்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலமான பொருளாதார உயர்ச்சி யையே இலக்காகக் கொண்டு செயற்படு கின்றது.

நாட்டில் வறுமையினால் தடைப்பட்ட எழுத்தறிவின்மையை நீக்கும் பொருட்டு "சகலருக்கும் கல்வி" என்ற அடிப்படை யிலான கல்விச் செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. இவையாவும் பொரு ளாதார ரீதியில் வளர்ச்சிப் போக்கினைக் காட்டின எனலாம்.

ஒரு நாட்டில் கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும் போது நாட்டின் பொருளாதார நிலையில் வளர்ச்சிப் போக்குக் காணப்படும். எழுத்தறிவு, வாசிப்பறிவு போன்றவைகள் விகிதா சாரரீதியாக வளர்ச்சியடையும். கல்விச் சீர்திருத்தங்களின் முக்கிய அம்சமாக குறிப்பிடப்படும் தொழிற் சார்புக் கல்வி சரியான முறையில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் சமூகம், உழைப்பு, வாழ்க்கை என்ற வகையில் மாணவர்களின் உளப்பாங்கு களில் மாற்றங்கள் ஏற்படும்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தீர்மானிப்பதாக அந் நாட்டின் தொழில் அமைப்புகள் காணப் படுகின்றன. நாட்டின் அசாதாரண சூழ் நிலையினால் சில தொழில்கள் கைவி டப்பட்டன. கல்வியிலே குறிக்கப்பட்ட சில தராதரங்களைப் பெற்றவர்கள் சில தொழில்கள் பற்றிய அறிவுடையோராய் இருந்த போதும் தமது படிப்பிற்கேற்ற தொழில் அமையாதவிடத்து எவ்வித தொழில்களும் இல்லாமையினால் குடும் பத்திலுள்ள ஏனையோரில் தங்கியிருந்த நிலையும் உண்டு. தொழில் தொடர்பான தவறான அபிப்பிராயங்களும் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பின்ன டைவை ஏற்படுத்தும்.

இலங்கையில் கல்விக்கும் பொரு ளாதாரத்திற்கும் இடையிலான தொடர்பை நோக்கும் போது இரண்டிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். குடியேற்ற நாட்டு ஏற்றுமதியிறக்குமதி பொருளாதார அமைப்பில் சிக்குண்டு கிடந்தாலும் சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலத்தில் கல்வியினை பரவலாக வழங்கு வதற்குப் போதிய பொருளாதார வளம் இலங்கையில் காணப்பட்டது. எனினும் அவ்வளம் குறையும் போது பொருளா

தாரம் வெளிநாட்டுச் செலாவாணி தொடர்பான பிரச்சினைகள், கற்றவர்கள் வேலை வாய்ப்பின்றி இருத்தல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு கல்வி நல் வாழ்க்கைக்கான எண்ணக்கருவிலிருந்து விடுபட்டு பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு முதலீடாகக் கணிக்க வேண்டியேற்பட்டது. அண்மைக் காலத்தில் பொருளாதாரத்தினை அடைவதற்கான முயற்சிகளில் முறைசார் கல்வியைப் போன்று முறைசாராக் கல்வி, தன்னியல்பான கல்வி என்பனவற்றின் மீது கவனம் ஈர்க்கப்படுவது புலனாகிறது.

எமது நாட்டின் கல்விச் செலவில் பெரும்பகுதியை அரசாங்கமே ஏற்றுக் கொள்கிறது. இதனால் மிகச் சிறந்த கல்வியை பெருந்தொகையானோருக்கு வழங்குவதற்கு திட்டமிட்டு செயற்படும் போது நாட்டில் காணப்படும் பொருளாதாரக் கஷ்டங்கள் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. விசேடமாக பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி வழங்கும் இலங்கை போன்ற நாட்டில் வருடா வருடம் அதிகரிக்கும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருளாதாரம் வளர்ச்சியடையாமையினால் கல்வி அபிவிருத்தியில் பொருளாதாரம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய நாட்டை எடுத்துக் கொண்டால் நாட்டு மக்களது வாழ்க்கை நிலை உயர்வதற்கு பொருளாதார வளர்ச்சி அடிப்படையாகும். நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்கள் இக் கருத்தினை ஆதாரமாகக் கொண்டே உருவாக்கப்பட்ட வையாகும். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க வேகத்தில் நிகழ்ந்துள்ளது. எனினும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பல காரணிகள் இதில் குறுக்கிட்டுள்ளன. இன்று இக் குறுக்கீடுகளை அகற்றி பாரதப் பிரதமரின் 20 அம்சத்திட்டத்தின் வழியே இசைந்த துரித பொருளாதார வளர்ச்சிக்கு நாடு முயன்று கொண்டிருக்கின்றது. தொழிற்றுறை, விவசாயத்துறை ஆகிய இரண்டின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்துவதில் பாரத அரசு ஆர்வங்காட்டி வருகின்றது. கல்வித் திட்டங்களில் நாட்டின் மொத்த ஆக்கத்தை (G.N.P) உயர்த்த உதவும் தொழிற்பாடத் திட்டங்களும் கல்வியினை தொழில்சார்புடையதாக மாற்றும் திட்டங்களும் (JOB ORIENTED VOCATIONALIZED COURSES) இடம் பெறுகின்றன. மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய பண வீக்கத்தை கட்டுப்படுத்தக் கூடிய அறிவினையும், மனப்பாங்கினையும் பழக்க வழக்கங்கள் குறித்தும் தேவையான பல கருத்துக்கள் கல்வியினூடு மாணவருக்கு வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வகையில் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் கல்விச் செயற்பாட்டின் பங்களிப்பு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளப்படுகின்றது. மக்களின் உளப்பாங்குகளின் மாற்றங்கள், எதிர்காலம் தொடர்பான நம்பிக்கைகளும் இலட்சியங்களும் உருவாதல், சிறந்த விழுமியங்கள் சமூகத்தில் போற்றப்படுதல் போன்ற சமூக அபிவிருத்தியோடு தொடர்புடைய பல புதிய பரிமானங்களும் நாட்டின் பொருளாதார விருத்தியோடு தொடர்புடையன. எனவே கல்வியின் மூலம் குறுகிய கால நோக்கங்கள் நிறைவு செய்யப்படு

வதோடு நீண்ட கால நோக்கங்களும் நிறைவேற்றப்படுகின்றன. இதனால் பொருளாதார வளர்ச்சி என்பது மிகவும் துரிதமாக ஏற்படும். இவற்றிலிருந்து கல்விக்கும் பொருளாதாரத்திற்குமிடையிலான இடைவினையுறவு புலப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


❖ சந்திரசேகரன் – சோ(2008) சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள். கொழும்பு, சேமமடு பதிப்பகம்.

❖ இராசநாயகம் – ஜெ(2008) கல்வியின் சமூகவியல், யாழ்ப்பாணம், சுரபி பதிப்பகம்.

❖ முத்துலிங்கம் – ச (1983) கல்வியியல், யாழ்ப்பாணம், கீதாஞ்சலி.


❖ கணபதி – வி(2006) கல்வியின் தத்துவமும் மேலாண்மையும், சென்னை, சாந்தா பப்ளிஷர்ஸ்.

❖ சந்திரசேகரன் – சோ

❖ சின்னத்தம்பி – மா (2006) கல்வியும் மனிதவள விருத்தியும், கொழும்பு, லங்கா புத்தகசாலை.

❖ சந்திரசேகரன் – சோ (2004) கல்வி ஒரு பன்முக நோக்கு, கொழும்பு, உமா பதிப்பகம்.


♣ ♣ ♣



எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால், ஒரு சிலரிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள். உங்களது முழு நம்பிக்கையை அவர்களிடம் வைக்கும் முன், அந்த ஒரு சிலரை நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உண்மையான நட்பு என்பது மெதுவான வளர்ச்சியுடைய ஒரு செடியாகும். அது முழு வளர்ச்சியைப் பெறுவதற்கு முன்னால் துன்பத்தின் அதிர்ச்சியை அனுபவிக்கவும் தாங்கவும் வேண்டும்.

**- ஜோர்ஜ் வாஷிங்டன்.**



# அமுது அடி அடைந்த அப்பர் சுவாமி அவர் வழி பணிசெய்து வாழ்வோம்

**திருமதி. சறோஜினி பாலசுந்தரம்**

*பயிற்றப்பட்ட இந்து சமயம்,*
*(ஆசிரியை)*

தொண்டு செய்வதையே தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர் அப்பரடிகள். நாயன்மார்களுள் நன்கு பழுத்த அனுபவமும் அறிவு முதிர்ச்சியும் கொண்டவரான நாவுக்கரசர் பெருமான் நமக்கு நல்லதோர் வழிகாட்டியாவார். "வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிப்பதன் மூலம் ஆன்ம ஈடேற்றம் பெறலாம் என வாழ்ந்து காட்டியவர் வாகீசர்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா" என எம்மை அழைத்து ஒவ்வொரு நாளும் ஆண்டவன் திருக்கோயிலுக்குச் சென்று புலர்வதன் முன் அலகிட்டு மெழுகுமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி மகிழுமாறு பணிக்கின்றார். அது மாத்திரமன்றி அடியவராம் எங்களுடைய ஒவ்வோர் அங்கத்துக்கும் வேலை கொடுக்கின்றார் அப்பரடிகள். "தலையே நீ வணங்காய்" என்று தொடங்கி கண், காது, மூக்கு, வாய், கை, கால் என்றின்னோரன்ன வற்றுக்கெல்லாம் இன்னென்ன பணிகள் என்று வகுத்துக் கொடுத்திருக்கின்றார். "திருவங்கமாலை" என்று அதற்குப் பெயர்.

சைவ சமயத்தின் மேன்மையை அறியாது சமணத்திலே நாட்டமுற்ற வேளை தமக்கையார் திலகவதி இறைவனை வேண்ட சூலை நோய் கொடுத்து இறைவனாற் தடுத்தாட் கொள்ளப் பெற்ற பெருமையுடையவர் நாவுக்கரசர். மேலும் திருநீற்றின் மகிமையை உலகிற்கு எடுத்தியம்பி சைவத்தை நிலைநாட்டியவர். இந்தத் தாண்டக வேந்தர். சைவத்திலே பிறந்து பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்களாக வாழ்ந்து "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்; தமிழோடிசை பாடல் மறந்தறியேன்; நலந்தீங்கினுமுன்னை மறந்தறியேன்; உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்" என்று நமக்கெல்லாம் நல்ல கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர் திருநாவுக்கரசர் பெருமான். "குறிக்கோள் இல்லாது கெட்டேனே" என்பது இவர் திருவாக்கு. வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். ஓர் இலட்சியம் இருத்தல் வேண்டும். ஒரு நோக்கம் இருத்தல் என்று வலியுறுத்தியவர் வாகீசப் பெருந்தகை.

மனிதனாகப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் ஒரு கொள்கையுடன் வாழ்தல் வேண்டும். அப்போது தான் மனித வாழ்வு நிறைவடையும். நீர்க்குமிழிக்கு நிகரான யாக்கை இப்பூவுலகை விட்டு அழியுமுன்னே ஆவன செய்தல் வேண்டும். கூடுவிட்டிங்கு ஆவி தான் போன பின்னர் யாது செய்ய முடியும்? உயிரோடு இருக்கும்போதே உன்னத காரியங்களைச் செய்து முடித்துவிட வேண்டும். காலம் பொன்னானது, போனால் திரும்பி வராது. ஆகவே இறை தொண்டினை மேற்கொண்டு

சுகானுபவ முத்தியைப் பெறுவதற்கு நாமே முயற்சி செய்தல் வேண்டும்.

"ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து மெய்யும் பொய்யாகி விடு கின்றபோது ஒன்று வேண்டுவன்யான், திருநீறுமிட்டுக் கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவுங் கற்பியுமே" என்ற படி இறுதிக் காலத்திலாவது இறை சிந்தனை ஏற்படுவது நாம் செய்த பூர்வ புண்ணிய பலன். அப்பர் பல அற்புதங் களும் செய்திருக்கிறார்.


அது மாத்திரமன்றி ஓடுஞ் செம் பொன்னும் ஒப்பவே நோக்கிய பெரு மகன் இவர். இவரது பக்குவத்தை அறிய இறைவன் செய்த திருவிளையாடலில் இதுவும் ஒன்று. உழவாரத் தொண்டு செய்து கொண்டு நாயனார் திருப்பணியில் ஈடு பட்டுக் கொண்டிருந்தபோது மண்ணுக் குள்ளே நவரத்தினங்களையும், முத்துக் களையும் பொற்காசுகளையும் வரச் செய்தார். அதனைக் கண்ணுற்ற அப்பர் அள்ள வீசும் புற்களோடு அவற்றையும் சேர்த்து வீசி விட்டார். அவருடைய மனப் பக்குவத்தை அறியவே சிவபெருமான் அவ்வாறு செய்தருளினார். நாயனார் வெற்றியும் கண்டார். நாவுக்கரசர் அழுது அழுதே தொழுது வாழ்ந்த ஒரு மகான். திருக்கைலாயக் காட்சி காணவேண்டும் என்ற இலட்சியத்தினின்றும் சற்றும் வழுவாமல் இறுதி வரை நின்று தம்மாலான மட்டும் முயன்று உடம்பையும் புண்ணாக்கி பின்பு அந்தக் காட்சியைக் கண்டு களிப்புற்றார் என்றால் அவரது பெருமை சொல்லவும் வேண்டுமா? முயற்சி திருவினையாக்குமன்றோ!

அவருடைய குருபூசையைக் கொண் டாடுவது ஒரு புறமிருக்க அவர் காட்டிச் சென்ற மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஆன்ம ஈடேற்றம் காணமுயல்வதே நாம் அவருக்குச் செய்யும் மிகப் பெரியதொரு கைம்மாறாகும்.

♣ ♣ ♣

Life is as tedious as a twice-told tale
Vexing the dull ear of a drowsy man.

- William Shakespeare,
*"King John", Act 3 scene 4*



## முகாமைத்துவகுழு



## ஒழுக்காற்றுக்குழு



# சேனோபில் அணுக்கருவலு நிலையத்தில் ஏற்பட்ட விபத்தும், தடுக்கும் வழிகளும்

திருமதி. அருந்ததி முகுந்தன்
*Dip.in.Teaching*
விஞ்ஞான ஆசிரியர்.

இயற்கைச் சூழலில் காணப்படும் நிலையிலேயே பயன்படுத்தத்தக்க முதன்மைச்சக்தி வளத்தில் கருச்சக்தியும் ஒன்றாகும். கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ்க் கருத்தாக்கங்கள் மூலம் பெறப்படும் கருச்சக்தியைப் பயன்படுத்திப் பெரும்பாலான நாடுகளில் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

கருச்சக்தி என்பது ஓர் அணுவின் கருவில் அடங்கியுள்ள சக்தியாகும். இச்சக்தியைக் கருப்பிளவு, கருஒன்றல் எனும் இரு விதங்களில் பெறலாம். கருவலுநிலையங்களில் (Nuclear power station) கதிர்த் தொழிற்பாட்டு மூலகங்களைப் பயன்படுத்தி கருச்சக்தி பெறப்படும். கருச்சக்தியை உற்பத்தி செய்வதற்காகவும் பிரதானமாக யுரேனியம், புளுட்டோனியம் மற்றும் றேடியம், தோரியம் போன்ற மூலகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இம்மூலகங்கள் எரிபொருட்கள் எனப்படும். இவை மண்ணிலிருந்தே பிரித்தெடுக்கப்படுகின்றது.

கருப்பிளவுகள் மூலம் அதிகசக்தி வெளிவிடப்படுவதுடன், ஆபத்தான கதிர்த் தொழிற்பாட்டுப் பதார்த்தங்களும் தோன்றுகின்றன. இக்கதிர்ப்புக்கள் சுற்றாடலுக்கு வெளியேறுவதைத் தடுக்கத்தக்கதாக, கருவலுநிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றில் ஏற்படும் திடீர் விபத்தால் மனிதனுக்குத் தீங்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

1986 ஏப்பிரல் மாதம் 26ம் திகதி மு.ப 1.23 மணியளவில் சோவியத் யூனியனின் சேர்னோபில் (Chernobyl) எனும் இடத்திலுள்ள கருவளநிலையத்தில் ஏற்பட்ட விபத்து இதற்குச் சிறந்த உதாரணமாகும். இவ்விபத்திற்குக் காரணம் அணு உலையில் உரிய கட்டுமானமும், பாதுகாப்பும் இல்லாமையே ஆகும். இவ்விபத்தே வரலாற்றில் ஏற்பட்ட கருச்சக்தி விபத்துக்களில் மிக மோசமானதாகும்.

கருப்பிளவின் போது அணுக்கருக்கள் நியூத்திரன்களை உறிஞ்சிப் பல கருக்களாக உடையும் அதே வேளை பல நியூத்திரன்களும், சக்தியும் விடுவிக்கப்படும்.


இந்நியூத்திரன்கள் தொடர்ந்தும் வேறு கருக்களை மோதிப் பிளவடையச் செய்யும். இப்பிளவின் போது உருவாகும் திணிவுக் குறைவு பெருமளவு சக்தியாக மாறும். இச் சக்தியே அணுமின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இக் கதிர்த் தொழிற்பாட்டின் போது உருவாகும் வெளித்தள்ளல்கள் ஆபத்தான

முறையில் உலையின் வெளிப்பகுதியில் வெளிவிடப்படும். இவ் ஆபத்தைத் தடுக்க உலைகளில் கவசங்கள் காணப்படுகின்றன. இக்கவசம் காரணமாக கருப்பிளவினால் தோன்றும் கதிர்த்தொழிற்பாட்டுப் பதார்த் தங்களால் மக்களுக்குப் பாரிய தீங்கு ஏற்படுவது தடுக்கப்படுகின்றது. ஆனால், சேர்னோபில் அணு உலையில் இக்கவசம் காணப்படாமையே பாரிய விபத்துக்குக் காரணமாகும்.

கருப்பிளவுக்குட்படுவதால், அதிகளவு சக்தியை வெப்பமாக வெளிவிடப்படு கிறது.

Reactor சூடாகும் போது கட்டுப் பாட்டுக் கோல்கள் சுயாதீனமாகவே மேலதிக நியூத்திரன்களை அகத் துறிஞ்சும். அத்துடன் குளிராக்கி தொழிற் படும் போது உலையானது எப்போதும் குறித்த அமுக்கத்தில் காணப்படும்.




**கருவலு நிலையத்தின் அமைப்பு (அணு உலை)**

அணு உலை உயர்ந்த வெப்பநிலை யில் காணப்படும். அணு உலையில் உள்ள குளிரல் தொகுதி முறையால் உயர் வெப்பநிலை மட்டுப்படுத்தப்படு கின்றது. அதாவது, திரவ நிலையிலி ருக்கும் நீர் கொதிநீராவி நிலைக்கு மாற்றும் செயல் குளிரல் தொகுதியால் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் (Reactor) றியெக்ரர் அதிகளவு கொதி நீராவியையே உருவாக்குகின்றது. கொதி நீராவி நியூத்திரன்களை அகத்துறிஞ்சாது. இதனால், அங்குள்ள நியூத்திரன்களும் குளிராக்கியைப் பயன்படுத்ததாவிடின் அணு உலை அமுக்கத்தில் மாறுபாடு ஏற்பட்டுப் பாரிய விளைவை ஏற்படுத்தும்.

சேர்னோபில் அணு உலையில், விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பொறி யியலாளர்கள் அணு உலையில் பரி சோதனையாகப் பாதுகாப்புத் தொகுதி யைச் செயலிழக்கச் செய்திருந்தார்கள். கட்டுப்பாட்டுக் கோல்களை அகற்றி னார்கள். இதனால் அணு உலை திடீரென அதிகளவு வெப்பமடைய ஆரம்பித்தது.

பொறியியலாளர்களால், வெளியேறிய வெப்பத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அத்துடன் நீரானது நீராவியாக மாறியதால் அணு உலையில் திடீரென அமுக்க வேறுபாடு அதிகரிக்க அதன் கூரையின் மேற்பகுதியை உடைத்து, காற்றலை கதிர்த் தொழிற்பாட்டுப் பதார்த்தங்களை மேல்நோக்கிச் செலுத்தியது. அதிகரித்த கொதிநீராவியால் எரிபொருள் கோல்களில் தாக்கம் ஏற்பட்டது. இதனால், கிரபைற்றுச் சீராக்கி ஐதரசன் வாயுவை வெளியிட்டதால் அது எரிந்து ஒளிர்வை ஏற்படுத்தியது. இதனால், கிரபைற்றுச் சீராக்கி நீண்ட நேரம் எரிந்தது. அத்துடன் மேலதிக கதிர்த் தொழிற்பாட்டுப் பதார்த்தங்கள் வெளியேறியது.

இதன் போது நேரடியாக 56 பேர் உயிரிழந்தனர், ஏறத்தாழ 800,000 பேர் கதிர் வீச்சினால் பாதிக்கப்பட்டனர். 4000பேர் புற்றுநோய் ஏற்பட்டு இறந்தனர். 10,000க்கும் மேற்பட்டோர் புற்றுநோய்க்குள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்தனர்.

சேர்னோபில் அணு உலையின் அலட்சியப்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளாலேயே அணு உலை விபத்து ஏற்பட்டது. எனவே, ஒரு அணு உலையை அமைக்கும் போது அதன் செயற்பாடுகள், அதற்கான உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள், அங்கு பணிபுரியும்' ஊழியர்களது பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்

அத்துடன் அணு உலையில் பாரிய வெப்பத்தைத் தாங்கக்கூடிய சீமெந்துக் கவசங்கள் அமைக்கப்பட வேண்டும். அணு உலையில் நைதரசன்களில் மோதுகைகள், தேவை ஏற்படும்போது குறைக்கக்கூடியதாக வேண்டும். கதிர்வீச்சுப் பதார்த்தங்கள் சூழலுக்குச் சென்றடையாமல் தடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இது போன்ற இன்னொரு விபத்து ஏற்படுவதைத் தடுக்கலாம்.

♣ ♣ ♣





அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்றுதான்.
ஆனால் அறிந்துகொள்ள விருப்பமில்லாமை
அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்.

**- பென்ஜமின் ஃபிராங்ளின்**

# கலையும் ஜீவனோபாயமும்

க. ஸ்ரீநந்தகோபன் B.A, Dip. in Edu
(ஆசிரியர்)

பொதுவாகக் கலைகள் என்பது மனிதன் மனிதனுக்காக மனிதனால் படைக்கப் படும் நிவேதனம் ஆகும். எனவே இவ் வாறான கலை உலகப் பொது நிலையில் வைத்து இனங்கண்டு கொள்ளத்தக்க தாகவும், புரிந்து கொள்ளத்தக்கதாகவும் மனித வாழ்வை வியாக்கியானம் செய்வ தாகவும் அமையும். இவ்வாறான கலை அதன் வளர்ச்சிப் பாதையில் மனிதனு டைய ஜீவனோபாய உத்திகள் கையாளப் பட்டிருப்பதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. மனிதன் தனது அன்றாட வாழ்க் கையில் எத்தனையோ வழிகளின் ஊடே தனது கலைப்படைப்புக்களை நிகழ்த்திய வண்ணமே உள்ளான். ஒவ்வொரு கலைப் படைப்புக்குப் பின்னாலும் அவனது ஜீவ னோபாய உத்தி காணப்படுவதை அவ தானிக்கலாம். மனிதன் ஆதிகாலத்தில் தனது அன்றாட உணவுத்தேட்டத்தை ஆரம்பத்தில் இருந்து இன்று வரை அவனது வாழ்க்கைப் புலம் கலைப் படைப்பும் அதோடு இணைந்த வாழ்வா தாரப் பண்பும் நிறைந்ததாகக் காணப்படு வதை அவதானிக்கலாம்.

கலை என்றால் என்ன? கலைகளின் பரிணாமம் என்றால் என்ன? மனித ஜீவ னோபாயம் என்றால் என்ன? மனித ஜீவனோபாய உத்தி முறைகளாகக் கொள்ளப்படுபவை எவை? அவ் உத்தி முறைகளை எவ்வாறு கையாண்டு கலையை வளர்த்தனர்? அவ்வாறு கையாண்டு பெற்ற கலைக்கான உதார ணங்கள் எவை? என்பவற்றின் அடிப்படை யில் பதிலுறுத்தும் போது கலைகளின் பரிணாமத்துடன் மனித ஜீவனோபாய உத்தி முறைகளின் தொடர்புகளை விளங்கிக் கொள்ளலாம்.

கலை என்றால் என்ன என்று பார்க்கும் போது அறிஞர்கள் பலர் வரையறைகளை முன் வைத்தமையைக் காண்கிறோம். "உணர்வுச் செம்மையால் உயிர்ப் பூட்டும் கோலமே கலை" என்றும், கிறீபிறிற்றெட் பரந்த அறிவுக் கூர்மை யுள்ள கலைஞன் என்பவன் தனக்கு அண்மையில் உள்ள பொருட்களைப் பார்ப்பவனாகவும் உணர்பவனாகவும் இருக்காது அந்தப் பொருளை அதன் உலகப் பொதுமையான நிலைமைகளில் காண்பவனாக இருப்பான். இதன் மூலம் கலை என்பது உலகப் பொதுவான ஒன்றாகிறது. அது மானுடம் தழுவி வருகிறது. இதனையே "மனிதனின் மானுடத்திற்கான நிவேதனமே கலை" என்று கிறீபிறிற்றெட் கூறினார். அன்ன தாசங்கர்ராய் கூறும் போது "கலை என்பது ஒரு சாக்கு, ஒரு வழி, ஒரு ஊடகம், நான் ஏதோ ஒரு சாக்கில் என்னுடைய என்னைத் தருகின்றேன். மற்றவர் அதைப் பெறுகின்றார். தருவதில் எனக்கு இன்பம்; பெறுவதில் அவர்க்கு இன்பம். இன்பம் தருவதும் இன்பம் பெறுவதுமான சாக்கு இருக்கின்றதே இதுதான் கலை என்று கூறுவார். மனித வாழ்புலத்தில் கலை ஒரு அடையாள மாகவும் அதனைத் தமது வாழ்வின் பயனாகவும் வாழ்வின் நோக்கைப் புலப்படுத்தும் சின்னமாகவும் கொள்ளப் படுகிறது.

பரிணாமம் என்று பார்க்கும் போது வளர்ச்சிப் படிநிலையைக் குறிப்பதாக அமையும். கலையின் ஆரம்பம் முதல் இன்று வரை அது தன்பாதையில் எவ்வெவ் வகைகளில் எல்லாம் தடம் பதித்து வளர்ந்து வந்துள்ளது என்பதை உணர்த்தி நிற்கும் சாதாரண மனித வாழ்புலம், அவனது செயற்பாடுகள் அவனது ஓய்வு நேரத்தில் அவனால் ஆற்றப்பட்ட ஒவ் வொரு அம்சங்களும் அவனால் படைக்கப் பட்ட ஒவ்வொன்றும் கலையாக கலைப் படைப்பாக ஆற்றல் மிக்க சமூக வெளிப் பாட்டு அலகாக சமூக இருக்கையைப் புலப்படுத்துவதாக எவ்வெவ் வகைகளில் எல்லாம் வளர்ந்ததோ (நாடகம், சிற்பம், ஓவியம், இசை, நடனம்) அவை ஒவ் வொன்றும் அவனது ஜீவனோபாய உத்தி யைக் கொண்டு வெளிப்பட்டமையையும் நாம் காணலாம்.

ஜீவனோபாயம் என்று பார்க்கும் போது மனிதனுடைய வாழ்வாதாரத் தைக் குறித்து நிற்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது அன்றாட வாழ்க்கைப் பயணத்திற்காக உழைப்பு என்ற வாக னத்தில் ஏறுகின்றான். அவனது உழைப்பு மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தனது வயிற்றுப் பசியையும் அவன் சார்ந்து வாழும் குடும்பத்தின் உறுப்பினர்களின் வயிற்றுப் பசியையும் நீக்குகிறான். இவ்வாறு அன்றாடம் உழைத்து தனது வாழ்க்கையை நடத்தும் நிலையில் அவன் தனது வாழ்வாதாரத்தை நிறைவுடையதாக்கு கிறான். இது பற்றி சி.மௌனகுரு கூறும்போது வாழ்நிலை என்பதும் உற்பத்தி முறையும் உற்பத்தி உறவு களுமே வாழ்நிலைகள் இவ்வாறு செயற் படுகின்ற போது பல்வேறு கலைப்படைப் புக்கள் உருவாகின்றன.

ஜீவனோபாய உத்தி முறைகளாகக் கொள்ளப்படுபவை பற்றிச் சிந்திக்கும் போது மனிதனுடைய உணவுத் தேட்டமும் அதனூடு அவனால் செய்யப்பட்ட ஒவ் வொரு நடவடிக்கைகளும் இதனுள் அடங்கும் ஆதிமனிதன் வேட்டைக்கு ஆயத்தமான பொழுது ஒன்று அவனது நோக்கம் உணவுத் தேவையை நிறைவு செய்வதாக இருந்தது. அவனை அறி யாமலே அங்கு கலை ஒன்று பிறந்தது. வேட்டைக்கு அவன் தன்னைத் தயார்ப் படுத்துகின்றபோது பல்வேறு உபகர ணங்களை ஆக்குகின்றான். கற்கள், கூரிய ஆயுதங்கள், வில், அம்பு என அவை அமைய அவற்றினைப் பயன்படுத்தும் வகையிலும் அதனை நிகழ்த்திப் பார்க் கின்ற வகையிலும் கலைகள் பல்வேறு பரிணாமத்துடன் வளர்வதைக் காணலாம். கருவிப்பயன்பாடு அக்கருவிகளில் உள்ள அல்லது அதன் அமைப்பு அவற்றின் ஒவ் வொரு தன்மைகளும் கலைகளாகவே அமைகின்றன. இவை அவனது ஆற்றலி னாலும் அறிவுக் கூர்மையாலும் தனது அன்றாட ஜீவனோபாயத்துக்கான உத்தி கள் அவனை அறியாமலே பிறப்பதை நாம் இங்கு அவதானிக்கலாம். இவ்வாறு அவனது வாழ்க்கை விருத்தியிலே அவனது ஜீவனோபாயத்துக்காக செய்யப் படுபவை அல்லது செய்யப்படும் ஒவ் வொன்றும் உத்தி முறைகளாக கலையின் வளர்ச்சிப்படிகளில் அமைந்து விடுவதை அவதானிக்கலாம்.

இவ்வாறு மனிதனுடைய வாழ்வாதா ரத்துக்காக செய்யப்பட்டவை அல்லது செய்யப்பட்ட உத்திகள் கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. நாட்டுப்புற மக் களின் இயற்கைச் சூழல் வளமையாக்கம் என்பது இயற்கையில் பெற்றதை மீண்டும் இயற்கைக்கு அளித்து பூமியின் சுற்றுச்

சூழலை சமநிலைப்பாட்டில் வைப்ப தாகும். பயிர்த்தொழில் செய்யும் வளமை உள்ள நிலப்பகுதிகள் மனிதனுடைய தேவையாகின்றது. அத்தகைய தேவை களை நாடியே வளமையான இடத்தை அவர்கள் தேர்வு செய்து கொள்கின்றனர். மனிதனுடைய இயற்கைச் சூழல் வெளி முதலில் அவனது உணவுக்காக (ஜீவனோ பாயத்திற்காக) அமைகின்றன. இயற்கை யில் கிடைப்பதை மீண்டும் கிடைக்கச் செய்யும் செயற்கை முறையை பின்னர் பயிர்த்தொழில் நிலைக்கு வளர்த்தான். இந்நிலையானது ஒரு கலைவடிவமாக மிளிர்வதை நாம் அவதானிக்கலாம். அவன் உணவுக்காகத் தனது தேடலைச் செய்த போது பயிர் உற்பத்தி பற்றியும் அதனோடு இணைந்த கருவி உற்பத்தி களும் ஏற்படுகின்றன. இவை ஜீவனோபாய உத்திமுறைகள் ஆகும். இதனூடாகக் கலைகள் வளர்வதை நாம் அவதானிக் கலாம்.

உணவுப் பொருட்களின் தேவை யானது தினசரி வாழ்க்கைக்குரிய தாகவும், வாரமாகவும், மாதமாகவும், முதற்படி நிலையில் அமைந்தன. பின்னர் அப்பொருட்களை ஆண்டுக்கணக்கில் தன் குடும்பத்தவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் மக்கட் தொகைப் பெருக்கத்தாலும் உற்பத்தி யாக்கும் நிலைக்கு உயர்ந்தான். இக் காலத்தில் புதிய புதிய குடியிருப்புக்களை இயற்கையாகவே அமைத்துக் கொண்டான். இவ்வகையில் அவனால் அமைக்கப்பட்ட அக்குடியிருப்புக்கள் கலை வெளிப்பாடுகள் நிறைந்ததாக அமைவதை நாம் இங்கு காணலாம். அவன் தனது அன்றாட ஜீவ னோபாயத்துக்காக அவனுடைய ஆற்ற லால் தன்னைப் பாதுகாக்க தன்னை ஆறு தல்படுத்த இளைப்பாற என குடியிருப் புக்களை அமைத்தான். வேளான் நிலைக் குள் கருவிகளின் வளர்ச்சி ஏற்பட்டது. இயற்கையின் பொருட்கள் அம்மனிதனு டைய வீட்டைக் கட்டுவதற்குரிய கட்டு மானப் பொருட்களை அளித்தன. தட்ட வெப்பத்திற்கேற்ப வீடுகளை அமைத்தான். வளர்ப்புப் பிராணிகளுக்கும் அவன் வாழும் இடத்திலேயே அவற்றிற்குரிய இடத்தையும் அமைத்துக் கொண்டான். இப்பாண்பாட்டு அம்சங்கள் ஒவ்வொன்றும் மனிதனுடைய ஜீவனோபாயத்திற்காக அவனால் செய்யப்படட வழிகள் இவையே உத்திகளாக அமைகின்றன. இவை கால ஓட்டத்தில் கலை என்ற சொற் பிரயோகம் ஊடாக வளர்ந்தது. கலை வளர்ச்சியின் வளர்நிலையை அல்லது பரிணாமத்தை இவ் உத்திகளின் ஊடாக அவதானிக்கலாம்.

மனிதனுடைய ஒவ்வொரு நடவடிக் கையும் கலை வளர்ச்சிக்கு உரியதாக அமைவதன் வெளிப்பாடாக சிற்பம், ஓவியம், நாடகம், நடனம் கைவினைக் கலைகள் பேன்ற யாவும் அமைவதைக் காணலாம். ஆதி மனிதன் குகைளிலும், மரங்களிலும், ஓவியங்களை வரைந் தான். அதன் அடிப்படை அவனை அறியா மலே கலை வளர்ச்சிக்கு உதவியது அதேபோல் ஆதி மனிதன் தனது அன்றாட ஜீவனோபாயத்திற்காக வேட்டை ஆடி னான் அவை கலைகளாக வளர்ந்தன. நிகழ்த்திக் காட்டுதல் என்ற அம்சம் வழி கலையும் இப்போது நாடகம் என்ற அம்சத்தின் ஊடு ஜீவனோபாயத்துக்காக செய்யப்படும் தன்மையாகவே உள்ளதை நாம் அவதானிக்காலம். இவ்வாறு உரு வான நாடகம் சமூக மாற்றுச் சாதனமாக, நோய்த் தடுப்புக்கருவியாக, சிகிச்சை யாக, பாரம்பரியங்களைக் கடத்தும் சாதனமாக, விழுமியங்களைப் பெறும் சாதனமாக, சமூகத்தைச் சுட்டிக் காட்டும்

ஒரு குறிகாட்டியாக வரலாற்றுப் பொக்கி சமாக, சமயப் பிரசார சாதனமாக, இடுப்பை நிலை நாட்டுவதாக பரிமாற்றும் ஊடகமாக பல பணிகளைச் செய்யும் தன்மையில் நாடகம் சமூகத்தில் முக்கி யத்துவம் பெற்றதொரு கலைவடிவமாக அமைவதை நாம் காணலாம். இங்கு நாடகத்தின் ஒவ்வொரு வகைச் செயற் பாடுகளாக கூறப்பட்டிருந்தாலும் அவை எதற்காகச் செய்யப்படுகின்றன? ஒவ் வொரு மனிதனுடைய வாழ்க்கையும் ஆரோக்கியமானதாக அமைய வேண்டும் என்பதற்கே ஆரம்பத்தில் ஜீவனோபாய மாகப் பயன்படுத்தப்பட்ட வேட்டை நாடகமாகி அந்த மனிதர்களது வாழ் நிலையின் வளர்ச்சிகளிலும் கலை என்ற பரிணாமத்திலும் அதன் உத்தி ஒரே தன்மையிலேயே உள்ளது. குறிப்பாக உணவுக்கு என்பது இன்று உளச்சிகிச்சை யாக நாடகம் பயன்படுத்தப்படுகின்ற வகையிலே இதுவும் அவனது ஜீவனோ பாயத் தன்மையையே காட்டுகிறது.

வரலாற்றுக்கு முந்திய மனிதன் கல், அம்பு, வில் போன்ற கருவிகளைப் பயன் படுத்தினான். இங்கு கணக்குழு உறவு நிலவியது. மனிதன் மாடு, கலப்பை என்பவற்றைக் கருவிகளாகக் கொண்டு வயல் உழும் போது நெல்விளைவித்தல் உற்பத்தியாக அமைந்தது. இப்போது குடும்பம், தந்தை என்ற உறவு நிலை ஏற்பட்டது. இவ்வாறு மனிதனுடைய வாழ்நிலை வேட்டை, மந்தை மேய்ப்பு, விவசாயம் என பல படிகளைத் தாண்டி வாழவேண்டி இருந்தது. ஒவ்வொரு காலகட்டத்திலும் கலைகள் வெவ்வே றாக அமைந்தன. வேட்டை, மந்தை மேய்ப்புக் காலத்தில் கலையும் வாழ்வும் ஒன்றாகவே இருந்தன. உதாரணமாக ஓவியம் ஒன்றை எடுத்தால் ஓடுகின்ற மாட்டின் மீது அம்புகளை எய்வது போன்ற படம் புராதன ஓவியங்களில் காணப்படுகிறது. இதன் நோக்கம் இவ் ஓவியம் வரைவதன் மூலம் இலகுவாக மிருகம் தமக்கு அகப்படும் என நம்பினர் அங்கு மிருகத்தை கலை என்ற உணர் வோடு கீறவில்லை தேவை கருதியே மனி தனுக்கு மிருகத்தின் படத்தை வரைந்தான். இது அவனது ஜீவனோபாய உத்தி ஆகும். மழை பெய்வது போல நடனம் ஆடினால் மழை பெய்யும் என நம்பியே மனிதர் ஆடினர். இங்கெல்லாம் கலை வேறு வாழ்வு வேறு என்றில்லை கலையே வாழ்வாக அமைவதைக் காணலாம்.

இன்று நாம் அழகிய சிலைகளை சிலைகள் என எண்ணாமல் ஆண்டவன் என எண்ணி வழிபடுவதும் இப்பண்டைய நிலைகளின் எச்சங்களேயாம் கரை வலை இழுக்கும் போது இழுப்போர் ஏலேலோ பாடுகின்றனர். தாலட்டும் போது தாய் “ஆராரோ” பாடுகிறாள் இங்கு இப்பாடல்களைக் கலை என்று எண்ணி இவர்கள் தனியாக அதற்கு ஒரு இடம் ஒதுக்கிப் பாடுவதில்லை. இங்கு செய்யும் காரியமும் பாடலும் வேறு வேறாயில்லை இரண்டும் ஒன்றாகவே உள்ளன. இவ் வண்ணமே புராதன காலத்தில் செய்யும் தொழிலும் எத்தொழிலை மகிழ்ச்சியோடு செய்யப் பயன்பட்ட ஆடல் பாடல்களும் வெவ்வேறாயிருக்கவில்லை. வாழ்வும் கலையும் பண்டுதொட்டு ஒன்றாய் இருந் தமைக்கு இவைகள் இன்றைய சான்று களாகும். இவ்வாறான தன்மைகளே அன்றைய ஜீவனோபாய உத்திகளாக வும் காணப்பட்டன.

பண்டைய சமூகங்களிடையே மதகுரு சமூகத்தவனாக இருந்து பல கருமங் களைச் செய்தான். வேட்டைக்கு போகும்

முன்னர் நடனத்திலீடுபட்டனர். இவ்வாறு மதகுருவாக நடத்தியவர் தன்னை வேறுபடுத்திக் காட்ட முகமூடி அணிந்தார். பின்பு ஆடவல்லான் தோன்றினான் இவ்வாறு உருவானவனே நடிகன் என்பர் சமூகவியலாளர். சடங்குகளில் அடியாகக் கதைகளும் காலப்போக்கில் அவை ஐதீகங்களாக மலர்ந்தன. இதனூடு சங்கீதம், ஓவியம், நாடகம், இலக்கியம் போன்ற கலைகளும் தோன்றின.

வளர்ச்சி நிலையில் கலையானது சமூகப்படிநிலைகளிலே வர்ணப் பாகுபாட்டின் வழி ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு வகைக் கலைகளைப் பயன்படுத்த தமது வாழ்வையும் கலையையும் செம்மை, ஒழுங்கு, திறமை என்ற தன்மையிலே ஆக்குவதை நாம் காணலாம். உதாரணமாக தமிழ் நாட்டின் நடனக் கலையை எடுத்துக் கொண்டால் புராதன துணங்கைக் கூத்து வேலனாட்டம், முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை போன்ற ஆடல் முறைகள் இருந்தன. மகளிர் துணங்கைக் கூத்து ஆடினர். வேலனாட்டம் நோய் தீர்க்க வேல் தாங்கிய ஒருவர் ஆடும் ஆட்டம். முன்தேர் குரவை, பின்தேர் குரவை போரில் வெற்றிபெற்ற வீரர்கள் களத்தில் ஆடிய ஆடல்களாகும். இவை கூட வாழ்க்கை வேறு ஆடல் வேறு என்றில்லைதமது வாழ்வுமாகிய ஜீவனோபாயத்திற்காக ஆடல் பயன்படுத்தப்பட்டது. பின்பு வர்க்கத்தால் தனத்தனி சமூகங்களுக்கு இவை மாறின. இதனை அண்டியவர்க்கும் பாணர் பொருனர் போர் நோக்கி வாழ்வாதாரமாக ஆடல் மாறியது அவை சிறந்த முறையில் ஆடப்பட்ட தன்மையை சங்க நூலில் கலித்தொகையில் பரத்தையர் ஆடர் மகளிர் ஆகக் கைக்கொள்ளப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் பரத்தையர் குலத்திலே மாதவி காணப்படுகிறாள். இவ்வகையிலே ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு கலைகளை திறனுடனும், செம்மையுடனும், ஒழுங்குடனும் ஆக்கி தமது வாழ்வாதாரத்தையும் ஏனையவர்களின் வாழ்வாதாரத்தையும் செழுமைப்படுத்த இவ் உத்தி முறைகளைக் கையாள்வர்.

இவ்வாறாக கலைகளின் பரிணாமத்திற்கு மனித ஜீவனோபாய உத்தி முறைகள் பயன்படுத்தப்பட்டமையை நாம் காணலாம். உணவுக்காக, இருப்பிடத்திற்காக, தனது ஆடைக்காக, அவன் ஏற்படுத்திக் கொண்ட ஒவ்வொரு அம்சமும் கலை அம்சமாக அமைந்தன. அவ் அம்சங்கள் ஒவ்வொன்றும் வர்க்கம் சார் அடிப்படைகளாக மாறிய நிலையில் அவை செம்மை, ஒழுங்கு, ஒத்திசைவு என்பன ஏற்பட்டு வளர்ந்து வருகின்றது. இந்த வளர்ச்சியும் கூட அவனது ஜீவனோபாயத்திற்கான உத்திகளாகவே அமைகின்றன. அவ்வகையில் மனிதன் எடுத்துக் கொண்ட ஜீவனோபாய உத்திகள் கலைகளின் பரிணாமத்திற்கு வித்திட்டன என்றால் மிகையாகாது.

♣ ♣ ♣

# "யாதும் ஊரே யாவரும் கேளிர்"

## அன்றும் இன்றும்

**திரு. ந. குகபரன் B.A. (Hons), Dip.in Edu.**
*ஆசிரியர்*

சங்ககால இலக்கியங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் வரலாற்று ரீதியான தொன்மையை மட்டுமன்றி, நெறிமுறைப் பட்ட வாழ்வியல் கட்டமைப்பையும் உணர்த்தி நிற்கின்ற பெருமை பெற்றவை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிக வளர்ச்சியின் தொடக்க நிலையில் வேறுபட்ட அரசியல் பொருளாதார பண் பாட்டுப் புலத்தில் தோற்றங்கண்ட இவ் விலக்கியங்களில் பெரும்பாலானவை பிற்காலத்தில் தொகுக்கப் பெற்று நூலுரு வெய்தியனவாகும். வாய்மொழி இலக்கிய மரபை உணர்த்தி நிற்கும் தன்மை கொண்ட இச் சங்க கால இலக்கியங்களில் புறநானூறு தலையாயது. பண்டைய வாழ்வியல் முறையின் அம்சங்கள் குறித்தும், அரசியல் பொருளாதார பண்பாட்டுக் கூறுகளைக் இணங்காண்ப தற்கும் துணையாய் நிற்கும் தன்மை புறநானூறிற்குண்டு. இவ்விலக்கியத்தில் கணியன் பூங்குன்றனாரால் பாடப் பெற்ற "யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்னும் பாடல் பலரது கவனத்தையும் ஈர்த்த பெருமைக்குரியது. இவ்வகையில், இப்பாடல் எழுச்சி பெற்ற பின்னணியை யும், இன்றைய சூழலில் அப்பாடல் பொருள் கொள்ளப்படும் முறையினைக் குறித்தும் நோக்குவதாய் இக்கட்டுரை அமைகிறது.

சங்ககாலத்தை ஆய்வு செய்தோர் அன்றைய நிலைமாறு கால கட்டங்களை விரிவாகக் கூறியுள்ளனர், நாகரிகம் வளர்ச்சியடைய உற்பத்திச் செயற்பாடு களும் சொத்துப்பற்றிய சிந்தனைகளும் வலுப்பெற, இனக்குழு வாழ்வியலில் இருந்து நிலவுடைமை நோக்கிய நகர்வு நடைபெற்ற சூழலையும் பதிவாக்கியுள் ளனர். இவ்வகையில் நெருக்கடிகள் நிறைந்த சங்ககாலத்தில் புலவர்கள் ஆளும் வர்க்கத்திற்கு அனுசரணை யாகவும், சில வேளைகளில் அரசர்களின் மக்கள் விரோதப் போக்கு, புலவர்களைப் பேணா நிலை போன்றன கண்டு எதி ரான வகையிலும் செயற்பட்டுள்ளனர். சங்ககால இலக்கியங்களில் இவற்றிற் கான சான்றுகள் விரவியுள்ளன. பூங்குன் றனாரை நோக்கின் அவர் அதிகார வர்க்கங்களை வியந்து பாடாது மனித விழுமியங்களை முன்நிறுத்தி கவி புனைந்தவராகவே அடையாளங் காணப் படுகிறார். போர்கள் மலிந்த சமூகக் களத்தில் அதிகாரப் போட்டிகள் தலை யெடுத்து அரசியல் பொருளாதார, தனி மனித நலன்களுக்காக முரண்பாடுகள் வலுப்பெற்ற புறநிலையிலேயே பூங்குன்ற னாரின் பாடல் பிறந்துள்ளது. வாழ்வு குறித்தான தனது பார்வையை வெளிப் படுத்துவதாய் அமைந்த "யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற பாடல் ஆழ்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண் டுள்ளது.

**"யாது மூரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**

**நோதலுந் தணித்தலு மவற்றோரன்ன**
**சாதலும் புதுவ தன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்**
**இன்னா தென்றலு மிலமே மின்னொடு**
**வானந் தண்டுளி தலைஇ யானது**
**கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர் வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉ மென்பது திறவோர்**
**காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்**
**பெரியோரை வியத்தலு மிலமே**
**சிறியோரை யிகழ்த லதனினு மிலமே "**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் சிந்தனையானது அனைவரையும் ஒருங்கு நோக்குந் தன்னை கொண்டது. சங்க காலத்தில் இடையறாது முன்னெடுக் கப்பட்ட போர்கள், அவற்றுக்கான முன் வைக்கப்பட்ட காரணங்கள், தமிழ்ச் சமூகம் கூறுபட்டுப் போன நிலை பூங்குன்றனார் போன்ற புலவர்களையும் வருத்தியிருக்கும் இவற்றின் பின்னணி யில் அனைவரும் உறவுகளே என்னும் உணர்வை அழுத்தமாய் வெளிப்படுத்தும் காலத்தின் குரலாக இப்பாடல் வெளிப் பட்டிருக்க வேண்டும்.

இப்பாடல் குறித்து இன்றைய ஆய்வா ளர்கள் பல்வேறு கோணங்களில் தாம் சார்ந்த கருத்து நிலைகளை மையப் படுத்தி விளக்கங்களை முன்வைத்துள்ளனர்.

**" மக்கள் இனம் முழுவதும் நலம் பெறல் வேண்டும் அனைவரும் இன்புற்று வாழவேண்டும் என்ற கொள்கை தமிழரிடையே பரவியதனாலேயே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மையும் உண்டானது"**

என பேராசிரியர் சு. வித்தியானந்தன் இப்பாடலின் தோற்றத்திற்கான பின் னணியை விளக்கியுள்ளார். இதே பாடலை பேராசிரியர் க. கைலாசபதி நோக்கி யுள்ள பார்வை வித்தியாசமானது. அவர்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் தத்துவ நோக்கானது கணியன் பூங்குன்றனார் எனும் புலவரின் கற்பனை யில் பிறந்ததன்று குல மரபுகள் தனித்தனி யாகக் குறுகிய வரம்புக்குள் வாழ்ந்த நிலை போய், அரசுகளும் தேச உணர்வும் தோன்றும் போதே யாவரும் கேளிர் என்னும் பரந்த மனப்பான்மையையும் உதிக்கிறது"

எனச் சுட்டியுள்ளார்.

குறுகிய குலமரபுகள் உடைந்து அரசு உருவாகும் போது அனைத்தையும் ஒருநிலைப்படுத்தும் தேவை உருவா கின்றது என்பது யதார்த்தமானதே. அதேவேளை 'ஒருநிலைப்படுத்தல்' என்பது அரசியல் மயப்பட்ட அதிகாரவர்க்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஒலிக்கப்பட்ட குரலா, அன்றி போரினால் துயருற்ற நிலையில் முரண்களற்ற பொது மையைக் குறித்தெழுந்ததா என்ற கேள்வி களுக்கு விடைகாணல் பிரதானமாகும். இன்றைய உலகமயமாக்கலின் விளை வாக வளர்ச்சியடைந்த நாடுகள் தமது நலன்களை முன் நிறுத்தி செயற்படும் வேளைகளில் 'தேவைக்கு மட்டும் இவ் ஒருமைப்பாடு பற்றிய கோஷத்தைக் கையாள்வதைக் காணமுடிகிறது. உலகில் நீண்ட வரலாற்றுப் பழமை கொண்ட இனங்களின் இருப்பை, அவை தம் அடையாளங்களைச் சிதைப்பதற்கும் கூட இவ்வாறான 'சர்வதேசியம்சார்' கருத்துக்கள் பயன்படுகின்றன. பின் நவீனத்துவம் (Post modernism) சார் சிந்தனைகளின் பின்னணியிலும் கூட இக்கருத்தியல் செறிந்திருப்பதை இனங் காணமுடியும். வரையறுக்கப்பட்ட மனித

வாழ்வில் அதிகார உருவாக்கம் விரிவான வகையில் நிலை பெறும் போது போர்க் களற்று, உயர்ந்த புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் பாடலை புலவர் பாடியிருக்கக் கூடும் எனக் கருதுவது பொருத்தமானதாக உள்ளது. அதே வேளை இன்றைய சூழல் புறநிலைகள் ஊடாக அன்றைய நிலையை நோக்குவதில் உள்ள இடர்களையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

வேதனைகள் மலிந்த சமூகத்தில் மனதை ஒருநிலைப்படுத்தி செம்மையாக வைத்துக்கொள்வதன் உளவியல் அறிகையை பூங்குன்றனார் தெளிவாக உணர்ந்துள்ளார். "தீதும் நன்றும் பிறர் தரவாரா", ''நோதலுந் தணிதலும் அவற் றோரன்ன ''என்னும் பாடலடிகள் பிரச்சினைகளுக்கு ஏதோ ஒருவகையில் நாமே காரணம் என்பதையும் , துன்பப்படுத்தலும் அது தீர்த்தலும் அவற்றை ஒத்தன என்று சுட்டியுள்ள பாங்கு சிந்திக்கத்தக்கது.

எப்பொழுதோ ஒருமுறை நிச்சயமாய் வரும் மரணத்திற்காக தினமும் எம்மைச் சிதைப்பது பொருத்தமற்றது. அதேவேளை

**"வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே**
**முனிவின் இன்னா தென்றலு மிலமே"**

எனும் அடிகளின் மூலம் வாழ்க்கையை இனியது என்று கொண்டாடும் இயல்பு அற்று, வெறுப்பு வந்த வேளை இன்னாதது என இருத்தலுமற்று வாழ்வோம் எனச் சுட்டியுள்ளார். பூங்குன்றனாரிடம் 'விதி' குறித்த நம்பிக்கையும் இருந்துள்ளது.

**"கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்**
**முறைவழிப் படூஉம் "**

எனும் அடியில் வாழ்க்கையின் திசையைத் தீர்மானிப்பதில் மனித இயலுமைக்கு அப்பாற்பட்ட சக்தியின் சுழலைக் காட்டியுள்ள பாங்கு முக்கியத்துவம் உடையதாகும். கல்லை மோதி ஒலிக்கும் பேரியாற்றில் நீரின் போக்கிற்கு ஏற்ப நகரும் மிதவை போல உயிர்வாழ்வின் பயணம் அமையும் எனவே யாவற்றிலும் விதியின் பலமே பெரிது என ஆறுதலடையும் தன்மை இங்கு வெளிப்படுகிறது. பூங்குன்றனார் சமண சமயக் கருத்தியலில் கவரப்பட்டவர் என ஆய்வாளர் பலர் சுட்டுவது இங்கு குறிப்பிடத் தக்கதாம்.

சங்க காலத்தின் பிற்பகுதியில் போரினூடாக சடுதியாக மேற்கிழம்பியவர்கள் தம்மை பெரியராக அடையாளப்படுத்திய போது நேர்மையான வழியில் நடந் தோர்க்கு அது பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆகவே அம் முரண்களிலிருந்து தேறுவதற்கு ஊழ் பற்றிய கருத்தியல் ஆறுதலைத் தந்திருக்கக் கூடும். வாழ்வு பற்றிய தெளிவிற்கு " திறவோர் காட்சியின் தெளிந்தனம்" எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார். நன்மை தீமைகளின் வகையறிந்தோர் திறவோர் ஆவர். வாழ்க்கையை அதன் இயல்பான நிலையில் தன்னிலை இழக்காது அணுகுவதையே பூங்குன்றனார் விரும்பியுள்ளார். நெருக்கடியில் அமிழ்ந்து போகாதிருக்க விதி பற்றிய தெளிவு உதவும் என்பது பூங்குன்றனாரின் கொள்கை.

**"ஊழின் பெருவலி யாஉள மற்று ஒன்று**
**சூழினும் தான்முந் துறும்"**

என வள்ளுவரும் ஊழ்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சங்ககாலம் தமிழர்கள் தம் அடையாளங்களை தக்கவைத்த, வீரம் வெளிப்பட்ட தமிழ் வளர்ந்த காலம் எனினும்

தொடர்ச்சியான போர்கள் வாழ்வின் இயல்பு நிலையை சிதைத்திருக்கும் என்பதை நாம் மனங்கொள்ள முடியும் கற்றறிந்த புலவர்கள் அரசர்களையும், நிலக்கிழார்களையும் புகழ்ந்து பாடினார்கள். ஆனால் இப்பண்பிலிருந்து பூங்குன்றனார் விலகியே நின்றுள்ளார். “பெரியவர்களை பாடி அன்றைய அரசியல் நெருக்கடியில் சிக்குவதை புலவர் விரும்பவில்லைப் போலும்.

**“பெரியோரை வியத்தலும் இலம்**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”**


எனும் பாடல்கள் பூங்குன்றனாரின் உள நிலையைத் தெளிவாகக்காட்டுகின்றன.

இவ்வகையில், போர்கள் நிறைந்த சங்ககாலச் சமூகத்தில் அமைதியை அவாவிய குரலாய் தமிழர் தம் விழுமிய சிந்தனைகளின் வெளிப்பாட்டாய் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பாடல் அமைந்துள்ளது. தற்காலத்தில் அதிகாரப் போட்டிகள் வலுப்பெற்றுள்ள சூழலில் இனத்தாலும், மதத்தாலும் மொழியாலும் இன்னும் எதத்னையோ கூறுகளாலும். உலகம் சிதறுண்டுள்ள நிலையில் உலகிற்கு உண்மையான ஒற்றுமையை எடுத்துச் சொல்லும் மந்திரமாக கணியன் பூங்குன்றனாரின் பாடல் உள்ளது. துயரம் நிறைந்த இனமாய் நொந்து போயுள்ள தமிழர்கள் தமது வரலாற்று இயங்கியலில் கண்டுவந்த பிரச்சினைகள், அவற்றைத் தாண்ட மேற்கொண்ட எத்தனங்களின் குறியீடாகவும் பூங்குன்றனாரின் பாடலைக் கொள்ள முடியும்.

♣ ♣ ♣

All the religions of the world, while they may differ in other respects, unitedly proclaim that nothing lives in this world but Truth.

**- Mohandas Gandhi**



நீங்கள் ஒரு நேர்மையான மனிதராக ஆகிவிடுங்கள், உலகில் ஒரு போக்கிரி குறைந்துவிட்டான் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

**- தாமஸ் கார்லைல்**

உலகிலுள்ள மிகச் சிறந்த, மிக அழகான பொருள்களைக் காணமுடியாது. தொட்டுணரக்கூட முடியாது. அவ்றறை இதயத்தால் உணர வேண்டும்.

**- ஹெலன் கெல்லர்**

# வியத்தகு உயிர்த் தொழிநுட்பம்

**கு. தயாபரன்**
*பயிற்றப்பட்ட விஞ்ஞானம்,*
*ஆசிரியர்.*

நுண்ணுயிர்களை பயன்படுத்தும் முறைகள் தொன்மையான காலங்களில் இருந்தே மக்களால் பின்பற்றப்பட்டது. தும்பு தயாரிப்பு, தயிர், வினாகிரி, தோற் பொருட்கள், தயாரிப்பின் போது நுண் ணங்கிகள் பயன்பட்டன.அவை அப்போது நுண்ணங்கிகளின் பயன்கள் என அறிந் திருக்கவில்லை. வைரஸ்களினால் ஏற்படும் நோய்களை தெய்வக்குற்றங்கள் தெய் வங்களினால் ஏற்படும் நோய்கள் எனவும் நம்பினர். "அலக்சாண்டர் பிளமிங" மேற் கொண்ட ஆய்வுகளினால் Penciline கண்டறியப்பட்டது. இதுவே உயிர்த் தொழில் நுட்பத்தின் தொடக்கம் எனலாம். உயிர்த் தொழில்நுட்பமானது தற்போது முன்னேற்றம் அடைந்துவரும் துறை யாகவும் உள்ளது.

**நவீன உயிர்த் தொழிநுட்பம்**

தற்போது உயிர்த்தொழில்நுட்பம் பின்வரும் துறைகளில் பயன்படுத்தப்படு கின்றது.

1. விவசாயம்
2. மருத்துவம்
3. கைத்தொழில்

உயிர்த் தொழில்நுட்பமானது பின்வரும் பிரதான துறைகளாக்கப்பட்டுள்ளது.

1. நுண்ணங்கி உயிர்த் தொழில்நுட்பம்
2. முலக்கூற்று உயிர்த் தொழில்நுட்பம் – மூலக்கூற்று உயிர்த்தொழில் நுட்பம் மிகவும் முன்னேற்றமான துறை யாகும்.

**விவசாயத்தில் உயிர்த்தொழிநுட்பம்**

அவரைக்குடும்ப தாவர வேர்களில் காணப்படும் Rhizobium இன Bactria களினால் வளிமண்டல $N_2$ ஆனது $No_3^-$ (நைதிரேட்கள்) ஆகப் பதிக்கின்றது. தாவரங்களிற்கு N இன்றியமையாத ஒரு மூலகமாகும்.தா்வரங்கள் நேரடியாக $N_2$ ஐ உள்ளெடுப்பதில்லை $No_3$- அல்லது $NH_4^+$ என்பது (அமோனியம்) என்ற வடிவத்திலேயே உள்ளெடுக் கின்றது. மேற்படி செயன்முறையானது இயற்கை யானது. இச் செயன்முறையின் மூலம் செயற்கையான முறையில் பின்வரும் தேவைகளிற்கு பயன்படுகின்றது.

1) Rhizobium இல் உள்ள பரம்பரைப் பதார்த்தத்தை பொருளாதார முக்கி யத்துவம் வாய்ந்த பயிர்களிற்கு வழங்கி வேர்ச்சிறுகணுக்களை விருத்தி செய்தல்.
2) சேதனப் பொருட்களைத் தயாரிக்கும் மேம்படுத்தப்பட்ட (Bactria) பயன் படுத்துதல் இதனால் N பதிக்கப்படும்.
3) பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக் கப்பட்ட வினைத்திறனான Rhizobium அறிமுகம் செய்தல்.

**உயிர்ப்பீடை நாசினிகள் தயாரித்தல்**

இரசாயன பீடை நாசினிகளைப் பயன்படுத்துவதனால் சூழல் மாசடைத லுடன் மனிதனின் உணவுக்கால்வாய், சுவாசத் தொகுதிகளில் உள்ளெடுக்கப் பட்டு உபாதைகள் ஏற்படலாம். அதிக மான கிருமி நாசினிப் பாவனையின்

விளைவாக புற்றுநோய்கள் ஏற்பட லாம்.இவற்றை இழிவளவாக்குவதற்கு உயிர்ப்பீடை நாசினிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Bacillus இனத்தைச் சேர்ந்த சில Arthropoda பீடைகள் கட்டுப்படுத்தப்படுகின்றது. Bacillus இன Bacteriaகள் அழுகள் வளரிகளாகக் காணப்பட்டு பூச்சிகளின் உணவுக்கால் வாயை அழுகச் செய்யும்.

### களை கொல்லிகள்

### கைத்தொழிலில் உயிர்த்தொழிநுட்பம்

**1) உலோகப்பிரித்தெடுப்பு**

உலோகத் தாதுக்களில் இருந்து வன் தாழ்த்தல் முறையில் பிரித்தெடுக்கப்படும் உலோகங்கள் செறிவு அதிகமான உலோ கத்தாதுக்களில் இருந்தே பிரித்தெடுக் கப்பட வேண்டும். உலோகப் பிரித்தெடுப் பின் போது கழிவாகும் செறிவு குறைந்த உலோகத்தாதில் இருந்து உயிரியல் உலோகப் பிரித்தெடுப்பின் மூலம் உலோ கங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. இவற் றிற்கு இரசாயனப் பகுப்பு Bacteria கள் பயன்படுகின்றன. விலை அதிகமான பொன், வெள்ளி, செப்பு போன்றன Thio bacillus இன Bacteria கள் பயன்படு கின்றன.

**2) ஆடைக்கைத்தொழில்**

துணிவகைகளை தூய்மையாக்கு வதற்கு உயிரியற் தூய்மையாக்கிகள் பயன்படுகின்றன. அதாவது நுண்ணங்கி களினால் சுரக்கப்படும் நொதியங்களி னால் ஒட்சியேற்றச் செயன்முறையின் மூலம் இது சாத்தியமாகின்றன.

உதாரணமாக:- புறத்தியேசு, இலிப்பேசு போன்ற நொதியங்களாகும். இவை மேம்படுத்தப்பட்ட Bacteria க்களினால் சுரக்கப்படுகின்றன.

### மருத்துவத்துறையில் உயிர்த்தொழில் நுட்பம்

**நுண்ணுயிர் கொள்ளிகளின் கண்டுபிடிப்பு**

மனிதருக்கு அதிகம் தொற்று நோய் களை உருவாக்கும் நோயாக்கிகள் Bacteria ஆகும்.இவற்றைக் கட்டுப்படுத்து வதற்கு நுண்ணுயிர்க் கொள்ளிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. முதல் வரவாகும் மேம் படுத்தப்பட்ட அங்கிகளில் இருந்து இவை தயாரிக்கப்படுகின்றன. streptomyees இன Bateria களினால் streptomycin இம் tetracycline ம் கண்டறியப்பட்டன.

### மூலக்கூற்று உயிர்த்தொழிநுட்பம்

மேலே கட்டுரையில் விபரிக்கப் பட்டவை நுண்ணங்கி உயிர்த்தொழி நுட்பமாகும். இதன் முன்னேற்றமான துறையே மூலக்கூற்று உயிர்தொழில் நுட்பமாகும். உயிர் இரசாயனத்தின் அடிப் படைக்கூற்றான DNA இல் மாற்றங்கள் செய்யப்படுதலே இதன் அடிப்படை யாகும். இதன் வளர்ச்சிக்கு பிறப்புரிமை பொறியியல் முறை அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. பரம்பரை அலகுகள் என்ப னவே பிறப்புரிமை அடிப்படையாகும். இதில் காணப்படும். Genomes மாற்றப் படுகின்றது. இத்தொழில்நுட்பத்திற்கு Escherichiacoli எனும் Bacteria பயன் படுத்தப்படுகிறது. இப்படி மரபானது மாற்றப்பட்ட Bacteria களிலில் இருந்து மனிதனிற்கு தேவையான இன்சுலின் GH என்பன பெறப்படுகின்றது.

பாரம்பரியமாக மாற்றியமைக்கப் பட்ட விலங்குகளில் இருந்து சிறப்பான மனிதர்களிற்குத் தேவைப்படும் புரதங் களை உருவாக்கும் மாடு, ஆடு, இனங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

**உயிர்த் தொழிநுட்பத்தின் பாதக விளைவுகள்**

மரபணுக்கள் மாற்றப்பட்டு உயிரினங்கள் உருவாக்கப்படுவதால் பல பாதகமான விளைவுகளையும் விஞ்ஞானம் எதிர் கொள்ள நேரிடுகின்றன. மரபணு மாற்றங்கள் விகாரங்களை ஏற்படுத்துவதால் அங்கிகள் அழியும் சாத்தியங்கள் உள்ளன. மரபணு மாற்றங்களை தீய வழிகளில் பயன்படுத்தும் புல்லுருவிகள் உயிரினங்களை அழிக்க இவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்புக்கள் உள்ளது. இறைவனின் படைப்புக் கொள்கைக்கு இது முரணாக அமைவதால் நெறிமுறை பிழைத்த மக்கள் கூட்டம் உருவாகும் வாய்ப்பு உள்ளது. மரபுரீதியான பயிர் இனங்களின் வித்துக்கள், தாவரங்கள், விலங்குகள் அழிவை எதிர் நோக்கலாம்.

மேற்படி பல விளைவுகள் ஏற்பட்டாலும் அவற்றை சீர் செய்வதிலும் விபத்துக்களைத் தடுப்பதிலும் விஞ்ஞானம் வெற்றி காண்பதன் மூலம் மனித குலத்துக்கு நன்மைகளை உருவாக்கும் உயிர்த் தொழில்நுட்பத்தை வளர்ப்பது எல்லோரது பொறுப்பாகும்.

♣ ♣ ♣

**ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும் திறமையிலும் வெறும் 25% மட்டுமே தனது வேலைக்குச் செலவழிக்கிறான். தங்களது திறமையில் 50%க்கு மேல் செலவழிப்பவர்களை இந்த உலகமே பாராட்டுகிறது. 100% திறமையையும் அர்ப்பணிப்பவர்களை இவ்வுலகம் தலைவணங்கிப் போற்றுகிறது.**

**- ஆன்ட்ரூ கார்னெஜி**

Always forgive your enemies - nothing annoys them so much.

**- Oscar Wilde**



# இன்றைய நவீன கல்வி தொழில்நுட்பமும் கற்றல் - கற்பித்தல் அபிவிருத்திச் செயற்பாடுகளும் - ஓர் பார்வை


**திருமதி. சுதா ரமேஷ்** *B.Sc, Dip. in. Ed.*
ஆசிரியை.

கல்வித் துறை இன்று புதுப்பரிமாணத்தின் கீழ் நோக்கப்பட்டுள்ளது. அதன் விரிவு – உள்ளார்ந்த தன்மை – நுணுக்கம் என்பன முதன்மைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன.

இதில் கல்வித் தொழில்நுட்பம் என்பது ஒரு பரந்த பாடத்துறையாகும். இது உளவியல், தொடர்பாடல் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் என்பனவற்றைக் கொண்டிருக்கும்.

கல்வித் தொழில்நுட்பம் எனப்படுவது பல்வேறு கட் புல – செவிப்புல சாதனங்களை மட்டும் குறிக்கின்றது. இக்கருத்து தவறானது.

கல்வித் தொழில்நுட்பத்தின் உப – பிரிவாக கட் புல – செவிப்புல சாதனங்கள் அமையும்.




கல்வித் தொழில்நுட்பமானது பின்வரும் இயல்புகளைக் கொண்டது.

1. கல்வியின் உள்ளீடு – வெளியீடு – செயற்பாட்டு விடயங்களை உள்ளடக்கியது.
2. வினைத்திறன் மிக்க கற்றலுக்கான கற்றல் முறைகளையும் – கற்பித்தல் நுட்பங்களையும் விருத்தி செய்தலை வலியுறுத்துகின்றது.
3. கல்வியிலும் பயிற்சியிலும் விஞ்ஞான பூர்வமான அறிவின் பிரயோகத்தினை வலியுறுத்துகின்றது.
4. கல்வியின் இலக்குகளை அடைவதற்காக கற்றல் நிபந்தனைகளை ஒழுங்கமைத்தலை இது உள்ளடக்கும்.
5. போதனையை வடிவமைத்தலையும் கற்றற்புலப்பாடுகளை மதிப்பிடலையும் இது வலியுறுத்துகின்றது.

6. கல்வித் தொழில்நுட்பமானது சூழல், ஊடகங்கள் என்பவற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் கற்றலுக்கு வசதி செய்யும்.

## கல்வித் தொழில்நுட்பத்தின் வகிபாகம்

* கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டின் ஒட்டுமொத்தமான வினைத்திறனை அதிகரிக்க கல்வித் தொழில்நுட்பம் உதவி புரியும்.
* கற்றலின் தரத்தை அதிகரிக்கும்.
* ஆசிரியரின் வினைத்திறனை அதிகரிக்கும்.
* தரத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் செலவீனங்களைக் குறைக்கும்.
* கற்போனின் சுயாதீனத் தன்மையை அதிகரிக்கும்.
* கல்வி – பயிற்சி வழங்குதலில் நெகிழ்ச்சித் தன்மையை அதிகரிக்கும்.

## நுட்ப பயனும் – ஆசிரியர் திறனும்

கல்வித் தொழில்நுட்பத்தினை பயில்வதன் மூலம் ஆசிரியர் பெறும் திறன்கள்.

1. கற்றலில் இனிமைச் செயல்களைக் கையாள முடியும்.
2. விலை மலிவான கற்றல் கருவிகளைத் தயாரிக்க முடியும்.
3. கரும்பலகையை முறையாகவும் – வினைத்திறனாகவும் திறனைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. எளிய கருவிப் பெட்டிகளைத் தயாரிக்க முடியும்.
5. பராமரித்தலுக்கு உரிய திறனைப் பெறலாம்.
6. வரைபடங்கள், விளக்கப்படங்கள், மாதிரிகள் தயாரித்தல்.
7. வானொலி – தொலைக்காட்சி கல்வி ஒலி – ஒளி பரப்புக்களை பயன்படுத்த முடியும்.
8. நவீன தொடர்புகளை பயன்படுத்த முடியும்.
9. நழுவங்கள் (Slides), தலைமேலெறிகருவி (OHP) தாள்கள் தயாரித்து பயன்படுத்த முடியும்.
10. இணையத்தில் உலாவி – இணையத்தளங்களைப் பார்வையிட முடியும்.

கல்வித் தொழில்நுட்பத்தின் அணுகு முறைகளில் தொகுதி அணுகு முறையும் ஒன்றாகும். தொகுதியானது பின்வரும் கூறுகளைக் கொண்டது.

* ஆசிரியர் * மாணவன் * நிகழ்ச்சி நிரல் (போதனைக்கானது)

தொகுதியின் கூறுகளுக்கிடையில் / மூலங்களுக்கிடையில் குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் இடைவினை காணப்படும்.

அத்துடன் இம் மூலங்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும்.


தொகுதி அணுகுமுறையானது வன்பொருள் பகுதியையும் – மென்பொருள் பகுதியையும் கொண்டது.

கல்வியியல் தொகுதி அணுகுமுறையானது பின்வரும் படிமுறை கொண்டது.


1. போதனைக் குறிக்கோள்களை வரையறுக்கவும் அவற்றினை அடைவதற்குமான சிறப்புக் குறிக்கோள்களை உருவாக்குதல்.
2. இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கான பொருத்தமான ஊடகங்களைத் தெரிவு செய்தல்.
3. கற்போனுடைய இயல்புகளையும் தேவைகளையும் வரையறுத்தல்.
4. வினைத்திறனான கற்றல் நடைபெறுவதற்காக பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிந்தெடுத்தல்.
5. கிடைக்கத் தக்க தெரிவுகளில் இருந்து பொருத்தமான கற்றல் அனுபவங்களைத் தெரிவு செய்தல்.
6. தேவையான – பொருத்தமான கருவிகளையும் உபகரணங்களையும் தெரிவு செய்தல்.
7. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உதவும் ஆளணியினருக்குரிய பொருத்தமான கடமைகளை ஒதுக்குதல்.
8. நிகழ்ச்சியை நிறைவேற்றல்.
9. மாணவர் அடைவை மதிப்பிடல்.

## கல்வித் தொழில்நுட்பத்தின் கூறுகள்


(1) கற்கும் பாணி
(2) கற்பித்தல் முறைகள்
(3) வளங்களின் உருவாக்கம்



**கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டின் தொகுதி மாதிரி**




**மாணவர் மைய அணுகுமுறை**




கற்றல் தொழில்நுட்பத்தில் மாணவர் மைய அணுகுமுறை – ஆசிரியர் மைய அணுகுமுறை என்பன இருகூறுகளாக ஆய்வு செய்யப்பட்ட போதும் மாணவர் மைய அணுகுமுறையின் ஊடாக நிறுவனமும் – மாணவனும் தமது இலக்குகளையும் – தூரசிந்தனைகளையும் பெறலாம் என்பது முடிந்த முடிபாகும். எனவே கல்வித் தொழில்நுட்ப அணுகுமுறை இன்றைய கல்வி அபிவிருத்திக்கு முதன்மையான ஒன்றாகும்.

# இலங்கையின் அரசியல் யாப்புக்களும் (தமிழர்களும்) சிறுபான்மையும்

**திரு. ந. சத்தியரூபன் B.A. (Hons)**
ஆசிரியர்

எங்களுடைய தீவானது 1948 Feb-4ம் தேதி சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஆட்சி செய்து வந்துள்ளார்கள் என்று வரலாற்று நூல்கள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்கும், ஆங்கிலேயர் ஆட்சிக்கும் இடையே பாரிய வேறுபாட்டினை உள்ளடக்கியதாக பின்வரும் காரணிகளைக் குறிப்பிடலாம்.

1. இலங்கையின் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த பெருமையினை பிரித்தானியக்காரர் பெற்றுக்கொள் கிறார்கள்.
2. அரசியல் யாப்பு ரீதியாக சட்டம், நிர்வாகம், நீதியினை நிலைநாட்டியமையும் இன்றைய பாராளுமன்ற முறைக்கு வித்திட்ட பெருமையினையும் வெள்ளையர்கள் பெற்றுக்கொள் கிறார்கள்.

ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்தாலும் பிரித்தானியர்கள் நிர்வாகச் சிக்கலையும் நிதி ரீதியான பிரச்சினையையும் எதிர்கொண்டார்கள். இதன் விளைவாகவே அரசியல் யாப்பினை உருவாக்கி அதனூடாக இலங்கை மக்களை ஆட்சி செய்ய விரும்பினர். இதன் விளைவாக அரசியல் யாப்புக்களாகவும் சீர்திருத்தங்களாகவும் உருவாக்கினார்கள்.

அ) 1833இல் உருவாக்கப்பட்ட கோல்புறூக் கமெரன் அரசியல் சீர்திருத்தம்.
ஆ) குறூ – மக்கலம் அரசியல் சீர்திருத்தம்
இ) மானிங் அரசியல் சீர்திருத்தம் (1921) தற்காலிகம்
ஈ) மானிங் – டிவன்சயர் அரசியல் சீர்திருத்தம் (1924)
உ) சர்வசன வாக்குரிமையினை வழங்கிய டொனமூர் அரசியல் யாப்பு
ஊ) சோல்பரியின் அரசியல் யாப்பு.

இதன் பின்னர் அதாவது சுதந்திரத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட முதலாவது சோசலிசக் குடியரசு யாப்பு (1972) இரண்டாவதாக உருவாக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு (அரசியல்) யாப்பு 1978.

அந்நியரால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு என்றால் என்ன சுதந்திரத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள் என்றால் என்ன இலங்கை தமிழர்களின் நிலையினை இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்குவதில் முனைப்புடன் இருந்தன என்பதனை சான்றுகள் மூலம் நிரூபிக்கலாம். இலங்கை மக்கள் ஒன்றாக இருந்தால் தம்மால் சுலபமாக ஆட்சி செய்ய முடியாது என்று கருதிய ஆங்கிலேயர் இனங்களுக்கிடையே பிரதிநிதித்துவத்தில் வேறுபாட்டினைக் காட்டியது. இதற்கு பின்வரும் உதாரணத்தினைக்

குறிப்பிடலாம். மானிங்கின் அரசியல் திட்டத்துடன் ஆரம்பமாகிய நாடகம் இன்றுவரை இலங்கைத் தமிழர்களின் நிலையினை அவர்கள் தீர்மானிக்க முடியாமல் அரசியல் யாப்பின் ஊடாக பெரும்பான்மை தீர்மானிப்பதாகவும் அமைந்துள்ளது.

படித்த இலங்கையராக சட்ட சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட பெருமை யினை முதலாவதாக சேர்.பொன். இராமநாதனைக் குறிப்பிடலாம். இவர் மீண்டும் D.S.ஜெய வர்த்தனா என்பவருடன் போட்டி போட்டு இரண்டாவது தடவையும் படித்த இலங்கையரின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதேபோலவே 1919இல் உருவாக்கப்பட்ட தேசிய இயக்கமான தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராக சேர்.பொன்.அருணாசலம் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இதேபோலவே சிங்களப் பெரும் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டபோது அவர்களின் விடு தலையினைத் துரிதப்படுத்துவதற்காக சேர்.பொன்.இராமநாதன் மகாராணியுடன் கதைத்த பெருமைக்காக சிங்களவர் எப்பரிசினை அவருக்கு வழங்கினார்கள் என்பதையும் நாம் பார்க்கலாம்.

அரசியல் யாப்பு ரீதியாக தமிழர்களின் நிலையினைக் கேள்விக்குறியாக்கு வதன் மூலமாக பன்சமூகம் கொண்ட இலங்கை நாட்டினை மொத்தமாக மதம் ரீதியாக பாகுபாடு காட்டியும் அப்போதைய ஆட்சியாளர்கள் காலம் காலமாகக் கங்கணம் கட்டி நின்றார்கள் என்பதுவும் நூல்கள் வாயிலாக அறியக்கூடியது ஒன்றேயாகும். உதாரணமாக தனிச் சிங்களச் சட்டம் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். மேலும் சோல்பரியின் அரசியல் யாப்பிலும் இருந்த சிறுபான்மை இனத்தவரிற்கான காப்பீடு கூட சோசலிச அரசியல் யாப்பு எல்லோரும் சமம் எனக் கூறி இல்லாதும் செய்தார்கள். இடதுசாரி களினால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு என்ற பெருமையினைப் பெறும் அதே தேசம் மொழி, மதம் ரீதியாகப் பார பட்சம் காட்டியதனையும் நாம் பார்க்கக் கூடியதாக உள்ளது.

1977இல் 5/6 பெரும்பான்மைப் பலத்தினைப் பெற்றுக்கொண்ட ஐ.தே. கட்சியானது ' தனது நீண்ட கால இலக்கினைப் பின்வரும் காரணத்தினால் எட்டியது. மூடிய பொருளாதாரத் தினால் இலங்கை மக்கள் வெறுப்புற்றி ருந்தார்கள். இதனால் இப்பெருந்தேர் தலில் U.N.P ஆனது தனது நீண்ட கால இலக்கினை அரசியல் யாப்பு ரீதியாகக் காட்டியது. இவ் யாப்பு மாற்றத்தின் காரணமாக அரசியல் ரீதியாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பழிவாங்கப் பட்டார் என்றும் கூறப்படுகின்றது. இதன் விளைவாக எதிர்க்கட்சித் தலைவர் ஒருவராக தமிழர் இருந்துள்ளார் என்ப துவும் எமக்குத் தெரிந்ததே. அதேவேளை இனி வரும்காலங்களில் அவ்வாறான நிலை ஏற்படக்கூடாது என எண்ணி J.R.ஜெயவர்த்தனா அதற்கும் பரிகாரம் செய்துள்ளார் என்பதனையும் நாம் பார்க்கலாம்.

மேலும் சிங்களம் அரச கரும மொழி என்ற அர்த்தத்தினைப் பெற்றுக்கொள்ள, தமிழ் தேசிய மொழி என்றே இருந்து வந்தது. இந் நிலையினை 1987 யூலை 29 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக மாறியது. தமிழும் சிங்களமும் அரச கரும மொழி என்றும் ஆங்கிலம்

இணைப்பு மொழி என்றும் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் மூலம் மாற்றப்பட்டது.

எவ்வாறு இருப்பினும் மொழி ரீதியான பாகுபாட்டின் விளைவாகவே இனப்பிரச்சினை என்ற ஒன்று தோன்றியது என்பதனை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விரும்பிய மொழியினை எவரும் தொடரலாம் என்பது ஓர் விசேட அம்சமாகும். தற்போது இந்நிலையானது மேதகு ஜனாதிபதி அவர்களினால் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றது. இலங்கையில் தற்போது இனம் என்ற வேறுபாடு இல்லை. தனது பார்வையில் இரண்டு இனமே உள்ளது.

1. தேசப்பற்றுடைய இனம்
2. தேசப்பற்றற்றா இனம்

இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப் படுமாயின் இலங்கையானது வெகு விரைவாக அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும் என்பதில் ஐயமில்லை என்பதுடன் இனங்கள் ஐக்கியமாகவும் வாழலாம் என்பதும் நடைமுறையூடாகப் பார்க்கலாம். இன ஐக்கியமே இலங்கையின் பெரும் பலமாகக் கொள்வதற்கு அரசியல் யாப்பு முக்கியமான பணியினை வகிக்கின்றது. 1931இல் சர்வசன வாக்குரிமை வழங்க முற்பட்டபோதும் A.E. குணசிங்காவைத் தவிர ஏனைய தலைவர்கள் எதிர்த்தார்கள் இதுகூட இனங்கள் ஐக்கியமாக இருக்க விருப்பமில்லை என்பதுடன் சமத்துவத்தினையும் தட்டிக்கழிக்கவே முற்பட்டார்கள் என்பதுவும் புலப்படும் விடயமாகும். இனங்கள் ரீதியில் அரசியல் யாப்பு ரீதியான பாரபட்சம் காட்ட இன முரண்பாடே உருவாகும். இதனை நாம் அரசியல் யாப்பு ரீதியாக ஆட்சியாளர்கள் தீர்வினை முன்வைக்கலாம்.

♣ ♣ ♣

**Subdue your appetites, my dears, and you've conquered human nature.**

**- Charles Dickens**



# நகர மயமாதலும் சமூக மாற்றமும்

**செல்வி. செ. செல்வராணி**
*B.A. Dip. in Psychology (Aiimas)*
*(ஆசிரியை)*

தற்கால மனிதனின் மூதாதையர்கள் பூமியில் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினர். உயிரின மண்டலத்தின் ஏனைய இனங்களைப் போன்று மனிதனும் தன் செயற்பாடுகளின் போது குழலுடன் தொடர்புபட்டான். அவனை வேட்டைக்காரனாகவும், சேகரிப்போனாகவும், மந்தை மேய்ப்பவனாகவும் வாழ்ந்து நீர் கிடைக்கும் பகுதிகளில் விவசாயம் செய்யத் தொடங்கினான். முதலாவது விவசாயக் குடியிருப்புக்கள் யூப்பிரட்டிஸ், தைகிறிஸ், நதிக்கரைகளில் ஆரம்பமானதாக நம்பப்படுகிறது. விவசாயப் புரட்சி பெரிய மனித முன்னேற்றமாகும். யூப்பிரடிஸ், தைகிறிஸ் கரைகளில் விவசாயம் ஆரம்பித்தது போலவே முதலாவது நகர்களும் அங்கேயே ஆரம்பித்தன.

கிராமப் புறத்திலிருந்து மக்கள் பெருவாரியாக நகரங்களில் வந்து குடியேறும் நிலையினை நகரமயமாதல் என்கின்றோம். நகரங்களில் ஏராளமான மக்கள் வாழும் நிலையில் அவர்களிடம் மிகவும் முன்னேறிய நாகரிகம் ஏற்படுகின்றது எனலாம். உலக வரலாற்றில் எல்லாக் காலங்களிலும் கலாசார நாகரிக மேம்பாட்டின் சின்னமாக நகரங்கள் திகழ்ந்துள்ளன எனலாம்.

நகரமயமாதல் குறித்த ஆய்வானது மிகவும் இன்றியமையாதது. நகரமயமாதலானது பொருளாதார, தொழினுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ளது. நகரமயமாதல் ஏற்படும் போது நகர்ப்புற மக்களை மட்டுமன்றி அதன் பின் புலத்திலுள்ள கிராமப்புற மக்களையும் பாதிக்கின்றது. கிராமப்புற வேளாண்மை சமூக அமைப்பு நகர சமூகத்திலிருந்து வேறுபட்டது. நகரமயமாதல் போக்கு முழுச் சமூகத்தையும் பாதிக்கின்றது. மக்களின் பழக்கங்கள், மரபுகள், பாணிகள, நடத்தை வாழும் முறை அனைத்துமே பாதிப்படைகின்றன.

நகரமயமாதல் முறைகள் அறிவியல் முறைகளுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளமையினால் நகர் வாழ் மக்கள் அறிவியல் அடிப்படையில் செயற்படுகின்றனர். மூட நம்பிக்கைகளுக்கு அங்கு இடமில்லை. எச்செயற்பாட்டுக்கும் பகுத்தறிவு முறையிலேயே விளக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. சிந்தனைச் சுதந்திரம் உள்ளதால் மக்கள் தனிப் பண்புகளுடன் சுயநலமான வாழ்க்கை வாழ விரும்புகின்றனர். சமூகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மாறி விட்டன. பொழுது போக்குச் சாதனங்கள் மாறியுள்ளன. வேலை வாய்ப்புக்கள் காரணமாக சமூகப் பிரிவுகள் தோன்றியுள்ளன.

நகரமயமாதல் காரணமாக குடும்ப அமைப்பு, குடும்பப்பணிகள் என்பன மாற்றமடைந்துள்ளன. திருமணம் என்பது ஒரு பாரம் பரியமான மரபு வழி சமூகத்திலே புனிதமான ஒன்றாக கருதப்பட்டது.

ஆனால் அது நகரங்களிலே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான ஒரு ஒப்பந்தமாக கருதப்படுகிறது. இதனால் விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன. அது மட்டுமன்றிக் கூட்டுக்குடும்பங்கள் பிரிந்து தனிக்குடும்பங்கள் தோன்றியுள்ளன. நகர வாழ்க்கை பெண்களுக்கு அதிக ஏற்றத்தை கொடுத்துள்ளது.

கல்வி மனிதனது அந்தஸ்தை சமூக வாழ்க்கையில் நிர்ணயிக்கிறது. உயர் கல்வி கற்றவர்க்கு அதிக மரியாதையும், சிறப்புக்களும் அழிக்கப்படுகிறது சிறப்பான துறைகளான இலக்கியம், தத்துவம் மதிப்பிழந்துள்ளன. அறிவியல் கல்வி அதி சிறப்பைப் பெற்றுள்ளது. மனிதனது அந்தஸ்தினை தீர்மானிப்பதில் அவனது வருமானம், சொத்துக்கள் என்பனவும் செல்வாக்கு செலுத்துகின்றன.

மத சடங்குகள் ஆன்மீக ரீதியிலும், சமூக ரீதியிலும் உயர் நிலைக்குக் கொண்டு செல்கின்றன. மதம், மூட நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியுள்ளது என நகர மக்கள் கருதுகின்றனர். நகர சமூகங்களில் மதம் அழிக்கின்ற ஆன்மீக ஈடுபாடு அவ்வளவு சிறப்பான தாகக் கருதப்படுவதில்லை. மத நம்பிக்கை குறையக் குறைய வாழ்க்கை, நல்லொழுக்க நெறிகளும் குறைவுபடு கின்றன. இதனாலேயே புனிதமான திருமண உறவின் மூலம் கிடைக்கும் பாலியல் உறவினை திருமணக்கட்டுக்கு வெளியே அடைவதும், எயிட்ஸ் போன்ற பாலியல் நோய்கள் தோன்றுவதும் இன்று காணக்கூடிய ஒன்றாகும். நகர மயமாதல் காரணமாக குற்றங்கள் இழைப்பது மிகவும் அதிகரித்துள்ளது. தனிமனிதனின் செயல்களை குடும்பங்கள் கட்டுப்படுத்துவது இயலாதுள்ளது. இதனால் கிராமங்களை விட நகரங்களில் வன்முறை, கொலைகள் அதிகம் நிகழ்கின்றன.

நகரமயமாதல் தனி மனிதன், குடும்பம், சமூகம் ஆகிய மட்டங்களில் பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. நகர்ப்புற வேலை எதிர் பார்ப்பு, இடவசதியின்மை, பொருத்தமற்ற பொழுது போக்கு அம்சங்கள், அதனால் ஒழுக்கக் கேடான தீய பழக்கங்கள் உருவாக வழி வகுக்கின்றன. மது, மாது என்பவற்றுக்கு அடிமையாகி மனிதனின் ஒழுக்கம் சீர் கெடுகின்றது. இவை மட்டுமன்றி கலாசார பின்னடைவுகளும் ஏற்படுகின்றன. மனிதனது நடை, உடை, பாவனைகள் அவ்வப்போது மாறிக் கொண்டே வருகின்றது

சமூக உறவுகள் சீர் குலைந்து சமூகக் கட்டுப்பாடுகள் கலைந்து ஊழலும், நல்லொழுக்க நெறிகளில் பின்னடைவும் ஏற்படுகின்றன. நேர் சிந்தனையோடு பார்க்கில் மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு திறமையும் ஆற்றலும் அதிகரிக்கின்றன. நகர மக்களுடைய இயக்கம் காரணமாக போட்டிகள், பூசல்கள் ஏற்படுகின்றன. இயந்திர மயமான வாழ்க்கை காரணமாக மனப்போராட்டங்கள் அதிகரிக்கின்றன. முரண்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக வாழ்க்கை அதிருப்தியாகவும், துயரமானதாகவும் அமைகின்றது. பொருளாதாரப் போட்டி, தேவை அதிகரிப்பு, பணம் திரட்டும் எண்ணம் என்பன சிக்கலான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்தியுள்ளன.

பாராட்டத்தக்க முன்னேற்றமாக ஆண், பெண்கள் கல்விச் சாலைகளில்

கலந்து பழகுவதும் கல்வியினூடாக பெண்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபடுவதுமாகும். நகரப் பெண்கள் அலுவலகங்களில் பணி புரிந்து குடும்ப வருமானத்தை அதிகரித்துள்ளனர்.

சமூகவியல் அறிஞரான ரொபேட். கே.நிஸ்பெற் சமூகவியல் மரபுகள் எனும் நூலில் நகரமயமாதல் காரணமாகத் தோன்றக்கூடிய மாறுதல்களாக,

1. தொழிலாளருடைய நிலைமை
2. சொத்துமாற்றம்
3. தொழில்மாற்றம்
4. தொழில்நுணுக்கம்
5. தொழிற்சாலை அமைப்பு எனும் ஐந்தையும் குறிப்பிட்டுள்ளார்.

நகர மக்கள் சகிப்புத்தன்மையும் பொதுவான தனிச்சார்பான தன்மையும் கொண்டவர்கள் அனைத்துக் கலாசார மக்களிடையே வாழ்வதால் தன்னுடைய கலாசாரத்துக்கு முரண்பட்ட போக்குடைய மக்களையும் சகித்துக் கொண்டு வாழக் கற்றுக் கொண்டிருக்கின்றான்.

♣ ♣ ♣

Believe nothing, no matter where you read it, or who said it, no matter if I have said it, unless it agrees with your own reason and your own common sense.

**- Buddha**



This is the moment when we must build on the wealth that open markets have created, and share its benefits more equitably. Trade has been a cornerstone of our growth and global development. But we will not be able to sustain this growth if it favors the few, and not the many.

**- Barack Obama**

# சிறுவர் உரிமைகளைப் பேணுவோம்

**திருமதி. ல. கிருஸ்ணமூர்த்தி**
*ஆசிரியை*

இவ்வுலகில் மானிடர்க்கு கிட்டும் செல்வங்களுள் மிகச் சிறந்த செல்வம் மக்கள் செல்வம் என்பர் பெரியோர் இவ்வரிய செல்வமாம் மழலைகளைச் சுமந்து பெற்றெடுத்து விடுவதில் மட்டும் பெற்றோர்களின் கடமை முடிந்து விடுவதில்லை. தாம் பெற்றெடுத்த குழந்தைகளை நாட்டுக்கு நல்லவனாக வளர்க்க வேண்டியது பெற்றோரின் பெரும் பொறுப்பும் தலையாய கடமையும் ஆகின்றது.

"இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" இக்கூற்றை மனதில் கொண்டு செயற்படும் பெற்றோர் எத்தனை பேர் தான் உள்ளனர்.

தம் மனைவி மக்களைப் பட்டினி போட்டு விட்டு தாம் சம்பாதிக்கும் பணத்தை மதுவிலும், ஊதாரித்தனத்திலும் செலவிடும் தந்தையரை எம் சமூகத்தில் நிறையக் காணலாம். இந்நிலையில் வாழும் குழந்தைகள் களவு, பாலியல் துஷ்பிரயோகம், வேலைக்கு அமர்த்தப் படல், போதை வஸ்துக்கு அடிமையாதல் போன்றவற்றிற்கு ஆளாக்கப் படுகின்றனர். அது மட்டுமல்ல வேலைக்கு அமர்த்தப்பட்டு படும் கஸ்டங்களும் கொஞ்சமல்ல. வேளைக்கு உணவின்றித் தவித்தல், பழைய உணவுகள் வழங்கப் படுதல், அதிகாலையில் துயில் எழுப் பப்படுதல், நள்ளிரவில் நித்திரைக்குச் செல்ல அனுமதிக்கப்படுதல். போன்றவையாகும்.


சிறு பிழை ஏற்படுமிடத்து அடி, உதை வாங்குவது என்பது ஏற்கக் கூடிய காரியமன்று. சிறுவர் உரிமைச் சட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்தினாலும் சிறு வர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் தீரப் போவதில்லை. சிறுவரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு சிறுவர்கள் வாழ்வு நலம் பெற வேண்டுமெனில் ஒவ்வொரு பெற்றோரும் தம் வறுமையிலும் தம் பிள்ளைகளை எதிர்காலத்தில் நாட்டுக்கு ஓர் நற்பிரஜையாக வாழ வழி சமைக்க வேண்டும்.

"சின்னஞ்சிறு பறவை போல நீ திரிந்து பறந்து வா பாப்பா" என்ற பாரதியார் பாடலுக்கமைய அவர்களை மகிழச் செய்ய வேண்டும். சிறுவர்களுக்கான கல்வி, போசாக்கு, சுகாதாரம், விளையாட்டு, பாதுகாப்பு, தொழில் போன்ற உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அவற்றைச் சுதந்திரமாக அனுபவிக்க இடம் கொடுத்தல் வேண்டும்.

இன்றைய உலக நாடுகளில் சிறுவர் சட்டங்கள் வகுக்கப்பட்டு இருந்தும் சிறுவர் அடிப்படை உரிமைகளை மீறு வோர் மீது அரசு கூடுதலான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிறு வர்களுக்கு எதிராக குற்றம் இழைப்போர் மீது கடுந்தண்டனையை அரசு வழங்க வேண்டும். அப்போதுதான் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க முடியும். ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (unicef) சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் (save

the children) சிறுவர் உரிமைகள் மீறப்படுவதைக் கண்டித்து சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றன. ஆகவே இவ்வாறான அமைப்புக்கு உலக நாடுகள் அனைத்தும் தமது ஒத்துழைப்பை அள்ளி வழங்கி உதவிட வேண்டும். அப்போதுதான் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படும். ஆகவே நாமும் சிறுவர் உரிமைகளான கல்வி, பேச்சு ,விளையாட்டு, போசாக்கு, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்து அவர்களது உரிமைகளைப் பாதுகாத்து சிறந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவோமாக.

♣ ♣ ♣




நன்றி :

**கலாநிதி க. குகதாஸன்**

# வெற்றியை நோக்கி

**செல்வி.த. ரேவதி B.A. (Hons.), Dip. in Edu**
*ஆசிரியை*

இளைஞனே! யுவதியே வாழ்க்கை என்பது மிகவும் இனிமையானது, அழகானது. எம் வாழ்க்கையை நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். நாம் எமது இலட்சியங்களை வகுத்து அதன்படி வாழ முற்பட்டு அதில் வெற்றி பெற வேண்டும். வெற்றி என்பது எட்டாக்கனி அல்ல. எமது தன்னம்பிக்கை, விடாமுயற்சி என்பவற்றால் வெற்றியை எட்டி விடலாம்.

சிறிய வெற்றிகள் மூலம் பெரிய சாதனைகளைப் படைக்கலாம். வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லதையே செய்வோம். நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு பிரயோசனமாக இருக்க வேண்டும். நாளை எமது கடமைகளை செய்வோம் எனக் கூறி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

இன்றே விழித்தெழு! உனது கருமங்களை நீயே செய். அம்மா, அப்பா என எதற்கெடுத்தாலும் பெற்றோரை நாடும் மனப் போக்கைத் தவிர்த்துக் கொள். வீட்டுப்பொறுப்பிலும், உமது கடமைகளிலும் அக்கறையாக இரு.

பொறுப்பான, பண்பான மாணவன் என்ற முத்திரையை நீ குத்திக் கொள். அதற்கு வீட்டில் உள்ளவர்களுக்கும், அயலவர்களுக்கும், உன் உறவினர்களுக்கும் உன்னால் இயன்றதைச் செய். முடியாது என்று மட்டும் கூறாதே.

பாடசாலைப்பருவம் மிகவும் இனிமையானது, ஒரு பொக்கிஷம் போன்றது. சேவை மனப்பான்மையை உருவாக்கியதும் இப்பருவமே. நண்பனுக்கு வழங்கிய பேனா, ஆசிரியருக்குச் செய்த உதவி, முதியவருக்கு வழங்கிய ஆறுதல் மொழி இவையெல்லாம் உனது பாடசாலை வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கின.

முதலில் நீ உன்னை நேசி. உன்னிடம் உள்ள நற்பண்புகளை நேசி. உன்னை நீ நம்பு. உன்னுடைய ஆற்றல்கள் எவை யென வலைவீசித்தேடு. தேடிய ஆற்றலை வளர்த்துக் கொள். வெற்றியைத்தேடி நீ போகத் தேவையில்லை. அதுவே உன்னைத் தேடி வரும்.

அதுவரை பொறுத்திரு. எதற்கும் ஒரு காலம் வர வேண்டும். நல்லொழுக்கம், நற்பண்புகள் எம்மிடம் இருந்தால் நாம் நினைக்கின்ற ஆசைப்படுகின்ற அனைத்தும் வாழ்வில் அடையப்படும். நல்லதையே நினை. அதற்கு நீ நீயாக இருக்க வேண்டும். உனது வெற்றிக்காக மற்றவனைக் கீழே தள்ளாதே. வெற்றிக்காக உனது கருமங்களைத் தவமாக இயற்றி வா. இத்தவத்தின் அறுவடையே நீ அடையப்போகும் வெற்றிக் கனி. இக்கனி உமது கரங்களில் தவழ வேண்டுமானால் உனது இலக்கை நோக்கிவிரைவாகப் பயணஞ் செய்.

♣ ♣ ♣

# ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவம்

**திருமதி. பு. சேகரர்**
*ஆசிரியை*

சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களை அடிப்படை யாகக் கொண்டு ஒருவர் தம்மிடமுள்ள சகல ஆற்றல்களையும் வெளிக் கொணர்ந்து சமூகத்தில் நற்பிரசையாக வாழ வைப்பது கல்வியாகும். மனிதனின் பல்வேறு வய திற்கும் வளர்ச்சிக்கட்டத்திற்கும் ஏற்ப கலைத்திட்டம் பிரிக்கப்பட்டு கற்பிக்கப் படுகிறது. அவ்வகையில் ஆரம்பக்கல்வி யும் ஒன்றாக விளங்குகிறது.

ஆரம்பப் பாடசாலைப்பருவம் என்பது பிள்ளையின் விருத்தியின் ஒரு பருவ மாகும். இப்பருவத்திலே வெற்றிகரமான ஒரு பிரஜையாகச் செயற்படுவதற்கான ஆற்றல்களின் உருவாக்கமும் இசை வாக்கமும் நிகழ்கின்றது. அதற்காகவே பிள்ளைகளின் வளர்ச்சிக்குசாதகமாக அதற்கு தூண்டுகோலாக அமையத்தக்க சூழலை உருவாக்குவது அயற் சூழலுடன் தொடர்பு கொண்டு அனுபவத்தைப் பெறு வது, செயற்பாடுகளினூடாக சூழலுடன் தொடர்புறுவது, மகிழ்ச்சியையும் கணிப் பையும் பெறுவது, வெற்றியுணர்வை அனுபவிப்பதற்கு பெற்றோரினதும் ஆசி ரியரினதும் அன்புக் கணிப்பைப் பெறுவது போன்ற வாய்ப்புக்கள் விருத்தி உச்ச அளவில் நிகழத் தூண்டுகோலாக அமைகிறது.

இந்த வகையில் கலைத்திட்டத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புக்கள் ஆரம்ப வகுப்புக்கள் ஆகின்றது. 5 வயது தொடக்கம் 10 வயது வரையான பருவம் ஆரம்பக்கல்வி கற்கும் பருவமாகும். மனிதனின் வளர்ச்சிப்பரு வத்தில் இப்பருவம் பிள்ளைப் பருவம் எனப்படுகிறது.

ஆரம்பப் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் உடல், உள, சமூக மன எழுச்சி நிலைகளில் வேறுபட்டுக் காணப்படு கின்றது. எனவே இப்பருவத்தில் குழந்தை களின் ஆளுமை வளர்ச்சி பெறக் கூடிய விதத்தில் கற்றலார்வத்தைத் தூண்டக் கூடியவாறு அன்பும், ஆதரவும் நிறைந்தன வாகவும் கற்றற் செயற்பாடு அமைய வேண்டும் என பெஸ்ரலோஜி அம்மை யாரும், குழந்தை தம் விருப்பப்படி ஆடியும், பாடியும், விளையாடியும், தனது திறன்களை வளர்க்க வேண்டும் என புரோபல், ஜீன் ஜாகஸ் போன்றோரும் கூறியுள்ளனர். எனவே இப்பருவம் குழந்தையினது ஆளுமை வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகிறது. ஆரம்பப் பருவத்திலேயே கற்றலுக்கான அடித் தளம் இடப்படுகிறது. எனவே பிள்ளையின் திறன் விருத்தியடையக்கூடிய விதத்திலும் கற்றல் கற்பித்தல் கவர்ச்சிகரமான, மகிழ்வூட்டக்கூடியதாக அமையுமாயின் பிள்ளை ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபடும். சிறந்த பெறுபேற்றைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

♣ ♣ ♣

# சாரணர்களும் பாசறை வாழ்வும்

திரு. த. அருளரசன் HNDA, Dip. in Edu.
ஆசிரியர்

உலகளாவிய ரீதியாகப் பரந்துள்ள சாரணர்கள், சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர், றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபுவை அன்புடன் B.P. என அழைப்பர். 1857 பெப்ரவரி 22ம் திகதி இங்கிலாந்தில் பிறந்த இவர் தனது மூன்று வயதில் தந்தையை இழந்து விட்டார். இவரது குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகள் இவர் கல்வியில் நாட்டம் குன்றியவராய்க் காணப்பட்டார். இவரது ஆரம்ப காலங்களில் தனது சகோதரர் களுடன் சேர்ந்து வெட்டவெளி வாழ்க்கை, பாசறை வாசம், கடினமான நடைப் பிரயாணம், மலையேறுதல், படகு கட்டி செலுத்துதல் போன்றவற்றிலும் நடித்தல், படம் வரைதல், உதைபந்தாட்டம் என்ப வற்றிலும் ஆர்வம் காட்டினார்.

19 வயதில் பாடசாலைப் படிப்பை நிறைவு செய்து இராணுவத்தில் சேர்ந்து இராணுவசேவைக்காக இந்தியா சென்றார். 1887இல் ஆபிரிக்க "சூலு" வம்சத்தினருக் கெதிராகவும் கொடிய "அசாந்தி" இனத் தினருக்கு எதிராகவும் தாக்குதலை நடத்தினார். இவரது திறமையான யுத்த நுட்பத்தையும் திறமையாகவும் பாராட்டி இவர் "இம்பீசா" என அழைக்கப்பட்டார். இதன்பொருள் துயில் கொள்ளாத ஓநாய் என்பதாகும். 1899இல் தென்னாபிரிக்கா வில் மேப்கிங் நகரை எதிரிகள் முற்றுகை யிட்டபோது தனது திறமையாலும் சிறுவர்களைப் பழக்கி ஒற்றறிவதன் மூலமும் தனது சிறிய படையுடன் 217 நாட்கள் மேப்கிப் நகரைப் பாதுகாத்து வெற்றி வீரராகத் திகழ்ந்தார். இவர் தனது அனுபவத்தைக் கொண்டு இராணுவ வீரர்களுக்காக "சாரணியத்துக்கான துணை" எனும் நூலை எழுதினார். இந்த நூல் இராணுவ வீரர்களுக்கு மட்டுமன்றி சிறுவர்களுக்கும் பெரும் துணையாக அமைகின்றது. அதாவது எந்தவொரு நிலைமைகளையும் எதிர்கொண்டு முகங்கொடுத்து அவர்களை வெற்றி வீரர்களாக மாற்றுவதற்குத் துணை புரிகின்றது.

பேடல் பவல் பிரவு அவர்களின் அனுபவமே "ஒரு சிறந்த சாரணனாக வருவதற்குப் பாசறை வாசம் இன்றியமை யாததாகின்றது" என்பதைக் குறிப்பிடு கின்றது. இதனை "சாரணியத்துக்கான துணை" என்றும் நூலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பாசறை வாசம் என்பது அலைந்து திரிதலோ அல்லது தேகத்தை நோக வைப்பதுவோ அல்ல ஒரு சாரணன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ள அறிந்து கொள்கின்றான். கூடாரங்கள் இல்லை என்றால் குளிரில் இருந்து வாடாமல் இலை, குழைகளாலான ஒரு குடிசையைப் போட்டுக் கொள்ளப் பழகிக் கொள்கின்றான். மழை, வெள்ளம் என்ப வற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற் கான ஓர் இடத்தைத் தெரிந்தெடுக்கின்

றான். குளிரில் இருந்து தன்னைப் பாது காக்க கணப்புத் தீயை மூட்டிக் கொண்டு புல், வைக்கோல் போன்றவற்றால் ஓர் படுக்கையைத் தனக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொள்கின்றான். தனது மதியூகத்தால் எந்தவித அசௌகரியத் தையும் சிரமத்தையும் மீறி வாழ வழி தேடிக் கொள்வான்.

சாரணனின் வாழ்க்கையில் மிகவும் சந்தோசமான பகுதி பாசறை வாசமே யாகும். நல்ல காற்றுலாவும் வெளிப்பிர தேசத்திலும் மலைகளிலும் கானகங் களிலும் கடலோரங்களிலும் ஆற்றோரங் களிலும் பறவைகளுடனும் மிருகங்களு டனும் வசிப்பது அதாவது இயற்கையுடன் ஒன்றி வாழ்வது, அவனால் அமைக்கப் பட்ட கூடார வீட்டில் வசிப்பது, தமக்குரிய உணவைத் தாமே சமைப்பது, ஆராய்ச்சி செய்வது. இவையெல்லாம் வாகனப் புகையும் மாசடைந்த வளி, நீர் நெருங்கிய மாடி, மனைகள் உள்ள நகர வாழ்வில் கிடைக்காது. இப்பாசறை வாசம் ஒவ்வொரு சாரணனுக்கும் தேகாரோக்கியத்தையும் இன்பத்தையும் அவர்களுக்கு அளிப்பன வாக அமைகின்றது. இவ்வாறான பாசறை வாசம் தேகதிடமுள்ளவர்களாகவும் வெயில், மழை, பனி, காற்று ஆகிய வற்றுக்குப் பயப்படாதவர்களாகவும் மாற்றுகின்றது. எந்தக் காரியத்தையும் அவர்களால் சமாளிக்கமுடியும் என்ற மனோதிடத்துடன் அவன் முன்னே வரும் இடையூறுகளை எதிர்கொண்டு வெற்றி பெற வழிவகுக்கின்றது.

தற்காலத்தில் இடம்பெறுகின்ற பாசறை வாசமானது சற்று மாறுபட்டு தற்காலத் துக்கேற்றவாறு இசைவுபடுத்தப்பட்டாலும் சில சாரணவர்கள் அதைக்கூட விரும்பு கிறார்கள் இல்லை. ஆனால் ஒருமுறை பாசறை நிகழ்வில் கலந்துகொண்ட சாரணர்கள் தொடர்ந்து விருப்புடன் கலந்துகொள்கின்றர். இங்கே பாசறைக் கான இடம் தெரிதல், துப்புரவு செய்தல், பாசறை அமைத்தல், தமக்கான உணவு தயாரித்தல், அணிமுறையில் கூடாரங் கள் அமைத்தல், தமது எண்ணங்களை, கைவினைத் திறன்களாக வெளிப்படுத் தல், காவற்பரண் அமைத்தல், பாலம் கட்டுதல், படுக்கை தயார்ப்படுத்தல், தீப்பாசறை நிகழ்வில் கலந்து மகிழ்தல், சாகச விளையாட்டுக்களில் ஈடுபடுதல், காலை உடற்பயிற்சி, அணிநடை, குழுக் களுக்கிடையே நடைபெறும் மைதானக் காட்சிப்போட்டி, பாசறைச் சுத்தம், தனிப்பட்ட சுத்தம், உரிய நேரத்துக்கு உரிய இடத்தில் பிரசன்னமாயிருத்தல் போன்ற பல்வேறு அம்சங்களை மூன்று நாட்களைக் கொண்ட சாரணர் பாசறை கொண்டுள்ளது. அடுத்து பாசறை வாழ்வில் காணப்படும் சில முக்கிய விடயங்களை யும் அவற்றால் சாரணர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்களையும் எடுத்து நோக்குவோம்.

## பாசறைக் கூடாரம் அமைத்தல்

கூடாரத்துக்கான பொருட்கள் தேடு தல் கூடாரத்தைப் பொருத்தமான இடத்தில் காற்று வளத்தை அனுசரித்து அமைத்தல் என்பன இங்கு இடம்பெறுகின்றது. இதன் மூலம் மழை, வெயில், பனி, காற்று போன்ற வற்றிலிருந்து தம்மை ஓரளவு பாதுகாத்துக் கொள்ளப் பழகிக் கொள்கின்றனர். மேலும் ஒரு கூடாரம் அமைக்கப் பழகிக் கொள்கின்றனர். மேலும் கூடாரத்தில் மற்றச் சாரணர்களுடன் பழகுதல், அனு சரித்து வாழ்தல் ஒரு சிறிய இடத்தில் தனக்குரிய பொருட்களை வைத்துப்

பாதுகாத்தல் போன்றவற்றுக்குப் பழக்கப்படுகின்றனர்.

பாசறை உபகரணங்கள் தயாரித்தல்

ஒரு பாசறை வாழ்க்கையில் முக்கியமான, அவசியமான பாசறை உபகரணங்களான கட்டில், கதிரை, மேசை, உடைகளைத் தொங்கவிடும் உபகரணம், கழுத்துப்பட்டி, கொழுவி, பாத்திரத்தட்டு, நுழைவாயில் பாதுகாப்பு, பாதணிகளை வைக்கும் தட்டு, அடுப்பு, காவற்பரண் போன்றவற்றைத் தயாரிப்பதில் ஈடுபடும் போது வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு உச்ச பயன்பாட்டைப் பெறவும் கட்டுக்களைப் பழகவும் சில உபகரணங்களைப் பயன்படுத்தி வேலைகளைச் செய்யவும் பழகிக் கொள்கின்றார்கள். மேலும் அணிமுறையில் இவற்றைச் செய்யும்போது அணிகளுக்கிடையே போட்டியும் உற்சாகவும் ஏற்படுகின்றது. இதன் மூலம் ஒவ்வொரு சாரணனிடமும் ஒரு செயலைப் பூரணமாகச் செய்து முடிக்கும் திறன், ஒன்றிணைந்து செயலாற்றும் மனப்பாங்கு, புதிதாக சில விடயங்களை அறிதல் போன்ற அறிவுத் திறன் மனப்பாங்கு வளர்க்கப்படுகிறது.

பாசறையில் உணவு பாசறை வாழ்வில் முக்கிய இடம்பெறுவது சாரணர்களுக்குரிய உணவினை அவர்களே தயாரித்தலாகும். வீடுகளில் தமது உடைகளைத் தோய்க்கக்கூட பெற்றோரை எதிர்பார்ப்பவர்கள் பாசறையில் தாமே சமைத்து உண்ணும் அளவுக்குத் தயார்ப்படுத்தப் படுகின்றார்கள். கடமை அணியாக ஒவ்வொரு நாளைக்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அக்குழுவினர் சமையலில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் பாசறையில் பங்குபற்றும் சாரணர்கள் அனைவரும் உணவு சமைப்பதில் ஏதோ ஒரு வகையில் தொடர்புபடுகின்றனர். இங்கு ஒரு குழுவால் சமைக்கப்படும் தேநீரையோ உணவையோ அனைவரும் உண்ணுவார்கள். எவ்வாறான குறை இருந்தாலும் அது பொருட்படுத்தப்படுவதில்லை. அவ்வாறு ஒருவர் இருப்பாராயின் அவர் ஏனையவர்களின் கேலிக்குட்படுவதுடன் அவர் பாசறை வாசம் முடிவடையும் வரை உணவின்றி இருக்க நேரிடும். ஏனெனில் அங்கே வேறு எவ்வகையிலும் உணவினைப் பெறமுடியாது. இவ்வாறு எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலம் பகிர்ந்துண்ணல், சகிப்புத்தன்மை எனும் மனப்பாங்கும் தனக்கும் சமையல் தெரியும், செய்ய முடியும் என்ற விழிப்புணர்வும் இதன் மூலம் எந்தச் சூழ்நிலையிலும் உணவுக்குத் தேடியலையாத, பிறரில் தங்கியிருக்காத நிலை என்பவற்றை ஒரு சாரணன் பெறுகின்றான். அடுத்து வீடுகளில் பெற்றோர் இயலாத நிலை, நோய் போன்ற சந்தர்ப்பங்களில் ஒருவனுக்குச் சாரணியம், பாசறை வாழ்வு கைகொடுக்கின்றது. மேலும் பாசறையில் உணவு தயாரிப்பில் ஒருவர் ஈடுபடுவராயின் அவர் தேர்ச்சியடைந்ததை அடிப்படையாகக் கொண்டு அவருக்குத் தகுதிகாண் சின்னம் வழங்கி அவர் ஊக்குவிக்கப் படுகின்றார். இவ்வாறு பாசறை வாழ்வில் உணவு தயாரிப்பு மிக மிக முக்கியத்துவமடைகின்றது.

## பாசறை நிகழ்வுகள்

பாசறை வாழ்வில் சில நிகழ்வுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன. அவை யாவன தீப்பாசறை, மைதானக்காட்சி, அணிநடை, நிலைக்காட்சி, பாசறைப் பரிசோதனை போன்ற பலவாகும். தீப்பாசறை நிகழ்வென்பது இரவில்

வெட்டவெளியில் தீயை மூட்டி சுற்றிவர சாரணர்கள் இருந்து ஒவ்வொரு சாரணர் குழுக்களும் ஏதோ ஒரு கலை, கலாசார நிகழ்வினைச் செய்து காட்டுதல் ஆகும். இதன் மூலம் சாரணர்களிடம் கலை ஆர்வம் வளர்க்கப்படுவதுடன் எல்லோ ருக்கும் பயனுள்ள மனமகிழ்வைத் தரும் பயனுள்ள பொழுதுபோக்காக அமை கின்றது. அடுத்து மைதானக் காட்சி என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பயனுள்ள செயற்பாடொன்றை எல்லோர் முன்னிலையிலும் குழுவாகச் சேர்ந்து ஒரு செயற்பாட்டைச் செய்து காட்டுதல் உதாரணமாக 10 நிமிடத்தில் பாலம் கட்டுதல், ஊஞ்சல் கட்டுதல், காவற்பரண் கட்டுதல், பாரம் தூக்கி கட்டுதல் போன்ற வையாகும். இதன் மூலம் குழுவாக சேர்ந்தியங்குதல் குறித்த நேரத்தில் விரைவாகச் செய்துமுடித்தல் உற்சாகம் என்பன ஏற்படுகின்றன.

அடுத்து பாசறை வாழ்வில் இடம் பெறும் மிக முக்கிய செயற்பாடு பாசறைப் பரிசோதனை இங்கு ஒவ்வொரு குழு வும் எவ்வாறு செயற்படுகிறது. குழுவின் பாசறை, கூடாரம் அமைப்பு, அணிமுறை, சமையல், உபகரணங்கள், உணவுப் பாதுகாப்பு, ஒவ்வொரு காரணிகளி னதும் உடைமைகள், அவனது உடை, தனிச் சுத்தம், பாசறைச் சுத்தம் என்பன அவதா னிக்கப்படுகின்றன. எல்லாச் செயற் பாடும் சரியாக அமையும் பட்சத்திலே திறமையாகச் செயற்பட்ட சாரணர்குழு பாராட்டப்படுகின்றது. எனவே இதற்காக அனைத்துச் சாரணங்களும் ஒற்றுமை யுடன் செயற்படுதல் வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறு பாசறை வாழ்வானது ஒவ்வொரு சாரணராலும் மகிழ்ச்சி கரமான நிகழ்வாகக் கருதப்படுவதுடன், அவனது அறிவு, திறன், மனப்பாங்கை வளர்க்கும் ஓர் இணைப்பாட செயற் பாடாகவும் அமைகின்றது. இங்கு இடம் பெறும் போட்டிகளில் களிப்பூட்டும் நிகழ்வுகளில் சாரணர்கள் கலந்துகொள் வதால் அவரக்ளுக்கே தெரியாமல் அவர் களிடமுள்ள திறன்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. எதிர்கால உலகில் சவால்களை முகம்கொடுத்து முன்னேறும் திறனை நிகழ்கால வாழ்வில் இப்பாசறை வாழ்வு வழங்குகின்றது.

இறுதியாக "இளைஞர் சாரணியம்" என்னும் நூலிலே பேடன் பவல் பிரவு அவர்கள் "பெற்றோருக்கு" என்ற தலைப் பில் பாசறை வாழ்வு பற்றிக் குறிப்பிட்டதை இங்கே தருகின்றேன்.

"பாசறை வாசந்தான் சாரணீயத்திலே சிறுவனுக்கு அதிக கவர்ச்சி தரும் அம்ச மாகும். இது சிறுவனுக்குத் தேகாரோக் கியத்தை அளிப்பதுடன் சுயநம்பிக்கை யையும் ஆதரவையும் போதிக்க அவ காசத்தை உதவுவதாகும்.

பாசறை வாசத்தைச் செய்து அனுபவம் பெறாத சில பெற்றோர் தம் சிறுவர் களுக்கு இவ்வாசம் மிகக் கடினமானதாக இருக்குமெனத் தப்பபிப்பிராயம் கொள் கின்றனர். ஆனால் தமது பிள்ளைகள் தேகாரோக்கியமுடையவராகவும், ஆண்மைத் தன்மை நிரம்பப் பெற்றும் தோழமை உணர்ச்சி பூண்டு குணசீலர் களாகவும் திரும்பி வருவதைக் காணும் போது இத்தகைய பாசறை வாசத்தின் சீர் சிறப்புக்களையும் அதனால் தமது பிள்ளைகள் அடையும் அனுகூலங்களை யும் மதிக்காது போகமாட்டார்கள்.

இங்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள வழிகளில் சிறுவர் தம் விடுமுறைகளைக் கழிக்கச் செல்லும்போது எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்த முனைய மாட்டார்களென நான் விசுவாசத்துடன் நம்புகின்றேன்".

இவ்வாறு பாசறை வாழ்வு பற்றிய ஒவ்வொரு விடயத்தையும் பற்றி பேடன் பவல் பிரபு அவர்கள் மேற்படி நூலில் மிக விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

எனவே ஒவ்வொரு சாரணனினதும் வாழ்வில் பாசறை வாழ்வு என்பது மகிழ்ச்சிகரமானதும் அவசியமானது மாகும்.

♣ ♣ ♣

And oftentimes, to win us to our harm,
The instruments of darkness tell us truths,
Win us with honest trifles, to betray's
In deepest consequence.

**- William Shakespeare**, *"Macbeth", Act 1 scene 3*

If the human race wishes to have a prolonged and indefinite period of material prosperity, they have only got to behave in a peaceful and helpful way toward one another.

**- Winston Churchill**



# சமநிலையான பிராந்திய அபிவிருத்தியும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணும்

**திரு. M.C. சுதாகரன் B.Com**
*ஆசிரியர்*

இலங்கையானது சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கென பல்வேறு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருகின்ற போதும் மாகாணங்களிற்கிடையே அல்லது பிரதேசங்களுக்கிடையே பிராந்திய ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது.

மிகச்சிறந்த வளர்ச்சி உபாயங்கள், மேம்பட்ட பொருளாதார, சமூக உட்கட்டமைப்பினூடாக பிராந்தியப் பொருளாதார அபிவிருத்தியடைவதற்கு நாட்டினுடைய அனைத்து மாகாணங்களும் ஒரே விதமான வீதத்தில் வளர்ச்சியடைதல் வேண்டும். இங்கு GDP, தலா வருமானம் என்பவற்றின் அடிப்படையில் ஒப்பீடுகள் இடம்பெறுகின்றன.

இச்சமநிலையான பிராந்திய அபிவிருத்தயை அடையும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி 08.09.2008 இல் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை (SLPI) தயாரித்துள்ளது.

SLPI இன் பிரதான நோக்கம் மாகாணங்களால் அடையப்பட்ட சுபீட்சததினுடைய மட்டத்தை ஒப்பீட்டளவில் அளவிடுவதாகும். அதாவது அபிவிருத்தியின் நன்மைகளை சமூகத்திலுள்ள அனைத்துப்பிரிவினரும் அனுபவிப்பதுடன் வலுவான செல்வ உருவாக்கத்தினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். மேலும் அனைத்துத் தேசிய கொள்கையினதும் இறுதியான குறிக்கோள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் அதன்மூலம் முழு நாட்டினுடைய சுபீட்சத்தினை உயர்த்துவதாகும்.

இலங்கை சுபீட்ச சுட்டெண் மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளது.

1. பொருளாதார மற்றும் வியாபார சூழல்
2. மக்களின் நலங்கள்.
3. சமூக பொருளாதார கட்டமைப்பு.

## இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் அமைப்பு

| துணைச்சுட்டெண்கள் மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணுக்கான அவற்றின் பங்களிப்பு | | மாறிகள் |
|---|---|---|
| **பொருளாதாரம் மற்றும் சூழ்நிலை 30 சதவீதம்** | பொருளாதாரம் 20 சதவீதம் | 1) தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி<br>2) வேலை வாய்ப்பு வீதம்<br>3) முறைசாரா துறையின் உண்மைக் கூலிகள்.<br>4) வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள மக்கள் |
| | வியாபார சூழ்நிலை 10 சதவீதம் | 5) தலைக்குரிய வியாபார புரள்வு வரி<br>6) தொழில்துறை அடர்த்தி |
| **மக்களின் நலன்கள் 45 சதவீதம்** | சுகாதாரம் 20 சதவீதம் | 7) '000 பேருக்கான வைத்தியசாலைக் கட்டணங்கள்<br>8) '00.000 பேருக்கான வைத்திய அதிகாரிகள் .<br>9) '000 சிசு உயிர் பிழைக்கும் வீதம்<br>10) '00.000 கர்ப்பிணிகள் உயிர் பிழைக்கும் வீதம் |
| | கல்வி 20 சதவீதம் | 11) சதுர கிலோ மீற்றருக்கான பாடசாலைகள்<br>12) மாணவர் ஆசிரியர் வீதம்<br>13) இரண்டாம் நிலை கல்வியின் தொடர்ச்சி<br>14) க.பொ.த (சா/த) மற்றும் (உ/த) பரீட்சையில் சித்திபெறும் வீதம் |
| | சொத்து 5 சதவீதம் | 15) வாகன உரிமை |
| **சமூக பொருளாதார உட்கட்டமைப்பு 25 சதவீதம்** | | 16) தலைக்குரிய மின்பாவனை<br>17) தொலைபேசி அடர்த்தி<br>18) வங்கித்தொழில் அடர்த்தி<br>19) வீதி அடர்த்தி<br>20) சட்டமும் ஒழுங்கும் |

## இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் போக்கு
## Prosperity Index of Sri Lanka (SLPI)

| மாகாணம் (2007இல்) | மொ.உ.உ. இன் பங்கு (%) | தலா வருமானம் | SLPI |
|---|---|---|---|
| மேல் மாகாணம் | 50.1 | 225598 | 66.1 |
| தென் மாகாணம் | 9.3 | 97377 | 51.5 |
| சப்பிரமுவ மாகாணம் | 6.2 | 82575 | 48.2 |
| மத்திய மாகாணம் | 8.8 | 85833 | 52.9 |
| ஊவா மாகாணம் | 4.6 | 92615 | 47.8 |
| கிழக்கு மாகாணம் | 4.7 | 75364 | 44.2 |
| வடமேற்கு மாகாணம் | 9.3 | 103792 | 49.2 |
| வடமத்திய மாகாணம் | 4.1 | 88792 | 49.4 |
| வடக்கு மாகாணம் | 2.9 | 64185 | 43.6 |
| **இலங்கை** | **100** | **178845** | **52.7** |

இவ் அட்டவணையின் படி GDP, தலா வருமானம் அடிப்படையில் மேல் மாகாணம் ஏனைய மாகாணங்களைவிட முன்னனியில் உள்ளது. பொருளாதார மற்றும் வியாபாரச் சூழ்நிலைகளின் துணைச் சுட்டெண்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் குறைந்த செயலாற்றத்தைக் கொண்டுள்ளன. எனினும் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற விடயங்களில் அரசினால் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட நலன்புரி அளவீடுகள் மக்களின் நலத்துறை சுட்டெண்களில் மாகாணங்களுக்கிடையிலான வேறுபாடுகள் குறைவாகவுள்ளது.

### சுபீட்சச் சுட்டெண் மூலமான நன்மைகள் / பயன்பாடுகள்

- பெறப்பட்ட தரப்படுத்தல்கள், தரவுகள் என்பன கொள்கை வகுப்பாளர்களுக்கு அனைத்தையும் உள்ளடக்கிய பின்னனியில் மாகாணங்களின் பற்றாக்குறையான விடயங்களை கண்டறிய உதவுதல்.
- குறித்த விடயங்களை நிவர்த்தி செய்வதற்கு அதிக வழங்கல்களை ஒதுக்குவதன் மூலம் நியாயமற்ற வழங்கல்களை தடுத்தல்.
- மாகாணங்களுக்கிடையில் ஒப்பீடுகளை உருவாக்கி அதன் மூலம் அத்தகைய மாகாணங்களில் அதிகார சபைகளால் அடையப்பட வேண்டிய மாகாண மட்டத்திலான இலக்குகளை நிர்ணயிக்க முடியும்.
- சுபீட்சத்தை விருத்தி செய்வதில் சமூக பொருளாதார கொள்கைகளின் செயற்றிறனை அளவிடுதல்.
- பிராந்திய சமமின்மையைக் குறைத்தல்.

**சமநிலைப் பிராந்திய அபிவிருத்திக்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகள் / நடவடிக்கைகள்**

- ❖ மூலவளங்களை வினைத்திறனுடன் ஒதுக்கீடு செய்வதை உயர்த்தும் வகையில் வளர்ச்சியை உள்ளடக்கிய உபாயத்தை பின்பற்றல்.
- ❖ நேரடி முதலீடுகள், அரச தனியார் பங்குடமை என்பவற்றின் மூலம் மாகாணங்களின் மூலவளப் பயன்பாட்டை அதிகரித்தல்.
- ❖ பாதுகாப்பான வலையமைப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மூலதன அபிவிருத்தி, தொழில் முயற்சி அபிவிருத்தி என்பன மூலம் சமூகப் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றல்.
- ❖ தேசிய மட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.
  உதாரணம் – கம நெகும, மகா நெகும.
- ❖ கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே முதலீடு செய்வதற்கான இறை ஒழுங்குகள்.
- ❖ வேளாண்மை, கைத்தொழில், மீன்பிடி போன்றவற்றுக்கான வரி ஊக்குவிப்புக்கள்.

எனவே மாகாணங்களிடையிலான சமமின்மைகளை குறைத்து சம நிலையான பிராந்திய அபிவிருத்தியை எய்வதுடன் மாகாணங்களுடைய முன்னுரிமைகளுடன் தொடர்புபடுத்தி நாட்டின் சுபீட்சத்திற்காக பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொள்வதன் மூலம் செழிப்பினை அடைந்து கொள்ள முடியும்.

♣ ♣ ♣

> This is the moment when we must build on the wealth that open markets have created, and share its benefits more equitably. Trade has been a cornerstone of our growth and global development. But we will not be able to sustain this growth if it favors the few, and not the many.
>
> **- Barack Obama**

# யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக அரங்கச் செயற்பாடுகள்

## 1995 இலிருந்து இன்று வரை

**திருமதி. ஹே. சாந்தகுமார் B.A. (Hons), Dip. in Edu**
*ஆசிரியை*

எமது பாடசாலை குறுகிய காலத்தில் எவ்வாறு அபரிமிதமான வளர்ச்சியடைந் துள்ளதோ அதேபோல கலைப்பாரம்பரி யத்திலும் தன்னிகரில்லாத சிறப்பைக் கொண்டுள்ளது. அதாவது எமது பாட சாலையில் அழகியல் கலைகளாக இசை, நடனம், சித்திரம் எனும்வரிசையில் நாடகமும் அரங்கக் கலைகளும் கற்றல் செயற்பாடுகளிலும் ஆற்றுகை நிலை யிலும் தனக்கான இடத்தை பிடித்துள்ளது.

எனது பார்வையில் 1995 – இன்று வரை நாடக வளர்ச்சிப்படிநிலைகளை கற்றல் செயற்பாடுகள் என்ற ரீதியிலும் விழாக்கள் போட்டிகளுக்கான ஆற்றுகை முயற்சிகள் என்ற ரீதியிலும் விரிவாக ஆய்வு செய்தல் சாலச் சிறந்ததாகும்.

அந்த வகையில் ஆற்றுகை நிலைச் செயற்பாடுகளை நோக்கலாம்.

1995 – நகைச்சுவை துணுக்குகள் நாடகம் (மன்றச் செயற்பாடு)
1996 – கண்ணப்பநாயனார் நாடகம் (உயர்தரம்) – வாணி விழா
1997 – சத்தியவான் சாவித்திரி நாடகம் (உயர்தரம்) – வாணி விழா
1998 – “பெருகோப்பெண்டு” இலக்கிய நாடகம்(தமிழ்த்தினம்)
கோட்டம் 1ம் இடம்
1999 – குட்டிஎலி (சிறுவர் நாடகம் – ஆரம்பபிரிவு மாணவர்கள்)
மாகாணமட்டம் 2ம் இடம்
2003 – “ஒற்றுமையே பலம்” – (சிறுவர் நாடகம்)
கோட்டம் 2ம் இடம்
2003 – “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” (சமூக நாடகம்)
உயர்தரமாணவர்கள் கோட்டம் 3ம் இடம்
2004 – முயன்றால் பயனுண்டு” (கோட்டம் பங்குபற்றியமை)
2005 – “தப்பிவந்த தாடியாடு”(சிறுவர் நாடகம் ஆரம்பபிரிவு)
கோட்டம் 2ம் இடம்
2005 – “காத்தவராயன் கூத்து” (சிந்து நடை)
மாகாணம் 1ம் இடம்
2006 – “காத்தவராயன் கூத்து” (சிந்து நடை)
மாவட்டம் 2ம் இடம்
2007 – “பவளக் கொடி” (சிந்து நடைக் கூத்து)
மாகாணம் 1ம் இடம்
2007 – “எங்களுக்கும் உண்டு எதிர்காலம் (சமூக நாடகம்)
கோட்டம் 1ம் இடம், வலயம் 2ம் இடம்
2007 – “சுற்றாடலை பாதுகாப்போம்” (சிறுவர் நாடகம்)
கோட்டம் 1ம் இடம் வலயம் 2ம் இடம்
2008 – “பவளக் கொடி”(சிந்து நடைக் கூத்து)
மாகாணம் 2ம் இடம்

2008 – "மானிடம் வெல்க (சமூக நாடகம்) தமிழ்த்தினம் கோட்டம் 2ம் இடம்
2009 – "தோட்டத்தில் கிடைத்த பரிசு" (சிறுவர் நாடகம்) (ஆசிரியர்தினவிழா – பாடசாலை)
2009 – "அரிச்சந்திரா" (சிந்து நடைக் கூத்து) வலயம் 2ம் இடம்
2009 – "அசோகவனத்தில் சீதை (சுந்தர காண்டம் இலக்கியநாடகம்) கோட்டம் 3ம் இடம்
2009 – "நீர்வளம் பேணுவோம்" (சிறுவர் நாடகம்) குடும்பமட்டம் 1ம் இடம்
2009 – "சமூக ஒருங்கிசைவு நாடகம்" (உளவியல் துறை) கோட்டம் 3ம் இடம்
2010 – "காத்தவராயன் கூத்து" வலயம் 2ம் இடம்
2010 – "மதர் லங்கா" (நாடகப் போட்டியில் பங்கு பற்றியமை)
2010 – "இயற்கை வளம் பேணுவோம்" (சிறுவர் நாடகம்) குடும்பமட்டம் 1ம் இடம்
2009 – "அக்கினிக்குஞ்சு"(பரிசளிப்பு விழா)
2010 – "பார்வதிதேவி நரகாசுரனை அழித்தகதை"(வாணி விழா)
2009, 2010 – ஆசிரியர் தினவிழாவில் ஆசிரியர்களால் நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டமை.

இவ்வாறு பாடசாலை விழாக்களிலும் மன்றங்களிலும் ஆற்றுகை நிகழ்வுகள் நடைபெற்று மாணவர்கள் திறன்களிலும் ஆளுமைப் பண்புகளிலும் வளர்ந்து வருவதை காணக்கூடியதாக உள்ளமை மறுக்க முடியாததாகும். அந்த வகையில் எமது கல்லூரியின் நாடக அரங்கக் கலைப் பாரம்பரியத்தை வளர்த்தெடுப்பதில் ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்கள் பற்றி இங்கு குறிப்பிடவேண்டியது இன்றியமை யாததாகும்.

அந்தவகையில் திரு.ச.சிவநேஸ்வரன் அதிபர் எமது பாடசாலையை பொறுப் பேற்றிருந்தகாலத்தில் 2004ல் சிறுவர் நாடக ஆற்றுகைக்காக தனது சொந்த வாகனத்தில் ஆசிரியர்களையும் நாடகக் குழுவையும் அழைத்துச்சென்றது மட்டு மல்ல, இக்கற்கை நெறியினதும் ஆற்றுகை செயற்பாடுகளினதும் வளர்ச்சிக்கு அனைத்து வழிகளிலும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து சிறப்புக்கு வழிகோலி யமை குறிப்பிடதிதக்கது.

இந்நிலையை தக்கவைத்திருப்ப தோடு இல்லாமல் இதை மேலும் உயர் நிலையை நோக்கி நகர்த்துவதற்கு பிரதி அதிபர் திரு.இ. ஆனந்தநடராஜா அவர் களது புரிந்துணர்வுடன் கூடிய வழிகாட்டல் எம்மை உச்சத்தை முன்னெடுத்துச் செல் வதற்கு உந்துசக்தியாக இருந்தது என்பது மறக்கவோ மறுக்கவோமுடியாத உண்மை யாகும். அதாவது 2005ம் ஆண்டு சிந்து நடைக்கூத்து (காத்தவராயன்) மாகாண மட்டம் 1ம் இடம் பெற்றுக்கொண்டது. இதற்குமேல் போட்டி இல்லை எனவே அகில இலங்கை ரீதியிலும் தேசிய மட்டச் சாதனை எனக்கருதக்கூடிய வகையில் உச்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கல்லூரி வெற்றியை தட்டிக்கொண்ட நிகழ்வானது அதனையும் தாண்டி சமூகத் திற்குள் இறங்குகிறது. மானிப்பாய் பிர தேசசபை கலாசார நிகழ்வில் ஆற்றுகை

செய்யப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் எமது படைப்பை மனம் திறந்து பாராட்டி எம்மை பெருமிதம் கொள்ள வைத்த திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் எமது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டமை எமது அதிஷ்டமாகும்.

தொடர்ந்து அவரது சேவையில் எமது ஆற்றுகை நிகழ்வுகள் விமர்சனத்துடன் மெருகூட்டப்படுவதும் நிகழ்வுகள் நடாத்துதற்குரிய அணிசெய் கலைஞர்களை குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளிலிருந்தும் விசேட மாகத்தருவித்து ஒத்திகைகளிலும் நிகழ்வுகளிலும் எமது படைப்பை மேலும் மிளிர வைத்தவர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

தொடர்ந்து எமது பாடசாலையில் ஆசிரியராக,உபஅதிபராக கடமையாற்றி தற்போது அதிபராக பணியாற்றும் திரு. கு.விமலன் அவர்களது அக்கறையும் எமது செயற்பாடுகளுக்கு ஊக்கத்தை அளிக்கின்றது என குறிப்பிடின் மிகையாகாது.

இவ்விடத்தில் சிந்துநடைக்கூத்து ஆற்றுகையை பொறுத்தவரை எமது சங்கீத ஆசிரியை திருமதி.கே.தர்மசோதி அவர்களின் பாரிய பங்களிப்பு தலைமையை மேம்படுத்துவதோடல்லாமல் எமது குழுவினரின் ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கும் தகுந்த ஆலோசனைகள் வழங்கி உறுதுணையாக நின்றமை எம்மை மேலும் திறம்பட இயங்க வைத்தது. அவரைத் தொடர்ந்து எமது கல்லூரிக்கு மாற்றலாகி சேவையாற்றவந்த இசை ஆசிரியை திருமதி.ய.ஸ்ரீகுமரன் அவருடைய பணியும் எம்மோடு இணைந்து எம்மை முன்னெடுத்தது என்று கூறுவதில் பெருமையடைகிறோம்.

எமது பாடசாலைக்குரிய பாரம்பரிய குணஇயல்பாக வெவ்வேறு துறைசார்ந்த சக ஆசிரியர்களின் கூட்டு முயற்சியானது எம்மை ஒரு சண்டிலிப்பாய இந்துக் கல்லூரிக் குடும்பம் என்ற உணர்வுடன் மனமுவந்து செயற்பட வைத்தது. அந்த வகையில் திருமதி.ச.சிவானந்தன், திருமதி.ம.விக்னராஜா, திரு.பொ.தயாளன், திரு.ந.குகபரன், திருமதி.சுபத்திரா, செல்வி.சிசியாமளா திரு.க.ஸ்ரீநந்தகோபன், திருமதி.ல. கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் பணிகள் முக்கியமாக குறிப்பிடத்தக்கது. இச் செயற்பாடுகள் சிறப்பான மாணவர்களை உருவாக்க வழிவகுத்தது, வழிவகுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை சான்றுகள் பகர்க்கும்.

அடுத்து கற்றல் ரீதியான செயற்பாடுகளை நோக்கின் –

1998ல் நாடகமும் அரங்கியலும் க.பொ.த. உயர்தரத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டது. 2005ல் க.பொ.த. சாதாரண தரத்திற்கு அறிமுகப்படுத்தியதையடுத்தும் இன்று வரை நாடகமும் அரங்கியலும் பொதுப்பரீட்சையில் 100%சித்தியை தக்க வைத்திருப்பது நோக்கத்தக்கது அத்துடன் 2007ல் நாடகமும் அரங்கியலும் தரம் 6க்கு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்ட காலப் பகுதியிலேயே எமது பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறான நிலையில் அன்றிலிருந்து இன்று வரை நாடகமும் அரங்கக்கலைகளும் பாடத்துறையை பெரும் தொகை

யான மாணவர்கள் உயர்தரத்திலும் சாதாரண தரத்திலும் தாமாகவே விரும்பிக் கற்பதும் அதிகமானோர் பல்கலைக்கழ கத்திற்கும், கல்வியியற் கல்லூரி, கிழக்குப் பலகலைக்கழகம், விபுலானந் தக்கல்லூரிக்கும் தெரிவாகிக்கொண்டி ருப்பதும் சிறப்பம்சமாகும்.

இவ்வாறாக நாடகமும் அரங்கக்கலை களும் எனும் பாடத்துறையானது கற்கை நெறியாகவும் ஆற்றுகை நிலையிலும் வளர்ச்சியடைந்து செல்வது எமது பாடசாலையை பொறுத்தவரை சிறப்பான அம்சம் எனக்கூறுவதில் பெருமை அடைகிறோம்

சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தில் வந்தனவாக தொகுத்துக்கூறுதல் நாடகம்.

**– இளம்பூரனார்.**

உலகம் ஒரு மேடை. ஆதில் அனைவரும் நடிகர்கள்

**– ஷேக்ஷ்பியர்**

நூடகம் என்து யாதேனுமோர் செயலைச் போலச் செய்தல் ஆகும்.

**– ஆரிஸ்டோட்டில், பரத முனிவர்**

நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும்.
புழக்கவழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடி ஆகும்.

**– அலடைஸ் நிக்கொல்**

நாடகம் என்பது உலக இயல்பைப் போலச் செய்தலாகும்.

**– பரத முனிவர்**

நாடகம் என்பது சுகம், துக்கம், ஆகிய இரண்டையும் உள்ளடக்கும் வகையில் உலக கொண்டுள்ள தன்மையை அங்க அபிநயங்கள் மூலம் வெளிக்காட்டுதல் ஆகும்.

**– பரதமுனிவர்**

நாடகம் என்பது வாழ்க்கையின் ஒரு துண்டம் (Piece) ஆகும்.

**– பேர்னாட்ஷா**

நாடகம் என்பது இசை, நடனம், சொல்லாடல்கள், நடிப்பு, வேடவுடை, ஒப்பனை, போன்ற கலைத்துவ மூலகங்கள் மூலம் பார்ப்போரிடத்தே யாதேனும் அழகியல் அனுபவங்களை உணரச் செய்வதற்காக எடுக்கப்படுகின்ற முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு கலைப்படைப்பாகும்.

**– அபிநவகுப்தர்**

# பரத ஆடலில் பழமை பேணலும் புதுமை புகுதலும்

**திருமதி. ம. விக்னராஜா**
**B.A., Dip.in Edu, MEd**
*ஆசிரியர்*

மனித சமுதாயத்தை இனங்காட்டும் கலை வடிவங்கள் மனித நாகரிகத்துடன் வளர்ந்து வந்துள்ளன. அனைத்துக் கலை வடிவங்களும், "பூதபவிஷ்யத் வர்தமானம்" அதாவது முக்காலத்திற்கும் கருத்துப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் என்பது ஆன்றோர் கூற்று. அத்துடன் எல்லாக் காலங்களிலும் உலகளாவிய அளவில் மொழி, நாடு, உயர்வு,தாழ்வு முதலிய பேதங்கள் இல்லாமல் அனை வருக்கும் பயன்படவேண்டும். எல்லாக் காலங்களுக்கும் அனைத்து சூழல்களுக்கும் பொருத்தமாக இருக்கும் கலைப்படைப் புக்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படு கின்றன. கால நீரோட்டத்தில் எதிர்நீச்சல் போடுகின்றன.

மனித நாகரிக வரலாற்றில் மரபு என்பது பிரதானமானதாகும். சம்பிர தாயம் என்ற பிறிதொரு பதத்தாலும் இது சுட்டப்படுகிறது. பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் கருத்துக்கள் பழக்கவழக்கங்கள், கொள்கைகள் முதலானவற்றை இப்பதம் குறிக்கிறது. தென்னாசிய சமய சமூக பண்பாட்டு அம்சங்களில் மரபு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. ஒரு சமூகத்தினை இனங்காண்பதற்கு மரபு உதவுகிறது. "கடந்த காலத்தைச் சேர்ந்த எந்த அம்சம், கடந்த காலத்தைத் திரும்பவும் முன்னிலைப்படுத்துகிறதோ அதுவே மரபு இது கடந்த காலத்தின் மாறாத் தன்மையையும் கடந்த காலக் கருத்துக் களை சமகாலம், இடம் என்பவற்றிற் கேற்பப் புத்துருவாக்கத்துடன் காணப்படும் தன்மையையும் கொண்டது" என்று பேராசிரியர் டெறெற் குறிப்பிட்டுள்ளார். நவீனத்திற்கு வழிகாட்டுவதாக மரபு வளர்ந்துள்ளது. மரபு தொடர்ச்சியான தாயினும் காலத்திற்கேற்ப மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளும். இந்த விடயங்கள் யாவும் மரபு என்பதை விளங்கிக் கொள்ள உதவுகின்றன.

உலக மயமாதலின் வேகமான மாற் றத்தில் மரபுகள் மறைந்து விடுகின்றன. ஆயினும் மரபுகள் முற்றாக அழிந்து விடுவதில்லை. மரபுகள் பேணப்படுவதால் பண்பாடு, கலை, கலா(ச்)சாரம் முதலிய வற்றின் தனித்துவம் பாதுகாக்கப்படு கிறது. இந்நிலையிலேயே ஒரு சமூகத் தினை இனங்காண முடிகிறது. மரபு என்ற பதம் சம்பிரதாயம் என்னும் வடமொழிப் பதத்தின் தமிழ் வடிவமே மரபு ஆகிறது.

மரபுகள் கலை வடிவங்கள் யாவற் றிலும் காணப்படுகின்றன. கலைவடிவங்கள் குறிப்பிட்ட சமூகத்தைப் பிரதிபலிப்பன. மரபுகள் கலைவடிவங்களுடன் இணை வதால் ஒரு சமூகத்தின் சிறப்பியல்பு களைக் கோடிட்டுக் காட்ட முடிகிறது கலை வடிவங்களில் இங்கு நாட்டியக் கலை மரபுடன் இணைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. கலைகள் சமூக மாற்றங்

களினால் தாக்கப்பட்டுத் தம் தனித்து வத்தை இழந்துவிடாமல் இருப்பதற்கும், கலைகளின் செழுமை குன்றாது கலைகள் வளர்வதற்கும் மரபு பெருமளவில் உதவு கிறது. காலத்தின் தேவைக்கேற்ப மரபு களில் ஏற்படும் மாற்றங்கள் அதன் தனித் துவம் இழக்கப்படாத போது கலைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவு கின்றன. மரபுகளில் ஏற்படும் மாற்றங்கள் நேர்த்தொடர்பினைக் கொண்டதாக அமைவது வரவேற்கத்தக்கது.

மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற் றங்கள் சில சந்தர்ப்பங்களில் வழுவி விடுவதால் மரபில் பாதக விளைவுகள் ஏற்படுகின்றன. மரபு வழியில் கலைகள் ஆரோக்கியமாக வாழ்ந்தாலும் காலத்தின் தேவைக்கேற்பப் பொருத்தமான மாற்றங் களை உள்வாங்கிக் கொள்ளும் போது அவை சிறப்பாக வளரும் வாய்ப்பைப் பெறுகின்றன. "தக்கன பிழைக்கும் தகா தன மடியும்" என்ற சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கைக்கு உலகின் கலை களும் விதிவிலக்கல்ல.

நாட்டியக் கலையின் வரலாற்றை நோக்குமிடத்து மனிதன் கருத்துக்களை வெளியிடுவதற்கு மொழியைப் பயன் படுத்தும் ஆற்றல் பெற்றுக் கொள்ளாத காலத்தில் பயன்படுத்திய சைகைகள், உணர்வுகளை வெளிப்படுத்தப் பயன் படுத்திய ஒலிகள், உடல்அசைவுகள் நாகரிக வளர்ச்சியில் பொருத்தமான மாற்றங்களை உள்வாங்கியதாலேயே இன்று பரதநாட்டியம் என்ற உன்னத கலைவடிவம் எமக்குக் கிடைத்துள்ளது. இது பரத நாட்டிய வரலாற்றிலே திருப்பு முனையாக அமைகிறது. தஞ்சை நால்வர் காலத்தில் இறைவனைப் பாடிய தேவஸ் துதிகளும், மன்னர்களைப்பாடிய நரஸ் துதிகளும் நாட்டியத்திற்குப் பயன்பட்டன. தஞ்சைச் சகோதரர்கள் நாட்டியக் கலையை மெருகுபடுத்திய வேளையில் மன்னர்களின் ஆதரவு பெருமளவில் அவர்களுக்குக் கிடைத்தது. இதனால் தேவதாசிகளின் ஆடலுக்கு வலுவூட்டுவ தாகவும், மன்னர்களை மகிழ்விப்ப தாகவும் அமைந்த உருப்படிகளை இவர்கள் இயற்றினர். இதனால் நாட்டியக்கலை காலத்தின் தேவையை உள்வாங்கி மரபி னின்றும் வழுவாமல் மேலும் வளர்ச்சி பெற்றது.

இதே போல் தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் அந்நியர் ஆட்சியின்போது நாட்டியக்கலையின் வளர்ச்சி தடைப் பட்டது. குறிப்பாக பரத நாட்டியம் மறு மலர்ச்சி பெற்ற காலப்பகுதியில், காலத் தின் தேவை அறிந்து மரபுவழு வாது மாற்றங்களைப் புகுத்தி நாட்டியக் கலையை உன்னதமாக்கிய பெருமைக் குரியவர்கள் ஸ்ரீமதி.ருக்மணி அருண்டேல் திரு.இ.கிருஷ்ணஐயர் ஆகியோரே. நாட்டிய ஆடல்முறை, உடை, ஒப்பனை, மேடைப்பயன்பாடு, உருப்படிகளின் செயன்முறை, முதலியவற்றில் காலம் தேடும் மாற்றங்களைப் புகுத்தி பரதக் கலையை அனைவரும் ஏற்கும் வகையில் வடிவமைத்தனர். ஸ்ரீமதி.ருக்மணி அருண்டேல் பெண்கள் நாட்டியமாடும் போது சமூகம் எதிர்பார்க்கும் விடயங் களைக் கவனத்திற்கொண்டு உடைகள், அபிநய வெளிப்பாடு முதலியவற்றில் கவனம் செலுத்தி மாற்றத்தை ஏற்படுத்தி னார். நாட்டியத்தை லோக தர்மி முறையில் அபிநயிப்பதால் ஏற்படும் இடர்பாடு களைச் சுட்டிக்காட்டி, நாட்டிய தர்மிமுறை யில் நாட்டியத்தை ஆற்றுகை செய்வது

பக்தி வழிக்கு அழைத்துச் செல்லும் என்றும் வலியுறுத்தினார்.

நாட்டியக்கச்சேரிகளை சதிர்க் கச்சேரி என்று குறிப்பிடும் மரபை மாற்றி நாட்டியக் கச்சேரி என்று குறிப்பிடுதல் சிறந்தது என்று கருத்துக்கூறினார். ஆலயங்களில் தேவதாசிகள் வசமிருந்த நாட்டியக்கலையினைத் தூய்மைப்படுத்தி ஆலயங்களிலிருந்து அதை அரங்கிற்குக் கொண்டு வந்தார். சாஸ்திர ரீதியிலான பரதம் தூயவடிவத்தைப் பெற்றது. அடிப் படையில் பந்தனை நல்லூர் பாணி யிலேயே இவரது ஆடல்கள் அமைந்தி ருந்தாலும் தனக்கேயுரிய சிறப்பம்சங் களையும் தன் ஆடல்களில் அவர் பதித் துள்ளார். பண்பாடே ஒரு நாட்டின் மிகப் பெரிய பொக்கிஷம். எனவே மரபு எங்கு தேடினாலும் காணப்படுவது அவசியம் என்பது ஸ்ரீமதி. ருக்மணி அருண்டேலின் ஆணித்தரமான கருத்தாகும்.

நாட்டியக் கலையை ரசிப்போர், ஆற்றுகைப்படுத்துவோர் ஆகிய இரு சாராருக்குமிடையே மனஒருமைப்பாடு ஏற்படும் போதே நாட்டியக்கலை வெற்றி பெறுகின்றது. கலைகளின் வெளிப்பாடு, கலைகள் கூறும் செய்தி பார்வையாள ரிடையே தூண்டுதலை ஏற்படுத்த இது அவசியமாகிறது. கலைகள் வளரவும், விருத்தியடையவும் மரபுகள் மாற்றங்களை ஏற்கவேண்டுமென எதிர்பார்க்கப்படு கிறது. அத்துடன் ஒரு கலை வடிவத்தை மீண்டும் அதேபோல் செய்வது பார்வை யாளரைச் சலிப்படைய வைக்கிறது. "சர்வித சர்வணம்" என்றபடி செய்தவற்றை மீண்டும் மீண்டும் செய்வது கலைகளின் வளர்ச்சிக்குத் தடையாய் அமைந்து விடுகிறது. ரசிகர்களைக் கவர்வதற்கும் அவர்கள் மனதில் நிலைநிற்கவும் மரபுகளில் மாற்றங்கள் பொருத்தமான வகையில் தேவையாகின்றன என்பது இதிலிருந்து புலனாகின்றது.

**"கல்விக்கழகு கவினுறும் கற்பனை**
**கல்விக்கு வளர்ச்சி புதியன படைத்தல்"**

என்ற கூற்றும் கலைகளின் வளர்ச்சிக்குப் புதுமையும் தேவை என் பதைக் கோடிட்டுக்காட்டுகிறது. நாட்டி யத்தின் முறைதவறாமலும், தூய்மை அழியாமலும் புதிய சிந்தனைகள், கற் பனைகளுடன் படைப்புக்கள் வெளி வருதல் வேண்டும் சேலை தயாரிப்பதற்கு நூல் அவசியமே. அந்த நூலைக் கண்கவர் வகையிலும், தரமாகவும் தயாரிக்கும் போது உலகம் முழுவதும் அது வர வேற்பைப் பெறுகிறது. இவ்வாறே கலைப் படைப்புக்கள் மரபைப்பேணி மாற்றங் களை உள்வாங்கிக் கொள்ளும் போது அவை மேலோங்கி வளர முடிகின்றது.

ஸ்ரீமதி.ருக்மணி அருண்டேல் அவர்கள் நாட்டிய உருப்படிகளில் மரபு மீறாது ஏற்படுத்திய மாற்றங்கள் அனைத்து மக்களின் பார்வையை நாட்டியக்கலை மீது திருப்பின. இந்த மாற்றங்கள் மனிதனின் அறிவியல் சிந்தனை விரிவிற்கேற்ப அமைந்திருந்த மையால் அனைவராலும் ஏற்று நடை முறைப்படுத்தப்பட்டு வந்தமை குறிப் பிடத்தக்கது. கோயில்களில் நடனக்கலை வாழ்ந்தாலும் அதன் புனிதத்துவம் பற்றிச் சிந்தித்த ஸ்ரீமதி.ருக்மணி அருண்டேல் நாட்டிய உருப்படிகளை அபிநயிப்பதில் நாட்டிய தர்மியை அதாவது பக்தியை மையமாகக் கொண்டு அல்லது தெய்வ சிந்தனை கொண்ட வகையில் அமைதல் வேண்டுமென விரும்பி மாற்றங்களை ஏற்படுத்தினார். இது நாட்டிய உருப்படி

களின் லஷணங்களை அதாவது நாட்டிய மரபை மீறாமல் அம்மையார் ஏற்படுத்திய மாற்றமாகிறது.

நுட்பங்கள், அவை மாறிவருதல் கலைகளில் குறிப்பாக நாட்டியத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என நோக்கின், கலைப்படைப்புக்களை உருவாக்கும் போது கையாளப்படும் பலவகையான பொருத்தமான நுட்பங் களே அவற்றின் வெற்றியை நிர்ணயிப்பதில் பெரும் பங்குவகிக்கின்றன என்பது வரலாறு காட்டும் உண்மை. ஒரு படைப் பினைச் சிறப்பாகவும்,வெற்றிகரமாகவும் உருவாக்கப் படைப்பாளி கையாளும் செயற்பாடுகளை நுட்பங்கள் என வரை யறை செய்யலாம். நுட்பம் என்பது மனித செயற்பாடுகள் அனைத்திலும் காணப் படுகின்றது. மனித வாழ்வின் அன்றாட தேவைகளை நிறைவேற்றும் செயற்பாடு கள் முதல் அனைத்து செயற்பாடுகளும் பயன்படுத்தப்படும் நுட்பங்களாலேயே வெற்றிபெறுகின்றன. நுட்பங்கள் காலத் தின் தேவை உணர்ந்து பயன்படுத்தப் படவேண்டும். கலைப்படைப்புக்களைப் படைக்கும் போது படைக்கப்படும் கலைக் கேற்ப நுட்பங்களைத் தெரிவு செய்தல் மிகவும் சிறப்பானதாகும்.

இந்த வகையில் கலைப்படைப்பின் நுட்பங்கள் மாற்றமடைவது அவசியமா கிறது. சம்பிரதாய பரதநாட்டிய உருப்படி களில் பதவர்ணம் 45நிமிடம் முதல் 55 நிமிடங்கள் வரை அபிநயிக்கப்படுகிறது. இன்று காலத்தின் தேவை கருதி இருப்பத வர்ணம் 15 – 20 நிமிடங்கள் வரை அபிநயிக்கப்படுகிறது. இது காலத்தைக் கருத்திற்கொண்டு கையாளப்படுகின்ற நுட்பத்திற்கு உதாரணமாகிறது. மேலும் இன, மொழி, மத, பிரதேச வேறுபாடு களுக்கமைய மாற்றம் பெறும் கலாச்சார விழுமிங்களை மதிக்கும் வகையிலும் கலைப்படைப்புக்கள் மாற்றம் பெறக் கலை வடிவங்களுக்குப் பல்வேறு நுட்பங் களைப்பயன்படுத்த வேண்டியுள்ளது.

நாட்டியத்தில் அங்கசுத்தம், பாவம் (Bhava) நிலைகள், பாடலுடன் இசை வான கை அசைவு என்பவற்றைவப் பொருத்தமான நுட்பங்களைப் பயன் படுத்துவதால் சிறப்பாக்க முடிகிறது. அபிநயம் அதிகமாக வெளிப்படுத்தப் படும் நிருத்தியப் பகுதிகளில் பாவ வெளிப்பாடு (Bhava) தாளத்திற்கான உடல் அங்க அசைவு, கால் நிலைகள், பொருத்தமான முறையில் நுட்பங் களைப் பயன்படுத்துவதால் நாட்டிய நிகழ்ச்சிகள் சோபிக்க வழி கிடைக்கிறது. பார்வையாளரின் கண்கள் இவற்றில் லயித்திருக்க முடிகிறது.

பரதநாட்டிய பாணிகள் (Styles) வேறுபடும் போது அபிநயமும் ஆடல் நுட்பங்களும் வேறுபடுவது தவிர்க்க முடியாதது. கலைஞர்களின் கற்பனை அந்தப் பாணிகளிற்குரிய பண்புகள் என்பவை பல வகைப்பட்ட நுட்பங்களைப் பயன்படுத்த தூண்டுகின்றன. வெவ்வேறு வகையான இந்த ஆடல்கள் அனைத்தி னுள்ளும் தேடலை மேற்கொள்ளும் போது அங்கே மரபுகளைக் காணமுடிகிறது. பாரம்பரியங்களை வைத்துக் கொண்டே நுட்பங்களை மாற்றும்போது படைப்புக் களுக்குப் புதிய வடிவம் கிடைக்கிறது. கலைகள், காலம், இடம், தேவை என்பவற் றிற்கேற்ப படைப்புக்களில் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தும்போது அவை உயிர்க்கின்றன; பாராட்டப்படுகின்றன.

கலைகளில் குறிப்பாக நாட்டியக்கலையில் சாஸ்திரம், சம்பிரதாயம் இருந்தாலும் அவை நெகிழ்வுத்தன்மை கொண்டவை. வரையறைக்குட்பட்ட நிலையில் புதுமையை உள்வாங்கும் தன்மையின. சமகாலத்தைய தலைசிறந்த நர்த்தகர்களில் ஒருவரான அலர்மேல் வள்ளி "பரத நாட்டிய வரன் முறைகள் பரந்து விரிந்தவை. நமது பாரம்பரியமும் வளைந்து நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையினது. எனவே பாரம்பரியம் புதுப்பாணிகளுக்கு வழி விடுகிறது" என்று கூறி மரபை மீறாத புதுமைப்படைகளும், பொருத்தமாக மாறி வருகின்ற நுட்ப பயன்பாடும் கலைகளின் வளர்ச்சிக்கு உரமிடுகின்றன என்ற உண்மையை வலியுறுத்தியுள்ளார். நாட்டியக்கலையுடன் தொடர்புடைய ஏனைய கலைவடிவங்களான இசை, குயிலுவக் கருவிகளின் பயன்பாடு (ஆடை அணிகலன்), ஒப்பனை, ஆற்றுகை செய்யப்படும் அரங்கு, ஓவியம், சிற்பம் முதலான கலைப்படைப்புகளிலும் மரபுகள் மீறப்படாது மாறிவருவதும், தொழில் நுட்ப வளர்ச்சி, மனித சிந்தனை விரிவு என்பவற்றிற்கேற்ப நுட்பங்களைப் பயன்படுத்தும் ஆரோக்கியமான கலைவளர்ச்சிக்கும், உயிர்ப்பான கலைப்படைப்புக்களுக்கும் வழிகாட்டுகின்றன.

**உசாத்துணை நூல்கள்**


01. நாட்டியத்தில் புதிய பாதைகள், பரதநாட்டிய பிரவிணாகுரு உடுப்பி லஷ்மி நாராயணன்.
02. பரதக் கலை, பேராசிரியர். விசிவசாமி.
03. அழகியற்கல்வி, பேராசிரியர். கலாநிதி சபா. ஜெயராசா.


♣ ♣ ♣



**We have all a better guide in ourselves, if we would attend to it, than any other person can be.**

**- Jane Austen, *Mansfield Park***



# எமது சுற்றுலாவில் புவியியல், வரலாற்றின் பங்கு

**திருமதி. ச. நாகராஜா B.A, Dip. in Edu.**
*ஆசிரியர்*

எமது நாடாகிய இலங்கை வரலாற்றிலும் புவியியலிலும் சிறந்த இடத்தை எடுக்கின்றது என்பதனை எவராலும் மறுக்க முடியாது. பொதுவாக நாம் பாட நூல்களில் கற்பிக்கின்ற விடயங்களை கசடறத் தெளிய வைக்கும் ஒரு சாதனம் தான் சுற்றுலா எனவே சுற்றுலாப் பயணமானது ஒரு பிரதேசத்தின் இயற்கை அமைப்பைத் தெளிவுபடுத்தவும் கால நிலையை விளக்கவும்,மண் வகைகளை ஆராயவும் தாவர வகைகளை அறியவும் குறிப்பிடத்தக்களவு உதவுகின்றது. இச் சுற்றுலா மூலம் முதலில் ஆசிரியர்கள் அனுபவபூர்வமான நன்மைகளை நன் குணர்ந்து கொள்ள வேண்டும் என கருதிய கல்வி அதிகாரிகளுக்கும், சமூக விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

எமது சுற்றுலாப் பயணமானது யாழ்ப்பாணத்திலிருந்து நுவரேலியா ஈறாக நடைபெற்றது. யாழ் குடாநாட்டில் வாழும் எமக்குஅதனின்று முற்றாக வேறுபட்ட புவியியல் தன்மை கொண்ட மலைப் பிரதேசத்தின் இயற்கை அமைப்பையும், இதனோடு தொடர்புடைய காலநிலை, தாவரவகை, மானிடச் செயற்பாடுகளையும் கண்டு மகிழ்வடைந்தோம். நமது நாட்டின் வறட்சியும், தாழ் பிரதேசங் களுக்குரிய தன்மையினையும், மலைப் பிரதேசத்தின் அமைப்பினையும் தாவர வகைகளையும் ஒப்பீடு செய்யாமலிருக்கமுடியாது. யாழ் குடாநாட்டில் சூழல் மனிதனைக் கட்டுப்படுத்துவதையும் கண்டு உணரக்கூடிய தாகவுள்ளது.

புவியியல் பண்புகளில் மலைப்பிரதேசத்திற்குரிய பண்புகளும்,தாழ் பிரதேசத்தின் பண்புகளும் வேறுபடும் எல்லைக் கோடு எதுவெனத் திட்டவட்டமாக கூற முடியாதளவிற்கு இயற்கை காட்சிகள் அமைந்தன. எமது நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் விவசாயத்தை எடுத்துக் கொள்வோமாயின் யாழ் குடா நாட்டில் நெல், சிறுதானியங்கள், புகையிலை, வெங்காயம் போன்ற பயிர்கள் பயிரிடப்பட, மத்திய மலை நாட்டில் விவசாயத்தில் பெருந்தோட்டப் பயிர்களும், படிமுறையில் நெற்செய்கையும், காய்கறிகளும் பயிரிடப்படுகின்றது. அதே போன்று விளைவிக்க கையாளும் பயிர்ச் செய்கை முறை கூட முற்றிலும் முரணானது. அதாவது வரட்சிப்பிரதே சத்தில் நீர் பற்றாக்குறையாக அமைய மலைப் பிரதேசத்தில் நீர்வளம் மிகையாக இருப் பதை கவனிக்க கூடியதாகவுள்ளது. வரட்சிப் பிரதேசத்தில் பருவத்தின் போது கிடைக்கும் மழைநீரை குளங்கள் மூலம் தேக்கி வைத்து கால்வாய்கள் மூலம் பயிர் களுக்கு நீர் பாய்ச்சும் முறை புராதன கால மன்னர் ஆட்சியிலிருந்து நடைபெற்று வருகின்றது. இம்முறையில் அநுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகளில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களை அவ தானிக்க முடிந்தது.

அடுத்து மலைநாட்டில் காணப்படும் பயிர்ச்செய்கை கூடுதலாக வர்த்தகப் பயிராகவும், நாட்டின் வருவாயை நிர்ண யிக்கும் பெருந்தோட்டப்பயிராகவும் அமைந்தது. இதில் வர்த்தகப பயிராக முதலிடம் பெறுவது தேயிலையாகும். மத்திய மலைநாட்டின் ஊடாக நாம் பிரயாணம் செய்யும் போது ஆங்காங்கு மலைச் சாரல் எங்கும் தேயிலைத் தோட்டங்களையும், றபர் தோட்டங் களையும் கண்டு களித்தோம் தேயிலைத் தோட்டங்களில் பெண்கள் கூடைகூடை யாக கொழுந்தை கொய்துவர கங்காணி அதை எடுத்தார். பின்னர் தொழிலாளர் அதனைத் தட்டுக்களில் உலரப் போட்டனர். உலர்ந்தவற்றை இயந்திரங்கள் மூலம் அரைப்பதும், அவற்றை பாகுபடுத்தி பெட்டியில் அடைப்பதும் நுட்ப முறையாக இருந்தது.

மத்திய மலை நாட்டின் இன்னோர் கண்கவர் காட்சியாக எம்மை வியக்க வைத்தது ஆறுகளும்,நீர்வீழ்ச்சிகளும் ஆகும். ஆறுகள் உயரமான இடங்களி லிருந்து செங்குத்தாக வேகமாகப் பாய்ந்து செல்லும் இடங்களில் நீர்வீழ்ச்சிகள் உருவாகின்றன. இவ்வாறு காணப்படும் நீர் வீழ்ச்சிகள் சூழலை அழகுபடுத்துவ துடன், சுற்றுலாத்துறைக்கும் உதவுகின்றது. எமது சுற்றுலாப் பயணத்தின்போது றம்பொடை நீர்வீழ்ச்சியை கண்டுகளித் தோம். எமது வட பிரதேசத்தில் கிடை யாத இயற்கை அன்னையின் கொடை யான நீர்மின்வலு பெரிய இயந்திரங் களை இயக்கவும் கைத்தொழில் வளர்ச் சிக்கும் உதவுகின்றது. தற்பொழுது யப்பான் நாட்டின் நிதியுதவியுடன் நடை பெறும் கொத்மலை நீர்த்தேக்க செயற் றிட்டத்தினையும் பார்வையிட்டோம்.

நமது நாடு சிறிய தீவாக காணப்பட்ட போதும் காலநிலை வேறுபாட்டினை அவதானிக்கலாம். காலநிலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் தாவ ரங்களை புவியியலாளர் சிலர் கருது கின்றனர். இதற்கிணங்க யாழ்குடாநாடு வரட்சிப்பகுதியாகவும், அதிலும் பன் மடங்கு வரட்சியான தன்மையை ஆனை யிறவு கொண்டிருப்பதையும் காணக் கூடியதாக இருந்தது. அங்கு புல், பூண்டு வர்க்கத்தைக் கூடக்காண்பதரிது. இப் பகுதிக்கு அப்பால் படிப்படியாக கால நிலையில் ஒருவிதமான வேறுபாட்டை அவதானிக்க முடிந்தது. வட மத்திய மாகாணம் வரட்சிக்கால நிலைக்குரிய பகுதியாக அமைந்த போதும் ஆனை யிறவுப் பகுதியைப் போல் வரட்சியான பகுதியாக காணப்படவில்லை அங்கு ஓரளவு பசுமையான காடுகளையும் வானளாவி ஓங்கி நிற்கும் மரங்களையும் பிரதான பாதையின் இரு மருங்கும் காணமுடிந்தது. மத்திய மலைப்பிரதேசங் களை அடுத்து பசுமைத்தன்மை கூடியன வாகக் காணப்பட்டமையை அவதானிக்க முடிந்தது. இவ்வியற்கைத் தாவரத்தினை காலநிலை மாற்றத்திற்கேற்ப அவ தானிக்க முடிந்தது.

எமது சுற்றுலாவில் புவியியல் தக வல்களை அவதானித்தது போல் வர லாற்றுச் சார்பான சின்னங்களை அநு ராதபுரம், பொலநறுவைப் பிரதேசங்களில் அதிகளவு பார்வையிட்டோம். அதில் முதலில் பௌத்த மதத்தின் அறிமுகம் தொடர்பாக வட இந்தியாவிலிருந்து வந்த மகிந்த தேரரும் சமகாலத்தில் அநுராதபுர ஆட்சியாளனுமான தேவ நம்பியதீஸனும் முதன் முதல் சந்தித்த மிகிந்தலையைப் பார்வையிட்டோம்.

அதே போன்று வரலாற்றுச் சிறப்புமிக்க சிகிரியா, எல்லாளனும் துட்டகைமுனுவும் சண்டையிட்ட இடம், சங்கமித்தையால் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வந்து நாட்டப்பட்ட வெள்ளரசு மரம், ஆயிரங்கால் மண்டபம், இசுறுமுனிய காதலர் சிலை போன்ற இன்னோரன்ன வரலாற்று ஆதாரங்களைக் கண்டு களித்தோம்.

அதே போன்று பொலநறுவையிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதாரங்களாக தலதாமாளிகைச் சிதைவு, நிஸங்கலாதா மண்டபம், அட்டதாகை, கல்பொத்தக் கல்வெட்டு, ஏழடுக்கு மாளிகை, சிவன் கோவில், அப்பிரதேசத்தின் நிர்வாக மையம் தொடர்பான கட்டிடங்கள், கடைகள், சந்தைகளும் தொடர்ச்சியாக சிதைவுகள் காணப்பட்டன. இவ்வாறான பிரதேசங்களை ஆழமாகப்பார்வை இடுவதாயின் ஓரிரு நாட்களில் கண்டு களித்து விட முடியாது.

மேலும் கண்டிப் பிரதேசத்தில் தொனிப்பொருளான தலதாமாளிகை யும் அதனுடன் இணைந்த நுண்காட்சிய கத்தினையும் பார்வையிட்டு புராதன கால கலை அம்சங்களையும், தொழி நுட்பங்களையும் பார்வையிட்டு வியப் படைந்தோம்.

இவ்வாறாக எமது சுற்றுலா மூலம் நாம் பல்வேறு புவியியல், வரலாற்று ரீதியான ஆதாரங்களைப்பெற்று அறிவை விருத்தி செய்ய ஏதுவாக அமைந்துள்ளது. மீண்டும் நாம் அனைவரும் மகிழ்வுடனும் பெருமையுடனும், நன்றியுடனும் எமது பிரதேசத்தை வந்தடைந்தோம். இத்தகைய தொரு பயன்மிக்க சுற்றுலாவினை எமக்கு ஒழுங்குபடுத்தி தந்தவர்களுக்கும், எமது பாடசாலை அதிபருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

♣ ♣ ♣

## யார் புத்திசாலி?

*எப்போதுமே மிருகங்கள் மனிதரை விட புத்திசாலிகளாக இருக்கின்றன. முப்பது குதிரைகள் பந்தயத்தில் ஓடினால் ஐம்பதாயிரம் மனிதர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். முப்பது மனிதர்கள் பந்தயத்தில் ஓடினால் ஒரு குதிரை கூட வந்து பார்ப்பதில்லையே.*

# மெல்லத் தமிழ் இனிச்சாகும்

**திரு. த. நித்தியானந்தன் B.A**
*ஆசிரியர்*

"எண்ணக் கருக்களின் பரிமாற்ற ஊடகம் மொழி". கண்டதை ஆயுதமாக்கிக் கொன்றதை உணவாக்கி இந்தப் பரந்து விரிந்த உலகில் அலைந்து திரிந்த மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஊடகமாக மொழியைப் பயன்படுத்தினான். இவ்வாறு ஒவ்வொரு கூட்டமும் பயன்படுத்தியவைகளே இன்று பல்வேறு மொழிகளாகப் பரிணமித் துள்ளன. அவற்றுள் சில ஆழவேரூன்றி அகலக் கால் பதித்து வான் வரையும் கிளை பரப்பி இந்தப் பரந்து விரிந்த உலகை வியாபித்து நிற்கின்றது. அதில் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

**"கல்" என்ற கல்வி தோன்றி "மன்" என்ற ஆட்சி தோன்றாத**

**"கல் தோன்றி மன் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தகுடி"**

என்னும் பெருமைக்குரியது. தமிழும் தமிழ்க்குடியுமாகும். அன்றுதொட்டு இன்று வரை ஆண்டிமுதல் அரசன் வரை, அடியவன் தொடக்கம் ஆண்டவன் வரைக்கும் தமிழ் என்னும் குழந்தைக்கு இலக்கியச் சோறூட்டி, இலக்கணத்தால் அலங்கரித்து அனைத்திற்கும் தாயாக தமிழை வளர்த் தனர் என்றால் அது மிகையாகாது.

வள்ளுவன் வளர்த்த தமிழ், கம்பன் காத்த தமிழ், பாரதி பயின்ற தமிழ், தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற புலவரும், தமிழ் எங்கள் உயிருக்கு மேல் என்ற தமிழ்ப்பெரு வீரரும் பட்டபாடு இன்று கெட்டகேடாத மாறுவதோ?

எங்கிருந்தோ வந்தவன் வணக்கம் என்று சொல்ல, இங்கிருக்கும் நாங்களோ Thank you என்று சொன்னால் தமிழின் நிலை என்னாவது? வந்தவனின் நோக் கத்தை நாமே நிறைவேற்றுவது போலா காதா? மேலும் இன்றைய இளம் சமுதா யத்தினரது பெயர்களை எடுத்து நோக்கு வோமானால், நாம் தமிழர் பிரதேசத்தில் தான் வாழ்கின்றோமா என்ற சந்தேகம் எழுகின்றது. அவர்கள் தங்கள் பிள்ளை களைத்தான் கூப்பிடுகிறார்களா? அல்லது தமது செல்லப்பிராணிகளைக் கூப்பிடு கிறார்களா என்பதுகூட விளங்கவில்லை.

இவற்றை நான் கூறுவதனால் ஆங்கி லத்தைப் பேசவேண்டாம் என்று சொல்ல வரவில்லை. இரண்டையும் சேர்த்து ஒன்றைக் கெடுத்துவிடாதீர்கள் என்று தான் சொல்கின்றேன். இதைத்தான் பேரா சிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் "நாம் தனியே தமிழைப் பேசினால் தனிமைப் பட்டுவிடுவோம், ஆங்கிலத்தைப் பேசினால் தனித்துவத்தை இழந்துவிடுவோம்" என்றார். எனவே நாம் இடம், பொருள், ஏவல் அறிந்து உரிய விதத்தில் மொழியைப் பயன்படுத்துவோமாக.

நாய்க்கு மூன்று இழிவான குணங்கள் உள்ளன. அதனாற்தான் அதனை எல்லோரும் இழிவாகப் பார்க்கிறார்கள்.

- தனது எச்சிலைத் தானே உண்பது.
- தனது இனத்தினைத் தானே காட்டிக் கொடுப்பது.
- அனைத்து ஜீவராசிக்கும் இன்பமாக அமையும் சிற்றின்பம் நாய்க்கு

இறுதியில் துன்பமாகவும் பகிரங்க மாகவும் அமைதலாகும்.

இவ்வாறான தன்மைகள் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தினரிடையே நோயாகப் பரவுகின்றதோ என்று எண்ணத் தோன்று கின்றது. அந்த அளவிற்கு தன்னைத் தானே காட்டிக் கொடுப்பதுவும் அற்ப சலுகை களைப் பெரிதாக மதித்து அதனைப் பெற அலைவதுவும் "கற்பு" என்ற ஒன்றைக் காற்றிலே பறக்கவிட்டு அந்தரங்க விடயங் களைப் பகிரங்கமாக பொது இடங்களில் சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடுவதையும் யாரிடம் சொல்லி அழுவது.

பாண்டியன் அவையிலே கருமியின் தமிழில் குறை கண்ட நக்கீரர் அதனைக் காட்டிக்கொடுக்கவில்லை. மாறாக அதனைத் திருத்தவே முயன்றார்.

"நல்லகுருநாதர் நம்மை வருத்துவது கொல்லவல்ல, கொல்லவல்ல..." என்பதை உணர்த்தினார்.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற தமிழ்க் கவிஞனின் வாசகம் இன்று தலைகீழாக மாறிவிடுமோ என்று எண்ணத் தோன்று கின்றது.

ஆண்டி முதல் அரசன் வரை கடைப் பிடிக்க வேண்டிய வரன்முறைகளைக் கூறும் திருக்குறளும், ஒருத்தனுக்கு ஒருத்தி என்று கூறும் இராமாயணமும், தீயவர்கள் அழிவர் என்று கூறும் மகா பாரதமும், நெறி தவறியவர்க்கு அறம் கூற்றுவனாகும் என்பதற்குச் சிலப்பதி காரமும், செய்யவேண்டியதைக் கூறும் இனியவை நாற்பதும், செய்யக்கூடாததைக் கூறும் இன்னா நாற்பதும் நமக்குக் கூறுவது என்ன? தீயதையும் நல்லதையும் எடுத்துக் காட்டி இவற்றைச் செய்யாதே, இவற்றைச் செய் என்று கூறும் தலைசிறந்த சொத்துக்கள்.

"பன்னாடை" என்ற சொல் நம்மி டையே இழிவானவரைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகிறது. பண்டைய மக்கள் வேண்டாததை வடித்தெடுக்கும் கருவியாக பன்னாடையைப் பயன்படுத்தினார்கள். எனவே அதன் தொழில் வேண்டாததைப் பற்றிப் பிடித்து வைத்திருத்தல். ஆனால் கீழிருக்கும் பாத்திரமோ அதிலிருந்து பிரிக்கப்பட்ட நல்ல பதார்த்தத்தையே தாங்கி நிற்கிறது.

தாமரைப் பூவிலுள்ள தேனை அக் குளத்திலிருக்கும் தவளைக்குத் தெரிவ தில்லை. எங்கிருந்தோ வரும் தேனீக்கள் அவற்றை அறிந்து எடுத்துச் செல்கின்றன. எனவே நாம் தண்டேன் நுகரா மண்டூகங் களாக இல்லாது தேனீக்களாகவும், பன்னாடைகளாகவும் அல்லாது பதார்த் தத்தைத் தாங்கும் பாத்திரங்களாக மாறத் தலைப்படுவோம்.

ஆண்டமொழி வீழ்ந்து பின்னர் ஆழ்வது வரலாறு. இதற்குத் தமிழ்மொழி விதிவிலக்கல்ல. காலத்தின் கோலத் தாலும், நாம் விட்ட தவறுகளாலும் அந்நி யர்கள் செய்த அடாவடிகளாலும் சரிந்த தமிழ் விழுந்துவிடாமலும், விழுந்த தமிழ் அழிந்துவிடாமலும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று மட்டும் இருந்து விடாமலும் எங்கும் சென்று எதிலும் வென்று சரிந்த தமிழ் நிமிர்ந்து, நிமிர்ந்த தமிழ் எழுந்து, எழுந்த தமிழ் வளர்ந்து, வளர்ந்த தமிழ் வாழும் தமிழாக மட்டும் நின்றுவிடாமல் ஆளும் மொழியாக விளங்கவேண்டும்.

♣ ♣ ♣

# மாகாணமட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள்



வலைப்பந்து 2008 15 வயதுப் பிரிவு மாகாணம் 1ஆம் இடம்



கரப்பந்து 2008 15 வயதுப் பிரிவு மாகாணம் 1ஆம் இடம்




வலைப்பந்து 2008 19 வயதுப் பிரிவு மாகாணம் 1ஆம் இடம்




கரப்பந்து 2010 15 வயதுப் பிரிவு மாகாணம் 2ஆம் இடம்

# சாதனையாளர்கள்



செல்வன் இ. விஜயகுமார்
கலை – 3A 2005



செல்வி. சோ. பிருந்தா
வர்த்தகம் – 2A B - 2006
வலைப்பந்தாட்ட அணித் தலைவி



செல்வி. ர. மீரா
கலை – A 2B - 2007
வலைப்பந்தாட்ட வீராங்கனை



செல்வி. சு. தேவகி
வர்த்தகம் – 3A - 2009
வலைப்பந்தாட்ட அணித் தலைவி



செல்வி. த. சங்கீதா
மெய்வல்லுநர் நிகழ்வில்
(15 வயது பிரிவு)
மாகாணமட்ட முதன்மை
வீராங்கனை



செல்வி. த. தேவதர்ஷினி
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
மாவட்ட நிலை 04 (2006



இல்ல மெய்வல்லுநர் போட்டி




தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்ற சிந்துநடைக் கூத்து




மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்று திரும்பியபோது நடைபெற்ற வரவேற்பின்போது....

# சாதனையாளர்கள்




செல்வன் ர. ரஜீபரன்
3A - 2008



செல்வன் தே. சுதர்சன்
3A - 2008



செல்வி ஞா. மேரி யூப்ரேஷியா
3A - 2008



செல்வன் சி. சரூபன்
2A, B - 2008



செல்வி. அ. டில்லி பபீனா
2A, B - 2008

# தமிழர் திருமணமும் தாலியும்

**செல்வி. மீரா இரவீந்திரகுமாரன்**

*யாழ். பல்கலைக்கழகம், (பழைய மாணவி)*

தமிழர் திருமணத்தின் அடிப்படைக் கருவியாக இன்றைய திருமணங்களில் தாலி அமைந்துவிட்டது. "தாலி" என்ற இரண்டெழுத்து சொல்லுக்குள்ள மதிப்பு சமூக மட்டத்தில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது மனம் கொள் ளத்தக்கது. தாலி என்பது ஆபரணம் மட்டு மல்ல அதன் மீது அளவு கடந்த புனிதம் ஏற்றப்பட்டு சடங்குகளில் முன்னிலைப் படுத் தப்பட்டு தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை யுடன் இரண்டறக் கலந்து விட்டது.

தாலி என்பது ஒரு பாக்கியம், கிறிஸ் தவர்கள் பொன் சிலுவையையும், முஸ் லீம்கள் கருக மணி மாலையையும் தாலிக்குப் பதிலாக அணிவது உண்டு. தமிழர் திருமணத்தின் ஆதாரம் தாலி எனின் மலையாளத் திருமணத்தில் "புடவை கொடல்" என்னும் "புடவிட்" இன்று அவர்கள் முருங்கை இலை வடிவத்திலான தாலி அணிகிறார்கள். கன்னட, துழு, மராத்தியம், பெண்கள் கருமணி மாலை யில் கோத்த குமிழ் போன்ற தாலி அணி கிறார்கள். வேறு சிலர் பவளம் அணிகி றார்கள். வங்காளிகளுக்கு தாலியின் இடத்தை சங்கு வளை எடுத்துக் கொண்டது.

"தாலி இல்லாவிட்டால் பெண் வேலி தாண்டிவிடுவாள்", "தாலி பெண்ணுக்கு வேலி" என்ற கருத்து நிலைகள் நிலவி வருகின்றது. ஆனால் அக்கருத்துக்கள் எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பது கேள்விக்குரிய விடயமே. இக்கருத்தை தகர்த்து தெறிவதாக திருவள்ளுவரின் குறள் தெளிவுபடுத்துகிறது.

**"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்**
**நிறை காக்கும் காப்பே தலை"**

கோட்டை மதில், வாயிற் காவல், தாலி முதலான சிறைகளால் என்ன பயன் ? மகளிர் தமது நிறையை காக்கும் காவலே தலையான காவல் என்று " தாலி பெண்ணுக்கு வேலி" என்கின்ற கருத்து நிலையை தகர்த்துள்ளது.

தாலி என்றால் மூன்று முடிச்சு என்ற நிலை உண்டு. ஆனால் ஈழத் தமிழர் வழக்கில் மூன்று முடிச்சு இடப்படும் சாத்தியம் இல்லை. காரணம் தாலிக் கொடி பொன்னால் செய்யப்படுவதால் மூன்று முடிச்சுப் போடும் வழக்கம் கிடையாது. ஆனால் தமிழக மரபில் எவ்வளவு தான் வசதி இருந்தாலும் மஞ்சள் நாணிலே தாலி கோர்த்து அணியும் மரபே உண்டு. இதனால் இங்கு மூன்று முடிச்சு இடப்படும் வழக்கம் காணப்படுகிறது. இந்த மூன்று முடிச்சு குறிப்பது -

1. முதல் முடிச்சு கணவனுக்கு அடங்கி யவள்.
2. இரண்டாம் முடிச்சு கணவனின் பெற் றோருக்கு அடங்கியவள்.
3. மூன்றாம் முடிச்சு கடவுளுக்கு அடங் கியவள்.

எனக் கொள்ளப்படகிறது.

ஆரம்பத்தில் தாலி என்பது திருமண வைபவத்தில் ஆண் - பெண் இருவருக்கும் இடையேயான பாசப் பிணைப்பை அதி கரிப்பதாக காணப்பட்டது. மனைவியின் கழுத்தில்ள்ள தாலியை காணும் போது எனக்குரித்துடையவள் என்றும் மனைவி

அத்தாலியைக் காணும் போது தான் கணவனுக்கு உரிமையானவள் என்ற பாசப் பிணைப்பினை ஏற்படுத்துகிறது. இன்று இத் தாலி அந்தஸ்தை (பொரு ளாதார மட்டத்தில்) தீர்மானிக்கும் கருவியாக மாறியுள்ளது. ஈழ மரபில் தாலிக் கொடி என்பது பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது அதனை வைத்து பொருளீட்டு வதனை நோக்கமாகக் கொண்டு அணியப் பட்ட போதும், இன்றைய நிலையில் அந்தஸ்தையே வெளிப்படுத்துகிறது. இன்று புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் அறுபது பவுணில் தாலி போடும் சந்தர்ப்பங்களும் நிகழ்ந்துள்ளது.

இந்தளவு தூரம் தமிழர் வாழ்வு ஐக்கியமாகிவிட்ட தாலிக்கும், தமிழர் திருமணத்திற்கும் எந்தத் தொடர்புமில்லை. ஆனால் இத்தாலி தமிழர் பண்பாட்டில் ஆரம்பம் முதலே இருந்துள்ளது. ஆனால் திருமண வைபவத்தில் பயன்பாட்டி லில்லை என்பது மனம் கொள்ளத்தக்க ஓர் உண்மை. சங்க இலக்கியங்களை ஆராயும் போது தாலி என்ற சொல் பெண்ணுக்கு அணிவிக்கும் ஒன்றாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தாலி என்கின்ற சொற் பிரயோகம் இருந்துள்ளது.

**"பொன்னுடைத் தாலி யென் மகன்"**

*(அக நானூறு - 18)*

**"புலிப்பற்றாலிப் புதல்வன்"**

*(குறுந்தொகை - 03)*

போன்றன எடுத்தக்காட்டு.

தாலி என்பது தமிழ் மரபில் பெண்கள் அணியும் ஒன்றாக எந்த இடத்திலும் இல்லை.

**"முகிழ் நிலாத் திகழ் தரும் மூவாத் திங்கள்**
**பொன்னுடைத்தாலி .............. "**

(அக நானூறு - 57)

**"அவன் கண்ணி தார் பூண்டு**
**தாலி களைந்தன்றும் இலவே"**

(புற நானூறு - 77)

போன்ற இடங்களில் தாலி என்ற சொல்லானது ஆண்குழந்தைக்கு அணிவிக்கும் ஒன்றாகவே கூறப்பட்டிருக்கிறது. போர்க்களக் காட்சிகளை விளக்கும் போது பயன்பாட்டில் இருந்திருக்கின்றனவே தவிர திருமணக் காட்சிகளில் இல்லை. மேலும் ஐந்தாம்படைத்தாலி அணியும் வழக்கமும் இருந்துள்ளது. அதாவது சிறுபிள்ளைகளுக்கு (ஆண் குழந்தைகளுக்கு) சங்கு, சக்கரம், தண்டாயுதம், வில் வாள் ஆகிய ஐந்து கருவிகள் அமைந்த தாலியை அணிவித்தனர். புலியின் பல்லாலான தாலியை அணிவித்துள்ளனர். ஆனால் ஓரிடத்தில் தலைவன் தான் வேட்டையாடிய புலிப்பல்லை எடுத்து தனது காதலியின் கழுத்தில் அணிந்து பார்த்து மகிழ்ந்துள்ளமை பற்றிய குறிப்பு உண்டு.

சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் திருமணச் சடங்கு முறை பற்றிய இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன.

**" உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை**
**பெருஞ் சோற்ற மலை நிற்ப நிரை கால்..."**

*(86 வது பாடல்)*

**"மைப்புறப் புழுக்கி யென்க்களி வெண்சோறு**
**கன்னிக தானம் என்ற பெயரின்..."**

*(136 வது பாடல்)*

உழுத்தம் பருப்புடன் கூட்டிச்சமைத்த செவ்விய பொங்லொடு பெரிய சோற்றுத் திரள் ஆக்கி மரத்தூண்கள் நாட்டப்பட்ட பந்தலில் வெண்மணல் பரப்பி மாலைகளை தொங்க விட்டு, விளக்கேற்றுவர். பின் குற்றமற்ற புகழினையுடைய ரோகிணி நட்சத்திரம் கூடும் விடியற் காலைப்

பொழுதில் முதுமகளிர் கைகளில் கலங் களையும் உச்சியில் குடத்தினை உடையவராயும் ஆரவாரிப்பர். பின் மகனைப் பெற்ற தூய மகளிர் நின்று நீர் தெளிக் கப்பட்ட குளிர்ந்த பூக்களுடன் நெல்லினை தூவி மணமக்களை வாழ்த்துவர் பின் சுற்றத்தார்.

"சிறந்த இல்லறக் கிழத்தியாக விளங்குவாய்" எனக்கூறி உரியவனிடம் வழங்குவர்.

மேலேகூறப்பட்ட பாடலில் கன்னிகா தானம் என்ற பெயரின் பொருளைத் தரும் தாரைவார்க்கும் காட்சிகளோ இல்லை. குறிப்பாகத் தாலி என்ற பேச்சுக்கே இடமில்லை.

12ம் நூற்றாண்டில் சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரிய புராணத்தில் –
**"இறும்புலி எயிற்றுத் தாலி இடையிடையே..."**
என்ற பாடல் வரியில் ஆண் இடுப்பில் அணியும் ஒன்றாகவே கூறப்பட்டுள்ளது.

கி.பி 7ம் நூற்றாண்டளவில் திருமணச் சடங்குகளை ஒவ்வொன்றாகப்பாடும் ஆண்டாளின் பாடல்களில் தாலியைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

இன்னும் ஓர் வியப்பிற்குரிய செய்தி எதுவென்றால் தமிழர்கள் மத்தியில் பிராமணர்களால் நடாத்தி வைக்கப்படும் புரோகித திருமண வழக்கு வந்த பின்பும் தாலி முறை வரவில்லை தமிழர் முறைக்கு மாறாக பார்ப்பனரின் நால்வருண முறைப் படி செய்யப்படும் புரோகித திருமணமுறை முதன் முதலாக சிலப்பதிகார காப்பியத்தில் தான் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அதில் கூட தாலி என்ற சொல் இடம் பெறவில்லை எனவே தாலி கட்டும் வழக்கம் இளங்கோ வடிகள் காலத்திலும் இருந்ததில்லை.

சிலப்பதிகாரத்தில் கோவலன் – கண்ணகி திருமணத்தின் போது–
**".....அகலுள் மங்கல அணி எழுந்தது."**
எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மங்கல அணி என்பது தாலியைக் குறித்ததா?. என்பதற்கு தகவல் இல்லை

மேலும் அகநானூற்றில் 208 வது பாடலில் "வெளியன் வேன்மான்" இறந்த போது அவனது மனைவிமார் தமது பூ மாலையை பிய்த்தெறிந்ததாகவும், மேலும் "தொடி" களைத்தனர் என்றும் கூறப்பட் டுள்ளது. இங்கு தொடி என்பது வளை யலைக் குறிக்கின்றது. தாலி என்று எங்கும் கூறப்படவில்லை.

தாலி அணியும் வழக்கமானது ஆரி யர்களின் வருகையோடு தொடர்புபடலாம் என ஐயம் உண்டு. கி.பி. 15ம் நூற்றாண் டளவில் மொகாலயர்களின் படையெடுப்பு நடைபெற்றபோது அவர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு பெண்கள் தாலி அணியத் தொடங்கினார்கள். எது எப்படி இருப்பினும் திருமணத்தின்போது பெண் கழுத்தில் தாலி அணிவது என்பது பிற்பட்ட காலத்தில் புகுத்தப்பட்ட ஒரு அடையாளமே.

நம்மிடையே நடைபெறும் இக்காலத் திருமணமுறை நமது பண்டையத் தமிழர் மரபிற்கு முற்றும் மாறானதாகக் கருதப்படும் என டாக்டர் இராசமணிக்கானார் கூறி யுள்ளார். எவ்வாறிருப்பினும் தமிழ்ப் பெண்களின் மனதில் அழியாத இடத்தை தாலி பெற்றுக்கொண்டு அவர்களிற்கான சமூக அந்தஸ்தை வழங்கியுள்ளது.

♣ ♣ ♣

# விழவை நோக்கி அடி வை!

**என். தனுசுஜன்** B.A,
*பழைய மாணவன்,*
*யா சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.*

வலியோடு நீ
இருந்தால் வா
நான் உனக்கு
வழி காட்டுகிறேன்!

பூக்களை புகழ்பாடித்
திரிந்தவர்களுக்கிடையில்
நான் எப்போதும்
வேர்களின்
வேதனை பற்றியே
சிந்தித்துக் கிடந்தவன்.

சிறகு எதற்கு?
பாதங்களாலேயே
பறக்கலாம் வா!
உன்னை உணர்
உலகம் சுலபம்!!

எதற்கெடுத்தாலும் வருந்தாதே
ஏணியே இல்லையென்று
ஏங்குவதா?
முயன்று செல்...
எறும்புகளுக்கெல்லாம்
ஏணி வைத்தவன் எவன்?

இறக்கை இழந்தாலும்
உன் இலக்கை
ஒருபோதும் இழக்காதே.
உன்னைத் தடுக்க
எது வரும்?

முகில்கள் முட்டி
சூரியன் செத்ததில்லை
எளிதில் எல்லோரையும்
ஏற்றுக் கொள்ளாதே
உன் காற் செருப்புக் கூட
ஓர் நாள்
முள்ளாக மாறிவிடக் கூடும்.

துணிந்து வாழ்
தொடர்ந்து வாழலாம்...
நெருப்பைக் காட்டியா
கடலைப் பணியச் செய்வது?
நீ–
சுடும் நெருப்பல்ல
சுடாத கடல்....!

அழுவதல்ல வாழ்வு
எழு...!
வீழ்பவன் கோழையுமல்ல
எழாமலிருப்பவன்
வீரனுமல்ல
உன் கண்ணீர் கொண்டு
பன்னீர் செய்யப் பழகு.

வறுமை வந்தாலும்
வருந்தாதே
வசதியும் வாய்ப்பும்
எல்லோர்க்கும் வருவதில்லை
முத்தைச் சுமக்கும்
நத்தையின் கால்கள்

நடப்பது
மெத்தையில் அல்ல!
நன்மை கருதிக் கொஞ்சம்
பணிந்தும் வாழ்
காகத்தின் கூட்டில்
முட்டையிடுவதால்
குயிலின் கௌரவம்
குறைந்து போனதுண்டா?
நீ இருக்குமிடம்
முக்கியமல்ல
உன் முயற்சி தான்
பலம்
சாக்கடை ஈயும்
சரித்திரம் படைத்தால்
சந்தனம்
பூசிக் கொள்ள முடியும்

மழை பொழிவது
மலை கரையவா?
வலி உனக்கு வழி
தோல்வி உனக்கு கல்வி
தொடர்ந்து செல்......!!

பலம் அறிந்து பழகு
கிளைகளோடு சேர்
இலையோடு உனக்கென்ன
சிநேகம்?
வளர்ச்சியில் முயற்சியை
நிறுத்தாதே
எப்போதும் பயிர்களையே
பாராட்டிக் கொண்டிராமல்
களைகளையும் கொஞ்சம்
கவனி!

சேற்றில் சென்று வந்த
காற்றாயிராதே,
புல்லாங்குழலுக்குள்
புகுந்து வந்த
காற்றுக்கே புகழுண்டு!


உனக்கான வெளிச்சத்தை
விரயம் செய்யாமல்
அடுத்தவன் இருளை
அகற்றிடு.
எல்லோரும் மகிழ்திட
நல்லவை செய்தால்
கிளைகளில் மட்டுமல்ல– நீ
முட்களிலும் பூப்பாய்!
நெருப்பில் விழுந்தாலும்
முளை கொள்வாய்!!

♣ ♣ ♣



**நிலவின் கீழே துயில் கொண்டிருந்தான்**
**சூரியன் கீழே குளிர்காய்ந்திருந்தான்**
**செய்யத்தான் போகிறோம் என்றே வாழ்ந்திருந்தான் – எதுவும்**
**செய்யாமலேயே மாய்ந்துவிட்டான்.**

**– ஜேம்ஸ் அல்பெரி**



# கணனிக் கல்வியைத் தெரிந்தெடுப்பது எப்படி?

இ. விஜயகுமார்
(B.A (Hons) Special in Sociology, B.Sc (Reading) Computer Engineering)

"கற்றவர்க்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு" எனும் முதுமொழிக்கிணங்க கல்வி செல்வத்தைப் பெற்று நமது எதிர்கால வாழ்க்கையை சிறப்புற அமைக்க வேண்டும். கல்வியின்றி இனிவரும் போட்டி நிறைந்த காலத்தில் எமது வாழ்வை மிளிரச்செய்வது என்பது குதிரைக்கு கொம்பு முளைப் பதைப் போன்றதொன்றாகும். சிறு வயதிலேயே கல்வியின்பால் நாட்டம் செலுத்தி எதிர்காலத்தில் சிறந்த கல்விமானாக வரவேண்டும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' எனும் பழமொழி யின் அர்த்தத்தை புரிந்துகொள்பவர்கள் முயற்சி எடுத்தால் என்றும் தோற்ப தில்லை. ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு துறையில் நாட்டம் இருக்கும். அவரவர் தங்களுக்கு பொருத்தமான துறைகளில் நாாட்டம் செலுத்தி அதில் கைதேர்ந்தவர்களாக வரவேண்டும்.

பொதுவாக எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் சிறப்புத்தேர்ச்சி அடைவதுடன் அதனோடு சேர்த்து வேறு பல துறைகளிலும் கவனம் எடுத்தால் எதிர்காலம் சிறப்பாக அமையும். உதா ரணமாக முகாமைத்துவத்தில் சிறப்புத் தேர்ச்சி அடைபவர்கள் அதனோடு தொடர்புடைய செயற்றிட்ட முகாமைத் துவம் **(Project Management)** மற்றும் மனிதவள முகாமைத்துவம் (Human Resource Management) போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைய நவீன உலகில் பலதரப் பட்ட தொழில்சார் துறைகள் உள்ளன, புதிதாக உருவாகிக்கொண்டும் வரு கின்றன. கல்வியினை முடித்து தொழிற் துறையில் காலடி எடுத்து வைக்கும் போது தான் அங்கே உள்ள போட்டியை பலரும் உணர்ந்துகொள்கிறார்கள். வளர்ந்துவரும் புதிய பல தொழிற்றுறை களுக்கு ஏற்றவாறு நமது ஆளுமை யினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாக எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் வேலைவாய்ப்பு என்பது உண்டு. ஆனால் அதனை பெற்றுக் கொள்ள எடுக்கும் காலம், கிடைக்கும் சம்பளம் போன்றன வேறுபட்ட வகையில் அமைந்துள்ளது. இதுவே பல புதிய துறைகள் வேலைவாய்ப்புச் சந்தையில் உருவாகவும், அவை ஏனையவற்றைப் பின்தள்ளி முன்நிற்கக் காரணமாய் அமைகின்றன.

இன்றைய பல கல்வித்துறைகளில் கணணித் துறை மிகமுக்கிய கல்வித் துறையாக திகழ்கின்றது. பலநாடுகளில் இன்று கணணித்துறைகளில் சிறப்புத் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஏனைய பலதுறை

களும் இதன் உதவியை நாடிநிற்கின்ற மையே கணணித் துறையின் இத்தகைய வளர்ச்சிக்கு ஏதுவாக அமைகின்றது. கணணித்துறையில் இருப்பவர்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளத்தினை கேட்பவர்கள் இது உங்கள் மாதாந்த வருமானமா அல்லது வருட வருமானமா என வியந்து நிற்குமளவுக்கு கணணித்துறையினரின் வருமானம் அமைந்துள்ளது. கணணிக் கல்வியை எப்படி தேர்ந்தெடுப்பது என்பது அவரவர் ஆளுமைக்கேற்ப தங்கியுள்ளது. கணணியை சிறப்புத்தேர்ச்சியாகவோ அல்லது தங்களது துறை சார்ந்த கணணிக் கல்வியையோ மேற்கொள்ள முடியும். பொதுவாக சிறப்புத் தேர்ச்சி அடைய விரும்புவர்கள் கணணியை மட்டுமே தங்களது கல்விதுறையாக தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். இங்கு தான் பல சிக்கல்கள் எழுகின்றன. கணணி என்பது ஒரு சாதாரண கற்கைநெறி அன்று. நினைத்தவரெல்லாம் கணணியை முழுவதுமாக கற்று வித்தகராக முடியும் என்பது கானல் நீரைப் போன்றது.

கணணியை முழுமையாக கற்று முடித்திருக்கின்றேன் என்று இதுவரை யாரும் கூறியதில்லை கூறவும் முடியாது. கணணிக் கல்வி என்பது சமுத்திரத்தினிலும் பெரியது. அதை நீந்தி கரை சேர்வது என்பது ஏழேழு பிறப்பெடுத்தாலும் முடியாததொன்று. இவ்வளவு கடினமான துறையைப் பற்றி எதற்கு பேச வேண்டும், அதை ஏன் கற்க வேண்டும் என நீங்கள் கேட்பது எனக்கொன்றும் கேட்காமல் இல்லை. அவசரம் எதற்கு பொறுமையாக முழுவதையும் படித்து முடியுங்கள் நீங்களே உணர்ந்துகொள்வீர்கள். பொறியியலாளன் (Engineer) என்பவரையும் அவர் தொடர்பான பொறியியல் (Engineering) என்ற துறையினையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். உயர் தரத்தில் கணித பாடத்தை தமது துறையாக தெரிந்தெருப்பவர்கள் சிறப்பான மதிப்பெண்ணை பெறுமிடத்து மேற்கூறிய துறையினை தமது தொழிற்துறையாக மேற்கொள்ள முடியும். பொறியியலாளன் என்பவரில் பலவிதமான பொறியியலாளர்கள் உள்ளனர். குடிசார் பொறியலாளர் (Civil Engineer), மின்னணுவியல் பொறியியலாளர் (Electrical and electronics Engineering), இயந்திரவியல் பொறியியலாளர் (Mechanical Engineer), கணணிப் பொறியியலாளர் (Computer Engineer), உற்பத்தித்துறை பொறியியலாளர் (Production Engineer) இராசாயன பொறியியலாளர் (Chemical Engineering) போன்று இன்னும் பல துறைகள் உள்ளன. இவ்வாறாகவே கணணித்துறையிலும் பல விதமான பிரிவுகள் உள்ளன.

நீங்கள் ஒரு கணணியியலாளனாக வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தால் கணணியில் உள்ள கற்கைப் பிரிவுகளை தெரிந்துகொள்ள வேண்டும். பின்னர்தான் அதுதொடர்பான விடயங்களை அறிந்து கொண்டு கற்க வேண்டும். கணணியை தமது பிரதான துறையாக தெரிந்தெடுக்காதவர்கள் தங்களுக்கு பொருத்தமான வேறு துறையினைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுவதுடன் அது தொடர்பான கணணித்துறையினை ஒரு பகுதியாக மேற்கொள்ளலாம். இது பற்றி பின்னர் விரிவாக நோக்குவோம். கணணித் துறையினை எப்படி தெரிந்தெடுப்பது என்பது முக்கிய விடயமாகும், அது பற்றி விரிவாக நோக்குவோம்.

பொதுவாக கணணி என்பதை மூன்று பிரிவாக பிரிக்கலாம். வன்பொருள் (Hardware), மென்பொருள் (Software) மற்றும் மனிதன் (Human or Live). இவை அனைத்தும் ஒன்று சேர்ந்தாலே ஒரு கணணி முழு வடிவம் பெறுகின்றது. கணணிக் கல்வி என்பதும் பலபிரிவுகளை கொண்டுள்ளது. மென்பொருள் உரு வாக்கம் (Software language), கணணி வலையமைப்பு (Networking), மற்றும் மென்பொருள் பாவனை அல்லது மென் ஒருங்கு (Application software) போன்ற மூன்று பெரும் பிரிவுகளாக துறைகளாக பிரிக்கலாம். மேற்கண்ட மூன்று பெரிய துறைகளைணயும் முழுமையாக கற்க முடியாது. இருந்தாலும் நீங்கள் உயர் தரத்தில் கணித பாடத்தை கற்று தேர்ச்சி பெற்றால் கணணிப் பொறியியலாளனாக வரமுடியும். கணணிப் பொறியியலாளன் ஒருவன் மேற்கண்ட மென்பொருள் உரு வாக்கம் (Software language), கணணி வலையமைப்பு (Networking), மற்றும்மென் பொருள் பாவனை (Application software) போன்ற மூன்று துறைகளிலும் குறிப்பிட்ட பகுதியினைக் கற்ககூடிய வாய்ப்பு ஏற்படு கின்றது. அரசதுறை தவிர தனியார் துறையினரும் கணணி தொடர்பான பல கற்கை நெறிகளை வழங்குகிறார்கள். கட்டணம் செலுத்துவதனூடாக நீங்கள் அவற்றைக் கற்க முடியும்.

கணணிக் கல்வியில் மென்பொருள் உருவாக்கம் (Software language or Programming), என்ற துறை மிகப்பெரிய தொன்றாகும். கணணி தொடர்பான மென்பொருட்களை இரு பெரும் பிரிவு களாக பிரிக்கலாம் அவையாவன இயங்கு தளம் - Operating System (உதாரணமாக Windows , Linux and etc) மற்றும் மென் ஒருங்கு – Application Software (உதார ணமாக Adobe photoshop, Ms Office and etc) என்பனவாகும். மேற்கண்ட மென் பொருட்களை உருவாக்கும் செயற்பாடே மென்பொருளுருவாக்கம் ஆகும். இவற்றினை உருவாக்குவதற்கு 2000 க்கு மேற்பட்ட கணணி மொழிகள் (Computer Languages) உள்ளன. முக்கிய மாக C, C++,C#, Cobol, Pascal. Java, .Net போன்றவற்றை குறிப்பிடலாம். எனவே மென்பொருள் உருவாக்கம் (Software language) எனும் துறை மிக பெரிய துறையாகும். இதில் மட்டுமே சிறப்புத் தேர்ச்சியை அடைய முடியும். பொதுவாக கணணி மொழியியை தமது தொழில்த் துறையாக கொண்டிருப்பவர்களை கணணி மென்பொருள் பொறியாளர் (Software Engineer) என அழைக்கப்படுவார். இங்கும் ஒரு முக்கிய விடயம் இருக்கின்றது. எல்லா கணணி மொழிகளையும் சிறப்பாக கற்று அத்துறையில் மிளிர்வது என்பது மிக கடினமானதொன்றாகும். எனவே ஒரு கணணி மொழியையோ அல்லது சில கணணி மொழிகளையோ சிறப்பாகக் கற்று தமது எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக்கொள்ளலாம். உதாரணமக JAVA or .NET இனை கற்கலாம் அல்லது இவ்விரண்டையும், இதனோடு சேர்த்து வேறு சில கணணி மொழிகளையும் கற்று கணணி மென்பொருள் பொறியிய லாளராக (Software Engineer) வரமுடியும்.

இதே போன்று இணைய வடிவமைப்பு (Website Design) என்பது இணைய மொழி சார்ந்த ஒரு துறையாகும். இதனை பொது வாக கணணிமொழி (Programming) என்ற துறைக்குள் அடக்கிவிடலாம். இணைய வடிவமைப்பு (Website Design) என்ற துறையும் மிக முக்கியமானதொன்

றாகும். இதற்கும் பலவிதமான இணைய மொழிகள் தேவையாக உள்ளன. அவை யாவன HTML, XHTML, JAVA Script, CSS, PHP, ASP.NET, JSP.NET போன்ற பல இணைய மொழிகளைக் குறிப்பிடலாம். இவற்றை மட்டுமே படித்து இணைய வடிவமைப்பாளராகவும் வரலாம் (Web site Designer). தவிர இணைய வடிவ மைப்பை இலகுபடுத்துவதற்கேற்ற வகை யில் சில முக்கிய மென்பொருட் களும் உள்ளன. முக்கியமாக Adobe Dreamweaver என்பதனை குறிப்பிடலாம்.

கணணி வலையமைப்பு (Networking) என்பது இன்னொரு மிக முக்கிய துறை யாகும். இதனோடு சேர்த்து கணணி வன்பொருள் (Computer Hardware) தொடர்பான விடயங்களையும் கணணி யின் பாகங்களை எவ்வாறு பொருத்துவது (Compute Assemble) மற்றும் அதன் பிழைகளை திருத்துதல் (Computer Troubleshoot) தொடர்பான விடயங் களையும் கற்க முடியும். கணணி வலை யமைப்பு (Networking) என்பதில் பல எண்ணக்கருக்கள் உள்ளன. உள்ளகப் பிணையம் (Local area Networking), பெரும் பரப்பு வலையமைப்பு (Wide area Networking) போன்றவற்றை குறிப்பிட லாம். இத்துறையில் பலவிதமான கற்கை நெறிகள் உள்ளன. அடிப்படையாக CCNA மற்றும் CCNP போன்றவற்றை குறிப்பிட லாம். இவை தவிர கணணி வலை யமைப்பில் எண்ணற்ற பல துறைகள் உள்ளன. கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு நிர்வாகம் (Computer Hardware and Network Administration), கணணி வலையமைப்பு மற்றும் உகப் பாக்கம் (Network Planning and Optimization), கணணி வலையமைப்பு பொறியாளர் (Network Engineer), கணணி வலையமைப்பு மற்றும் தொடர்பாடல் (Networking and Communication) போன்ற பல பாடநெறி களைக் குறிப்பிடலாம். மிக முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் CISCO எனும் ஒரு நிறுவனமே கணணி வலையமைப்பிற்குரிய முக்கிய பாகங் களை உற்பத்தி செய்வதும், கணணி வலையமைப்பு தொடர்பான கற்றை நெறிகளை வழங்குதல் மற்றும் அவற்றுக்கு அங்கீகாரமளித்தல் ஆகிய முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. எனவே இந்நிறுவனத்தின் அனுசரணை யூடான CCNA எனும் கணணி வலைய மைப்பு கற்கை நெறியினை பூர்த்தி செய்வதுடன் அதனை தொடர்ந்துவரும் இரு வருடங்களில் CCNP எனும் கற்கை நெறியினை பூர்த்தி செய்வதனூடாக நீங்களும் ஒரு கணணி வலையமைப்பு பொறியியலாளராக வரமுடியும். குறிப் பாக இத்துறையினை உங்கள் எதிர்கால தொழிற்றுறையாகவோ அல்லது பகுதி நேரம் கற்று ஏனைய கணணிக் கல்வி களோடு இணைந்தவகையில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மென்பொருள்களின் பாவனை (Use of Application Software) என்பது பலதரப்பட்ட வகையை சார்ந்தது. இது ஒரு மிகப்பெரிய துறை, தினம் தினம் பலவிதமான மென்பொருட்கள் உரு வாக்கப்படுகின்றன. எனவே இவற்றை முழுவதுமாக படித்து முடிப்பது என்பது முடியாத காரியமாகும். எல்லா மென் பொருட்களையும் பலவிதமான வகைக் குள் அடக்கலாம். மேலும் மென்பொருட் களின் உபயோகத்தினை வைத்து அதனை வேறுசில வகைக்குள் அடக்கலாம். எமக்குப் பொருத்தமான துறையை

தேர்ந்தெடுப்பதன் மூலம் அத்துறைக் குரிய முக்கிய மென்பொருட்களைக் கற்றறிந்துகொள்ளலாம். எந்த வகை யான பொருட்கள் உள்ளன, எவ்வாறான பொருட்களை படிக்க வேண்டும் என்பது முக்கியமான விடயங்களாகும். அவற் றினைத் தொடர்ந்து பார்ப்போம்.

அடிப்படையாக எல்லோரும் கற்க முயல்வது MS Office. இதில் Word, Excel, Access, PowerPoint போன்ற அடிப்படை மென்பொருட்கள் உள்ளடக்கப்பட் டுள்ளன. இவற்றோடு சேர்த்து இணையம் (Internet), மின்னஞ்சல் (Email) போன்ற மிகமுக்கியமான விடயங்களையும் கற்றுகொள்ள வேண்டும். MS Office என்பது பொதுவாக கோப்புக்களை உருவாக்கவும் அதனோடு தொடர் புடைய செயல்பாடுகளை மேற்கொள்ள வும் உதவுகிறது. அலுவலக உபயோகம் தொடக்கம் எல்லாவிதமான கல்விச்செயற் பாடுகளிலும் உதவுகின்றது. பல தனியார் துறைகளில் இதனை கற்க கூடிய வாய்ப்பு உள்ளது. அடுத்து Desktop Publishing (DTP) எனும் துறை மிக சிறந்தது. இதில் Adobe Photoshop, Corel Draw, Page Maker போன்ற மென்பொருட்கள் உள்ளக்கப் பட்டிருக்கும். இதனை கற்பதன் ஊடாக பத்திரிகை மற்றும் அச்சகங்கள் போன்ற வற்றில் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ளலாம். இதேபோன்று தரவுத்தள நிர்வாகி (Database Administrator) என்ற பிரிவும் முக்கியமானதொன்றாகும். இதில் தரவுத்தளம் (Database) தொடர்பான மென்பொருட்களைக் கற்க முடியும். MySQL, SQL, Oracle போன்ற மென்பொருட் கள் மிக முக்கியமானவையாகும். இத் துறைக்கும் தொழில்துறையில் மிகப் பெரும் வரவேற்புள்ளது.

கணக்கிடல் (Accounting) தொடர்பான பல முக்கிய மென்பொருட்கள் உள்ளன. அவற்றை தனிப்பெரும் துறையாக படிக்க முடியும். தவிர உங்கள் தொழிற்றுறை கணக்கிடல் தொடர்பானது எனில் நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான மென்பொருட்களைக் கற்றுக்கொள்ள லாம். QuickBooks, Account Edge, Bookkeeper, Tally போன்ற பல முக்கிய மென்பொருட்களை குறிப்பிடலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் இணையமுகவரிக்கு சென்று பாருங்கள் http://en.wikipedia.org/wiki/Comparison_of_accounting_software. இதேபோன்று, புள்ளிவிபரங்கள் (Statistical) தொடர்பான மென்பொருட் களும் உள்ளன. அவற்றினை தனித்துறை யாக கற்க முடியும். Stata, SPSS, R, Minitab, MATLAB போன்ற மென்பொருட்களை குறிப்பிடலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும் மென்பொருட்களின் விபரங்களுக்கும் கீழ்வரும் இணைய முகவரிக்குச் சென்று பாருங்கள். http://en.wikipedia.org/wiki/List_of_statistical_packages.

படத்தொகுப்பு (Video Mixing or Video Editing) என்பது முக்கியமான ஒரு பொழுது போக்கு மற்றும் தொழில் ரீதியான கணணித்துறையாகும். வரு மானத்தை அள்ளித்தரும் ஒரு துறையு மாகும், இதனை இரண்டு வகையாக பிரிக்கலாம். உள்ளூர் படத்தொகுப்பு மற்றும், திரைப்படத்தொகுப்பு (Cinema Editing) என்பனவாகும். உள்ளூர் படத் தொகுப்பு என்பதில் திருமணம், பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா போன்ற நிகழ்வுகளுக்கு எடுக்கப்படும் நிகழ் படத்தினை (Video) தொகுப்பதாகும்.

இதற்கு Adobe Premiere, Pinnacle Studio, Cyber Link Power Director, Corel Video Studio, Sony Vegas Movie Studio போன்ற மென்பொருட்களை குறிப்பிடலாம். இத்துறைக்கு பொருத்தமான மேலும் சில மென்பொருட்களை அவசியம் கற்க வேண்டும். அவையாவன Adobe Photoshop, Adobo Flash, 3d-Album, Movie Title Maker, Buffler Titler போன்றவற்றை கற்பதன் ஊடாக சிறந்த படத்தொகுப்பு கலைஞனாக உள்நாட்டில் சிறந்து விளங் கலாம். திரைப்படத்தொகுப்பு என்பது மிகப்பெரும் கலை. இதனை நம் நாட்டில் கற்பதற்கான வசதி. வாய்ப்புகள் இல்லை. இந்தியா போன்ற வெளிநாடுகளுக்கு சென்று கற்கலாம். Maxon Cinema 4D, Maya, 3D Studio Max போன்ற மென் பொருட்களை திரைப்படத் தொகுப்புக் குரியனவாக குறிப்பிடலாம். இதற்கு தொடர்பான வகையில் இரண்டு துறை கள் உள்ளன. அவை படத்தொகுப்பு துறைக்கு பெரிதும் துணைபுரிவதுடன் அவை தனித்து நின்றும் பயன்தரக்கூடிய துறைகளாகும். அவையாவன ஓவிய வடிவமைப்பு (Graphic Design) மற்றும் அசைவூட்டம் (Animation) என்பனவாகும். ஓவிய வடிவமைப்பு (Graphic Design) என்பது பயனுள்ள மற்றும் பொழுது போக்கு நிறைந்த ஒன்றாகும். இதில் Adobe Photoshop, Corel Draw Graphics Suit, Adobe Illustrator, AutoCAD போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றை கற்பதன் முலம் சிறந்த Graphic Designer ஆக வரலாம். இதே போன்று அசைவூட்டம் (Animation) தொடர்பான மென்பொருட் களை கற்பதன் மூலம் அத்துறை வாந்த விற்பன்னராக வரலாம். Adobe After Effects, Adobe Flash, Ulead Gif Animator போன்ற மென்பொருட்களை குறிப்பிட லாம். ஓவிய வடிவமைப்பு (Graphic Design) மற்றும் அசைவூட்டம் (Animation) ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று மிக நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளன. இதில் ஏதாவது ஒன்றை கற்கமுயலும் போது மற்றைய துறையையும் கட்டாய மாக கற்க வேண்டும்.

மென்பொருட்களின் பாவனை (Use of Application) என்பது மிகப்பெரிய துறை. அதில் நமக்கு பொருத்தமான துறையை தெரிந்தெடுத்து கற்க முடியும். மேற்கூறிய அனைத்து துறைகளும் ஏதோ ஒரு வகையில் மிகுந்த பயன்பாட்டை அளிக்கின்றது. இவை எல்லாவற்றையும் கற்று முடிக்க இயலாது. இருப்பினும் ஒவ்வொரு துறைகளிலும் உள்ள ஒரு சில மென்பொருட்களை கற்க முடியும். ஆனால் எல்வாவற்றையும் கற்று முழுமை யடைவது என்பது ஒரு போதும் நடக்காத காரியமாகும். கணணியை முழுநேர கற்கை நெறியாகவோ பகுதி நேர கற்கை நெறியாகவோ கற்கலாம். எனவே முதலில் உங்கள் துறை எது என்பதை மிகுந்த கவனத்துடன் தெரிந்தெடுங்கள். அது கணணி தவிர ஏனைய துறையாகவோ அல்லது கணணித்துறையாகவோ இருக் கலாம். நீங்கள் ஏனைய துறைகளை தெரிந்தெடுத்தால் அதனோடு தொடர் புடைய கணணித்துறை எது என்பதை இனங்கண்டு அதனை கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். பொதுவாக எல்லோரும் MS Office என்ற அடிப்படை கணணி கல்வியை கற்க வேண்டும் அதனோடு Internet and Email போன்ற வற்றையும் கற்க வேண்டும். அதன் பின் தங்கள் துறைக்கேற்ற மென்பொருட் களை கற்ற வேண்டும். முகாமைத்துவம் சார்ந்தவர்கள் Accounting Packages

களில் ஒன்றையோ பலவற்றையோ கற்க முடியும். இதே போன்று பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் தொடர்பான வர்களும் விஞ்ஞான பாடங்களை கற்ப வர்களும் Statistical தொடர்பான மென் பொருட்களை கற்க முடியும். இது தவிர கணணியை ஒரு பொழுது போக்காக வும் வருமானம் தரும் துறையாகவும் கற்க நினைப்பவர்கள் Graphic Design, Animation, Video Mixing, போன்ற துறைகளையோ அல்லது Website Design தொடர்பான விடயங்களையோ கற்க முடியும்.

கணணியை தமது துறையாக தேர்ந் தெடுப்பவர்கள் எந்த பிரிவில் முன்னேற விரும்புகிறார்களோ அதனை கற்க முடியும். குறிப்பாக Programming, Network, Application software, Website Designing, Database Administrator போன்றவற்றில் தமக்கு பிடித்தமான ஒரு துறையையோ அல்லது பல துறைகளையோ தெரிந்தெ டுத்து கற்றுக்கொள்ள முடியும். உதாரண மாக Programming என்ற துறையில் உள்ள சில கணணி மொழிகளையோ அல்லது பலவற்றையோ கற்க முடியும் அதனோடு Networking தொடர்பான கற்கை நெறிகளையும் ஒரு சில பயனுள்ள மென்பொருட்களையும் கற்க முடியும். Progrraming இனை கற்பதனூடாக நீங்கள் குறிப்பாக Software Engineer ஆக வரமுடியும். இவற்றை தனியார் துறை யினளூடாக கற்கலாம். தனியார்துறை யினளூடாக கணணிக் கல்வியை ஓரளவு முழுமையாக கற்ககூடிய வசதிகள் தற்போது உள்ளன. அதாவது எல்லாத் துறைகளிலும் குறிப்பிட்ட பகுதிகளை கற்று **Computer Engineer** ஆக வரமுடியும். இருந்தாலும் உயர்தரத்தில் கணித பாடத்தினை கற்று சிறப்புத்தேர்ச்சி அடைவதனூடாக பல்கலைக்கழகத்தின் இலவச கல்வியினூடாக Computer Engineer ஆக வரமுடியும்.

Networking துறையை தனியாகவும் கற்கலாம். இதில் பாண்டித்தியம் பெற்று நல்ல தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுகொள்ளலாம். இதேபோன்று மென்பொருட்களை கற்றுக்கொள்வத னூடாக அதில் பாண்டித்தியம் பெற்று குறிப்பிட்ட அத்துறையில் தொழில் வல்லுனராக மிளிரலாம். இது தவிர Microsoft, Sun, Cisco போன்ற கணணித் துறைசார் நிறுவனங்களால் அங்கீகார மளிக்கப்பட்ட கற்கைநெறிகளும் உள்ளன. அவற்றினை தொடர முன் கணணி பற்றிய அடிப்படை அறிவை பெற்றுக்கொள்வது அவசியமாகும். நீங்கள் எவ்வாறான துறையில் கவனம் செலுத்தப்போகிறீர்கள் என்பதை முற்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளுங்கள். எதைக் கற்றால் நன்மை பயக்கும் என்பதை தெரிந்துகொள்ளா மல் எல்லாவற்றையும் படித்து கடைசியில் ஒன்றிலும் தேறாமல் இருப்பதை விட முன்பே திட்டமிட்டு உங்கள் கணணிக் கல்வியை சிறப்பாக தொடருங்கள். உங்கள் எதிர்காலத்தை சிறப்பாக அமைத்திடுங்கள். “உன் வாழ்க்கை உன் கையில்” எனும் முதுமொழிக்கிணங்க வாழ்க்கையில் முன்னேறுங்கள்.

♣ ♣ ♣

# நிகழ்வுகளின் நிழல்கள்





















பரிசளிப்பு விழா



புலமைப்பரிசில் கௌரவிப்பு



சதுரங்க அணி



கரப்பந்தாட்ட அணி – 19 வயதுப் பிரிவு




கரப்பந்தாட்ட அணி




'தூறல்' கவிதை நூல் வெளியீடு



'வைகறை' வெளியீடு



பரிசளிப்பு விழா – 2009



உயர்தர மாணவர் ஒன்றுகூடல்



சாரணர் படையணி




வலைப்பந்தாட்ட அணி – 19 வயதுப்பிரிவு



கரப்பந்தாட்ட அணி – 15 வயதுப்பிரிவு

# சிகரத்தில் வைத்த பெரியன்!

**செல்வி. ந. தர்ஷனா**
கலைப்பிரிவு
A/L 2011

நீண்ட கல்விப் பயணத்தைக் கொண்ட யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் தனது பணியைச் செம்மையாகச் செய்து இன்று, தான் கல்வி பயின்ற, ஆசிரியராகக் கடமையாற்றிய யா/விக்ரோறியாக் கல்லூரியில் அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட எங்கள் அதிபர் திரு. வ. ஸ்ரீகாந்தன் அவர்கள் 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர் எமது பாடசாலையின் வளர்ச்சியில் முழுமூச்சாகத் தொழிற்பட்டார் என்பதில் எதுவித மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. இவர் கடமையாற்றிய 5 வருட காலத்திற்குள் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளார். பௌதிக வளங்களில் கண்ணும் கருத்தும் உடையவர். இதற்குச் சான்றாக, இலங்கை சுற்றாடல் அதிகார சபையினால் வருடந் தோறும் நடாத்தப்படும் ஆரோக்கியமான சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலைத் தெரிவில் 2007ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும், 2008ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் முதலாமிடத்தையும் எமது கல்லூரி பெற்றுக் கொண்டது. இவர் ஒரு மாணவனோ, மாணவியோ பூந்தோட்டத்திலுள்ள பூக்களைக் கொய்வதைக் கண்டால், அம் மாணவனையோ, மாணவியையோ அன்பாக அழைத்து இயற்கையை இரசித்தல் வேண்டும், அனுபவிக்கக் கூடாது எனக் கூறுவார்.

கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற பெரு விளையாட்டுக்களில் எமது பாடசாலை தேசிய ரீதியில் தடம்பதித்து வருவது கண்கூடு. அந்த வகையிலே, வலைப் பந்தாட்டத்தில் 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவு அணியினர் தேசிய ரீதியிலும் தனது சாதனைகளை நிலைநாட்டத் தவறவில்லை. அதுமட்டுமல்லாமல் 2007ஆம் ஆண்டு இரண்டு வீரர்கள் தாயக அணியில் இடம்பெற்று வலைப் பந்தாட்ட அணியில் பங்குபற்றியுள்ளனர். 2005ஆம் ஆண்டு கரப்பந்தாட்ட அணி மாகாண மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றது. எமது கல்லூரியில் 2009ஆம் ஆண்டு கூடைப் பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அடுத்த கணமே இவ் அணி வலய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. அதிபர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கான தேவைகளையும் சேவைகளையும் பெற்றுக்கொடுத்தார். இக் கல்லூரி இன்று வரை அளப்பரிய சாதனைகளைப் படைத்து வருகின்றமைக்கு இதுவும் பிரதான காரணமாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை எனபவற்றில் தொடர்ச்சியாக அதிகரித்த பெறுபேறுகளையும் பெற்று வருகின்றது. குறிப்பாக 2006ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் செல்வி. த. தேவதர்ஷினி வலிகாமம்

வலயத்தில் முதலாமிடத்தையும், யாழ் மாவட்டத்தில் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 60 சதவீத மாண வர்கள் சித்தியடைந்து உயர்தரக் கல்விக் கான தகுதியைப் பெற்றுள்ளனர். 2009ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்ற மாணவி யொருவர் **3A** சித்திகளைப் பெற்று இலங்கையின் உயர்தரப் பல்கலைக்கழ கத்திற்குத் தெரிவாகியுள்ளமையும், 2008ஆம் ஆண்டு கலைப்பிரிவல் மூன்று மாணவர்கள் **3A** சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி யுள்ளமையும் சுட்டத்தக்கது.

தமிழ் தினம், ஆங்கில தினம் ஆகிய போட்டிகளிலும் இவர் ஆசிரியர்களுடன் இணைந்து மாணவர்களை வளப்படுத்தி வெற்றிக்கனியைப் பெற வழி செய்துள் ளார். இணைப்பாடவிதான செயற் பாட்டில் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரை, பேச்சு போன்ற பலவிதமான போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி முதன்மை நிலையைப் பெற்றுள்ளனர். 2010ஆம் ஆண்டு எமது பாடசாலையின் விளையாட்டுக் குழுவில் 10 வகையான அணியினர் மாவட்ட மட்டத்தில் பங்கு பற்றி பல வெற்றிகளைத் தட்டியுள்ளனர்.

சண்டிலிப்பாய் கிராமத்தின் சிகர மாக விளங்கும் இப்பாடசாலையினை அமைத்த ப.மு. செகராஜசிங்கம் எனும் பெரும் வள்ளலினுடைய உருவச் சிலையை நிறுவிய பெருமை இவரையே சாரும். உள்ளத்தின் பாங்குகளை உய்த் தறிந்து மாணவரை உறுதிபெறு நெறி யுடை நற்சமுதாய உறுப்பினராய் கொள்கையிலும், தன்மையிலும் குணத் திலும் சிறந்த கருணை உள்ளம் படைத்த மகானாக உருவாக்க உழைத்தவர் இவர். எங்கள் அதிபர் மாணவர்களின் உள்ளக் கிடக்கைகளை அறிந்து அதற்கேற்ப செயற்படும் உள்ளமுடையவர். இப்பாட சாலையில் பயிலும் ஒவ்வொரு மாண வனையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் கொண்டவர். மாணவர்களினது கல்வி ஊக்கத்திலும், ஒழுக்கத்திலும் கண்டிப் பானவர், வெளிப்படையானவர். மாண வர்களது தவறுகளைச் சுட்டி ஆலோசனை கூறும் பாங்கு அவ் ஆலோசனை மனதில் பதியும் வண்ணம் அமைந்துவிடும். அனைத்து மாணவர்களினதும் குடும்பப் பின்னணியை அறிந்தவராகவும் தனிப் பட்ட ரீதியில் வறுமையில் தவிக்கும் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்குப் பொருளாதார உதவிகளையும் ஏற்படுத் திக் கொடுத்துள்ளார். இவருடைய ஆழ்ந்த புலமையும் நிர்வாகக் கட்டமைப்பும் சிறப்பிடத்தை வகிக்கின்றது.

காலைப் பிரார்த்தனையின்போது மாணவர்களிற்குச் சிறந்த முதுமொழி களைக் கூறுவதில் வல்லவர். “ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இரு” என்று கூறும் மொழியும், மாணவர் களிடத்தே வாசிப்புப் பழக்கத்தை ஊக்கு விக்கும் வகையில் கூறிய “ஒரு பாடசாலை யின் இருதயம் நூலகம்” என்ற வாக்கும் எமது காதினுள் ஒலித்துக் கொண்டிருக் கின்றது. “ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும்” என்ற கூற்று இவருடைய வாழ்க்கைக்குச் சாலப் பொருந்தும், அதிபர் அவர்களது அரிய சேவைக்கு அவர் தம் குடும்பம் துணையாக இருந்தது.

அன்புடன் பண்பையும் அறிவுடன் பரிவையும் தருகின்ற மகான் இன்றுவரை எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகவே துடித்துக் கொண்டிருக்கிறார். யுத்த காலத்தில் இரண்டு மணித்தியாலங்கள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளையில் நாம் எமக்கு வேண்டிய வற்றைப் பெற கடைக்கு ஓடினோம். ஆனால் எங்கள் அதிபர் ஓடோடி வந்து பூக்கன்றுகளுக்கு உயிரைக் கொடுப்பதற் காக நீர் பாய்ச்சினார். பாடசாலை ஆரம்பித்த கணப்பொழுதிலிருந்து மாலை 5 மணி வரை பாடசாலையின் வளர்ச்சிப் படியில் 365 நாட்களிலும் தம்மை அர்ப் பணித்தார். தன்நலம் கருதாது பிறர் நலத்தைக் கருத்திற்கொண்டவர். அந்த வகையில் மாணவர்களுடன் மட்டு மல்லாது ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விசாரா ஊழியர்களது நலன்களிலும் ஈடுபாடுள்ளவராகத் திகழ்ந்தார்.

இக் கல்லூரியில் நிகழும் அனைத்து நிகழ்வுகளின் போதும் தனது இல்லப் பொறுப்பிற்கு மேலாக கல்லூரியின் வளர்ச்சியையே மேலானதெனக் கருதி ஆசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து உயர் பணி புரிந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவர். தளரா முயற்சி யுடையவர், உறுதி மிக்கவர், பாடசாலை யின் மகுட வாசகமாக விளங்கும் "செய்கையே சிறந்த கல்வி" என்ற கூற்றிற்கு இணங்க கல்லூரியை வழி நடத்தியர். இன்று இவர் இடமாற்றலாகி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சென்றாலும் அவர் செய்த பெரும் பணியை நாம் மறவோம். அவர் பாதம் பதிந்த இக்கல்லூரி மண் அவர் புகழை என்றும் ஏற்றி நிற்கும். எங்கள் அதிபர் சென்ற இடத்தின் திசைகள் சிறக்க, அவர் தம் வாழ்வு உயர எல்லாம்வல்ல இறைவனை அகமார வேண்டுகின்றோம்.

**வாழ்க எம் அதிபர் வளர்க அவர் தம் பணி.**

♣ ♣ ♣

உங்களது அனுமதி இல்லாமல் யாருமே
உங்களைத் தாழ்வாக எண்ணவைக்க முடியாது.
**- எலினோர் ரூஸ்வெல்ட்.**



## ஒன்றும் ஒன்றும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
உழைப்போம் நாமும் திரண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
இன்பத்தமிழோ மூன்று
மூன்றும் ஒன்றும் நான்கு
மூச்சை இழுத்து வாங்கு
நான்கும் ஒன்றும் ஐந்து
நம் விரல் ஐந்தும் பஞ்சு
ஐந்தும் ஒன்றும் ஆறு
அன்பால் கிடைக்கும் பேறு
ஆறும் ஒன்றும் ஏழு
ஆடல் பாடல் சேரு
ஏழும் ஒன்றும் எட்டு
வானில் வெள்ளித்தட்டு
எட்டும் ஒன்றும் ஒன்பது
உணவை மென்றே தின்பது
ஒன்பதும் ஒன்றும் பத்து
உண்மை பெரிய சொத்து

**யெ. லதீசன்**
3B

## அப்பா

பள்ளியில் சேர்ந்து படி என்பார்
பாடம் அதனைக் கற்பிப்பார்
துள்ளித் திரிய விட மாட்டார்
தொடர்ந்தே நம்மைத் திருத்திடுவார்

பம்பரம் வாங்கிக் கொடுத்திடுவார்
பக்கத்திலிருந்தே படித்திடுவார்
சம்பளம் வாங்கும் முதல் நாளில்
சட்டைகள் எடுத்து வந்திடுவார்

நாளும் நமக்காய் உழைத்திடுவார்
நலங்கள் சேர்க்க நினைத்திடுவார்
ஆளும் உயர்ந்த அன்புடைய
அப்பாவைப் போல் காப்பார் யார்?.

**ஸ்ரீ. அனோசிகன்**
2B

## வானொலி

வானொலியாம் வானொலி
வாழ்க்கைக்கே உதவிடுமாம்
தகவல் தொடர்பு சாதனமாம்
பல்வேறு புதினம்
சிறந்த நண்பன்
அவனே யாம்

**சு. யதீஸா**
1B

## கல்வி கற்க

கல்வி கற்று சிறந்திடவே
கல்விச்சாலை சென்று வந்தோமே.
நல்ல நல்ல ஆசான்கள்
நாமும் பெற்றோமே
வல்லவர்களாகி
வளம் பல பெறவே
பள்ளி அதனை
படிப்படியாக உயர்த்திடுவோம்

**ஜெ.தவேதன்.**
1C

## சூரியனே

தினமும் வருவதால் தினகரன்
பகலில் வருவதால் பகலவன்
வெயிலைத் தருவதால் வெய்யோன்
கதிர்களை உடையதால் கதிரவன்
எனப் பல நாமம் பெற்றாயே

**த. கஜரூபன்**
1C

# காலை உணவின் முக்கியத்துவம்

மாணவர்களாகிய எமக்கு காலை உணவு என்பது மிகவும் முக்கியம். அதைவிடச் சிறியவரிலிருந்து பெரியவர் வரை காலை உணவு உண்ணாவிட்டால் ஒரு வேலையைச் சிறந்த முறையில் செய்ய முடியாது. எம்மை அறியாமலே எமக்குச் சோம்பல் உண்டாகும். சிறுவர்கள் காலை உணவைத்தவிர்த்தால் பல்வேறு நோய்களுக்கு உட்பட வேண்டி வரும். ஏனென்றால் எமக்குக் காலை உணவு தான் சக்தியைப் பிறப்பிக்கின்றது. மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது காலை உணவு உண்பதைத் தவிர்த்தால் வகுப்பில் கல்வியைச் சிறந்த முறையில் கற்க முடியாது. எனவே காலை உணவின் முக்கியத்துவத்தை உணர்ந்து நாம் அனைவரும் காலை உணவை உண்டு ஆரோக்கியமாக வாழ வேண்டும்.

**ஜெ. ஜெனார்த்தனி**
2C

# Some valuable Thoughts

There is no cure for birth and death.
Save to enjoy the interval.
Facts speak louder than statistics.
Be not afraid of going slowly, only of standing still.
Wicked men obey from fear, good men from love.
A good book is the best of friends, the same today and forever.
That knowledge which purifies the mind and heart alone is true knowledge.
Exercise for the body and music for the soul.
A healthy body can produce a healthy spirit.
No one is as deaf as the man who will not listen.
The greatest sin is to think your self weak.
If you want to be happy give happiness to others.
Prayer is the pillar of religion and the key to paradise.
Be your own judge and you will be happy.

**V. Sharmili**
Grade-11B

# Discipline

All religions teach us about discipline.
Discipline does not mean slavery.
We should learn discipline from early childhood.
At home we are disciplined by our parents.
We must obey our parents and elders.
We must first learn to obey.
Only then we can command others.
At school we are disciplined by our teachers.
We must respect our teachers.
We should be on time to school.
We should not talk in school.
We must not shout and disturb others.
We must learn to live in pece with others.

**K.Abarna.**
Grade-6[B]

# Keep the world clean

There are air, water and land around us. They are very useful to us. We need clean air to live, clean water to drink and clean land to grow food.

It is a sad story that the air, water and land around us are growing dirty. Who dirties? We the people dirty every thing around us. If we go on doing this we cannot get clean air, clean water and land. Than we will dirty the whole world.

So we must stop this. Let us not let too much smoke and dust and dirty the air. Let us not throw our waste into the rivers and lakes. Let us stop passing dirty water in to the pools. If we do that we will kill the fish and frogs in the water. We must stop putting the waste matter every where on the land. We must do some thing to control waste.

If we are careful we will have clean land for all the people, animals and plants. We must leave this world a clean place for many people to come and live.

*Thank you*

**Luxchi Elango**
Grade 9[B]

# Cricket

Cricket, cricket is lovely game.
Good old days, it was known as a gentle men's game.
Also sometimes recognized as the willow game.
Bats, wickets, bails and balls used in the game.
Actions of fielding, bowling, batting made side way.
The players in the field display plenty of movements.
The short – legs, square-legs, fine-legs and silly points
Isn't funny? The name given for field placements
The two batsmen at the center, battle with balls.
Being monitored by the two-head and leg umpires.
A measured track used between the two wickets.
With two bails on them and upon a turf made sense.
A red leather ball and two willow bats used in a match
A bowler given six delivers at a batsman and kept a match.
Umpires in black trousers and white coats to go with
Players in full white have to adhere to a set of rules very much.
Standard distance kept from the track of boundary lines.
The batsmen run between wickets to score runs.
Hit the balls to reach the boundary for sixes and fours.
Given out when the ball is caught or hits the stumps.
In England where cricket was introduce in by gone years.
Exact date is not known but the first set of rules.
Introduced in seventeen forty-four since.
Popularized the game with lot of youth participation
Marylebone cricket club famous as MMC in England
House at lords where the game of cricket was registered
Council known as ICC where cricket is governed
And maintained a set of rules that players adhered
The game is very popular among the young boys.
Played at only venue and kept in mind the rules.
No questions of leather balls and willow bats and wickets.
Still played for the love of cricket with any thing at ease
Leading schools and the clubs play the game in style.
Became popular as embraced by all walks of life
Cricket commentaries with commercials on air and telecast live.
Arranged tournaments with lots of enthusiasm among every one

For the game on discrimination of gender
Participation of girls in plenty no wonder
To the sport they have added splendour
Yet gone up to the national level with grandeur
Facelift given to cricket and played with dedication
Players wear all kinds of gear as protection
This was not the case in olden days yet no violation
Now some play cricket as their profession
Cricket, cricket what a lovely common wealth game.
Legends being celebrated made fame by the game.
Devote entire lives for the betterment of the game.
At any cost should prevail its virtue of the game.

**Susil logarajan- Robins Hamiltan**
Grade-11B

---

# அன்பினால்

பரவியுள்ள பூமியும்
பரந்து நிறைந்த வானமும்
ஒன்று பட்டுச் சுழல்வது
ஒன்றியுள்ள அன்பினால்.

தெளிந்த காற்று வீசுவதும்
தெம்மாங்கு பாடுவதும்
இயற்கை கொண்ட
அன்பினால்.

மழை பொழிவதும் ஆறு ஓடுவதும்
பயிர் மீது கொண்ட அன்பினால்
ஸ்வரங்கள் சுருதியுடன் இணைவது
லயம் மீது கொண்ட அன்பினால்.

கற்பனையும், கருத்தும் கலந்து இசைவது
கவிதை மீது கொண்ட அன்பினால்
மனதின் அச்சாணி அன்புதான்.
உலகின் அடித்தளமும் அன்புதான்.

**கு. பிருந்தா**
2011 A/L

# தேவைதானா முதியோர் இல்லங்கள்?

பூத்த கொடி பூக்களை இழந்து தவிக்கிறது.
பூங்குருவி துணைகளின்றி துடிக்கிறது.
சிறகு இழந்த பறவையாக
சிந்தை நொந்து தவிக்கிறது முதுமை.

சிற்பியில் விழுந்த முத்தொன்றை
சிகரம் தொட வைப்பதற்கு
சிட்டாய்ப் பறந்தது அன்றைய இளமை
சிதைந்து போய் அலைகிறது இன்றைய முதுமை.

பாடுபட்டுப் பொருள் சேர்த்து வைத்தே - மைந்தர்
பாருலகம் போற்றி வாழ
பாதகம் எல்லாம் தாண்டி வாழ்ந்தே - இன்று
பாசத்திற்காக ஏங்கி நிற்கின்றது முதுமை.

செங்கோல் கொடுத்த கையிற்கு - இன்று
வெள்ளைப் பிரம்பு கொடுக்கப்பட்டு இருக்கின்றது.
அஞ்சிய வாழ்வதனை அகற்றவே
துஞ்சியறியாப் பெற்றோரே

பஞ்சனை தந்தே பராமரித்து
நெஞ்சுச் சுமையுடனே
நெடு நிலத்தில் புரள்கின்றார்.
பஞ்சனை கொடுத்த மனம் இன்று

பாழடைந்த புழுதியில் புரள்கின்றது.
தொடுக்கின்றேன் வினா ஒன்றை
நெஞ்சில் உரம் உள்ளோரிடம்
முதியோர் இல்லங்கள் தேவைதானா?

**க. சோபிகா**
2011
உ/த கலைப்பிரிவு

# பெயர் சொல்ல வாழ வேண்டும்


தேசத்தை நாசமாக்கும் நாசகாரர்கள்
தேகத்தில் நோய் கண்டு நலிய வேண்டும்!
மோசத்தை முதல் வைத்துப் பிழைப்பவர்கள்
மனந்திருந்தி உழைத்துப் பிழைக்க வேண்டும்!
வேடத்தை கண்டு அதில் மயங்குபவர்
வெளிச்சத்தில் வேடத்தை விலக்க வேண்டும்!

தாய் நாட்டை வெளியினிலே விற்பவர்கள்
தாய் தந்தை தாரமிழந்து நிற்க வேண்டும்!
வாய் பேசா(த) ஜீவன்களை வதைப்பவர்கள்
வேதனைச் செயல்களை நிறுத்த வேண்டும்!
வாய்மை தவறி ஊரை ஏய்க்கும் பித்தர்கள்
பித்தலாட்டம் விட்டொழிந்து நடக்க வேண்டும்!

வாழும் நாட்டுப் பெருமையினைச் சிதைப்பவர்கள்
வசித்திடவே இடமின்றி அலைய வேண்டும்!
பாலும் பழமும் தினமுண்ணும் உள்ளவர்கள்
பசித்திருக்கும் யாசகர்க்கும் கொடுக்க வேண்டும்!
ஏழைகளின் வயிற்றிலடிக்கும் வர்த்தகர்கள்
அளவோடு வருமானம் ஈட்ட வேண்டும்!

பிறந்த மண்ணை மதியாமல் இருப்பவர்கள்
புசித்திடவே உணவின்றி இறக்க வேண்டும்
இருக்கும் ஆதனத்தை சேர்ப்பவர்கள்
இறக்கும் முன் புண்ணியத்தை சேர்க்க வேண்டும்
பிறந்த பயனை அடைந்திடவே நினைப்பவர்கள்
போன பின்னும் பெயர் சொல்ல வாழ வேண்டும்

**ந. தர்மிகா**
9C



# கேரளாவின் நாட்டியக்கலை கதகளி

கேரளாவின் நாட்டியக் கலைகளில் கதகளி ஒரு சிறந்த ஆடற் கலை ஆகும். கதகளி என்பதன் அர்த்தம் 'கதை – நாடகம்' என்பதாகும். இது இசை, நாடகம், நடனம் என வழக்கத்தக்கு மாறான கலவையாக அமைந்துள்ளது. இராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணக் கதைகளின் அடிப்படையில் 'கதகளி' நிகழ்த்தப்படுகிறது.

கதையை ஒரு வாய்ப்பாட்டுக் கலைஞர் பாடலாகப் பாடுவர் அல்லது எடுத்துரைப்பர். இதில் செண்டை, மத்தளம், செங்கிலா, ஈலத்தாளம் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மாறும் முகபாவங்கள் முத்திரை எனப்படும். கையசைவுகள் மூலம் கதகளிக் கலைஞர்கள் கதையை வெளிப்படுத்துகின்றனர். கதகளியானது தனிச் சிறப்பான, விரிவான அலங்காரம் மற்றும் ஆடை அணி கலன்களுக்கும் புகழ் பெற்றது. சுட்டி எனப்படும் ஒப்பனையை இட கதகளிக் கலைஞருக்கு குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும்.

அரிசி, மா மற்றும் இயற்கையான மூலப்பொருட்களைக் கலந்து கதகளி ஒப்பனை இடப்படும். ஒவ்வொரு வர்ணமும், ஒவ்வொரு விதமான ஆடைகளும் வேறுபட்ட கதாப்பாத்திரங்களைக் குறிக்கின்றன. உதாரணத்துக்கு 'மினுக்கு' மஞ்சள் நிறமுடையது. இது பெண்கள் போன்ற மென்மையான கதாபாத்திரங்களுக்கு இடப்படும். (அந்த வகையில்) உயர்ந்த கதாநாயகனுக்குரிய பச்சை நிறம், இராவணன் போன்ற ஆக்ரோஷமான கதாபாத்திரங்களுக்கு, வில்லனுக்கு, தீய சக்திகளுக்கு உரிய கறுப்பு நிறம் என்ற வகையில் ஒப்பனைகள் அமைந்துள்ளன.

பாரம்பரியமாக கதகளி நிகழ்ச்சிகள் கோவில்களிலும், வீடுகளிலும் நடைபெறுவதுண்டு. அவை இரவில் ஆரம்பித்து அதிகாலை வரை நடைபெறுகின்றன. இன்றைய நவீன கால இரசிகர்களிற்கு ஏற்ற வகையில், பழங்காலக் கதையின் சுவாரசியமான கட்டங்கள் மட்டும் தற்போது நிகழ்த்தப்படுகின்றன. தற்போது கதகளி நிகழ்ச்சிகள் பொதுவாக இரண்டு முதல் மூன்று மணிநேரத்தில் நிறைவடைந்து விடுகின்றன.

**இ. லக்ஷாந்தி**
10B

ஓராண்டு நோக்கிருந்தால், பூக்களை வளருங்கள்
புத்தாண்டு நோக்கிருந்தால், மரங்களை வளருங்கள்
முடிவில்லா நோக்கிருந்தால், மனித குலத்தை வளருங்கள்.

**- கீழை நாட்டுப் பழமொழி.**

# முதியோர் இல்லங்கள்

தினம் தினம் எமக்குள் அதிகரிக்கும் வயது ஒரு நிலையடைந்து இயங்க முடியாமல் ஆதரவு தேடும் போது நாம் முதுமை அடைந்தமை எமக்கு புலனாகும். அந்தத் தருணத்தில் எம் சிந்தையில் உதிப்பது சாவுக்கான ஓர் ஆயத்தம்தான். ஆனாலும் சாவினை ஏற்கத் தயார் ஆனாலும் அது தானாக ஏற்பட வேண்டும் என ஏங்கும் முதுமைப்பருவம் எமக்கு நிம்மதி தரும். எம் கூடப் பல பிள்ளைகளின் ஆதரவு இருந்தால். ஆனால் ஆதரவுக்கு பிள்ளைகளும், சுற்றமும் அற்று அல்லற்படும் பல்லாயிரக்கணக்கான முதியவரை வீதி ஓரம் விட்டுவிடாமல் அரவணைத்து அன்பு செய்து பாசம் காட்டும் ஓர் உன்னதமான கோயில்தான் முதியோர் இல்லங்கள்.

இந்த இல்லங்களின் தேவை எழுவதற்கு காரணமாக கருதப்படுவது பிள்ளைகள் இன்மை அல்லது பிரிவுதான். ஆனால் உண்மையான தூய அன்பு கிடைக்காத முதியவர்களின் நலன் கருதி அமைவு பெற்ற முதியோர் இல்லங்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ளது. இது எம் மத்தியில் முதியோரைக் காக்கும் உணர்வை மேம்படுத்தியிருக்கின்றது.

அந்தவகையில் முதுமையில் வாழும் பல உறவுகள் ஒன்றாகக்கூடி அவர்கட்கென வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு தனித்தனி அறைகள் மற்றும் குளியலறை, உணவு வசதிகள் என்பன கவனமாக கவனிக்கப்பட்டு முதியோர்கள் இங்கு பராமரிக்கப்படுகின்றனர். இவர்களது உடல் நலம் சார் விடயங்கள் இந்த இல்லங்களில் கவனிக்கப்பட்டு செவ்வனே ஆற்றப்பட்டாலும் இவர்களது உளம் சார்பான தேவைகள் எந்த அளவுக்கு கவனிக்கப்படுகிறது. தனிமையின் கொடுமையை அனுபவிக்கும் இவர்களது உளம் மேம்பட நடவடிக்கைகள் உண்டா? என்பது கேள்விக் குறியான விடயங்கள்தான்.

இருப்பினும் பொழுது போக்கு அம்சங்கள் இங்கு ஏராளம் அத்துடன் முதியோர் தினம் அக்டோபர் – 01 கொண்டாடப்பட்டு அவர்கள் மகிழ்விக்கப்படுவதும் உண்டு. அது மட்டுமன்றி முதியோர் தமது ஆசைகள், ஆற்றல்கள், மரபுசார் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தத் துடிப்பர். இவற்றை வெளிப்படுத்தக்கூடிய வகையில் முதியோர் இல்லத்தின் செயற்பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

அத்தோடு முதுமையை ஏற்பது அனைத்து மனிதருக்கும் கிடைக்கும் வரப்பிரசாதம். உண்மையில் இளமையின் துடிப்பு இங்கேதான் ஓய்ந்து கொள்கின்றது. இதன்போது முதியவர்கள் ஆன்மீக ரீதியான தாக்கத்திற்கு வழிப்படுத்த வேண்டும். இது முதியோர் இல்லத்தில் இருந்தபடி சாத்தியமற்றது. இருப்பினும் இதுசார் விடயத்திலும் முதியோர் இல்லங்கள் கவனிக்க வேண்டும்.

முதியோர் இல்ல அமைவு, பராமரிப்பு, கவனிப்பு அனைத்தும் திறம்பட இடம்பெறும் அம்சங்களே. இதனைக் கூறி மெச்ச வார்த்தை இல்லை. இருப்பினும் அதிகரிக்கும் முதியோர் இல்ல அனுமதிகளை குறைக்கவே பிள்ளைகள் விழிப்புணர்வு காட்ட வேண்டும். முதுமைக்கு கூடிய அங்கீகாரம் வழங்கும் முதியோர் நலன்களை மேம்படுத்த இந்த இல்லங்கள் பயன்படும் என்றால் மிகையாகாது.

**ப. விதுர்ஷன்**
10B



வலைப்பந்தாட்ட அணி – 19 வயதுப்பிரிவு




கரப்பந்தாட்ட அணி – 17 வயதுப்பிரிவு



வலைப்பந்தாட்ட அணி – 15 வயதுப்பிரிவு



சதுரங்க அணி



கூடைப்பந்தாட்ட அணி



சதுரங்க அணி

# அன்பின் விலை பூச்சியம்

வாசுகி சிறிய பெண். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரே பெண். செல்லமாக வளர்க்கப்பட்டாள். ஆனால் புத்தியுள்ள பெண். அப்பா உழைப்பதற்காக மேல்நாடு சென்றிருந்தார் வாசுகி அம்மாவுடன் சந்தோசமாக வாழ்ந்தாள். வாசுகி அம்மா வுக்குச் சின்னச் சின்ன வேலை செய்து கொடுப்பாள்.

வாசுகி வீட்டைக் கூட்டம்மா, "வாசுகி வீட்டைக் கூட்டுவாள். வாசுகி அந்தக் கோப்பைகளை எடுத்து வாம்மா. என்னம்மா அடிக்கடி வேலை தாறீங்க? நீ சின்னப் பெண் பெரியவளாக வளரும் போது எல்லா வேலைகளும் தெரிந்திருக்க வேண்டாமா? சின்ன வயதில் பழகினால் பெரிய பெண்ணாக வளர்ந்த பின் வேலை களை இலகுவாகச் செய்யலாம் கண்ணு" என்றாள் அம்மா. "நான் பெரியவளாக வளர்ந்தபின் சொல்லித் தாருங்களேன். இப்போது விளையாடப் போகிறேன்" என்றாள் வாசுகி. கண்ணே, அங்கே பார் பூனைக்குட்டிகளை. தாயின்மேல் புரண்டு விழுகின்றன. ஒன்றையொன்று துரத்து கின்றது. மேசையைப் பிராண்டுகின்றன.

கதிரை மீது துள்ளிப்பாய்கின்றன. இதெல்லாம் ஏன் தெரியுமா? அவை வளர்ந்த பின் எலியைத் தேடிப்பாய்ந்து பிடிக்க வேண்டும். அதற்காகத் தான் இப்போது விளையாடப் பழகுகின்றன. நீயும் இப்படித்தான் சின்ன வயதில் வேலை செய்து பழக வேண்டும். அதுதான் என் விருப்பம். வாசுகிக்கு அம்மா சொன்னது நியாயம் என்று படவில்லை. செல்லம்மா என்னும் வேலைக்காரப் பெண் அடிக்கடி வீட்டுக்கு வருவாள். அம்மாவுக்குச் சிறு வேலைகளைச் செய்து கொடுப்பாள். அதற்காக அம்மா சிறு தொகைப்பணம் செல்லம்மாவிற்கு கொடுப்பதை வாசுகி காண்பாள். வாசு கிக்குப் பின்னர் மனதில் ஒரு யோசனை தோன்றியது. ஒரு காகிதத் துண்டை எடுத்தாள். அதில் பின்வருமாறு எழுதினாள்.

***அம்மாவுக்கு***

| | |
|---|---|
| **காலையில் கோப்பை கழுவியது.** | **– 10சதம்** |
| **வீடு கூட்டியது** | **– 25சதம்** |
| **நேற்று பூச்சாடிக்கு நீர் ஊற்றியது** | **– 25சதம்** |
| **நீங்கள் எனக்குத் தரவேண்டியது.** | **– 60சதம்** |

துண்டை மடித்துச் சாப்பாட்டு மேசை யில் வைத்தாள். புத்தகப்பையை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடம் சென்றாள். அம்மா சமையலறைக்குச் சென்ற போது வாசுகி வைத்த துண்டைப் பார்த்தாள். வாசித்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது. கண்கலங்கியது. அத்துண்டில் அவளும் எழுதினாள். துண்டை அவளின் சாப்பாட்டுத் தட்டின் கீழ் வைத்தாள்.

வாசுகி பள்ளிக்கூடம் முடிந்ததும் வீடு திரும்பினாள். சமையல் அறைக்கு ஓடிச் சென்றாள். காசு இருக்கவில்லை. இரண்டு வடையும் பால் தேநீரும் காத்தி ருந்தது. அதனோடு இருந்த துண்டை எடுத்துப் பிரித்தாள். எழுதியதை வாசித்தாள்.

***வாசுகிக்கு அம்மா இன்று செய்த வேலைகள்***

**உணவு சமைத்தது – 0 சதம்**

**சட்டை தைத்தது - 0 சதம்**
**மருந்து வாங்கியது - 0 சதம்**
**உடைகள் தோய்த்தது - 0 சதம்**

வாசுகி அம்மாவுக்குத் தர வேண்டியது அன்பு மட்டும் தான். பணம் இல்லை. வாசுகி வாசித்து முடிந்ததும் அவள் கண்களில் இருந்து நீர் சொரிந்தது. அம்மா, அம்மா, என்று கூவிக் கொண்டு அம்மாவிடம் ஓடினாள்.

"என்ன அம்மா" வாசுகி என்று அம்மா வாசுகியை நோக்கி ஓடி வந்தாள். வாசுகி அம்மாவைக் கட்டிப்பிடித்து அணைத்தாள். அவள் கண்களிலிருந்து வந்த கண்ணீரைத் துடைத்து வாசுகியை இறுகத் தழுவினாள்.

அம்மா நான் உங்களுக்கு எல்லா வேலைகளும் செய்து தருவேன் என்றாள் வாசுகி. அம்மா அவளின் கண்ணீரைத் துடைத்தாள். ஆசை தீர முத்தம் கொடுத்தாள்.

"அம்மா என்றால் அன்பு"

**கு.பிரதா**

## வெற்றிக்கான வழிமுறையின் சுருக்கம்
## (A Crash Course for Success)

- வெற்றிபெற விளையாடுங்கள் - தோல்வியைத் தவிர்க்க அல்ல.
- பிறரின் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.
- உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்களோடு சேருங்கள்.
- சிரமப்படாமல் ஏதாவது பலன் கிடைக்காதா என்று எதிர்பார்த்திருக்காதீர்கள்.
- நீண்டகாலத் திட்டங்கள் பற்றியே எப்போதும் சிந்தியுங்கள்.
- உங்களது பலத்தை மதிப்பீடு செய்து அதன்படியே திட்டமிடுங்கள்.
- ஒரு பரந்த, தொலைநோக்குக் கண்ணோட்டத்துடனேயே முடிவெடுங்கள்.
- உங்களது நேர்மையை ஒருபோதும் விட்டுக்கொடுத்துவிடாதீர்கள்.



"உங்களால் வெல்லமுடியும்"

**- ஷிவ் கெரா**

# எங்கள் சொத்தே

இயல் இசை நாடக தமிழ் பரப்பி இத்தரையில் - பல
வித்தகரை உற்பவித்து
கற்றறிஞர் கவினுறு நூல் பால் ஈர்த்து மாணவரை
மாசறு சான்றோராய் மாண்புறச்செய்த
கல்லூரித்தாயே எங்கள் தாயே
வாழ்க வளர்க நம் மண் சிறக்க.

சிறகடிக்கும் மாணவக் குஞ்சுகளை
சீராய் அணைத்து அறிவூட்டி
நற்சான்றோன் விருது பெற
நலமாய் வைப்பாய் நாயகியே
பல பணிகள் செய்ய பல திசைக்கும் பண்புறு மாணவர்கள் சென்றிடவே
அனுப்பி வைத்த அம்மா நீ
அழியாச் சொத்தே அம்மா நீ

அகவை எண்பதில் அகிலம் புகழ
அழகாம் தம் கிராமத்தில்
முத்தமிழும் இங்கு நித்தம் நிலைக்கச் செய்து
சிற்பிகளாம் ஆசான்கள் செதுக்கிய சிற்பங்கள்
ஆழமரமாய் வளர்ந்து நிற்கும்
அன்னையே நம் கல்லூரித் தாயே.
வாழ்க வளர்க தமிழ் மண் சிறக்க.

**செ.பிரசாந்தினி**
9B

ஒரு பையனைத் தந்தை கேட்டார் :
"தம்பி! மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?"
பையன் சொன்னான் :
"அது ஆச்சரியமில்லை அப்பா! தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்துக் குழம்பாகிறதே, அதுதான் ஆச்சரியம்!"

இறைவா! மனிதனுக்கு நீ எண்ணங்களை வைத்ததில் ஆச்சரியமில்லை. அந்த எண்ணங்களிலேயே அவன் வெந்து வெந்து அழிகின்றானே, அதுதான் ஆச்சரியம்!

**- கவிஞர் கண்ணதாசனின் புஷ்ப மாலிகாவிலிருந்து**

# உலக நாடகத்தின் ஆரம்பம் - கிரேக்கம்

ஐரோப்பிய கலைப் பாரம்பரியத்தின் மூலநிலமாக அல்லது தாய் நிலமாக கிரேக்கத்தை குறிப்பர். மேற்குலக சிந்தையின் தொட்டில் என கிரேக்கம் கொள்ளப்படுகிறது. மெய் அறிவும், நியாயமும், அழகுக் கவர்ச்சியும் கிரேக்க சிந்தனையின் அடித்தளமாக விளங்கின. இந்த வகையில் கிரேக்கர்கள் புதிய உலகை பிறப்பித்தனர். இவ்வாறு பிறப்பிக்கப்பட்டவற்றுள் நாடகக்கலையும் ஒன்றாகும். புராதன காலம் தொட்டே கிரேக்கத்தில் நாடகம் வளர்ச்சி பெற்றது என்பதினை அரிஸ்ரோட்டலின் 'கவிதையியல்' என்னும் நூலின் மூலம் அறிய முடிகிறது.

கிரேக்கத்தின் தெய்வமாக டயோனிசியஸ் காணப்படுகிறது. இவரை மையப்படுத்தியே நாடகமும் தோன்றியது. டயோனிசியஸ் விழா மிகப்பெரும் விழாவாக கிரேக்கத்தில் காணப்பட்டது. இதன் போது அரசு விடுமுறை விடப்படும். இவ் விழாவானது ஏழு நாட்கள் நடைபெறும். முதலாவது நாள் டயோனிசியஸ் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். 2ம், 3ம், 4ம் நாட்களில் டித்திறாம் போட்டியும் 5ம், 6ம், 7ம் நாட்களில் நாடகப் போட்டியும் இடம்பெற்றது.

இவ் நாடகப் போட்டியில் மூன்று அவலச்சுவை நாடகமும் சற்றுயர் நாடகமும் போடப்பட்டது. இவ்வாறு மூன்று நாளும் மூன்று நாடக ஆசிரியரின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவர்கள் பரிசுக்காகப் போட்டியிட்டனர். அவலச்சுவை என்பது Tragedy என அழைக்கப்பட்டது. இதன் விரிவு Tragodia என்பதாகும்.

அதாவது ஆட்டுப்பாடல் அல்லது ஆடு பற்றிய பாடல் ஆகும். டித்திறாம் [Dithrom] என்ற கூட்டுப்பக்திப் பாடலில் இருந்து அவலச்சுவை நாடகம் தோற்றம் பெற்றது.

இவ் அவலச்சுவை நாடக ஆசிரியர்களாக ஈஸ்கலஸ, சோபோகிளிஸ், யூரிப்பிடிஸ் முக்கியமானவர்கள். ஈஸ்கலஸ் இரண்டாவது நடிகனைத் தோற்றுவித்ததோடு முக்கூட்டுநாடகத் தொகுதியையும் அறிமுகம் செய்தார். சோபோகிளிஸ் மூன்றாவது நடிகனைத் தோற்றுவித்தார். பெருங்காட்சிப் பண்பையும் அறிமுகம் செய்தார். யூரிப்பிடிஸ் யதார்த்த நாடகங்களை ஆக்கியுள்ளார். இவ்வாறு உருவாக்கப்பட்ட அவலச்சுவை நாடகம் அளிக்கை முறையில் பின்வரும் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. முற்சொல் அல்லது பாயிரம், பரடொஸ் அல்லது கோரஸ்சின் வருகை, காட்சிகள் அல்லது எபிசோடியா, இடைநிகழ்வு அல்லது ரெசிமா, இசைப்பா முகாரி அல்லது லைரோகொலமென், செய்தியாளன் அல்லது மசேஞ்சர், வெளியேறுகை அல்லது எக்சோடஸ் என்பனவாகும். திறஜெடியின் பின்வரும் ஆறு அம்சங்களும் காணப்படுகிறது. கதைப்பின்னல், பாத்திரம், சிந்தனை, பெருங்காட்சி, செயற்றிறன், பாடல் என்பனவாகும்.

சற்றயர் நாடகம் என்பது பாதி மிருகப் பண்பும் பாதி மனிதப் பண்பும் கொண்டது. இத்துடன் அரை நூற் றாண்டின் பின்னர் மகிழ் நெறி நாடகம் தோற்றம் பெற்றது. முதலாவது மகிழ்நெறி நாடகஆசிரியராக எப்பிக்கார்மஸ் காணப்படுகின்றார். மேலும் அரிஸ் ரோபன்ஸ், மெனான்டர் போன்றோரும் காணப்படுகிறனர். இம் மகிழ்நெறி லிங்கப் பாடலில் இருந்தும், கோமஸ் என்ற கேளிக்கை ஊர்வலத்தில் இருந்தும் தோற்றம் பெற்றது என்பர்.

கிரேக்க அரங்கானது 64' அடி வட்டத்தைக் கொண்ட ஆடுகளத்தைக் கொண்டது. பின்னே மூன்று வாயில் களைக் கொண்ட காட்சி இல்லக் கட்டடம் காணப்படும். மலைச்சரிவிலே பார்வை யாளர் காணப்படுவர். கிட்டத்தட்ட 12000 – 16000 வரையான பார்வையாளர் காணப்படுவர். இவர்களுக்காகவே வேட முகங்களும், புனல் போன்ற வாய் அமைப்பும், வர்ண உடைகளும் பயன் படுத்தப்பட்டது. அரங்கிலே ஆற்றுகைகள் பகல் வேளையில் இடம்பெற்றது. அரங்கிலே டியூஎக்ஸ் மெசினா, எக்கிக் கிளோமா, பெரியக்றோய் என்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய தன்மை கொண்ட புராதன கிரேக்க அரங்கு இன்றைய நவீன அரங்கு வளர ஓர் அடித்தளமாய் அமைந்துள்ளதுடன் படிப் படியான மலர்ச்சிக்கு காரணமாகவும் அமைகிறது எனலாம்.

**நி. தர்சினி**
2011 A/L

சுதந்திரம் என்பது மிகவும் அருமையான பொருள் அதை என்ன விலை கொடுத்து வாங்கினாலும் வாங்கலாம். ஒரு மனிதன் தன் உடம்பைத் தவிர வேறெந்த உடம்பிலும் புகுந்து வசிக்க விரும்பமாட்டான். அதேபோல் ஒரு தேசம் மற்றொரு தேசத்தின்கீழ் அடிமைப்பட்டு வாழ மனப்பூர்வமாக விரும்பாது. சுதந்திர உணர்வு என்து எந்த ஒரு ஜீவராசிக்கும் இயல்பாக எழுகிற ஓர் உணர்வாகும். இது கடவுளின் அருளாகும். அடிமை நிலை கடவுளின் கட்டளைக்கு நேர் விரோதமான ஒரு நிலையாகும்.

*– மகாத்மா காந்தி –*

## Flash Back

- **நீங்கள் எப்படி இருந்தீர்கள்?**
- **நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?**
- **நீங்கள் எப்படி இருப்பீர்கள்?**
- **குறிப்பிட்டுக் கூறும்படியாக நீங்கள் வாழ்க்கையில் சாதித்தது என்ன?**

வாருங்கள்!
ஓர் ஓய்வான சூழ்நிலையில்
இந்த தனிப்பட்ட அம்சங்களைப் பற்றி பேசுவோம்.

# இசையின் பங்கு

தாயெழிற் தமிழன்னை என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந் தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ
ஆரிதைப் பகர்வார் இங்கே

எனத் தமிழ் இசைக் கவிதை தன்னைப் பாடினான் பாவேந்தன் பாரதிதாசன்.

இசைக்கலை எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்து இக்கலைக்கு அடிமை யாகாதவர் எவரும் இருக்க முடியாது. நாதப் பிரமமாய் விளங்கும் இறைவனை அடைவதற்கு சிறந்த சாதனமாக விளங் குவது இசையாகும். எமது முழுமுதற் கடவுளாகிய சிவனை இசையால் மயக்கி னான் இராவணன். இறைவனையும் இனிக்க வைத்தது மயக்க வைத்தது இசையே என்பதை இங்கு காண்கின்றோம். இந் நிலையில் சாதாரண மனிதர்கள் இதற்கு விதிவிலக்காய் இருக்க முடியாது.

எமது கலைத்திட்டம் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளது. ஆயினும் இக் கலைத் திட்டத்தில் இசைக் கலை அகற்றப்படமுடியாத அளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது. சிவனின் உடுக்கு சரஸ்வதியில் வீணை, கண்ணனின் புல்லாங்குழல், நந்தியின் மத்தளம், நாதரின் தம்புரா என்பவை இசையின் தொன்மையை உணர்த்துகின்றன. இசை யைப் பாலகர்கள் முதல் வயோதிபர் வரை சகலரும் விரும்பிக் கேட்கின்றனர். மிருகங்களும் இசையை இரசிக்கின்றன என்பதில் எதுவித ஐயமுமில்லை.

'தமிழோடு இசைப்பாடல் மறந்தறி யேன்' என்றார் அப்பர் சுவாமிகள். இவ்வகையில் தமிழையும் இணைத்துப் பாடுவதில் பெருமை கண்டவர்கள் பலர். மக்கள் வாழ்க்கைக்கு இசை துணை. இசை என்ற சொல்லுக்கு 'இசைய வைப்பது' என்பது பொருள். இலக்கியம் தெரிந்தவர்கள் இசையில் தேர்ச்சி பெறுவதில்லை. இசையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இலக்கியத்தைப் பற்றித் தெரியாது என்று ஒரு காலத்தில் பேசப்பட்டது. இருப்பினும் இசையானது தமிழிலக்கியத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு உள்ளது என்ற உண்மையை ஆய்வாளர் அனைவருமே ஒப்புக்கொள்கின்றனர்.

இறைவன் இசை வடிவமாய் இருக்கி றார் என்பது ஒரு முதுமொழியாகும். 'ஏழிசையாய் இசைப்பயனாய் ' என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியுள்ளார். அப்பர் 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்று இறைவனை எண்ணி உள்ளம் உருகினார். திருஞானசம்பந்தர் இறைவனை 'பண்ணமர் வீணையினான்' என்று வருணிக்கிறார். திரைப்படப் பாட்டிலும் 'சங்கரா நாத சரீரா' என்று நாம் கேட்டு வருகின்றோம். இவ்வாறு இறைவனுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புள்ளதை நாம் உணர்வதால் இசையை ஒரு தெய்வீகக் கலை என்று அழைக்கின்றோம்.


பொன்னிலங்கு பூங்கொடி
போலஞ் செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள்
ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்

**தென்னவன் வாழ்க வாழ்க என்று**
**சென்று பந்தடித்துமே**
**தேவரார மார்பன் வாழ்க**
**என்று பந்தடித்துமே**

என்று இளங்கோவடிகளின் இசைத் தமிழைப் பாடி வாழ்வில் உய்வோமாக. மேலும் தற்போதைய ஆராய்ச்சியா ளர்களின் ஆராய்ச்சியில் தாவரங்களும் இசையை நன்கு வளர்க்கின்றன என்பது யாவருக்கும் தெரிந்ததே. இக்கூற்றினை நம் முன்னோர்களும் கூறியுள்ளனர். குறுந்தொகையில் கூறப்பட்ட 'முல்ல வரி வண்டுதலாய் நெகிழ்ந்தனவே' என்னும் பதமானது இசையின் நன்மையினை விபரிக்கின்றது. அதாவது 'இசைக்கு உருகான் எதற்கும் உருகான். எதற்கும் உருகாதவன் இசைக்கு உருகுவான்' என்பதே ஆகும்.

**ந. துஷாந்தி**
2011 A/L
கலைப்பிரிவு

**உங்கள் வாழ்க்கையின் எந்தச் சவாலையும் பூரணமாக வெற்றி கொள்ளத் தேவையான அனைத்துத் திறன்களும் உங்களிடம் அமையப் பெற்றுள்ளது. உங்களிற்குத் தேவையானது எல்லாம் அடையவேண்டும் என்ற ஒரு தேவையேயாகும்**



# இதம் தரும் பள்ளி வாழ்க்கை

பாடசாலை வாழ்க்கை என்பது ஒரு நீண்ட தூரப்பயணம். அந்தப் பயணத்தில் நாம் ஒவ்வொருவரும் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பேருந்து பயணத்தின் போது அதிலுள்ள பயணிகள் நித்திரை செய்தால் அது சொகுசுப் பயணம். மாறாக அந்த வாகனசாரதியே நித்திரை செய்தால் அது கடைசிப் பயணம். அது போலத்தான் எமது பாடசாலை வாழ்க்கையும். இங்கு மாணவர்கள் நித்திரை செய்தால் அது கடைசிப் பயணம். அந்த இழப்பை எம்மால் மீளப் பெற முடியாது.

இங்கு எங்கள் ஒவ்வொருவருக்கும் தற்கொலை செய்ய உரிமையுண்டு, ஆனால் கொலை செய்ய உரிமை யில்லை. அதாவது வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் போது அதைக் கவனிக்காது வேறு விடயங்களில் ஈடுபட்டுக் கொண்டி ருப்பின் அது தற்கொலை. நீங்கள் உங்களையே தற்கொலை செய்கிறீர்கள். அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. மாறாக உங்கள் அருகிலிருப்பவர் களையும் குழப்பி அவர்களுடன் ஏதாவது செயற்பாடுகளில் ஈடுபடுவீர்களாயின் அது கொலை. அதற்கு உங்களுக்கு எதுவித உரிமையும் இல்லை.

ஒவ்வொரு நாளும் வகுப்பறையை விட்டுச் செல்லும் போது சிரித்துக் கொண்டு செல்லக் கூடாது.கற்பித்த எல்லா விடயங் களும் தெளிவாக விளங்கவில்லையே என்று நினைத்து அழுது கொண்டு செல்ல வேண்டும். பின்பு நாம் பரீட்சை மண்ட பத்தை விட்டுச் செல்லும் போது சிரித்துக் கொண்டு செல்ல முடியும். வகுப்பறை யில் ஒரு விடயம் விளங்காவிட்டால் பிரச்சினையில்லை. ஏனென்றால் அடுத்த நாள் அந்த சந்தேகத்தை ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவடையலாம். மாறாக பரீட்சை மண்டபத்தில் ஒருவிடயம் விளங்காது விட்டால் அதற்கு நாம் ஒருவருடம் காத்திருக்க வேண்டும்.

வகுப்பறைகளில் நாம் வினாக்களுக்கு சுயமாக சிந்தித்து விடையளிக்காது அருகிலிருப்பவரிடம் பார்த்தோ / கேட்டோ விடையளிப்பின் பரீட்சை மண்டபத்தில் நாம் பரீட்சையை எதிர் நோக்குவது கடினமாக இருக்கும். ஏனென் றால் முதன்முறையாக பரீட்சை மண்ட பத்தில் மூளை சிந்திக்கும் போது அது மூளைக்கு கடினமாக இருக்கும். வகுப்பறைகளில் எமக்கு உதவியவர்கள் பரீட்சை மண்டபத்தில் உதவமாட் டார்கள். எமக்கு அருகிலிருப்பவர்கள் எம்மைவிட முட்டாள்கள் என்று நாம் நினைத்துக் கொண்டு சுயமாக நாம் விடையளிக்க வேண்டும்.

தம்முடைய அனுபவத்தை வைத்துக் கொண்டு பிறருக்கு அறிவுரை வழங்கு பவர்கள் முட்டாள்கள். பிறருடைய அனு பவத்தை வைத்துக்கொண்டு பிறருக்கு அறிவுரை கூறுபவர்கள் புத்திசாலிகள். ஏனென்றால் அவர்கள் அனுபவப்பட்டுத் திருந்தாது பிறருடைய அனுபவத்தால் திருந்தியவர்கள். நாமும் புத்திசாலி களாய் இருந்து முதலில் நமக்கு நாமே அறிவுரை கூறவேண்டும். பிறருக்கு அறிவுரை கூறுவதால் மிஞ்சுவது அவ மானமே ஆகும்.

நாம் ஒவ்வொருவரும் பாடசாலைக் குச் செல்வதற்கான காரணங்களைத் தேட வேண்டும். மாறாகப் பாடசா லைக்குச் செல்லாததற்கான காரணங் களைத் தேடலாகாது. பாடசாலை வாழ்க் கையில் பிறர் நம்மைப் புகழக்கூடிய வகையில் உயர வேண்டும். நம்மை நாம் புகழ்வதனால் நாம் ஒன்றும் வானத்தில் பறக்கப் போவதுமில்லை. நம்மை நாம் இகழ்வதனால் நாம் ஒன்றும் மண்ணுள் மண்ணாகிப் போவதுமில்லை.

நம்முடைய தலைக்கு மேல் காகம் பறந்து செல்லலாம். அதை நம்மால் தடுக்க முடியாது.காகம் நம் தலையில் கூடு கட்டுவதை நம்மால் தடுக்க முடியும். அது போலவே துன்பங்கள், தீமைகள் நம்மைச் சுற்றி வரலாம். அதை நம்மால் தடுக்க முடியாது. ஆனால் துன்பங்கள், தீமைகள் நமக்கு வரும் போது அதை நம்மால் தடுக்க முடியும்.

வகுப்பறையில் கற்பிக்கும் ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களையும் அலட்சியப் படுத்தாது நுணுக்கமாகக் கற்க வேண்டும்.

மாணவப் பருவத்திலே சுவாரஸ்ய மான பள்ளி வாழ்க்கையை தவறவிடக் கூடாது. தவறவிட்டால் அதை வாழ்க்கை யின் எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பிப் பெற முடியாது. இந்தப் பாடசாலை வாழ்க்கை என்ற நீண்ட தூரப் பயணத்தில் நாம் சீரான கதியில் நேரான பாதையில் பயணிப்போமாயின் ஒளிமயமான எதிர்காலத்தின் வெற்றிப் பீடத்தை மிக மிக இலகுவாக அடைய முடியும்.

**"விழுந்தாலும் அருவியாக விழுங்கள்**
**தேங்கி சாக்கடையாகி விடாதீர்கள்"**

அருவியானது கீழே விழும் போது அது ஏனையோருக்குப் பயனுடைய வகையில் அமைகிறது. அது மட்டுமல்ல அது விழுந்தும் கூட ஓடிக்கொண்டே இருக்க முயற்சிக்கிறது. மாறாக விழுந்த அருவியானது அதிலே தேங்கியிருக்கு மாயின் அது சாக்கடையாகி விடும். அதனால் எதுவித பயனும் இல்லை. மாறாக அதனால் தீமையே ஏற்படும்.

**பாடசாலை நாட்களில்**
**நாற்பது நிமிடத்தை**
**நன்றாயிருக்க நழுவ விட்டேன்.**
**நெருங்கியது பரீட்சை**
**நொருங்கியது மன நிம்மதி.**
**பரீட்சை எழுதினேன.**
**விடைத்தாளில் அதிகம் காணப்பட்டது**
**வெற்றிடமே..**

இந்த இனிய பள்ளி வாழ்க்கையை சீர்குலைத்து விட்டுப் பின்னர் நினைத்துக் கவலைப்படுவதால் எதுவித பிரயோ சனமும் இல்லை. ஒவ்வொருவரும் உணர்ந்து சுயமாகக் கற்று எமது எதிர் காலத்தைச் சிறப்பாக அமைக்க வேண்டும்.

**சுதர்சினி தேவதாசன்**
2011 A/L
வர்த்தகப்பிரிவு

# மகளிர் சிறப்பு

இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலே காலடி எடுத்து வைத்துள்ள இவ்வுலகிலே எமது தாய் நாடான இலங்கை தனக்கென ஒரு இடத்தைப் பெற்ற நாடாக விளங்கு கின்றது. முன்னேற்றம் அடைந்து வரும் நாடான இலங்கை பெண்களுக்கு சமத் துவம் வழங்குவதன் அவசியம் உணர்ந்து முழுமையாக சமத்துவம் வழங்காமல் பகுதி அளவாக சமத்துவத்தை வழங்கி யுள்ளது. உலக மனித சமூகத்தின் ஆரோக் கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டோர் மனித சமூகத்தின் பெரும்பான்மை யானோர் பெண்களே. தற்காலத்தில் பெண்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட் டாலும் காலாகாலமாக இன்னல்களுக் குட்பட்டு அடக்குமுறைகளுக்குட்பட்டு வரும் துயர வரலாற்றைக்கண்டு துன்புற்று வந்தவர்கள் பெண்களே.

உலகில் வாழ்ந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் பெண் விடுதலை பற்றி அவ்வப்போது குரல் கொடுத்தே வந்துள்ளனர். இது மேலைத் தேசத்தில் கேட்பதற்கு முன்னரேயே கீழைத்தேசங்களில் இக் குரல்களை கேட்க முடிந்தது. தமிழர் வாழ்வில் சங்க காலத்திலேயே பெண் சம உரிமையுடை யவள் என்பதற்கமைய காக்கைபாடி னியார், நச்செள்ளையார் முதலிய சங்க காலத்து பெண்கள் இதற்குச் சான்றாக வாழ்ந்துள்ளனர்.

**"மங்கையராகப் பிறப்பதற்கே-நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா"**

என்று பாடி பெண்களாய்ப் பிறப்பது பெரு மைக்குரியது என்பதை குறிப்பிட்டார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று கேட்டான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டிய தெய்வப் புலவன் திருவள்ளுவன். பெண்களின் சிறப்பை "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பெண்ணின் பெரு மையை முழங்கி நிற்கிறான் புரட்சிக் கவிஞன் பாரதி.

**"நீறில்லா நெற்றி பாழ் நெய் இல்லா உண்டி பாழ்**
**ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் -மாறில்**
**உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் பாழே**

மடக்கொடி இல்லா மனை" என்று இல்லறத்தின் மேன்மையை, இல்லாளின் சிறப்பை பாடினார் ஒளவையார். நில வில்லாத வானம் எப்படி இருக்கும் பெண்கள் இல்லாத வீடும் அப்படித்தான் இருக்கும். இவ்வளவு பெருமையும் வாழ்வுக்கு உண்டாவதன் மூலகாரணமே பெண்மைதான். இத்தகைய பெருமைக் குரிய பெண் சமுதாயம் இடைக்காலத்தில் சமூகத்தில் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழ நேரிட்டது.

"வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதன் செயல்கண்டு வெகுண்டெழுந்தனர் பெண்கள். அடுப் பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற நிலை மாறிஅடுப்போடு கிடந்த நெருப்புக்கள் நாங்கள் எழுந்துவிட்டோம்" என்று எதிலும் எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறத் தலைப்பட்டனர். பெண்விடுதலைக்கென பல பெண்கள் தாமாக விடுதலை இயக்கங்களை வளர்த்து

வெற்றியும் கண்டு வருகின்றனர். பெண்களுக்கு ஓரளவு சுதந்திரம் என்ற நிலை மாறி பூரண சுதந்திரம் என்ற நிலை உருவாகி வந்த போதும் இன்று எமது சமுதாயத்தில் உள்ள சிக்கல்கள், பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை இந்த பூரண சுதந்திரம் பெண்களுக்கு கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான்.

பெண் விடுதலைக்காக சமகாலங்களில் சர்வதேச ரீதியில் உருவான அக்கறையின் விளைவாக 1975ம் ஆண்டில் மெக்சிக்கோவில் இடம் பெற்ற மாநாட்டின் விளைவாக சர்வதேச பெண்கள் தசாப்தம் பிரகடனப்படுத்தப்பட்டது. பல நாடுகள் பெண் விடுதலை தொடர்பாக நிறுவன ரீதியாக அமைப்பியல் மாற்றங்களை மேற்கொண்டன. இவ்வகையில் இலங்கையில் 1983இல் பெண்கள் விவகாரத்திற்கென ஓர் அமைச்சு நிறுவப்பட்டது.

பெண் விடுதலை தொடர்பாக வெறும் கோஷங்களை எழுப்புவதை விடுத்து ஆக்க பூர்வமான பணிகளில் நாம் ஈடுபடவேண்டும். பெண்களை சுற்றிப்பிணைக்கப்பட்டுள்ள அவளது உள்ளத்திற்கும், உடலுக்கும் துயரங்களை விளைவிக்கின்ற முட்கம்பிகள் அறுத்தெறியப்பட வேண்டும். பொருளாதாரத்திற்கு, பாதுகாப்பிற்கு ஏனையோரைச் சார்ந்திருக்கும் நிலையினை மாற்றியமைத்திட வேண்டும். பெண் சுதந்திரம் பூரணமாக கிடைத்தல் வேண்டும்.

**நா. கஜேந்தினி**
$11^{B}$

**நவீன மாற்றங்கள் சில**

**எதிர்கால தொழில்நுட்பவியலானது மக்கள் அற்ற அலுவலகங்கள், அலுவலகமற்ற ஊழியர்கள், காகித ஆவணங்கள் அற்ற அலுவலகங்கள் என்பவற்றை உருவாக்க உள்ளன.**

**சிங்கப்பூரின் மதிநுட்பத்தீவு (Intelligents Island) ஒவ்வொரு இல்லத்திலும் நவீன தகவல்த் தொழில்நுட்பக் கருவிகளைப் (Fiber Opticalie) பொருத்தி வருகின்றது. தென்கொரியா 5800 கோடி US($) டொலர் செலவில் நிர்மாணித்துள்ள பல்லூடகத் தொகுதி (Fiver Optic Multimedia Network) 2010ம் ஆண்டளவில் அந்நாட்டை முழுமையான தகவல் சமூகமாக மாற்றிவிட உள்ளது.**

***நன்றி : "Google"***



# என் கல்லூரி என் இறுதி மூச்சுவரை

என் வாழ்விலே என்றும் பசுமையோடு எனக்குள் பூரிப்பை ஏற்படுத்தும் ஒரே விடயம் என் கல்லூரி நாட்களே! பல வெற்றிகளையும், ஆளுமை விருத்தியையும் பெற்றுத்தந்த என் கல்லூரியிலே ஆரம்ப வகுப்பிலிருந்து உயர் தரம் வரை கற்றேன் என்பதில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பெருமிதம் எனக்குள். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது என்னை ஒவ்வொரு நிலையிலும் நெறிப்படுத்திய என் ஆசான்களுக்கு குறைந்தபட்ச ஒப்பீடே.

அமரர் ச.கந்தசாமி ஆசிரியர், எம் கல்லூரிக்குக்கிடைத்த ஓர் வரப்பிரசாதமே. 28வருட கால ஆசிரியசேவையாற்றி ஓய்வு பெற்ற பின்னும் தரம் 5மாணவர்களுக்காக புலமைப்பரிசில் வகுப்புக்களை நடாத்தியது அவரது பெருமைக்கே பெருமை சேர்த்த விடயம். 2000ம்ஆண்டு புலமைப்பரிசில் வகுப்புக்களின் போது எனக்கும் அவரிடம் கற்கும் வாய்ப்புக்கிடைத்தது. அவர் அநேகமாக மாலை வேளைகளிலேயே வகுப்புக்களை நடாத்துவது வழமை. அன்றைய நாள் O/L பரீட்சை. இன்று அதிபர் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் கீழ்தளத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நாம் ஆசிரியரின் வருகைக்காக அப்பொழுதிருந்த மேடையுடனான மண்டபத்தில் பரீட்சை நடைபெறுகின்றதென்பதையும் மறந்து மேசைகளுக்கிடையாலும், கதிரைகளுக்கு மேலாகவும் ஏறி விளையாடி ஒரே சத்தம். விளையாட்டு இனிமையில் ஆசிரியர் வந்ததைக்கூட கவனிக்கவில்லை. எம் சத்தம் பரீட்சை மண்டபம் வரை கேட்டு பரீட்சை மேற்பார்வையாளரும் அவரிடம் முறையிட அவரின் வருகையையும் கவனியாது நாம் விளையாடியதும் அவருக்குக் கோபத்தை ஏற்படுத்திவிட வரிசையில் நிற்க விட்டு இரண்டு கைகளிலும் எல்லோருக்கும் நல்ல அடி. அதன்பின் அவ்வாறான செயற்பாடுகளில் நாம் ஈடுபட்டதேயில்லை. நான் புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெறுவதற்கு அவரது கண்டிப்புடன் கூடிய கற்பித்தலே பெரும் பங்கு வகித்ததென்பது களங்கமற்ற உண்மையாகும். அவர் தற்போது எம்முடன் இல்லையெனினும் அவரது கம்பீரமான தோற்றமும், அன்பான நினைவுகளும் எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் என் மனதை விட்டு மட்டுமல்ல அவரையறிந்த யார் மனதை விட்டும் நீங்காது.

தரம் ஐந்திலே தமிழ்ப்பாட நேரம் எப்போது ஆரம்பிக்கும், ஆசிரியர் திரு.நா.கேதீஸ்வரன் அவர்கள் எப்போது வருவார் எனக் காத்திருந்த நாட்கள் பல. அவரது நகைச்சுவை உணர்வின் பல பாடநேரம் முழுவதும் கலகலப்பாகவே இருக்கும். மகாபாரதம், இராமாயணம் போன்ற புராணக் கதைகளைத் தனக்கே உரிய பாணியில் கூறும் போது மிகுந்த ஆவலுடன் கேட்டு இரசிப்போம். சில சமயங்களில் கதைகள், சம்பவங்களை இட்டுக்கட்டிக் கூறுவதுமுண்டு, ஒரு நாள் எம்மை விட இரண்டு வயது மூத்தவர்களில் மெல்லிய மாணவர்கள் சிலரைத் தான் அழைத்து அவர்களது இருகைகளிலும் சுளகுகளைக் கட்டி காற்றுள்ள

போது வைக்கோற் போரின் மேலிருந்து சிறிது தூரம் பறக்க வைத்தார் எனக் கூறியதை உண்மையென நம்பி எம் வகுப்பில் ஒருசில மாணவர்கள் அவ்வாறு பறந்து பார்த்து அடிபட்டதுண்டு. அவர் அன்று கூறிய கதைகளும் அவற்றில் வரும் கதாபாத்திரங்களும் இன்றும் பசுமரத்தாணிபோல் என் மனதில் உள்ளது.

என் கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் என் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள். அவர்கள் கல்வியோடு பல துறைகளிலும் என்னை நெறிப்படுத்தி என் ஆளுமைப்பண்பையும் அறிவையும் விருத்தி செய்ததனால் என்னால் பல வெற்றிகளைப் பெற முடிந்தது. ஆங்கில மன்றம், வணிக மாணவர் மன்றம் போன்றவற்றின் செயலாளராகவும், வலைப்பந்தாட்ட அணித்தலைவியாக வும், சிரேஸ்ட மாணவ தலைவியாகவும் இருந்துள்ளேன். இத்தலைமைத்துவங்கள் எல்லாம் என்னையே எனக்கு அறிமுகப் படுத்தியவை. கணித விஞ்ஞானப்போட்டி, சமூகக் கல்விப்போட்டி, வணிகக் கல்விப் போட்டி, கட்டுரைப்போட்டிகள் போன்ற வற்றில் கோட்ட, வலய, மாவட்ட மட்டங் களில் இடங்களைப் பெற்றிருக்கின்றேன்.

2006ல் O/L பரீட்சைக்குத் தோற்றிய போது எம்வகுப்பாசிரியராக இருந்தவர் கணித ஆசான் திரு.த.சிவசுப்பிரமணியம் அவர்கள். கிழமையில் ஐந்து நாட்களும் கணித பாடத்திற்காக முதலாவது பாட நேரமே ஒதுக்கப்பட்டிருந்தது. வலைப் பந்தாட்டப் பயிற்சிகள் காரணமாக அநேகமான நாட்களில் கணித பாடம் வகுப்பறையில் நாம் இருந்ததேயில்லை. இதனால் சிறந்த பெறுபேறு எடுப்பேன் என நம்பியிருந்த அவரது நம்பிக்கை போய்விடுவோமோ என பல தடைவை என்னிடம் அவர் ஆதங்கப்பட்டிருந்தார். அவரதும், எனக்கு கற்பித்த ஏனைய ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான கற்பித்தலுமே தனியார் வகுப்புக் களுக்கும் செல்லாது 10A சித்தியைப் பெற பேருதவி புரிந்தது.

'ஒரு மாணவன் முழுமையடைவது தனியே கல்வியால் மட்டுமல்ல விளை யாட்டாலுமே' என்பதை எனக்குள் உணர்த்தியது என் கல்லூரியே. என் கல்லூரிக்காலத்தில் 6வருடங்கள் கல் லூரி வலைப்பந்தாட்ட அணியில் இடம் பெற்று இரண்டு முறை மாகாணச் சம்பி யன்களாகவும் மூன்று தடவை மாவட்டச் சம்பியன்களாகவும் தெரிவாகியிருந் தோம். 15வயதிற்குட்பட்ட பிரிவிலிருந்து 19 வயதிற்குட்பட்ட பிரிவு வரை எம் வயதுப் பிரிவினர் தலைமை தாங்கும் ஒவ்வொரு வருடத்திலும் வலய, மாவட்ட, மாகாணப் போட்டிகளில் இறுதிப்போட்டி அநேகமாக எமக்கும் யூனியன் கல்லூரி அணிக்குமிடையிலானதாகவே காணப் பட்டது. இந்தியாவிற்கும், பாகிஸ்தா னுக்கும் இடையிலான Cricket Match ஐப்போல் விறுவிறுப்பாக நடைபெற்ற ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி வாகை சூடியது நாமே. 2008ம் ஆண்டு மாவட்ட மட்டத்திலான முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற 19 வயதிற் குட்பட்ட போட்டியைத்தவிர. அப்போட்டி யின் இடைவேளைக்கு முன்னரான பாதி ஆட்டத்தில் எம்மை விட அவர்கள் 5 புள்ளிகளைப் பெற பிற்பாதி ஆட்டத்தில் சமநிலையில் முடிந்த போதும் தோல்வியை எம்மால் தவிர்க்க முடியவில்லை. எதிர் பாராத அத் தோல்வியால் துவண்டு போன எம்மை வெற்றியும் தோல்வியும்

விளையாட்டில் சகஜம். தோல்வியை ஓர் பாடமாகக் கொண்டு செற்பட வேண்டுமென ஆசிரியர் நெறிப்படுத்தியதனால் மாகாணப் போட்டிகளின் போது அவர்களை வெற்றிகொண்டு மாகாணச்சம்பியன்களானதோடு தேசிய மட்டத்தில் காலிறுதி வரை முன்னேறியிருந்தோம். ஒவ்வொரு போட்டியின் போதும் என் ஆரம்பகால அதிபர் திரு.சி.சிவனேஸ்வரன் அவர்களும் தற்போதைய அதிபர் திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்களும்சரி மைதானத்திற்கு வந்து எம்மை வாழ்த்தி எமக்குக் கொடுத்த ஒத்துழைப்பையும், ஊக்குவிப்பையும் போல் வேறெந்தப் பாடசாலை அணியினர் விளையாடிய போது நான் பார்த்ததேயில்லை.


உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவை நான் தேர்ந்தெடுத்துக் கற்றபோது, எம் வகுப்பில் ஐவரே கற்றோம். எம் வகுப்பாசிரியை திருமதி.வி. செல்வகுமார் "மாணவர் நலனே தன் நலன்" எனச் செயற்படும் அவர் கற்பித்த ஒவ்வொரு விடயமும் என்மனதில் ஆழமாகப் பதிந்து விடுவதனால் வணிகக் கல்விப்பாடத்திற்காக நான் தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதையே நிறுத்தியிருந்தேன். அவரது ஊக்குவிப்பால் 2009 ல் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையிலான வணிக வினாடி வினாப் போட்டியில் கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும், வலய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற எம்மால் முடிந்தது. வலய மட்டத்திலான போட்டியின் போது எனக்கான கேள்வியாக நடைமுறைச்சொத்திற்கும் நடைமுறைப் பரிப்பிற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு அழைக்கப்படுமெனக் கேட்கப்பட்ட போது எனக்குள் சந்தோசத்துடனான ஆச்சரியம். ஏனெனில் கோட்ட மட்டத்தில் எனக்கான கேள்வியாகவும், ஆசிரியர்தெரிவு செய்து எமக்குக் கற்பித்த வினாக்களுள் ஒன்றாகவும் அக்கேள்வி காணப்பட்டதே. அவரினதும் திருமதிகள். க.குகதாசன், தி.ஜெயபாலன், திரு.செ.சுதாகரன் ஆகிய ஆசிரியர்களினதும் தவத்தின் வரமே உயர்தரப் பரீட்சையில் 3A பெறுபேற்றை நான் பெற்றது.

சமூகத்தில் நானும் ஒருத்தியாக தலைநிமிர்ந்து நிற்பதற்கு என்னை நெறிப்படுத்திய என் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை நன்றியோடு பார்க்கின்றேன். என் கல்லூரி நாட்களின் பசுமையான நினைவுகள் என் இறுதி மூச்சுள்ளவரை.

**சு. தேவகி**
A/L 2009

Anyone can become angry - that is easy, but to be angry with the right person at the right time, and for the right purpose and in the right way - that is not within everyone's power and that is not easy.

**- Aristotle**



# முகாமையில் சூழலும் சமூகப்பொறுப்பும்

இன்று விரைவான மாற்றத்திற்கும் துரித வளர்ச்சிக்கும் உட்படும் வர்த்தகத்தினை திறமையான முறையில் வழிநடாத்தி செல்வதற்கான முக்கிய துறைகளுள் அனைவராலும் வேண்டப் படுகின்ற ஒரு துறையாக முகாமை விளங்குகிறது. இலக்குகளை சரியாக முன்வைத்து அதை சரியான முறையில் சரியான நேரத்தில் அடைவதற்கான செயற்பாடுகளையும் மனித வளங்களை யும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி வழி நடாத்தி கட்டுப்படுத்துதல் மூலமாக வினைத்திறனுடன் கூடிய முடிவுகளை அடைய திறனான முகாமை வேண்டப் படுகிறது. முன்வைக்கப்பட்ட இலக்கு களை உரிய முறையில் அடைதல் என்பதன் மூலம் நிறுவன முகாமைத்திறனை அள விடலாம் எனினும் முன்வைத்த இலக்கு கள் எத்தன்மையானவை என்பதைப் பொறுத்தே திறனான முகாமை உள்ளதா என நாம் வரையறுக்கமுடியும்.

இலக்குகள் யாவும் நிறுவனத்தையும் அதன் இலாப தன்மையையும் உயர்த்தும் வகையில் இருப்பின் அத்தகைய இலக்கை அடைந்தமையைக்கொண்டு முகாமை யானது முழுமையான வெற்றியை அடைந்தது என கூற இயலாது. ஏனெனில் நிறுவனத்தின் முழுமையான வெற்றிக்கு நிறுவன நலன் குறித்த இலக்கு மட்டும் காரணமாகிவிட முடியாது. நிறுவனத்தின் சூழலும் சூழல் மீது நிறுவனம் கொண் டுள்ள சமூகப் பொறுப்புக்களின் அளவிலும் அந்நிறுவனத்தின் நிகழ்கால, எதிர்கால போக்குகள், வளர்ச்சிகள் தங்கியுள்ளது. எனவே திறனான முகாமையும் அதன் ஊடான நிறுவனத்தின் முழுமையான வெற்றியும் நிறுவன நலனையும் சூழல் நலனையும் பேணும் வகையிலான சமூகப் பொறுப்புக்களையும் உள்ளடக்கிய இலக்கு களை அடைதல் மூலமே அடையப்பட முடியும். இதனாலேயே முகாமையில் சூழல் மீதான சமூகப் பொறுப்பு அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

சமூகப்பிரச்சினைகள் மிகவும் கவனத் திற்குரியதொன்றாக இருப்பதனால் இப்பிரச்சினைகளை கையாள்வதில் நிறுவனங்கள் பயனுறுதிமிக்கதாக இருக்க வேண்டும். அல்லாவிடில் அவை சமூகத்தில் நீக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக சமூகப் பொறுப்பில் ஏற்படும் தவறுகள் அரசாங்கத்தின் தலையீட்டிற்கு வழி வகுத்துள்ளது. இதனாலேயே ஒரு நிறு வனம் தனது பொருளாதார சமூக சக்தி களிடையே ஓர் ஏற்கத்தக்க சம நிலையை அடைய வேண்டுமெனக் கூறப்படுகின்றது. அல்லாவிடில் அவை தமது சுதந்திரத் தினையும் நீடித்திருக்கும் ஆற்றலினையும் இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

**ர. ரஜிந்தா**
*A/L 2011*
*வர்த்தகப் பிரிவு*

# இசை வித்துவான்களின் வாழ்க்கை வரலாறு

### ஸ்வாதித் திருநாள் மகாராஜா

1813ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி திருவாங்கூர் அரச குடும்பத்தில் பிறந்தார். இளமையில் ஆங்கிலம், சமஸ் கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு, மராத்தி, கன்னடம் முதலிய மொழிகளைக் கற்றார். 16வது வயதிலே திருவாங்கூர் மாநிலத் தில் அரசராகி குறுகிய காலத்துக்குள் மக்க ளுக்குப் பல நன்மைகளைச் செய்தார்.

ஸ்வர ஜதிகள், தான வர்ணங்கள், பதவர்ணங்கள், கிருதிகள், பதங்கள், தில்லானாக்கள், ஜாவளிகள், இராக மாளிகைகள் போன்ற இசை வகைகளை யும் ஹிந்துஸ்தானியில் துருபக்கள், கஜால்கள் முதலியவற்றையும் இயற்றி யுள்ளார். அனேக உருப்படிகளை சமஸ் கிருதத்திலும் மற்றவைகளை மலையாள மும் சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிர வாள மொழிகளிலும் இயற்றியுள்ளார்.

சலமேல சங்கராகரணம் சாமி நின்னெ யதுகுல காம்போஜி ஸரஜி நாவா-காம்போஜிஸ அடதாள வர்ணங் களை இவர் ஆக்கியுள்ளார். பரத நாட்டிய கலையில் கொண்ட ஈடுபாடு காரணமாக அநேக பத வர்ணங்களையும் இயற்றி யுள்ளார். சுவாதித்திருநாள் மகாராஜா 400 கிருதிகள் இயற்றியதோடு பிரபல்ய இராகங்கள் ஆகிய சங்கராபரணம், கல்யாணி, தோடி, காம்போதி போன்ற வற்றுடன் பல அபூர்வ இராகங்களிலும் உருப்படிகளை இயற்றினார்.

நவரத்தினக் கீர்த்தனைகளும், நவமாளிகை கீர்த்தனைகளும் குறிப்பி டத்தக்கவை. பன்னகேந்திரயே சயன என்ற இராகங்களைக் கொண்ட இராக மாலி கையும் ஸ்வாதித் திருநாள் இயற்றிய சிறப்பான மாலிகைகள் ஆகும்.

இவர் 65 பதங்களை இயற்றியுள்ளார். இவர் 12 பாடல்களைக் கொண்ட குசே லோபாக்கியானம் என்ற கரிகதையை யும் 9 பாடல்களைக் கொண்ட அஜா மிலோபாக்கியானம் என்ற கரிகதை களையும் இயற்றியுள்ளார். இவர் பத்ம நாப, பங்கயநப, ஸரஸிநாப போன்ற முத்தி ரைகளைத்தம் உருப்படிகளில் இயற்றி யுள்ளார். இவர் 1846ம் ஆண்டு மார்கழி மாதம் 25ம் தஜிகதி இறைவனடி சேர்ந்தார்.

### அமிர்தகுஸ்ரு

இவரது இயற்பெயர் அபூ-அல்-ஹஸன்யமின்யட்-தின்குஸ்ரோ. துருக்கி நாட்டைச் சேர்ந்த இவர் பெற்றோருக்கு 3வது மகனாவார். தந்தையை 7 வயதில் இழந்தவர். சிறுவயதிலேயே உருது மொழியிலும் பாரசீக மொழியிலும் இயற்றும் வல்லமை பெற்றிருந்தார். டெல்லி சமஸ்தான சுல்தானில் ஆஸ்தான வித்துவானாக விளங்கினார்.

போஹாஸ் பாஹிலிஸ் போன்ற உருப் படிகளை கிந்தி மொழியில் இயற்றினார். இவரால் இயற்றப்பட்ட ஹிந்தி மொழி யிலமைந்த பாடல்கள் இன்னும் பிரபல்ய மானவை. ஜலால்-உத்-தின்-கில்ஜி என்பவர் டெல்லி கல்கத்தாவில் இருந்த போது இவருக்கு அமிர் என்னும் பட்டத்தை வழங்கினார்.

இவர் சிறந்த சங்கீத வித்துவானாக விளங்கிய தோடல்லாமல் இந்திய, அரேபிய, பாரசீக இசை வகைகளையும் ஒப்பு நோக்குடனக் கற்றுத் தன் இசையில் அறிமுகப்படுத்தினார். புதிய உருப்படி வகைகளாகிய குல்பானா, தாரனா, குவாலிகயால், கஸல்ஸொலாஹா போன்ற வற்றை அறிமுகப்படுத்தினார்.

இவரே ஸிதார், தமேலா, டோலகட போன்ற இசைக்கருவிகளை உருவாக்கி னார். பரோடஸ்ட், பாஷ்டோ, ஸ*ல்-வக்டா ஜால்-திரிதால் போன்ற தாளங் களை அமுல்படுத்தினார். ஒருமுறை கோபால் நாயக் கச்சேரி செய்யும் போது அதனை அவ்வாறே பாடிக்காட்டி அவரைப் பிரமிப்படையச் செய்தார்.

### பாக்

165ம் ஆண்டில் Eisnach என்ற ஊரில் இசைக்குடும்பத்தில் பிறந்தார். மிகச்சிறு வயதிலேயே சந்திர ஒளியில் இசைபகுதிகளை பிரதி செய்து தமது கண்பார்வை தொடரக்காரணமாக இருந் தவர். இவரது தந்தை யோகான் அம்பு ரோசின் முதல்குரு. இவர் 12 வயதில் தன் பெற்றோரை இழந்தார். குடும்பப் பொறுப்பை ஏற்றார்.

முதல் மனைவிக்கு 7 பிள்ளைகளும் 2வது மனைவிக்கு 13 பிள்ளைகளும் உள்ளனர்.

இவர்களில் பாக் இசை மீது அளவு கடந்த ஆர்வம் உடையவர். குடும்பமே கலைக்குடும்பமாக விளங்கியது. தாயாரின் சிறுகதையைக் கேட்டு சமயத்தில் ஈடு பட்டுக் கொண்டனர். பாடசாலையில் சங்கீதத்தில் பயிற்சி பெறும் காலத்தி லேயே எல்லோராலும் போற்றப்பட்டார். ஏனைய இசை மேதையரின் இசைபகுதி களை பிரதி பண்ணுவதிலேயே நேரத்தை செலவழித்தார்.

15வது வயதில் வறுமை காரணமாக தொழில் செய்ய விரும்பி ஆர்கன் வாசிப் பவராக இருந்தார். இசைக்குழுவில் இருந்த காலத்தில் ஓய்து நேரம் முழுவதையும் ஹார்சிக்கோட் ஆகிய இசைக்கருவிகளை வாசித்து வந்தார். organ கற்று கொள்வதற் காக பல மைல் தூரம் நடந்து சென்றார்.

1714ம் ஆண்டில் லெப் சித்தில் இசைக் குழுத்தலைவராக corcert master ஆக இருந்த காலத்தில் இவர் தம் ஒரு வரான கூட்டிசைகளை ஆக்கவும் நேரத்தை ஒதுக்கவும் திறமை பெற்றிருந்தார். இவர் ஒரு குருடராகவும் இருந்த போதிலும் நான் சிங்காசனத்திற்கு வருகிறேன். என்ற கூட்டிசைப்பாடல்களை இயற்றியி ருந்தார். மனைவியும் மகளும் பாடுவதற் காகவும் பாடல்களை இயற்றியிருந்தார்.

பார்க் குடும்பம் 6 தலைமுறையாக ஜேர்மனிக்கு பிரபல்யமான இசை வாத் தியத்தில் இசை அறிஞரை அழைத்து clavy chord என்ற இசை வாத்தியத்தில் இசை கூட்டுவதை பரிபூரணப்படுத்தி னார். இசைக்கருவிகளை 5 விரல்களால் பாவிப்பது பற்றிய விடயத்தை அறிமுகப் படுத்தினார். இவரது இசை பலராலும் போற்றப்பட்ட 100 வருடம் சென்றது. கடைசிக்காலத்தில் கண்பார்வை முற் றாக நீங்கி பாரிசவாதத்தால் பீடிக்கப் பட்டு 1750ஆம் ஆண்டு அமரத்துவம் அடைந்தார்.

**வினுசியா**
A/L 2011
*கலைப்பிரிவு*

# பாட்டு

## இதமான வேளை

பனித்துளி பூக்களில் சிறந்த
சோலைக்காற்று ஊரெங்கும் பரவச்
சூரிய ஒளி பரவ
பூக்களும் பூத்தனவே

இளமொட்டுக்கள்
இதயங்கள் கவர
இதமான அல்லி குவிய
இதமான காற்றும் வீசியதுவே

மாலையானது மயங்க இராப்பொழுதும் தழுவ
இன்னிசையாய் விண்மீன் சிரிக்க
நிலாவது உலா வர
இராத்தூக்கம் மயக்கியதுவே

## உன்னை வஞ்சித்தல் தர்மமல்ல

பாவிகள் நாம் – இப்பாவ
ஞாலத்தில்
பாவிகளாய் உதித்திட்டோம்
கடலன்னையே உன்
செல்வத்தை நம்பியே
எம் வாழ்க்கையை
வளர்த்திட்டோம்...!

சீற்றம் கொண்ட தேனோ
நீ சீறிப் பாய்ந்ததேனோ
சிற்பத்தை செதுக்கிய சிற்பியே
சிற்பத்தை உடைக்கலாமா?
தாயே உன்னை வஞ்சித்து நாம்
வஞ்சக் கண் கொண்டு
சைகைச் சொல் உரைப்பதால்
சென்ற உயிர்கள் திரும்பித்தான்
வருவது திண்ணமோ...!

தாயே நீ ஊட்டி
வளர்த்த உன் பிள்ளைகளைப்
பாசத்தால் உன்னுடனேயே வைத்துக்
கோடான கோடி வருடங்களாய்
பாலூட்டி வளர்த்த தாயே

ஒரு சில நிமிடங்களில் உனது
போக்கைக்கண்டு – உன்னை
வஞ்சகம் கொண்டு
வஞ்சித்தல் தர்மமல்ல
அதற்காக உன்னிடம் மன்னிப்பு நான்
கேட்கிறேன்...!

## சின்னத்தம்பி

வீதியிலே நடந்து போகும்
சின்னத்தம்பி
என்றும் கவனம் வேண்டும்
சின்னத்தம்பி
வீதியினைக் கடக்கும் போது
சின்னத்தம்பி – என்றும்
இருபுறமும் பார்க்க வேண்டும்
சின்னத்தம்பி
மஞ்சள்கோட்டால் நடந்து சென்றால்
சின்னத்தம்பி – என்றும்
ஆபத்தில்லை மறந்திடாதே
சின்னத்தம்பி.

## நீர்ச்செல்வம்

காலையில் பனிச்சுடர் போலே
கதிரவன் ஒளிபட்டு
சோலையில் பளிங்கு போலே
இலைதனில் நீர்த்துளி கண்டேன்

உழவர்கள் எல்லாம் சேற்றிலே
வயலை உழுது மகிழ்ந்திட
வான்மழையே மண்ணிலே சிந்திட
தாமரை மலர் போல் விரிந்திட
பூமி கண்டேன்

விடியற்காலையில் முதல் எழுந்து
சுத்தமாக நீராடி எல்லாம் செய்திட
ஆண்டவன் தந்த அருட்கொடையே
அரும் பெரும் செல்வம் நீர் எனக் கண்டேன்

ம. நிவேனிகா
8B

# கவிதை

## ஓவியம்

உயிர் இல்லா சுவர் உயிர் பெறுவதும் ஓவியத்தால்
உயிர் இல்லா ஓவியம் உயிர் பெறுவதும் உன்னால்
கண்ணைக் கவர்வது வண்ணம்
அதைக் கருத்தாய் கலப்பது உன் எண்ணம்

கடலில் வருவது அலை
உன்னிடம் உள்ளது கலை

எம்மிடம் உள்ளது மனம்
அதை கவரச்செய்வது ஓர் கணம்

ஓவியம் என்னும் நான்கெழுத்தால்
வரைதல் எனும் நான்கெழுத்தால் செதுக்கி
ஓவியன் எனும் நான்கெழுத்துக்கு சொந்தக்காரனாகி
மக்கள் எனும் நான்கெழுத்தை அடிமையாக்கினாய்

**தே. கஜீபா**
8A

## வழிவழி செய்திடுவீர்

சிறுவர் சிறுவர் என்று
சிறுவர் எம்மை சீர்படுத்த
சிந்தனையாளர் பலர் கூறிய
சிந்தனைகள் சிதைத்ததால்
சிறுவர் நாம் படும்
சித்திரவதை பாரீர்

தரம் ஒன்றில்
மூன்றாம் தவணையில்
எழுத்துப்பழக வேண்டும்
என்பது சிந்தனையாளர்
சிந்தனை ஆனால்
தரம் ஒன்றில் எமக்கு
தரும் வேதனைகள் பல
பாடசாலைகள்
தரம் ஐந்து
புலமைப்பரீட்சையில்
தங்கள் பாடசாலைகள்
முதலிடம் பெறவேண்டும்
என்ற நோக்கு
எம்மை உளரீதியான
பாதிப்பை ஏற்படத்துகிறது
பாடசாலை இப்படி என்றால்
வீட்டில் பெற்றோர் - நிலை
என் சக தோழருடன்
விளையாட உரிமையில்லை
படி படி என்ற நாம அருச்சனை
காலை ரியூசன்
அதன் பின்பு பாடசாலை
மாலை ரியூசன்
இரவில் வீட்டில் கல்வி
மறுத்தால் முதுகில் குத்து
பக்கத்து வீட்டு என்
வகுப்புத்தோழனுடன்
என் பெற்றோர்
கல்வியில் போட்டி
அவன் குடும்பநிலை
என் குடும்ப நிலையிலும்
வசதி வாய்ப்பு கூட
ஆனால் எனக்கு...

இந் நிலைதான்
சிறுவன் என் நிலை
பெற்றோரே கற்றோரே
சிறுவர் எம்மை
எம் உலகத்தில்
வாழ வழி செய்திடுவீர்.

அ. ரஜீபா

# கவிதை

பூக்களிடம் கற்றுக் கொள்
புன்னகை புரிவாய்
மரங்களிடம் கற்றுக் கொள்
வள்ளலாய் உயர்வாய்

பறவையிடம் கற்றுக்கொள்
உறவை இணைப்பாய்
விலங்கிடம் கற்றுக் கொள்
வீரமாய் நடப்பாய்

நதியிடம் கற்றுக் கொள்
நன்மைகள் செய்வாய்
மலையிடம் கற்றுக் கொள்
மாண்புடன் இருப்பாய்

விண்ணிடம் கற்றுக் கொள்
விஞ்ஞானி ஆவாய்
மண்ணிடம் கற்றுக் கொள்
வாழ்வியலில் தெளிவாய்.

வி. பாறுஜனா
7B

# தாய்

கண்கண்ட தெய்வம்
யாரெனக்கேட்டால்
என்னை கருவினில் சுமந்திட்ட
தாயெனச் சொல்வேன்

துன்பமே கொண்டு தாம்
துவண்டிடும் போது எம்மைத்
தேற்றியே ஆற்றிடும்
தாய் மடி என் பேன்
பசிக்கும் நிலை கண்டு

தவிக்கும் முகம் பார்த்து
பழந்தரும் சோலையும் தாய்
இடிக்கும் பிடி சோற்றை
தமக்கென எண்ணாது
கொடுக்கின்ற கோயிலுந் தாய்

நாளெல்லாம் பட்டினி தான் கிடந்தாலும்
ஒரு நாளிகை தம் பசி பொறுக்காத தாய்
மேலெல்லாம் பாடுபட்டு தனை வருந்தி
மேன்மை பெறச் செய்பவள் தாய்

கு. சஜீபன்
7B

# சிந்தனைக்கு

நண்பர்களிடம் மட்டுமன்றி
பகைவர்களிடமும் நேசம் கொள்
நடக்கும் வழியில் முள்ளைப்
போடுபவன் முன் நீ பூவை வை

உலகத்தாருக்கு நீ அளிப்பது உன்
நன்னடத்தை உலகத்தாரிடம் இருந்து
நீ பெறுவது புகழ் இந்த உண்மையை
நீ எப்போது உணருகிறாயோ
அப்போது தான் நீ வாழ
ஆரம்பிக்கின்றாய்

சில நேரங்களில் இன்பத்தை விட
துன்பம் மனிதனுக்கு சிறந்த
ஆசானாக அமைகிறது
தியாகம் தான் வாழ்க்கை அது தான்
இயற்கை கற்றுத்தரும் பாடம்
அன்பு குறைந்த இடத்தில் தான்
குற்றங்கள் பெரிதாக தோன்றும்

**கி. டனுலக்ஸன்**
6B

பாடல்


# கொழும்பு

கொழும்பு நகரம் பெரிய நகரம்
கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம்
மக்கள் பலரும் விரும்பும் நகரம்

காலி முகக் கடற்கரையும்
கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று பார்த்திடவே
துலங்கும் பெரிய துறைமுகம்
விரிந்த பரந்த வீதிகளுக்கும் எழில்
விளங்கும் கோயில் பள்ளிகளும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம்
நிகரில்லாத பெரிய நகரம்
நிகரில்லாத பெரிய நகரம்

இந்து சமுத்திர ஓரத்திலே மிக
இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே
வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்

**ர. நிருபனா**
4B



# குடியைக் கெடுக்கும் குடி

நமது நாட்டில் கொலை, களவு, கொள்ளை என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் அறியக்கூடிய தாக உள்ளது. இதற்கு காரணம் மதுவே. போதையூட்டி மதியினை மயக்கி மக்களை மாக்களாக்கும் எபபொருளும் மதுவின் பாற்படும். கள் சாராயம் கஞ்சா அபின் போன்றன மதுவகைகள்.

மதுவானது கொடிதிலும் கொடியது இவ்வுண்மையை நன்குணர்ந்த மக்கள் மதுவினை அருந்துகிறார்களே ஏன்? இதற்கு கூறப்படும் காரணங்கள் விசித்திர மானவை. துன்பம் அதிககவலை மனம் சாந்தி அடைவதற்கு ஒரு வகை இன்பம் அனுபவிக்க என குடிக்கின்றனர். முயற்சி யின் பின் ஏற்படும் களைப்பையும சோர் வையையும் போக்கும் சமய சஞ்சீவி மருந்தென சிலர் அருந்துகின்றனர். மேலைத்தேச நாகரிகத்தில் மூழ்கிய சிலர் மதுவருந்துவதனை உயர்வென கருதி அருந்துகின்றனர். இவர்கள் நாளடைவில் பழக்கம் காரணமாக மதுவுக்கும் அடிமை யாகின்றனர்.

"அரிது அரிது மானிடராய்பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். அத்தனை சிறப்புடையது இது என உணரும் பகுத்தறிவு கொண்ட மனிதப்பிறவியை மயக்கி மிருக நிலைக்குத் தள்ளும் மது பழக்கத்தை ஒதுக்கி விட வேண்டும். பொய், களவு, கள், காமம் என்பன பஞ்சமாபாதங்கள் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

கைப்பொருளனைத்தும் மதுவிலே கரைந்த பின்னர் மதுவுக்கும் தனக்கும் குடும்பத்துக்குமாக பொருளீட்ட குறுக்கு வழிகளில் ஈடுபடுகின்றனர்.

மதுவிலக்கப்படுமாயின் தனிமனிதன் நோயற்ற சிறப்பான வாழ்வு வாழ்வான். குடும்பம் அமைதியும் பொருள் வளமும் பெற்று சீர் பெறும் அதனால் வளமுறும்.

**க. அபர்ணா**
6B

# மலரே

**மலரே–உன் விழிகளில் நீர்த்திவலைகள்**
**என்றுமே இல்லாதவாறு நீடித்த மௌனம்**
**நேற்று வரை, சித்திரப்பூச்சோலையுடன்**
**சிரித்து மகிழும் நீ**

**வாழும்போதெல்லாம் பூச்சொரிவாய் –உன்**
**வாலிப நாட்களின் வசந்தமே**
**திசையெல்லாம் சிலிர்க்க வைக்கும்**
**உன் நறுமணமே...**
**நறுமணத்திலே – என்**
**மனமே ஏதோ செய்கிறது.**

**உனக்கு வண்டுகளே வரதட்சனை**
**வேண்டாமெனக் கூறக்கூடாதா?**
**ஒருதடவை கூறிப்பார் மலர்களும்**
**மணம் வீசும் மணம் வரவும் ஒளிவீசும்**

**ம. தனுஜா**
6B

கவிதை

# பச்சைக் கிளி

அசைந்தாடும் கிளை தனிலே
ஆடும் அந்த மாங்காயில்
ஆளே தெரியாது தானும் ஆடுதடா
வளைத்திட்ட சொண்டாலே
வாரி வாரித் தின்று தின்று
அங்குமிங்கும் பார்க்குதடா
அழகிய பச்சைக்கிளி

**த. தேவதனுசியா**
$4^{B}$


# கல்லூரி

வசந்தங்கள் மலரும்
பூஞ்சோலை
கவலைகள் கலையும்
கனவுகள் வளரும்
புனித வளாகம்
கல்லூரி

ஆட்டங்கள் பாட்டங்கள் என
அன்புச் சண்டையிடும்
அழகிய தோட்டம்
கூட்டம் கும்மாளம் என
கூடிக் குலாவித் திரியும்
பசுமை நிறைந்த
பாசச் சோலை
கல்லூரிக்
கல்வியோடு

அறிவானந்தம் சிற்ப நுட்பம்
எனக் கலை பல தரும்
கற்பக தரு - கல்லூரி
நண்பனுக்கு தோள் கொடுத்தோம்
ஆசானுக்கு அன்பளித்தோம்
அன்பினால் அடிமையானோம்
இது போன்ற இனிமை வாழ்க்கை
கல்லூரியே

**ர. மிதுனா**
$3^{B}$



கவிதை

# அன்புத் தாய்

ஈரைந்து மாதங்கள் - சுமந்து
ஈன்று எம்மை வளர்த்தவள்
உதிரத்தை உரமாக்கி
பாசத்தை ஊட்டியவள்
சுமையென்று எண்ணாமல்
சுகம் என்று நினைத்தவள்
ஊண் உறக்கம் மறந்து எம்மை
உயிரைப் போல காப்பவள்
பேணி வளர்த்திட்ட எம்மில்
பேரின்பம் அடைபவள்

**சு. விதுர்சன்**
4C

கவிதை

# பண்பு

படித்தால் மட்டும் போதுமா பண்புகள் வேண்டாமா
கல்வி என்பதால் ஒரு மனிதனாகலாம்
உன்னுள் மனிதம் உள்ளதா உன் மனதைக் கேட்டுப்பார்
உண்மைகள் இல்லை போலியில் கவர்ச்சி
சுயநல நாட்டம் இருந்தென்னலாபம்

நாடோடியிலிருந்து நல்ல படி முன்னேறி
சீராக வாழ என்று சாதனைகள் பல செய்தாய்
பார் சூழ வேண்டும் என்று போராடி தலை சாய்ந்து
நீரோடும் தன்னோடும் நித்தமும் அலைகிறாய்

பொய் பேசி நாளெல்லாம் பொழுதினைப்போக்கிடுவார்
செய்தொழில் நாட்டமின்றி அலட்சியமாய் இருப்பார்
பக்தியிற் சிறந்தவர் போல் பாசாங்கு செய்திடுவார்

அதிகாரம் செய்வ தென்றால் அதிகளவு கொண்டிருப்பார்
உபகாரம் செய்வதென்றால் உருமாறி ஓடிடுவர்
சதிகார வேலை என்றால் சந்தோசமாய் இருப்பர்
உபதேசி இவராலே பயனேது பாரினிலே

**சி. டனுசியா**
7B

# கல்லூரி அன்னைக்கு

ஈழத்தின் தலையாக விளங்கும்.
யாழ் நகரின், சண்டிலிப்பாயில் அமர்ந்து
நாடு மட்டுமல்ல உலகெங்கிலும்
மணம் பரப்பி: நிற்கும்-எம்
அன்னைக்கு பல கோடி வந்தனங்கள்.

அரும்பாகி மொட்டாகிப் பின்னர்
பூவாகிக் கனிந்து -இன்று
எண்பதாவது அகவையில்
காலடி எடுத்து வைக்கும்
அன்னைக்கு வணக்கங்கள் பல முறை


அடிப்படை அறிவு தந்து
ஆற்றல் பல பெற வழி வகுத்து
சமூகப் பற்றினை ஏற்படச் செய்து
நீதியுணர்வுள்ளவனாக்கி - நற்
பிரஜையாக எமை சமைத்த
அன்னையே நீ வாழ்க

பள்ளி எனும் பூஞ்சோலையில்
துள்ளிக்குதித்தெழும் - நம்
பூமித்தாயே உன்
அழகிற்கோர் ஆராதனை
செய்கின்றேன்.

**கி. யுலக்சினி**
$11^B$

ஒன்றும் செய்யாமல் காத்திருப்பவர்களுக்கும் சில நன்மைகள் கிடைக்கலாம். ஆனால் அவையெல்லாம் துடிப்புடன் செயலாற்று பவர்களுக்குக் கிடைத்ததுபோக எஞ்சியிருப்பவையே.

**- ஆப்ரஹாம் லிங்கன்**



# தோழியின் பிரிவு


(கவிதை)

பிரியமான தோழி
மூன்றெழுத்தைப் புரிய வேண்டும்
பிரியாத வரம் ஒன்றை
வாங்கிட வேண்டும்
என்றுரைத்தாயே
இன்று
பிரிந்து விட்டாய்
நீ எங்கே
தினம் தினம்
உன் நினைவால்
புலம்புகின்றேன்
நீ என்னருகில் இருந்த நாட்களின்
நட்பை
பகிர்ந்திட முடியவில்லை
இப்பொழுது
புரிகின்றேன் உன் அன்பை
மறுபடியும் உன் நட்பை
நாடுகிறேன்
தினம் தினம்
உன்னைத் தேடுகிறேன்.
இப்போது காணும்
பள்ளித் தோழர்களில்
நீயும் தெரிகின்றாய்
ஆனால்
அது நீயில்லை
என் மனப்பிரமை
ஊன்மாய் உலாவுகின்றேன்.
உன்னைத் தினம் தினம் எண்ணியே.
உன்னை நான் காண்பது எப்போது?
எப்போதும்

**ஜெ. லோஜினி**
*2011— வர்த்தகப்பிரிவு*

# பூகோளம் வெப்பமடைவதால் நாம் சந்திக்க வேண்டிய சவால்கள்

**(புலோலி, புற்றாளை மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் (UK) கிளை, தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் முதற்பரிசான ரூபா 10,000ஐ பெற்ற கட்டுரை. இப்பரிசினை யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவி துஷாந்தி நவரத்தினராசா பெற்றுக்கொண்டார்.)**



பூமியில் மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிர்களினதும் இருப்பினைத் தீர்மானித்த முக்கியமான காரணிகளில் ஒன்றான காலநிலை மாற்றமடைந்து செல்வது அண்மைக்காலத்தில் உலக நாடுகளை விழிப்படைய வைத்துள்ளது. ஏனெனின் இதனுடைய விளைவுகள் மிகக் கடுமையாக இருக்கும் என எதிர்வு கூறப்படுவதனால் உலகின் பெரும்பாலான நாடுகள் அக்கறை காட்டிவருகின்றன. தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கு அடுத்து உலக நாடுகள் எல்லாம் அக்கறை காட்டி வருகின்றன. ஓரணியில் நின்று எதிர்க்கும் விடயமாக புவி வெப்பமடைதல் அமைந்துள்ளது எனலாம்.

மனிதனின் தோற்றம், நிறம், உடலமைப்பு, மொழி, பண்பாடு, உணவு, உடை அவனது பொருளாதார நடவடிக்கைகள், சமூக அரசியல் நடவடிக்கைகள் என ஒவ்வொன்றிலும் வானிலை மூலக்கூறுகளான மழை வீழ்ச்சி (Rain Fall), வெப்பநிலை (Temparature), வளிமண்டல அமுக்கம் (Atmospheric pressure), ஈரப்பதன் (Humidity), காற்று (wind), சூரியக் கதிர் வீசல் (Solar Radiation), ஆவியாக்கம் (Evaboration), ஆவியுயிர்ப்பு (Transpiration), போன்றன. மனிதனின் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. வானிலையின் நீண்ட காலத்தொகுப்பே காலநிலை (Climate) ஆகும்.

இவ்வாறு வளிமண்டல செறிவின் மாற்றம் உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பிற்கும் காலநிலை மாற்றத்திற்கும் காரணமாயமைந்தது.

கடும் குளிரிலிருந்து தாவரங்களைப் பாதுகாப்பதற்குக் கண்ணாடி போர்வையினால் அவற்றினைப் பாதுகாப்பது மேற்குலக நாடுகளில் பொதுவான ஒரு நடைமுறையாகும்.

இது பார்ப்பதற்கு ஒரு பச்சை வீட்டைப் போன்று காட்சியளிக்கும் தாவரங்களைப் பாதுகாக்கும் கண்ணாடிப் போர்வை

யினைச் சூரிய வெளிச்சம் தாக்கும் போது பெரும் பகுதி அதனூடாக ஊடுருவித் தாவரங்களையும் மண்ணையும் வெப்ப மாக்குகிறது. இவ் வெப்பம் தாவரங்களி னாலும் மண்ணினாலும் மீளவும் திருப்பி வீசப்படுகிறது. பல்வேறுபட்ட வாயுக்களின் பொறிமுறை ரீதியான தொகுப்பினால் உருவாக்கப்பட்டு காணப்படுவதே வளி மண்டலம் (Atmosphere) எனப்படும்.

பூகோள வெப்பமயமாதலுக்கு பங்க ளிப்புச் செய்கின்ற காரணிகளைப் பிர தானமாக பௌதீக, சமூக, பொருளாதார அரசியல் காரணிகள் என பல்வேறு காரணிகள் தூண்டுகின்றன எனலாம். ஆனால் அவற்றை பௌதீக காரணிகள், மானிடக்காரணிகள் என்ற போர்வையில் நோக்கலாம். அந்த வகையில் பௌதீக காரணிகளாக எரிமலைச் செயற்பாடு, ஞாயிற்று மாறிலி, ஞாயிற்றுப்புள்ளி, எல்நினோ (El-Nino), லாநினோ (La-Nino) செயற்பாடுகளையும் மானிடக் காரணிகளாக கைத்தொழில்புரட்சி, பசுமைப்புரட்சி உயிர்ச்சுவட்டு எரி பொருட்களின் பாவனைகள், சீமெந்து உற்பத்தி, காடழிப்பு, மந்தை வளர்ப்பு போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம்.

பூகோள வெப்பமயமாதலுக்கு பங்க ளிப்புச் செய்கின்ற பிரதான பௌதீக காரணியாக எரிமலைத் தொழிற்பாடு விளங்குகின்றது. ஆந்த வகையிலே எரிமலை வெடிப்பின் போது நைதரசன், காபனீரொட்சைட், கந்தகவீரொட்சைட் என்பன வெளியேற்றப்படுகின்றன. எரி மலை வெடிப்பின் போது வெளிவிடப்படும் மேற்படி பச்சை வீட்டு வாயுக்கள் வளி மண்டல வாயுக்களின் கூட்டில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இது காலநிலை மாற்றத்தைத் தூண்டுகிறது. உதாரண மாக 1912 ஆம் ஆண்டு நொவருப்டா (Novarupta) எரிமலை வெடித்த போதும் 1991இல் மௌன்ற் பினருபா (Mount pinatuba) எரிமலை வெடிப்பின் போதும் 2010ஆம் ஆண்டு ஐஸ்லாந்தின் எயஃப்யாலாயோகுல் (Eyjafuallajokull) எனும் பனிப்பாறைக்கு கீழாக அமைந் துள்ள கெட்லா எரிமலை வெடிப்பின் போதும் வானிலை நிலைமைகள் மாற்ற மடைந்து, அதாவது 6 மணித்தியாலங்கள் வரை வெப்பநிலை மிக உயர்வாக காணப்படுவதுடன் பின்னர் 13 நாட்கள் தொடர்ச்சியான கன மழை கிடைத்தது.

இவற்றோடு ஞாயிற்று மாறிலி என்பதும் பூகோள வெப்ப மயமாதலுக்கு ஏதுவான ஒன்றாகவே காணப்படு கின்றது. அந்த வகையிலே சூரியக்கதிர் வீசலினுடைய அளவுகள் மத்திய கோட்டு பிரதேசங்களில் செங்குத்தாகவும் செறி வாகவும் கிடைக்கும் அதேவேளை முனைவு நோக்கிச் செல்லச் செல்ல சிதறல், தெறித்தல், உறிஞ்சல், பரவல் போன்ற செயன்முறைகளுக்கு உட்படுகிறது. இத னால் இப்பகுதியில் ஒப்பீட்டளவில் வெப்பநிலையானது குறை வாகவே காணப்படுகிறது. ஆனால், மத்திய கோட்டு பிரதேசங்களிலே அகலக் கோட்டின் செல்வாக்கால் வெப்பம் உயர்வாகக் காணப்பட்டு பூகோள வெப்பமயமாத லுக்கு காரணமாகிறது. உதாரணமாக மத்திய கோட்டு பிரதேசங்களில் Limbus என்ற செய்மதி மூலம் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் அப்பிரதேச வெப்ப நிலை $1392^{0}$Cஆகக் காணப்படும் அதே வேளை அதன் வெப்பநிலை மேலும் 1.6% அதிகரித்து உள்ளது.

சூரியப் புள்ளியினது செல்வாக்கும் பூகோள வெப்பமயமாதலுக்கு செல்வாக்குச் செலுத்துகிறது. இங்கு Sun Sport என்பது சூரியனது புற வெப்பநிலை திடீரென அதிகரித்தலையே குறித்து நிற்கின்றது. இதனால் பூமியினுள் வருகின்ற கதிர்வீசலின் அளவுகள் மேலும் அதிகரித்திருக்கின்றது.

அத்துடன் எல்நினோ, லாநினோ செயற்பாட்டையும் குறிப்பிடலாம். எல்நினோ என்பது சமுத்திர பகுதிகளிலும் கண்டப்பகுதிகளிலும் ஏற்படுகின்ற வழமைக்கு மாறான வெப்பநிலை அதிகரிப்பையும் லாநினோ என்பது கண்டப்பகுதிகளிலும் சமுத்திரப் பகுதிகளிலும் ஏற்படுகின்ற வழமைக்கு மாறான குளிரையும் குறிக்கும் இத்தகைய சடுதியான வெப்ப, குளிர் மாற்றங்கள் பூகோள வெப்பமயமாதலைத் துண்டுகின்றன.

பூகோள வெப்பமானது உயர்வடைவதற்கு பங்களிப்புச் செய்கின்றன. ஓர் பிரதான மானிடக் காரணியாக கைத்தொழில் புரட்சியினைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இக் கைத்தொழில் புரட்சிக் காலகட்டப் பரப்பின் பின்னரே பச்சை வீட்டு வாயுக்களின் சதவீதம் அதிகரித்து வந்துள்ளது. 1750ஆம் ஆண்டு முதல் தொழில் புரட்சியின் தாக்கம் அத்கரித்ததைக் கருத்தில் கொண்டு பார்த்தால் காபனீரொட்சைட், மெதேன், குளோரோ புளோரோ காபன் போன்றன அதிகரிப்பதற்கு மோட்டார் வாகனக் கைத்தொழில், கப்பல் கட்டுமானக் கைத்தொழில், இரும்புருக்கு கைத்தொழில் என்பனவே செல்வாக்குச் செலுத்துகின்றன.

பசுமைப் புரட்சியானது குறித்த ஓர் நிலப்பரப்பில் அபரிமிதமான உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்காக மண்ணினுள் இடப்படுகின்ற நைதரசன் வளமாக்கிகள், கிருமிநாசினிகள், களைநாசினிகளைப் பயன்படுத்தும் போதும் அவற்றிலிருந்து வெளியேறுகின்ற நச்சு வாயுக்கள் மேற்பரப்புகளில் நிலைத்திருக்க முடியாத தன்மை தோற்றம் பெறும் வேளையில் வளிமண்டல பரப்பை நோக்கி நகர்ந்து பூகோள வெப்பமயமாதலுக்குப் பங்களிப்புச் செய்கின்றது.

நவநாகரிக காலகட்ட பரப்பில் மக்களது தேவைகள் அதிகரித்துள்ள காரணத்தால் அதற்குப் பயன்படுத்துகின்ற பல்வேறு உயிர்ச் சுவட்டு எரிபொருட்கள் வெப்பமயமாதலுக்கு வழிவகுக்கின்றது. அவற்றில் குறிப்பாக அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளால் அவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்ற பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், இயற்கைவாயு, நிலக்கரி, சுப்ப பெற்றோல் போன்றனவற்றின் பாவனையாலும் சில கைத்தொழில் செயற்பாட்டிற்கு பயன்படுத்துகின்ற வலுசக்தி பாவனைகளாலும் வாயுக்களினது அளவுகள் அதிகரித்து வெப்பமயமாதலுக்கு வழிவகுக்கின்றது.

அது மட்டுமல்லாமல் அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் கட்டிட நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி சார் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக சீமெந்து உற்பத்திகளில் ஈடுபடுகின்றபோதும் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்ற சனத்தொகைக்கு ஏற்ப குடியிருப்புக்களை

நிர்மாணித்தல், பயிர்ச் செய்கை நட வடிக்கைகள், போக்குவரத்து நெடுஞ் சாலைகள் நிர்மானித்தல் போன்ற பல்வேறுபட்ட செயற்றிட்டங்களுக்காக மேற்பரப்பிலுள்ள பெரிய பசும் போர் வைகள் அழிக்கப்பட்டு வருவதனால் காபனீரொட்சைட் வாயு நேரடியாக வளிமண்டல பரப்பை நோக்கி நகர்ந்து வெப்பநிலையை அதிகரிக்கின்றது. தாவரங்கள் புவியின் வெப்ப நிலையைச் சமநிலையைப் பேணுவதில் பங்களிப்புச் செய்கின்றது. 1950ஆம் ஆண்டு உலக நாடுகளில் 39%மானவையும், அயன மண்டலக் காடுகளில் 60%மானவையும் அழிந்துள்ளதாக UNEPதெரிவித்துள்ளது. உலகின் நுரையீரல் என வர்ணிக்கப்படும் அமேசன் காடுகள் 2000 ஆண்டிலிருந்து 2008ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட 8ஆண்டுகளில் 4%அழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய காடழிப்புச் செயற்பாடுகள் புவியின் பசுமைப் போர்வை (Green Cover)இனைக் குறைப்பதுடன் புவி வெப்பமடைதல் செயற்பாட்டிற்கும் அடிப்படையாக உள்ளது.

புவி மேற்பரப்பில் பாற்பண்ணை தொடர்பான கைத்தொழில் நடவடிக்கை கள் விஸ்தரிக்கப்பட்டு செல்வதால் அக்கால்நடைத் தொழுவங்களிலிருந்து அதிகளவிலான மெதேன் வாயு வெளி யேற்றப்பட்டு அதன் பிரகாரம் பச்சை வீட்டு வாயுக்களில் மெதேனின் செறிவுத் தன்மை அதிகரிக்கிறது. உதாரணமாக இலங்கையில் 2008ஆம் ஆண்டினை பாலாண்டாக பிரகடனம் செய்து அநுராத புரம், பொலனறுவை உள்ளிட்ட மாவட் டங்களுக்கு சராசரியாக 40000 நல்லினக் கால்நடைகள் வழங்கப்பட்டது. டென்மார்க், சுவிற்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட பகுதிகளில் நல்லினக் கால்நடைகள் (ஜேசி, குவென்சி, அயஸ், பிரேயஸ்) என்பவற்றை இனப் பெருக்கம் செய்து அதிகளவிலான பாற் பண்ணை கைத்தொழில் ரீதியான உற்பத்தி யினை அதிகரித்து வருகின்றன. இவற்றை விட அணுகுண்டுப் பரிசோதனைகள், விண்வெளி விபத்துக்கள் பூகோள வெப்பமயமாதலை மறைமுகமாக ஊக்கு விக்கின்றன எனலாம்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படு கின்ற மிக முக்கியமான பாதிப்பாக வெப்பநிலை உயர்வடைதலைக் கருத லாம். 1950 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 2008 ஆம் ஆண்டு உலகின் வெப்பநிலை 2.1°c இனால் அதிகரித்துள்ளதாக ஐ.பி.சி.சி.குறிப்பிடுகின்றது. 1975 உடன் ஒப்பிடும் போது 1.6°c அதிகரித்துள்ளது. ஆசியாவின் வெப்பநிலை 2040 ஆம் ஆண்டு 3.4°c இனாலும் 2100ஆம் ஆண்டு 5.3°c இனாலும் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.1950 உடன் ஒப்பிடும் போது 2.1°c இனால் அதி கரித்ததென்பது சாதாரண விடயமல்ல. ஏனெனின் புவியின் வரலாற்றில் அதன் வெப்பநிலை 1°C இனாலும் அதிகரிக்க கிட்டத்தட்ட 1000 வருடங்கள் எடுத்துள்ளது. ஆனால் தற்போது 58 ஆண்டுகளில் 2.1°C இனால் அதிகரித்துள்ளது. இவ்வாறு வெப்பநிலை அதிகரித்துக் கொண்டு சென்றால் மனிதனின் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பொருத்தமான காலநிலை (Comfort Climate) என்பது மாறிவிடும். மனி தனுக்கு இது பல அசௌகரியங்களை வழங்கும் மனிதன் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்படும். விவசாய நடவடிக்கைகளும் கடற்றொழில், விலங்கு வளர்ப்பு என்பனவும் பாதிக்கப்படும்.

காலநிலை மாற்றத்தினால் கடல் மட்ட உயர்வு ஏற்படும். அதிகரிக்கும் வெப்ப நிலையினாலும் துருவ பனிக்கட்டி உருகுவதனாலும் பனிச்சிகரங்கள் உருகு வதனாலும் சில குளிர்ந்த சமுத்திரங்கள் வெப்பமடைந்து நீர் விரிவடைவதனா லும் கடல் மட்ட உயர்வு ஏற்படும் உலகின் பலகோடி மக்கள் இதனால் பாதிக்கப்படு கின்றார்கள். உலகின் பத்துகோடி மக்க ளுக்கு மேற்பட்டவர்கள் இதனால் பாதிக் கப்படுவார்கள். அதாவது கடல் மட்டம் ஒரு அடி உயர்ந்தால் உலகின் 03 கோடி மக்களும், கடல் மட்டம் இரண்டடி உயர்ந் தால் 07 கோடி மக்களும் கடல் மட்டம் மூன்றடி உயர்ந்தால் 10 கோடி மக்களும் பாதிக்கப்படுவார்கள். இதனைவிட பல தீவுகள் நீரினுள் மூழ்கிவிடும் ஏனெனின் பல்வேறு உலகின் பல தீவுகள் கடல் மட்டத்திற்கு மிகக்குறைவான உயரத்தி லேயே அமைந்துள்ளன. உதாரணமாக மாலைதீவு 08 அடி உயரத்திலும் துவாளு தீவு 16அடி உயரத்திலும் அமைந்துள்ளன. எனவே கடல் மட்ட உயர்வு உலகின் கடற்கரைப் பிரதேசங்கள் பலவற்றை விழுங்குவதுடன் பல தீவுகளையும் மூழ்கச்செய்துவிடும். பலகோடி மக்கள் இடம்பெயரவோ இறக்கவோ நேரிடும் 1900ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உலகின் கடல்நீர் மட்டம் 0.9அடியால் உயர்ந்துள்ளது.

வெப்பநிலை காரணமாக பனிக்கட்டி பகுதிகள் உருகும். சில பிரதேசங்களில் தற்போது உருகி வருகின்றன. உலக வெப்பநிலை அதிகரிப்பிற்கு மிகச் சிறந்த சான்றாக 2002 ஆம் ஆண்டிலிருந்து லார்சன் (Larson) பனியடுக்கு உருகுவதை யும் 1978 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆட்டிக் பனிப்படலங்களில் 9%மானவை உருகிவிட்டதாக கூறப்படு கின்றது. இதனை விட அமெரிக்காவின் கிளிமஞ்சாரோ மலை இன்னும் 15 ஆண்டுகளில் அழிந்துவிடும் எனவும் இமயமலையின் எவரெஸ்ட் சிகரம் இன்னும் 25 ஆண்டுகளில் 2.54அடி குறையும் எனவும் எதிர்வு கூறப்பட் டுள்ளது. இவ்வாறு பனிப்பகுதிகள் உருகினால் உலகின் கடல் மட்ட உயர்வு இன்னும் அதிகரிக்கும்.

அதிகரித்து வருகின்ற வெப்பநிலை காரணமாகப் பல பகுதிகள் வரட்சியால் பாதிக்கப்படக் கூடும். உலகின் பல பகுதிகளின் வரட்சி காரணமாக குடிநீர் பிரச்சினை ஏற்படும். ஐ.பி.சி.சி இன் அறிக்கையின் படி 2050 ஆம் ஆண்டு உலகின் பாலைவனங்கள் 07% இனால் அதிகரிக்குமென கூறப்படுகின்றது அமெ ரிக்காவின் சாகேல் பிரதேசத்தில் பாலை பரவுதல் (Disertification) இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். அதிகரித்து வரும் மண் வெப்பநிலையும் வளி வெப்பநிலையும் பல பகுதிகளின் தாவரப் போர்வையை நீக்கி பாலை பரவுதலை ஊக்குவிக்கும். இதனை விட அதிகரிக்கும் பனிப்பகுதிகளின் உருகுதல் செயற்பாட்டினால் ஆறுகள், குளங்கள், ஏரிகள் என்பவற்றினது நீர் மட்டம் அதிகரிப்பதுடன் கன மழைப் பொழிவு காரணமாகவும் வெள்ளப் பெருக்குகளும் ஏற்படலாம். 2005 ஆம் ஆண்டு July இந்தியாவின் மும்பைப் பகுதியில் ஏற் பட்ட வெள்ளப் பெருக்கால் சுமார் 100 இற்கு மேற்பட்ட மக்கள் பலியாயினர். 1936 இல் பங்களாதேசின் கூக்குளி நதி முகத்துவாரப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தால் மூன்றரை

இலட்சம் மக்கள் பலியாகினர். என்பவற்றை உதாரணமாக குறிப்பிடலாம்.

சமுத்திரங்களில் வெப்பநிலை மாற்றத்தினாலும் பவளப் பாறைகள் பாதிக்கப்படும். வெளிறல் நோய் ஏற்பட்டு இவை அழிவடையலாம் கடல் நீரின் வெப்பநிலை 3°C அதிகரித்தால் ஆசியாவில் 88% மான பவளப் பாறைகள் அழிவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பூகோள வெப்பநிலை காரணமாக வானிலை நிலைமைகள் மாற்றமடையலாம். வானிலை நிலைமைகள் அடிக்கடி மாற்றமடையலாம். பருவ காலங்களில் வேறுபாடுகள் ஏற்படலாம். பருவ காலங்களின் கால அளவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். மாரிப்பருவங்கள் வரட்சியானதாகவும் கோடைப் பருவங்களில் கன மழையும் இடம்பெறலாம். இதனால் பருவ காலங்களை வரையறை செய்வது கடினமாக மாறிவிடும். வானிலை மூலக் கூறுகளின் தன்மைகள் அடிக்கடி மாற்றமடைதல் இதனை விட காட்டுத்தீ, புயல், சூறாவளி என்பனவும் ஏற்படும். இவ்வாறு பௌதீக சவால்களை குறிப்பிடலாம்.

காலநிலை மாற்றத்தின் விளைவாகப் பொருளாதாரப் பாதிப்புகளும் ஏற்படும். அந்த வகையில் பொருளாதாரப் பாதிப்புகளைக் குறிப்பிடலாம். வானிலை நிலைமைகள் அடிக்கடி மாற்றமடைவதனாலும் எதிர்பாராத காலநிலை அனர்த்தங்களாலும் (வெள்ளம், வரட்சி, புயல், சூறாவளி) என்பனவற்றாலும் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். சில பயிர்கள் உத்தம வெப்பநிலை, உத்தம மழைவீழ்ச்சி என்பனவற்றிலேயே வளரும் தன்மை கொண்டுள்ளன. இப் பயிர்களை காலநிலை மாற்றத்தின் விளைவினால் பயிரமுடியாது போகும். இதனால் விவசாய உணவுப் பொருட்கள் குறிப்பாக உணவுத் தானியங்கள், பழங்கள், மரக்கறிகள் என்பவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்படலாம்.

சமுத்திர நீரின் வெப்பநிலை அதிகரிப்பினாலும் பவளப் பாறைகள் அழிவடைவதனாலும் சமுத்திரச்சூழல் மாற்றமடையலாம். இதனால் உணவு வலையிலும் உணவுச்சங்கிலியிலும் மாற்றங்கள் ஏற்படும். இதனால் சில கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும். எனவே கடல் உணவுகளைப் பெற முடியாது போகும்.

கால்நடைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் அழிவடைவதால் கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படும். இதனால் விலங்கு உணவுப் பொருட்களும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சில கைத்தொழில்கள் குறிப்பாக வெட்டுமரக் கைத்தொழில், சுரங்க மறுத்தல், அகழ்வு போன்ற கைத்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம். இவ்வாறு பூகோள வெப்பமடைவதால் சில பொருளாதார சவால்களும் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

பௌதீக, பொருளாதாரப் பாதிப்புக்கள் மட்டுமன்றி சமூகரீதியான பாதிப்புகளும் ஏற்படக்கூடும். அந்த வகையில் பூகோள வெப்பமடைவதால் மனிதனுக்கு உடல், உளம் சார்ந்த நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல் நோய்கள் என்ற வகையில் தோல் சார்ந்த நோய்கள், தோல் புற்றுநோய்கள், தேமல்,

சொறி, சிரங்கு, சரும உலர்ச்சி, தலைமயிர் சார்ந்த நோய்கள் என்பனவும் ஏற்படக் கூடும் என விஞ்ஞானிகள் குறிப்பிடப் பட்டுள்ளனர். இதனை விட அதீத கோபம், எரிச்சல் போன்ற உளநோய்களும் ஏற்படுமெனக் கூறப்படுகின்றது.

விவசாய, கடல் உணவு மற்றும் விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதனால் பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளது

உலகின் தானிய நெருக்கடி காரண மாக 2020 ஆம் ஆண்டு 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவர் என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது.

கடல் மட்ட உயர்வு மற்றும் பஞ்சம் காரணமாக பலகோடி மக்கள் இடம் பெயர நேரிடும். சூழல் அகதிகள் (Environmental Refguees)என்பது பெரும் பிரச்சினைக்குரிய விடயமாக மாறிவிடும். இடம்பெயர்வுகள் மற்றும் பஞ்சம் காரண மாக கலவரங்கள்இயுத்தங்கள் என்பன ஏற்படலாம்.


பூகோள வெப்பநிலை அதிகரித்து செல்வதனை கட்டுப்படுத்துவதற்காக உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளாக மகாநாடுகளை ஒன்றி ணைத்தல், இயற்கைவலு சக்தி பாவனை கள், மீள் காடாக்க செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்இமக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டல் போன்ற பல்வேறு விதமான நடவடிக்கைகளூடாக பூகோள வெப்பமயமாதலினை தடுத்து குறைத்து கொள்கின்றனர்.

எனவே உலகமே எதிர்கொண்டுள்ள ஒரு பேராபத்தைத் தடுக்கும் விடயத்தி லாவது உலக நாடுகளிடையே ஒற்றுமை ஏற்படுவது அவசியம். இல்லையெனில் அதனால் ஏற்படும் விளைவுகளை சகல நாடுகளுமே அனுபவிக்க வேண்டி யேற்படும்.

Hatred does not cease by hatred, but only by love; this is the eternal rule.

**- Buddha**

# அகத்திலிருந்து....



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராய்த் திகழ்ந்து ஓய்வுபெற்ற அமரர் சபாபதி கந்தசாமி அவர்களின் பெரும் பிரிவு எமது கல்லூரிச் சமூகத் திற்குப் பேரிழப்பாகும். கல்லூரியின் நிமிர்வில் ஒருவராய் உழைத்த அமரர் கந்தசாமி அவர்கள் மிடுக்கானவர். அவர் மகிழும் பேச்சுக்குச் சொந்தக்காரர். வயதால் ஓய்வுபெற்றாலும் செயலால் என்றும் இளையவராய் பவனி வந்தார். கல்லூரிக்கும் கிராமத்திற்கும் பலமாய் நின்றார். கல்லூரியின் அனைத்து விழாக்களையும் அலங்கரித்தார். உயர்வான மக்கட்செல்வம் கண்டு வாழ்வின் பயன் பெற்றார். நிறைவாய் வாழ்ந்து சமூகப்பணி செய்த அன்னாரின் நினைவுகளை அகத்திலிருத்தி அஞ்சலிக் கின்றோம்.

♣ ♣ ♣

## கல்வி

கசப்பான வேரையும்
இனிப்பான கனிகளையும் கொண்ட
அதிசய மரம்.

## ஆசான்

அன்புடன் பண்பையும்
அறிவுடன் பரிவையும் தரும்
அட்சய பாத்திரம்

## பள்ளிப்பருவம்

சின்னச்சண்டைகள்
செல்லக் கோபங்களுக்கிடையில்
சாதி மரம் பாராமல் பழகும்
மறுபடியும் பெறமுடியாத இனிய
அனுபவங்களைப் பெறும் காலம்.

ட. சிந்துஜா

# ஆசிரியர் விபரம் - 2010

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. கு.விமலன் | அதிபர் | MED, SLPS 2 - II |
| 2. | திரு. இ.ஆனந்தநடராசா | பிரதி அதிபர் | M.A. Dip in Edu, SLTS - 1 |
| 3. | திருமதி. ச.சிவானந்தன் | ஆசிரியர் | G.C.E (A/L) Social (Trained), SLTS - 1 |
| 4. | திருமதி. ந.நாகேஸ்வரன் | ஆசிரியர் | Science (Trained) SLTS 2 - I |
| 5. | திருமதி. ச.நாகராஜா | ஆசிரியர் | B.A. Dip. in Edu. SLTS 1 |
| 6. | திருமதி. சா.ஜெயராஜன் | ஆசிரியர் | B.A Li. skill (Trained) SLTS 2 - I |
| 7. | செல்வி. த.ரேவதி | ஆசிரியர் | B.A (Hons) Dip. in Edu. SLTS 2 - II |
| 8. | திருமதி மே.பு.அ.பொன்கலன் | ஆசிரியர் | Home science (Trained) SLTS 2 - I |
| 9. | திருமதி செ.சாந்தகுமார் | ஆசிரியர் | B.A (Hons) Dip. in Edu. SLTS 2 - II |
| 10. | திருமதி ச.பாலசுந்தரம் | ஆசிரியர் | Hinduism (Trained) SLTS 2 - II |
| 11. | திரு க.சிவசங்கர் | ஆசிரியர் | B.A. Dip. in Edu, Science (Trained) SLTS 2 - II |
| 12. | திருமதி. க.சபாரெத்தினம் | ஆசிரியர் | G.C.E (A/L), Dip. in Teaching, SLTS 2 - II |
| 13. | திரு க.ஸ்ரீநந்தகோபன் | ஆசிரியர் | B.A. Dip. in Edu, SLTS 2 - II |
| 14. | திரு த.அருளரசன் | ஆசிரியர் | H.N.D.A, Dip. in Edu, Special Trained (Hindusium), SLTS 2 - II |
| 15. | திருமதி தி.ஜெயபாலன் | ஆசிரியர் | B.A (Hons) Dip. in Edu. SLTS 2 - II |
| 16. | திருமதி அ.முகுந்தன் | ஆசிரியர் | Dip. in Teaching (Science), SLTS 2 - II |
| 17. | திருமதி ம.குணராஜா | ஆசிரியர் | B.A. Dip. in Edu, SLTS 1 |
| 18. | திருமதி க.குகதாசன் | ஆசிரியர் | B.Com. Dip. in Edu, MED, SLTS 2 - II |
| 19. | திரு க.றமணன் | ஆசிரியர் | Agri (Trained), SLTS 2 - II |
| 20. | திருமதி ய.ஸ்ரீகுமாரன் | ஆசிரியர் | Dip. in Music, SLTS 1 |
| 21. | திரு ந.ரவிவண்ணன் | ஆசிரியர் | G.C.E (A/L) Maths (Trained), SLTS 2 - II |
| 22. | திருமதி வி.செல்வகுமார் | ஆசிரியர் | B.Com. Dip. in Edu, SLTS 2 - II |
| 23. | திரு பொ.தயாளன் | ஆசிரியர் | B.F.A (Special), SLTS 3 - I |
| 24. | திரு ந.குகபரன் | ஆசிரியர் | B.A (Hons) Dip. in Edu.,SLTS 2 - II |
| 25. | செல்வி பா.யாமினி | ஆசிரியர் | G.C.E (A/L) English (Trained) SLTS 2 - II |
| 26. | செல்வி கு.விமலினி | ஆசிரியர் | B.B.A (Hons), SLTS 3 - I |
| 27. | திருமதி ம.விக்னராஜா | ஆசிரியர் | B.A. Dip. in Edu, MED, Trained (Dance), SLTS 2 - I |
| 28. | திரு ந.ஹரிகரன் | ஆசிரியர் | B.A. Dip. in Edu, Special Trained (English), SLTS 2 - II |
| 29. | திருமதி.ச.மகேஸ்வரன் | ஆசிரியர் | B.A. Dip. in Edu, SLTS 2 - II |
| 30. | திருமதி. ட.உதயகுமார் | ஆசிரியர் | Dip. in Teaching, SLTS 3 - I |
| 31. | திரு. செ.சுதாகரன் | ஆசிரியர் | B.Com., SLTS 3 - I |


| | | |
|---|---|---|
| 32. செல்வி. ரே.தெய்வேந்திரன் | ஆசிரியர் | Dip. in Teaching (English) SLTS 3 - I |
| 33. திரு. கு.தயாபரன் | ஆசிரியர் | G.C.E (A/L) Special Trained (Sci)Dip. in Spe.Edu, SLTS 2 - II |
| 34. திருமதி. ந.பிரதீபன் | ஆசிரியர் | G.C.E (A/L) Primary ( Trained ), SLTS 2 - II |
| 35. செல்வி. ந.துளபமணி | ஆசிரியர் | G.C.E (A/L) Maths ( Trained ), SLTS 2 - II |
| 36. திருமதி. சு.உதயகுமார் | ஆசிரியர் | Dip. in Teaching (Primary), B.A, SLTS 2 - II |
| 37. செல்வி. சி.வசந்தி | ஆசிரியர் | G.C.E (A/L), Dip. in Spe.Edu, SLTS 3 - I |
| 38. திரு. இ.கண்ணா | ஆசிரியர் | Dip. in Teaching (Phy&Health), SLTS 3 - I |
| 39. திருமதி. சு.அனுஜெயன் | ஆசிரியர் | B.Com. Dip. in Edu, SLTS 2 - II |
| 40. செல்வி. அ.லதாஜினி | ஆசிரியர் | G.C.E (A/L) |
| 41. செல்வி. சு.யசோதரா | ஆசிரியர் | G.C.E (A/L), H.N.D.E |
| 42. திரு. த. நித்தியானந்தன் | ஆசிரியர் | B.A, SLTS 3 - I |
| 43. செல்வி. செ.செல்வராணி | ஆசிரியர் | B.A, Primary ( Trained ), SLTS 2 - II |
| 44. திருமதி.அ.மகேந்திரன் | ஆசிரியர் | G.C.E. (A/L) Primary ( Trained ), SLTS 2 - II |
| 45. திருமதி.பு.சேகரர் | ஆசிரியர் | G.C.E (A/L) Primary ( Trained ), SLTS 2 - II |
| 46. திருமதி. மே.சேவியர் | ஆசிரியர் | G.C.E (A/L). B.ed. Dip. in Phsy. SLTS 2 - I |
| 47. திருமதி. ப.சுபஸ்ரீ | ஆசிரியர் | G.C.E (A/L) Primary ( Trained ), SLTS 2 - II |
| 48. திருமதி. க.மெய்யப்பன் | ஆசிரியர் | B.A. Dip. in Edu, SLTS 1 |
| 49. திருமதி.சு.ரமேஷ் | ஆசிரியர் | B.Sc, Dip.in Edu SLTS 2 - II |
| 50. திரு. ந.சத்தியரூபன் | ஆசிரியர் | B.A., Special in Political Science, SLTS 3 - I |
| 51. திருமதி. இ.விஜயரட்ணம் | ஆசிரியர் | Primary ( Trained ), SLTS 2 - II |
| 52. திருமதி. ம.செல்வராசா | ஆசிரியர் | B.A, SLTS 2 – II |

# கல்விசாரா ஊழியர்கள் விபரம்

01. திரு. சோ. தபேசன்
02. திரு. இ. சிவநாதன்
03. திரு. அ. மகேந்திரராஜா
04. திரு. சு. ஆறுமுகசாமி


Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability
HNBயின் சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத் திட்டம் "சிங்கிதி"
மேற்படி சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்
பதன் மூலம் உங்கள்
மழலைகளின் எதிர்காலத்தேவைகளிற்கு
அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான
பரிசில்களையும் வெல்லுங்கள்
PATHUM VIMANA
அடகு சேவை
இப்போது சனிக்கிழமைகளிலும்
காலதாமதமற்ற துரித சேவை
Personal
LOANS
A loan as personal asyour needs
மாதாந்த சம்பளம் பெறும்
அரச/அரச சார்பற்ற / தனியார்
ஊழியர்களிற்கு அவர்களின்
தேவைகளிற்கு முற்றிலும்
கணணி மயப்படுத்தப்பட்ட
இலகு கடன் வசதி
HNB
ஹற்றன் நஷனல் வங்கி
Your Partner in Progress

# ஆசைப்பிள்ளை அன் சன்
# நகை மாடம்





22கரட் தங்க நகைகள் ஓடருக்கு

உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

இல.10,பஸ்நிலையம் முன்பாக, சங்கானை. தொ.பே: 021 3212399





# அம்பாள் மர அரிவுகாலை
# அன் மரவியாபாரம்

**Ambal sawing Timber Work**

## தளபாடங்கள்-செய்துகொடுக்கப்படும்



பாரதி வீதி, சங்கானை. உரிமையாளர் – R.ஜெயக்காந்தன்

# மக்கள் மனமறிந்த வங்கி
# மக்கள் வங்கி
# சங்கானைக் கிளை

**மக்கள் வங்கியின் மக்கள் அபிமானம் வென்ற கணக்குகள் சில**

➤ பிறந்ததிலிருந்து 5 வயது வரையான குழந்தைகளுக்கு ஆரம்ப இலவச வைப்புத் தொகையாக ரூ.100 இனைச் செலுத்தி வங்கியே ஆரம்பித்து வைக்கும் **"இசுரு உதான"** கணக்கு




➤ எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் எமது பெறுமதிமிக்க வளங்களாகிய பாடசாலை மாணவர்களுக்கான **"சிசு உதான"** கணக்கு



➤ இளமைக் கனவுகளை நனவாக்கும் வகையில் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட **"yes"** கணக்கு





➤ வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தை இலகுவில் பெற **"Western Union Money Transfer"**




ஆசிரியர்களுக்கான குருசேதா, சுவசேவனா கடன் கணக்குகள் குழு அடிப்படையிலான கடன் கணக்குகள் உட்பட மேலும் பல கடன் வசதிகள்.

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**



Ramanas Sports
Dealers in Sports Goods
No.175,Hospital Road,Jaffna.
Tel:0213207320, 0777167887




ஸ்ரீ கரன் புக் சென்ரர்
தர உள்ளீட்டுப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
பயிற்சிப் புத்தகங்கள்
அலுவலக உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்
திருக்குறள் கதைகள்
Electronic Pocket Oxford ENGLISH Dictionary
பென்ரெக் , அக்றோன் பேனாவின் யாழ்மாவட்ட முகவர்
இல.72 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

# PC SYSTEMS
PCs
Total IT Solution Providers

International & Local Call Centre
Internet Browsing Center
Dialog,mobitel,Hutch,Etisalat,Airtel
Sim Sales&Reload
All Type of Recharge Cards

Aladi Junction, Jaffna Road, Manipay
Phone No:-021-7391070,0777917790

BANK OF CEYLON
BOC

TO YOUTH WITH LOVE
18 +plus

நேற்றும் இன்றும் நாளையும் சேமிப்பின் முன்னோடி

உத்தர வாதப்படுத்தப்பட்ட சேமிப்புக்கு இலங்கை வங்கியின் சேமிப்பு சான்றிதல்கள்

வாடிக்கையாளருக்கான நன்மைகள்

வட்டி வீதங்களின் தளம்பல்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது
முற்பணத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்
சிறுவர்களின் கல்விக்கு சிறந்த முதலீடு
உங்களின் எதிர்காலத்துக்கான நிதிப் பாதுகாப்பினை வழங்குகிறது



NRFC
Prestige PLUS Personal Account
BOC Infinity
சாதாரண சேமிப்பு கணக்குகள்

மலர் சிறப்புற வாழ்த்திடும் - மானிப்பாய் கிளை இலங்கை வங்கி

## அம்பாள் பல்பொருள் வாணிபம்

பலசரக்குப் பொருட்கள்,
அன்பளிப்புப்பொருட்கள்
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்
கட்டடப்பொருட்கள்
கால் நடைத் தீவனம்

**தொ. பே: 0213002927**



7ம் கட்டை, சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.

ஓம் விராட்விஸ்வப்பிரம்மனே நம

## நிதுஸ் ஜுவல்லறி
## Jewellery Nithus

**நகைத்தொழில் நகை வியாபாரம்**

உன்னத கலை நயம்மிக்க நகைகளை
உங்கள் எழில்மிகு தேகத்திற்கேற்ற
அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றா
தங்கப்பவுண் நகைகளைச்
செய்து பெற்றிட வாரீர்

பிரதான வீதி, மானிப்பாய்.


## நவரத்தினம் ஸ்ரோர்ஸ்

பிஸ்கட் பால்மா,
சொக்லெட், சிற்றுண்டி
போன்றன மிக மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.

## கம்சா களஞ்சியம்

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.





# RS COMMUNICATION

PHOTOCOPY FAX

LOCAL IDD

NET2PHONE LAMINATING

BINDING MONEY TRANSFER



email-rsangaran5413@yahoo.com


Dialog · Sri Lanka Telecom Mobitel · Airtel · HUTCH · etisalat

# SUNDHARSON






**Importers & Distributors of Electrical Items And Electric & Kerosine Water Pumps, Floor & Wall tiles**





Distributor for KELANI CABLES · ANTON PVC Pipes & Fittings

Tel: 021 2229984,
0214591569

Jaffna Road, Manipay.

ANDRA PRINTERS K.K.S Road ,Kondavil.
T.P: 021 222 8929